Registered as Newspaper

**முச்சந்தி முரளி**



“உலகத்தில
புளுகுப்போட்டி
வைச்சா எங்கட
ஹெகலியவை
ஆராலையும் வெல்ல
முடியாது
பாருங்கோ”


# உதயன்

பக்கங்கள் - 16+24 விலை 40 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :307 புரட்டாதி 17 ஆம் நாள் சனிக்கிழமை 03 ஒக்ரோபர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051


## திலீபன் நினைவேந்தல்
## கூட்டமைப்பினருக்கு எதிரான பொலிஸாரின் வழக்கு நிராகரிப்பு!
### 19 சட்டத்தரணிகள் முன்னிலையாகினர்

மட்டக்களப்பு, ஒக். 3

தியாகி திலீபன் நினைவேந்தலுக்கு எதிராக மட்டக்களப்பு நீதிமன்றத்தில் பொலிஸார் தாக்கல் செய்த வழக்கு நிராகரிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு பிரமுகர்கள் சீ.யோகேஸ்வரன், பா.அரியநேந்திரன்,

14


## திலீபனை பின்லேடனுடன் ஒப்பிட்டார் கெஹலிய
### அமைதியாக வேடிக்கை பார்த்தனர் அங்கஜன், வியாழேந்திரன்

யாழ்ப்பாணம், ஒக். 3

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த தியாக தீபம் திலீபனையும், தலிபான் அமைப்பின் முன்னாள் தலைவரான ஒசாமா பின்லேடனையும் ஒப்பிட்டு யாழ்ப்பாணத்தில் வைத்து கருத்துத் தெரிவித்தார் அரசின் பேச்சாளரும் ஊடகத்துறை

14

# சமஷ்டி தீர்வு கிடைக்கும் வரை மாகாணசபை முறை வேண்டும்



### இந்தியாவிடம் வலியுறுத்தவுள்ளதாக விக்னேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 3

இலங்கை அரசு சார்பானவர்கள் மாகாணசபைகளை உடனே நீக்க வேண்டும் என்று கருத்து தெரிவித்து வருகின்றார்கள். வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய ஏழு மாகாணங்களில் மாகாணசபைகளை நீக்குவதில் எந்தச் சிக்கலும் ஏற்படாது. எம்மைப் பொறுத்த வரையில் முழுமையான சமஷ்டி முறையிலான பொறிமுறையொன்று வடக்கு கிழக்கில் நிறுவப்படும் வரை வடக்கு கிழக்கு மாகாணசபைகளை நீக்குவது தற்கொலைக்கு சமமாகும்.

14

புதிய நாடாளுமன்றில்
## சிறப்பாக செயற்பட்ட எம்.பிக்களின் விவரம்

கொழும்பு, ஒக். 3

புதிய நாடாளுமன்றத்தின் முதலாவது மாத செயற்பாட்டின் அடிப்படையில் முதல் 5 இடங்களில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் தரப்படுத்தப்பட்டுள்ளனர். நாடாளுமன்றத்திற்குள் நடக்கும் விவாதங்கள், வரவு, உரையாற்றுவது உள்ளிட்ட பல்வேறு விடயங்களின் அடிப்படையில் எம்.பிக்களின் செயற்திறனை இணையம் ஒன்று தரப்படுத்துவது வழக்கம்.

14

## விபத்தில் தந்தை உயிரிழந்து 6 நாள்களின் பின் மகன் சாவு

யாழ்ப்பாணம், ஒக். 3

முல்லைத்தீவில் இடம்பெற்ற விபத்தில் தந்தை சம்பவ இடத்தில் உயிரிழந்திருந்த நிலையில் மகன் 6 நாள்களின் பின்னர் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்துள்ளான். செல்வம் அஜந்தன் (வயது 15)

14

## கோத்தாவுக்கு கொலை அச்சுறுத்தல் பூஸாவுக்குள் பாய்ந்தது சி.ஐ.டி.

கொழும்பு, ஒக். 3

ஜனாதிபதி கோத்தாபயவுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதையடுத்து, குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் சிலர் பூஸா சிறைச்சாலைக்கு நேற்று மாலை சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரபல

14

## விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பயனின்றி சாவு

யாழ்ப்பாணம், ஒக். 3

விபத்தில் சிக்கி காயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சியைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான முத்தையா செல்வரத்தினம் (வயது-69) என்பவரே உயிரிழந்துள்ளார்.

14

உள்ளே...

## மதுவிற்பனை நிலையங்கள் இன்று மூடப்படும்

கொழும்பு, ஒக். 3

நல்லொழுக்க மற்றும் மது ஒழிப்பு தினமான இன்று நாடு முழுவதும் மதுபான சாலைகளை மூடுமாறு மதுவரித் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. உத்தரவை மீறி இயங்கும் மதுபானச் சாலைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ.5)

## காணாமல் ஆக்கப்பட்டோர் வெளிநாடுகளிலாம்;
### கெஹலிய யாழில் வைத்து இப்படித் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 3

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்று சொல்லப்படும் பலர் விசா பெற்று வெளிநாடு சென்றுள்ளனர் என்று அரசின் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில்

14



## கடலட்டை பிடித்தோர் மறியலில் அடைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 3


வடமராட்சி கடற்பரப்பில் கடலட்டை பிடிப்பதற்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தை மீறி தொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மீனவர்கள் ஆறு பேரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

மன்னாரைச் சேர்ந்த நான்கு பேரும் வடமராட்சி கட்டைக்காடு பகுதியைச் சேர்ந்த இருவருமே நீதிமன்றின் உத்தரவில் விளக்கமறியலில்

14

# அதிகாரிகளை ஓர் இடத்துக்கு அழைத்து பேசி தீர்வு வழங்கவும்

ஜனாதிபதி கோத்தாபய பணிப்புரை



கொழும்பு, ஒக். 3

**அனைத்து அதிகாரிகளையும் ஓர் இடத்துக்கு அழைத்து, ஏனைய காணிப் பிரச்சினைகளுக்கும் உடனடித் தீர்வுகளை வழங்குமாறு ஜனாதிபதி மாவட்டத்தின் அரசியல் அதிகாரம் பெற்றுள்ளவர்களுக்கு பணிப்புரை விடுத்தார்.**

மாத்தளை ஹிம்பிலியாகட கிராம நாகவனாராம விகாரை வளாகத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற 'ஜனாதிபதி கிராமத்துடன் உறவாடல்' நிகழ்ச்சித்திட்டத்தில் ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மொரகஹகந்த நீர்த் தேக்கத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது காணிகளை இழந்தவர்களுக்கு பொருத்தமான இடங்களில் காணிகளை வழங்கி தனக்கு உடனடியாக தெரியப்படுத்துமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அதிகாரிகளுக்கு பணித்தார்.

மாவட்டத்தில் உள்ள மருத்துவமனைகளில் நிலவும் தாதியர் பற்றாக்குறையை நிவர்த்திப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது. (த)

## மல்லாவி பகுதி மாணவர்களுக்கு இலவச வழிகாட்டில் கருத்தமர்வு

குமாரசாமி வித்தியில் இன்று நடக்கிறது

யாழ்ப்பாணம், ஒக். 3

மல்லாவி பகுதி மாணவர்களுக்காக உதயன் ஊடக அனுசரணையில் 'புலமைச்சுடர்' நடத்தும் இலவச வழிகாட்டில் செயலமர்வு இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது. மாணவர்கள் இதில் பங்கேற்று பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

முல்லைத்தீவு குமாரசாமி வித்தியாலயத்தில் இன்று முற்பகல் 9.30மணிக்கு இது ஆரம்பமாகவுள்ளது. த.சரத்பாபு, திருமதி ம.சாந்தி மற்றும் த.பிரஜாபதி ஆகியோர் வளவாளர்களாகக் கலந்துகொள்வர். (த)

## தொடருந்து மோதி 3 மாடுகள் சாவு

பளை, ஒக். 3

தண்டவாளத்தைக் கடக்க முற்பட்ட மூன்று மாடுகள் தொடருந்தில் மோதுண்டு இறந்தன.

சம்பவம் முகமாலை இந்திராபுரம் சந்தியில் நேற்று இடம்பெற்றது. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த தொடருந்து மோதி சம்பவம் இடம் பெற்றது. (த9)

## தொடர்பாடலும் ஊடக கற்கையும் யாழ்.மாணவர்களுக்கு செயலமர்வு

யாழ்ப்பாணம், ஒக். 3

யாழ்ப்பாண மாவட்டத்தில் 'தொடர்பாடலும் ஊடக கற்கையும்' பாடநெறியை கற்றுக்கொண்டிருக்கும் பாடசாலை மாணவர்களுக்கான வெகுசன ஊடக செயலமர்வு யாழ்ப்பாண மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

ஊடக அமைச்சு மற்றும் அரச தகவல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண மாவட்ட செயலர் க.மகேசன் தலைமையில் செயலமர்வு நடைபெற்றது. நிகழ்வில் புத்தசாசன, மத விவகார மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் ஊடக செயலாளர் யோகராஜன், அரச தகவல் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எல்.பி.திலகரத்ன, யாழ்ப்பாண மாவட்ட மேலதிக செயலர் ம.பிரதீபன் மற்றும் ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்துகொண்டனர். செயலமர்வின் நிறைவில் மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (த20)



## 20ஆது திருத்தம் மூலமாக நீதிமன்றுக்கு பாதிப்பு வராது

நீதியமைச்சர் கூறுகின்றார்

கொழும்பு, ஒக். 3

20 ஆவது திருத்தம் மூலம் நீதிமன்ற சுயாதீன தன்மைக்கு ஒருபோதும் பாதிப்பு ஏற்படப்போவதில்லை எனத் தெரிவித்த நீதியமைச்சர் அலிசப்ரி, சட்டமா அதிபரால் நீதிமன்றத்தில் முன்வைத்திக்கும் திருத்தங்களை நாடாளுமன்றத்தில் மேற்கொள்வோம். அதில் எந்த சந்தேகமும் இல்லை

என்றும் கூறினார்.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் தொடர்பில் நீதிமன்றத்தில் எதிர்த்தரப்பினரால் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறான நிலையில் 20ஆவது திருத்தத்தில் நாடாளுமன்ற செயற்குழுவின்போது திருத்தங்களை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டிருக்கும்

விடயங்கள் அமைச்சரவை, ஜனாதிபதி மற்றும் பிரதமரின் அனுமதியுடன் எனக்கு வழங்கப்பட்டிருந்தன. அதனை நான் சட்டமா அதிபருக்கு வழங்கியிருந்தேன். அதனையே சட்டமா அதிபர் நீதிமன்றுக்கு முன்னிலைப்படுத்தியிருக்கின்றார்.

சட்டமா அதிபரால் நீதிமன்றத்துக்கு முன்னிலைப்படுத்தியிருக்கும் திருத்தங்கள் தொடர்பில் அச்சப்படத் தேவையில்லை. அதனை நாங்கள் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்து செயற்குழுவின்போது, குறித்த திருத்தங்களை மேற்கொள்வோம். - என்றார். (த-இ)

## 19இல் சிறந்த விடயங்கள் பாதுகாக்கப்படவேண்டும்

அஸ்கிரிய பீடம் மீண்டும் வலியுறுத்து

கொழும்பு, ஒக். 3

19 ஆவது அரசமைப்பு திருத்தத்திலுள்ள சிறந்த விடயங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று சியம் மகா நிகாயவின் அஸ்கிரிய பீடம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் சியம் மகா நிகாயவின் அனுநாயக்கர் நாரம்பனாவே ஆனந்த தேரரை நேற்றுச் சந்தித்தபோது தேரர் இந்த விடயத்தைக் கூறினார் என்று தெரிவிக்கப்பட்டது.

19 ஆவது திருத்தத்தால் கடந்த காலத்தில் ஏற்பட்ட பெரும் நெருக்கடி காரணமாக அதில் மாற்றம் இடம்பெற வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளோம். 19 ஆவது திருத்தத்தில் உள்ள சில விடயங்கள் தொடர்ந்தும் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-இ)

## மீட்கப்பட்ட என்புகள் மரபணு பரிசோதனைக்கு

கிளிநொச்சி, ஒக். 3

பளை தம்பகாமம் காட்டுப்பகுதியில் மீட்கப்பட்ட எலும்பு எச்சங்கள் மரபணு (டி.என்.ஏ) பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளன என்று கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைத் தரப்பினர் தெரிவித்தனர்.

கடந்த 29 ஆம் திகதி இந்த எச்சங்கள் அடையாளம் காணப்பட்டிருந்தன. மழை பெய்த பின்னர் காட்டுப்பகுதிக்கு குழை வெட்ட சென்ற ஒருவர் துர்நாற்றம் வீசுவதை உணர்ந்துள்ளார். அந்தப் பகுதியை அவதானித்தபோது நாடி உள்ளிட்ட சில எலும்பு எச்சங்களும் சேட் மற்றும் சறம் போன்றனவும் உள்ளமையை அவதானித்து கிராம அலுவலருக்கும் பொலிஸாருக்கும் தகவல் வழங்கினார்.

அங்கு சென்ற பொலிஸார் தேடுதல் நடத்தினர். இதன்போது மேலும் சில எலும்புகளும் மண்டையோடும் இருந்தமை தெரியவந்தன. அந்த அடையாளங்களின் அடிப்படையில் மாமுனை செம்பியன்பற்றைச் சேர்ந்த க. சுந்தரமூர்த்தி (வயது 50) என்பவருடைய அடையாளங்களே அவை என்று பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் கிளிநொச்சி நீதிமன்ற பதில் நீதிவான் மற்றும் சட்ட மருத்துவ அதிகாரி ஆகியோர் அவற்றைப் பார்வையிட்டனர். அவை சட்ட மருத்துவ அதிகாரியின் பரிசோதனைக்காக அனுப்பட்டிருந்தன. அவருடைய பரிசோதனையில் கொலை செய்யப்பட்டதற்கான ஆதாரங்கள் எவையும் இருக்கவில்லை. இருப்பினும், மேலதிக உறுதிப்படுத்தலுக்காக மரபணு பரிசோதனைக்காக சில எச்சங்கள் அனுப்பப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (த-6)

## யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் 20 பற்றி ஆய்வரங்கு

யாழ்ப்பாணம், ஒக். 3

இலங்கை அரசமைப்பின் 20ஆம் திருத்தம் தொடர்பான ஆய்வரங்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (த)

# யாழில் தபால் பிரச்சினைகள் பற்றி இராஜாங்க அமைச்சர் கேட்டறிந்தார்

கொழும்பு, ஒக். 3

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் தபால் திணைக்களங்களில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் குறித்து தபால் சேவைகள் மற்றும் வெகுசன ஊடக, தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் நேற்று கேட்டறிந்தார்.

இதன்போது, ஆளணி வெற்றிடங்கள் இதுவரை நிரப்பப்படாமை, தபால் நிலைய கட்டடங்கள் இல்லாமை, வெளி மாவட்டங்களிலிருந்து இங்குவந்து பணியாற்றும் அலுவலர்களுக்கான விடுதிகள் இல்லாமை போன்ற பிரச்சினைகளை தபால்மா அதிபர் முன்வைத்தார்.



சந்திப்பில், தபால் சேவைகள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் ஏ.சேனநாயக, வடக்கு மாகாண பிரதி தபால்மா அதிபதி திருமதி மதுமதி வசந்தகுமார், வடக்கு மாகாண தபால் சேவை சிரேஸ்ர நிர்வாக செயலாளர் எஸ்.ஜெபரெட்ணம் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (த-20)

# ஐக்கிய மக்கள் சக்தி ‘20’ ஐ எதிர்க்கத் தயார்

## கூறுகிறார் மயந்த திஸாநாயக்க



கொழும்பு, ஒக். 3

**‘சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியினரும், அந்தக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக்கட்சியினரும் 20ஆவது திருத்தத்துக்கு எதிராகவே வாக்களிப்பர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

‘ஏதேச்சதிகார குடும்ப ஆட்சிக்கு வழிவகுக்கும் 20ஆவது திருத்தத்தைத் தோற்கடிப்பதே எமது இலக்கு. எனவே, கொள்கை அடிப்படையிலும், மனசாட்சியின் பிரகாரமும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் 20க்கு எதிராகவே வாக்களிப்பார்கள்.

எமது கூட்டணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகளின் உறுப்பினர்களும் ஐக்கிய மக்கள் சக்தியாக 20ஆவது திருத்தத்தை எதிர்த்தே வாக்களிப்பார்கள். இது சம்பந்தமாக கட்சித் தலைவர்களுடன் எமது தலைவர் பேச்சு நடத்துவார். 20ஆவது திருத்தத்தை எதிர்ப்பதற்கு கொள்கை அடிப்படையில் இணக்கப்பாடு ஏற்கனவே எட்டப்பட்டுள்ளது.

அதேவேளை, 19ஆவது திருத்தத்தில் சிற்சில குறைபாடுகள் உள்ளன. அவற்றை நிவர்த்தி செய்துகொண்டு முன்நோக்கி பயணிப்பதற்கே அரசு முயற்சிக்கவேண்டும். அதற்கேற்றவகையில் திருத்தங்கள் இடம்பெறவேண்டும். ஆனாலும் ஏதேச்சதிகார பயணமே ராஜபக்ச தரப்பின் நோக்கமாக இருக்கின்றது. அத்தகைய நகர்வுகளுக்கு எம்மால் ஆதரவு வழங்கமுடியாது’ என்றார். (ம-44)

# காந்தி பிறந்த தின நிகழ்வு யாழில்





யாழ்ப்பாணம், ஒக். 3

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் மகாத்மா காந்தியின் பிறந்த தினம் நேற்றுக் கொண்டாடப்பட்டது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு முன்பாக உள்ள மகாத்மா காந்தியின் சிலையடியில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் காந்தியின் சிலைக்கு இந்திய துணைத்தூதுவர் கே.பாலச்சந்திரன் மலர்மாலை அணிவித்தார். அதன் பின்னர் அரசியல் பிரமுகர்கள் மலர்மாலை அணிவித்தனர்.

இந்த நிகழ்வில் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர்களான சித்தார்த்தன், சிறிதரன், யாழ்ப்பாண மாவட்ட செயலர் க.மகேசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், சுரேஸ் பிரேமச்சந்திரன், யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளர் எனப் பலர் கலந்துகொண்டனர். (ம-20)

# தேர்தல் பற்றி பேசவுள்ள ஐ.தே.க.வினரும் சஜித்தும்

கொழும்பு, ஒக். 3

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும், ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலருக்கும் இடையில் விரைவில் சந்திப்பொன்று நடைபெறவுள்ளது.

ஐ.தே.கவின் பிரதித் தலைவராக நியமிக்கப்பட்டிருந்த ருவான் விஜேவர்த்தனவுக்கு தொலைபேசி ஊடாக சஜித் வாழ்த்து தெரிவித்தபோது, நேரடி சந்திப்புக்கான அழைப்பை ருவான் விடுத்திருந்தார் எனவும், இதன்பிரகாரமே மேற்படி சந்திப்பு இடம்பெறவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

சஜித் தலைமையில் உதயமாகவுள்ள ‘ஐக்கிய கூட்டமைப்பில்’ இணைந்து செயற்படுவது சம்பந்தமாகவும், மாகாண தேர்தலை ஒன்றிணைந்து எதிர்கொள்வது பற்றியும் இதன்போது அவதானம் செலுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-44)

# புரண்டது பேருந்து 49 பேர் படுகாயம்



கொழும்பு, ஒக். 3

டயகமவிலிருந்து போடைஸ் வழியாக ஹற்றன் நோக்கிப் பயணித்த தனியார் பேருந்து டயகம ஹற்றன் பிரதான வீதியில் போடைஸ் என்.சி தோட்டப் பகுதியில் நேற்றுக் குடைசாய்ந்தது. இதில் 49 பேர் காயமடைந்தனர்.

சுமார் 20 அடி பள்ளத்தில் பாய்ந்து குறித்த பேருந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. காயமடைந்தவர்களில் 24 பேர் பாடசாலை மாணவர்கள். பஸ் சாரதியின் கவனவீனம் காரணமாகவே இந்த விபத்து நேர்ந்தது என்று முதல்கட்ட விசாரணைகளில் தெரியவந்தது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-இ)

# உறங்குகிறது கட்டுநாயக்க ரூ.15 ஆயிரம் கோடி இழப்பு

கொழும்பு, ஒக். 3

கட்டுநாயக்க விமான நிலையம் மூடப்பட்டுள்ளமையினால் இந்த வருடம் சுமார் 15 ஆயிரம் கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட வருமானம் இல்லாமல் போயுள்ளது என்று கட்டுநாயக்க விமான நிலையம் மற்றும் விமான சேவை நிறுவனத்தின் உபதலைவர் ரஜீவ் சூரிய ஆராச்சி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வழமைபோன்று விமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால் தற்போது 15ஆயிரம் கோடி ரூபாவுக்கும் அதிக இலாபம்பெற வாய்ப்புகள் இருந்தன எனினும் இந்த வருடம் 600 கோடி ரூபாவைத்தான் இலாபமாகப் பெறமுடிந்தது. இதுவரையிலும் விமான செயற்பாடுகள் பெருமளவு நிறுத்தப்பட்டுள்ளன. இந்தியாவில் கொரோனா பெருந்தொற்றுத் தீவிரமடைந்துள்ளமையால் கட்டுநாயக்க விமான நிலையத்தை தொடர்ந்தும் திறக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது - என்றார். (ம-இ)

# அர்ஜுன ரணதுங்கவை கைதுசெய்ய உத்தரவு

## கொழும்பு நீதிமன்று விதித்தது



கொழும்பு, ஒக். 3

நீதிமன்றில் முற்படத் தவறியதற்காக முன்னாள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவை கைதுசெய்ய கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2018 ஒக்ரோபர் 28 இல் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் ஏற்பட்ட அமைதியின்மை தொடர்பான வழக்கில் கொழும்பு மாநகரசபை முன்னாள் ஆணையாளர், குலதிஸ்ஸா கீக்கியானகே உள்ளிட்ட பத்து பேர் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்டது. வழக்கின் முதல் சாட்சியாக பெயரிடப்பட்ட முன்னாள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க நீதிமன்றில் முன்னிலையாகவில்லை.

அதனையடுத்து நீதிவான் கைதுசெய்ய உத்தரவிட்டார்.

வழக்கு டிசெம்பர் 18 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்த சம்பவத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில், 34 வயதுடையவர் உயிரிழந்திருந்தார். (து-இ)

# மருத்துவமனையில் குவிந்திருக்கும் 27 சடலங்கள்

கொழும்பு, ஒக். 3

கொழும்பு - களுபோவில மருத்துவமனையின் சவச்சாலையில் குவிந்துகிடக்கும் சடலங்கள் குறித்து பொலிஸார் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது.

சுமார் 27 சடலங்கள் இவ்வாறு சவச்சாலையில் குவிந்து கிடக்கின்றன என்று மருத்துவமனை ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

முறையான மரண விசாரணையின் பின் சம்பந்தப்பட்டவர்களுக்கு சடலங்களைக் கையளிப்பதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுக்காததால் சடலங்கள் சவச்சாலையில் குவிந்துள்ளன என்று ஊழியர்கள் கூறுகின்றனர். (துஇ)

# எதிர்ப்பேன் என்பது பொய்

## கூறுகின்றார் விதுர

கொழும்பு, ஒக். 3

அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டமூலத்துக்கு எதிராக வாக்களிக்கவுள்ளேன் என்று வெளியான தகவலை இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க நேற்று நிராகரித்தார்.

அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டமூலம் தொடர்பில் ஆளுங்கட்சிக்குள் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க ‘20’ க்கு எதிராக வாக்களிக்க தீர்மானித்துள்ளார் என சிங்கள இணையத்தளங்களில் நேற்றுச் செய்திகள் வெளியாகின.

இந்தநிலையிலேயே தனது அதிகாரபூர்வ முகநூல் பக்கத்தில் மேற்படி தகவலை விதுர விக்கிரமநாயக்க நிராகரித்துள்ளார். (து-44)

# அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்புக்கு கொரோனா

## அவரது மனைவிக்கும் தொற்றியது

வொஷிங்டன், ஒக். 3

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் அவருடைய மனைவி மெலனியா ட்ரம்ப் ஆகியோருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

ட்ரம்பின் நெருங்கிய உதவியாளர் ஒருவருக்கு கொரோனா உறுதிப்படுத் தப்பட்டதைத் தொடர்ந்து ட்ரம்பிடமும் அவரது மனைவி மெலனியா ட்ரம்பி டமும் மாதிரிகள் பெறப்பட்டன. அவை பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதை அடுத்து இருவருக்கும் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை நேற்று காலை உறுதிப்படுத்தப்பட்டது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் இன் னும் சில வாரங்களில் நடைபெறவுள் ளது. இந்த நிலையில் குடியரசுக் கட் சியின் வேட்பாளரான ட்ரம்ப் கொரோ னாத் தொற்றுக்கு உட்பட்டு தனிமைப் படுத்தப்பட்டுள்ளமை அவர் சார்ந்த குடியரசுக் கட்சிக்குப் பின்னடைவு என்று கருதப்படுகின்றது. ட்ரம்புக்கும் அவரை எதிர்த்து போட்டி யிடும் ஜனநாயக கட்சி யின் வேட்பாளரான பிட னுக்கும் இடையில் அண் மையில் நேரடி விவாதம் நடைபெற்றது. இதனால் பிடனுக்கும் கொரோனா சோதனை நடத்தப்பட வுள்ளது.



கொரோனாத் தொற்றில் இருந்து பாதுகாக்க மக் கள் முகக்கவசம் அணி யவேண்டும் என்று பரிந்துரைக்க மாட்டேன் என்று ட்ரம்ப் முன்னதாகத் தெரிவித்திருந்தார். தானும் முகக்கவ சங்களை அணிவதைத் தவிர்த்து வந்தார். அவரது மருத்துவப் பிரிவின் அறிவுறுத்தல் மற்றும் எதிர்ப்புக்க ளைத் தொடர்ந்தே முகக்கவசங்களை அணிந்தார். இந்த நிலையில் தற் போது அவர் கொரோனாத் தொற்றுக்கு உட்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-இ)

## புனரமைக்கப்படும் பளை ஆயுள்வேத வைத்தியசாலை

பளை, ஒக்.3

பளை ஆயுள்வேத வைத்தியசாலையை நிர்மாணிப்பதற்கு, பத்து மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதற்க மைவாக பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன என்று பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தெரிவித்துள்ளார்.

மிக நீண்ட காலமாக தற்காலிகக் கட்டடத் தில் இயங்கி வரும் பளை ஆயுள்வேத வைத்தி யசாலையில், அதிகமான நோயாளர்கள் பயனடைந்து வருகின்றனர்.

வைத்தியசாலையில் நோயாளர்களுக்கும், பணியாளர்களுக்கும் போதிய வசதி யின்மை அவதானிக்க முடிந்தது.

அதற்கமைவாக தனியார் நிறுவனத்தால் அமைக்கப்பட்ட காற்றாலை மின் உற்பத்தி நிலையம் மூலமும், வடக்கு மாகாண சபை யின் விவசாய அமைச்சுக்குச் செல்கின்ற சமூக சேவை நிதியின் மூலமும், புனரமைப் புப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. வடக்கு மாகாண விவசாய அமைச்சால் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கான வேலைத் திட்டம் மிக விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று சபையின் தவிசாளர் தெரிவித்தார். (க-6)

## குருவிக்காட்டு பகுதியில் இன்று சிரமதானம்

இளவாலை, ஒக்.3

சாவகச்சேரி குருவிக்காட்டுப் பகுதியின் 'விதையனைத்தும் விருட்சமே' அமைப்பால் சிரமதானப் பணி முன்னெடுக்கப்படவுள்ளது. இன்று சனிக்கிழமை காலை 8 மணி தொடக் கம் மதியம் 12 மணி வரை துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

எனவே இதற்கு ஆதரவு தரக்கூடிய வகையில் சமூக ஆர்வலர்களையும், தன்னார்வத் தொண்டர்களையும் இந்த சிரமதான பணி யில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது. (ஐ)

## முதியோர் வாரத்தின் மூன்றாம் நாள் நிகழ்வு

சாவகச்சேரி, ஒக்.3

கைதடி அரச முதியோர் இல்லத்தின், சர்வதேச முதியோர் வார நிகழ்வுகள் "இல்லறத்தின் சிறப்பு முதியோரின் இருப்பு" என்னும் தொனிப் பொருளில் ஆரம்பமாகி நடைபெற்று வருகின் றன.

எதிர்வரும் ஏழாம் திகதி புதன்கிழமை வரை முதியோர் இல்ல திறந்தவெளி அரங்கில் நிகழ் வுகள் நடைபெறவுள்ளன.

மூன்றாம் நாள் நிகழ்வுகள் இன்று சனிக் கிழமை நடைபெறவுள்ளன. காலை முதியோர் களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடை பெறும்.

மாலை நிகழ்வுக்கு விருந்தினர்களாக மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஆர். வரதீஸ்வரன், மாகாண பிரதிபிரதம செயலா ளர் (நிதி) ஆர்.பத்மநாதன், கைதடி ஆயுர்வேத வைத்தியசாலை வைத்தியர் எம்.பகீரதன், கிளி நொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் சு.ஜெயானந்தராசா, கைதடி தெற்கு கிராம அலுவலர் விஜயசிறி நியூரிஷா, கைதடி சேது காவலர் வித்தியாலய அதிபர் வி.கணராஜன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-9)

### பாடசாலைகளில் இணைப்பின் போதான

## நேர்முகத் தெரிவில் சில தளர்வுகள்

கொழும்பு, செப். 3

அரச பாடசாலைகளில் முதலாம் தரத்துக்குப் பிள்ளைகளை சேர்ப் பதற்காக நடத்தப்படும் நேர்முகப் பரீட்சையின்போது, வழங்கப்ப டும் வீட்டு உறுதிக்கான புள்ளி களைத் தளர்த்துவது தொடர்பில் அரசு கவனம் செலுத்தி வரு கின்றது.

இவ்வாற அமைச்சரவை முடிவு களை ஊடகங்களுக்கு அறிவிக் கும் ஊடகவியலாளர்கள் சந்திப் பில், அமைச்சரவை பேச்சாளர் கெஹெலிய ரம்புக்வெல்ல இது தொடர்பில் தெரிவித்தார்.

நேர்முகப் பரீட்சையின்போது வீட்டு உறுதி வைத்திருக்கின்ற மைக்காக 20 புள்ளிகள் வழங் கப்படும் போதிலும், தங்களது பதிவு செய்யப்பட்ட வீட்டு முகவ ரியைச் சரிபார்ப்பதற்காக தற் போது பல பெற்றோரால் வீட்டு உறுதியை வழங்க முடியாதிருப் பதாக அவர் தெரிவித்தார். இதன் காரணமாக பல பெற்றோர் தங் களது பிள்ளைகளை பாடசாலை களில் சேர்ப்பதற்குத் தவறியுள் ளனர்.

30 அல்லது 40 வருடங்களுக்கு மேலாக குறிப்பிட்ட சில பாடசாலை களுக்கு அருகில் மக்கள் வசித்து வந்தாலும், அவர்களால் தங்க ளது வீட்டு உறுதிகளைக் காண் பிக்க முடியாது போனமையால், பாடசாலைகளில் பிள்ளை களைச் சேர்க்க முடியாமல் போயு ள்ளனர். இந்த முறையை ஒழிக்க வும், புதிய முறையை அறிமுகப் படுத்தி சுற்று நிரூபத்தை வெளி யிடவும் கல்வி அமைச்சர் விரும் புகின்றார்.

வாக்காளர் பட்டியலில் 5 வருடங் களுக்கும் மேலாக ஒரே முகவரியின் கீழ் பெயர் பதிவு செய் யப்பட்டவர்கள், அவர்கள் தாம் பதிவு செய்யப்பட்ட முகவரியை கிராம அலுவலர் அல்லது உரியஅதி காரி ஊடாக ஆவணங்கள் மூலம் நிரூபிக்க முடிந்தால், அது தொடர்பில் பரிசீலிக்கும் முறை மையொன்றை ஏற்படுத்த அமைச்சரவை கவனம் செலுத் தியுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-இ)

## புற் தரையில் திடீரெனத் தீ

வவுனியா, ஒக்.3

பம்பைமடுவில் உள்ள யாழ்ப்பா ணப் பல்கலைக்கழக வவுனியா வளாகத்துக்குப் பின்புறமாக வுள்ள புற் தரை நேற்றுமுன்தி னம் இரவு தீப்பிடித்து எரிந்துள் ளது. தீ பரவலுக்கான காரணம் தெரியவரவில்லை

இது தொடர்பில் வவுனியா நகர சபையின் தீயணைப்புப் பிரிவுக்கு வழங்கப்பட்ட தகவலை அடுத்து, தீயணைப்புப் பிரிவினர் சம்பவ இடத்துக்குச் சென்று தீயைக் கட் டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த னர். (எ-110)

## கஞ்சாவுடன் கைதான மூவருக்கு மறியல்

கிளிநொச்சி, ஒக்.3

கேரளா கஞ்சாவுடன், கைது செய்யப்பட்ட மூவரையும் விளக்கமறியலில் வைக்கு மாறு கிளிநொச்சி நீதிவான் மன்று உத்தர விட்டது.

ஆனைவிறவில் அமைக்கப்பட்டுள்ள சோதனைச் சாவடியில் கடந்த செவ்வாய்க் கிழமை இவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் பயணித்த கப் ரக வாகனத்தைச் சோதனையிட்ட போது, இரண்டு கிலோ 100 கிராம் கஞ்சா மீட்கப்பட்டிருந்தது. அத னைக் கடத்திய குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டனர்.

கிளிநொச்சி நீதிவான் மன்றில் சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் முற்படுத்தப்பட்ட னர். அவர்களை 14 நாள்கள் விளக்கமறி யலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட் டது. (க-6)

## பரிசளிப்பும், கலைவிழாவும்

காரைநகர், ஒக்.3

காரைநகர் கிழவன்காடு கலாமன்ற பரிச ளிப்பும், கலைவிழாவும் நாளை ஞாயிற் றுக்கிழமை, நல்லூர் துர்க்கா மணி மண் டபத்தில், பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும்.

கலாமன்றத்தின் தலைவர் ந.சோதிநாதன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில், பிர தம விருந்தினராக வடக்கு மாகாண சுகா தார சுதேச மருத்துவ, சிறுவர் பராமரிப்பு நன்னடத்தை அமைச்சின் செயலாளர் பா.செந்தில்நந்தனன், சிறப்பு விருந்தினர்க ளாக யாழ்.கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் தி.ஞானசுந்தரன், இலங்கை வங்கி யாழ். அதிமேற்தரக் கிளை பிரதான முகாமையாளர் கு.சிவஞானசுந்தரம் ஆகி யோர் கலந்து கொள்வர்.

நிகழ்வில் பரிசில் வழங்கல், மாணவர்க ளின் கலை நிகழ்வுகள் மற்றும் கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையிலான கவிய ரங்கம், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையிலான பட்டிமன்றம், நாட்டியாஞ் சலி என்பன இடம்பெறும். (க-250)

## மெத்தனப்போக்கு வேண்டாம்!

கொரோனா பெருந்தொற்றில் இருந்த பயம், பதற்றம், தற்காப்பு நடவடிக்கைகள், முன்னெச்சரிக்கைகள் அனைத்தும் படிப்படியாக இல்லாது போய்க்கொண்டிருக்கையில், மீண்டும் கொரோனா கிலி உலகை உறைய வைத்துள்ளது. உலகின் வல்லரசு நாடான அமெரிக்காவின் ஜனாதிபதி ட்ரம்ப் கொரோனாப் பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார். கொரோனா வைரஸ் ட்ரம்பை தாக்கிவிடக்கூடாது என்பதற்காக மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் மிக அதிகம். தனியான மருத்துவக் குழு அமைக்கப்பட்டு ட்ரம்புக்குத் தினமும் கொரோனாச் சோதனை செய்யப்பட்டது. அவரது அலுவலக உதவியாளர்கள் அனைவரும் தினமும் சோதிக்கப்பட்டனர். இவ்வாறு பல அடுக்குப் பாதுகாப்புக்களைத் தாண்டி அவரைத் தாக்கியுள்ளது கொரோனா. ட்ரம்பின் நெருங்கிய உதவியாளர் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று இனங்காணப்பட்டதை அடுத்து ட்ரம்ப் மற்றும் அவரது மனைவி இருவரிடமும் மாதிரிகள் பெறப்பட்டு உடனடியாகப் பரிசோதிக்கப்பட்டனர். இதன்போதே அவர்கள் இருவருக்கும் தொற்று ஏற்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து கொரோனாவின் வீரியம் மற்றும் தீவிரத்தன்மை தொடர்பில் மீண்டும் பரபரப்பாகியுள்ளது உலகம். இதன்மூலம் கொரோனாப் பெருந்தொற்று எவ்வளவு தூரம் இன்னமும் சக்தி வாய்ந்ததாக இருக்கின்றது என்பதை நாம் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். பல அடுக்குப் பாதுகாப்புக்கள் போட்டாலும், எத்தனை முன்னேற்பாடுகள் செய்தாலும் ஒரு சிறு தவறுபோதும் அந்த வைரஸ் எம்மை ஆட்கொள்வதற்கு. கொரோனாப் பெருந்தொற்றில் இருந்து இலங்கை இன்னமும் விடுபடவில்லை. தனிமைப்படுத்தல் முகாம்களிலும் மருத்துவமனைகளிலும் கொரோனா நோயாளர்கள் இன்றுவரை சிகிச்சை பெற்றுக்கொண்டுதான் உள்ளனர். இவ்வாறிருக்கையில் எந்த அடிப்படையில் கொரோனாவில் இருந்து விடுபட்டுவிட்டோம் என்ற மெத்தனப்போக்குடன் நாம் செயற்படுகின்றோம் என்று புரியவேயில்லை.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தம், மாடு அறுப்பதற்கு விதிக்கப்பட்ட தடை என்பனவற்றில் எமது கவனக்குவிவைச் செலுத்திவிட்டு அவை தொடர்பில் நடப்பவற்றையும் அடுத்தகட்ட நகர்வுகளையும் பார்த்தபடி அரசு அலட்சியமாக இருக்கின்றது. இதைத் தவறு என்று குறிப்பிடுவதற்கு இல்லை. சமூக, அரசியல் பொறுப்புள்ள குடிமக்களாக இவற்றில் இருக்கும் ஆர்வம் வரவேற்க வேண்டியதுதான். ஆனால் கொரோனா பேரரக்கனை மறந்துவிட்டுச் செயற்பட்டுக்கொண்டிருப்பதுதான் வேதனையானது. இப்போதெல்லாம் சமூக இடைவெளிகள் பேணப்படுவதில்லை, முகக்கவசங்கள் அணியப்படுவதில்லை, சுருங்கச் சொன்னால் கொரோனா என்ற ஒன்றை நாம் அறிந்துகொள்வதற்கு முன்னர் எவ்வாறு இருந்தோமோ கிட்டத்தட்ட அதே வாழ்க்கை முறைக்குள் திரும்பிவிட்டோம்.

அயல்நாடான இந்தியாவில் கொரோனா கோரத்தாண்டவம் ஆடுகின்றது. தரைவழியாக எமக்கும் இந்தியாவுக்கும் இடையில் எவ்விதத் தொடர்பும் இல்லை என்பது மிகப்பெரும் ஆறுதல். எனினும், கடல் வழியாக இந்தப் பெருந்தொற்றுக் கடத்தப்படாது என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை. இந்தியாவில் இருந்து கடல்மார்க்கமாக கொரோனா கடத்தப்பட வாய்ப்பு மிகமிக அதிகம் என்று சுகாதாரத்துறையும் தொற்றுநோயியல் பிரிவும் மாறிமாறி எச்சரித்துக்கொண்டுள்ளன. நிலைமையின் தீவிரத்தை உணர்ந்தவர்களாகச் செயற்படுவோம். இயலுமான வரையிலாவது பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் நடப்போம். ட்ரம்பே விதிவிலக்கல்லர் என்னும் போது எமது நிலை என்ன?.

டீசலைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும்

# மின் உற்பத்தியை குறைக்கத் திட்டம்



கொழும்பு,ஒக்.3

டீசலைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் மின் உற்பத்தியை நூற்றுக்கு 5 சதவீதத்தால் குறைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார். மன்னாரில் நிர்மாணிக்கப்படும் மிகப்பெரிய காற்றாலை மின் உற்பத்தி நிலையத்துக்கு, கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். நாட்டின் மின்சார உற்பத்தியில் 30 சதவீதமானவை டீசலைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகிறது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (க-இ)

## குழுவின் அறிக்கை விரைவில் ரணிலிடம்

கொழும்பு,ஒக்.3

ஐக்கிய தேசியக் கட்சியை மீண்டும் ஒழுங்கமைக்க நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை, அடுத்த வாரம் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் ஒப்படைக்கப்படும் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பொதுச்செயலாளர் அகிலவிராஜ் காரியவசம், தலைமை நிர்வாக அதிகாரி சமல் சேனரத், முன்னாள் அமைச்சர் சாகல ரத்நாயக்க மற்றும் சீனாவின் முன்னாள் தூதுவர் கருணசேன கொடிதுவக்கு ஆகியோர் அடங்கிய குழு உறுப்பினர்கள் இந்த அறிக்கையைத் தயாரித்து வருகின்றனர்.

இந்தக் குழுவை துணைத் தலைவர் ருவான் விஜேவர்தன மேற்பார்வையிடுகிறார். இதற்கிடையில், அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆஷு மாரசிங்க மற்றும் சந்தித் சமரசிங்க ஆகியோரிடமிருந்தும் பரிந்துரைகளைப் பெறுமாறு, கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, குழுவிடம் அறிவுறுத்தியுள்ளார் என்று கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன. (க-இ)

## இளம் பெண்ணிடம் 102 கிராம் கஞ்சா

திருமலை,ஒக்.3

சிறையில் இருந்து விடுதலையான இளம் பெண் ஒருவர் 102 கிராம் கேரளா கஞ்சாவுடன் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கந்தளாய் முள்ளிப்பொத்தானையைச் சேர்ந்த 29 வயதுடைய பெண் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் 2 கிலோ கிராம் கேரளா கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில், சிறைத் தண்டனை அனுபவித்து, கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார். மீண்டும் 102 கிராம் கேரளா கஞ்சாவை, சிறிய மேசை ஒன்றின் அடிப்பகுதியில் சூட்சுமமான முறையில் மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். (க

## அரச உற்பத்திகள் இனி ஒரே இடத்தில்!

கொழும்பு,ஒக்.3

அனைத்து அரச உற்பத்தி நிறுவனங்களது, விற்பனை நிலையங்களை ஒரே இடத்தில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அமைச்சர் பந்துல குணவர்த்தன இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

அனைத்து அரச உற்பத்தி நிறுவனங்களினதும், பொருள்களை ஒரே இடத்தில் பொதுமக்கள் கொள்வனவு செய்யும் வகையிலேயே இந்தத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

முதல் மையம் நாரஹேன்பிட்டி பொருளாதார மையத்தில் அமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

# மைத்திரி, ரணிலுக்கு கடுமையான தண்டனை



வழங்குமாறு பொன்சேகா வலியுறுத்து

கொழும்பு,ஒக்.3

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக மைத்திரி மற்றும் ரணிலுக்குக் கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பேசுவதானால் அதன் பொறுப்பை, மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் ஏற்க வேண்டும்.

அமைச்சரவையில் இருந்தாலும், அனைவராலும் அதில் தலையிட முடியாது. அவர்கள் இருவருக்கும் தான் அந்தப் பொறுப்பு உள்ளது. தோல்வி ஏற்பட்டால், அதற்கான முழுப் பொறுப்பையும் அவர்கள் ஏற்க வேண்டும்.

நாட்டின் பாதுகாப்பு என்பது அனைவரும் தலையிடக்கூடிய ஒன்றல்ல. அமைச்சரவையில் இருக்கும்போது, பாதுகாப்புத் தொடர்பில் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளவர்களால் மட்டுமே பதில் கூற முடியும். நான் தனிப்பட்ட முறையில் அவர்களுடன் கலந்துரையாடினேன். எனினும் நான் கூறிய விடயங்களை ஒருபோதும் அவர்கள் புரிந்து கொள்ளவில்லை.

இந்தச் சம்பவத்தால் பொதுமக்களின் உயிர்கள் பல காவு கொள்ளப்பட்டன. நாட்டில் பயங்கரவாதம் உருவாகியது. எனவே இருவருக்கும் கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும் - என்றார். (க-இ)

# அதிபர் மாற்றலை எதிர்த்து முருங்கனில் ஆர்ப்பாட்டம்!

**மன்னார், ஒக்.3**
**முருங்கன் ஆரம்பப் பாடசாலையின் அதிபர் இடமாற்றப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோரால் நேற்றுக் காலை ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது. பாடசாலை முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.**

முருங்கன் ஆரம்பப் பாடசாலைக்கு இரு மாதங்களின் முன்னர் அருட்சகோதரி ஒருவர் அதிபராக நியமிக்கப்பட்டிருந்தார். இரு நாள்களுக்கு முன்னர் மன்னார் வலயக் கல்விப் பணிமனை அவரை மன்னார் வங்காலையில் உள்ள ஆரம்பப் பாடசாலை ஒன்றுக்கு இடமாற்றியிருந்தது.




இந்த இடமாற்றத்தைக் கண்டித்தே நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது. அதிபரின் இடமாற்றத்தை இரத்துச் செய்ய வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர்.

மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் ஜே.பிரட்லி சம்பவ இடத்துக்கு வந்து பெற்றோர்களுடன் கலந்துரையாடினார்.

சாதாரண அதிபர்களை இடமாற்றம் செய்யும் அதிகாரமே எம்மிடம் உள்ளது. மதகுருக்கள், அருட்சகோதரிகளின் இடமாற்றம் தொடர்பாக மன்னார் ஆயர் இல்லமே முடிவெடுக்க வேண்டும். அதனால் நீங்கள் மன்னார் ஆயருடன் பேசுங்கள் அல்லது வேறு அதிபரை அடையாளம் காட்டுங்கள், அவருக்கு இங்கு நியமனம் தருகின்றோம் என்று அவர் தெரிவித்தார்.

அதையடுத்து பெற்றோர்கள் வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்த முற்பட்டமையால் அந்தப் பகுதியில் பொலிஸார் அதிகரிக்கப்பட்டு, போராட்டம் கட்டுப்படுத்தப்பட்டது.

அருட்சகோதரியின் கீழ் பாடசாலை மாணவர்கள் கல்வியில் வளர்ச்சியடைவார்கள் என்று எதிர்பார்த்திருந்தோம். ஆயர் இல்லத்தின் தலையீட்டால் ஏமாற்றம் அடைந்துள்ளோம். கல்விச் செயற்பாடுகளில் மன்னார் ஆயர் இல்லம் தலையிடுவது என்றால் கல்விப் பணிப்பாளர் எதற்காக?. அனைத்து இடங்களிலும் சிறுவர் தினத்தில் சிறுவர்கள் மதிப்பளிக்கப்பட்டனர். எமது பிள்ளைகள் ஏமாற்றப்பட்டுள்ளனர் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (எ-213)

## பொருள் நிறையை சரிபார்க்க நகர சபை ஏற்பாட்டில் தராசு!

சாவகச்சேரி, ஒக்.3
சாவகச்சேரி நகர சபையின் கடலுணவு விற்பனைப் பிரிவில் மீண்டும் நிறுத்தல் தராசு வைக்கப்படவுள்ளது. நுகர்வோர் தாம் வாங்கும் பொருள்களின் நிறைகளை அதில் சரிபார்த்துக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வியாபாரிகள் பயன்படுத்தும் தராசுகளில் குளறுபடிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று பொதுமக்களால் வழங்கப்பட்ட முறைப்பாடுகளை அடுத்தே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் நகர சபையின் கடந்த அமர்விலும் விவாதிக்கப்பட்டிருந்தது. சபையால் புதிய இலத்திரனியல் தராசு கொள்வனவு செய்யப்பட்டுக் கடலுணவு விற்பனைப் பிரிவின் முற்பகுதியில் வைக்கப்படவுள்ளது. நுகர்வோர் அதில் தாம் வாங்கும் பொருள்களின் நிறைகளை உடன் சரிபார்த்துக் கொள்ள முடியும் என்று நகர சபையின் தவிசாளர் திருமதி இ.சிவமங்கை தெரிவித்தார்.

நகர சபையின் கடந்த ஆட்சிக் காலத்தில் இவ்வாறான செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு, அது மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றிருந்தது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## 24 ச.ச.நிலையங்களுக்கு மிக விரைவில் 8,000 ரூபா

*சாவகச்சேரி நகர சபை தவிசாளர் தெரிவிப்பு*

சாவகச்சேரி, ஒக்.3
சாவகச்சேரி நகர சபைக்குட்ட 24 சனசமூக நிலையங்களுக்குத் தலா 8 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது என்று சபையின் தவிசாளர் திருமதி இ.சிவமங்கை தெரிவித்தார்.

சிறப்பாக இயங்கும் சனசமூக நிலையங்களுக்கு அரசால் வழங்கப்படும் மானியக் கொடுப்பனவுக்கு மேலதிகமாக, விசேட நிதி வழங்குவதற்குச் சபையின் இந்த வருட வரவு செலவுத் திட்டத்தில் 2 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது. சபை எல்லைக்குட்பட்ட 24 சனசமூக நிலையங்களுக்குத் தலா 8 ஆயிரம் ரூபா வழங்க மாகாண ஆளுநர் ஒப்புதல் அளித்துள்ளார்.

விரைவில் சனசமூக அபிவிருத்தி அலுவலரின் பரிந்துரையுடன் விசேட கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது என்றும் சபையின் தவிசாளர் தெரிவித்துள்ளார். (எ-9)

## விவசாய கருத்தரங்கு நாளை

சாவகச்சேரி, ஒக்.3
தென்மராட்சியில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு விவசாயக் கருத்தரங்கு ஒன்று நடத்தப்படவுள்ளது. இந்தக் கருத்தரங்கு இரட்சணிய சேனை வளாகத்தில் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சியில் விவசாயப் புரட்சியை ஏற்படுத்தும் நோக்குடன் இரட்சணிய சேனை நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடத்தப்படவுள்ளது. இந்தக் கருத்தரங்கில் பாம் லங்கா நிறுவனத்தி னர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர் என்றும், பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகள் அதில் கலந்துகொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

## மரணத்தில் சந்தேகம் விசாரணை மீள ஆரம்பம்

மரணத்தில் பொலிஸாருக்கு ஏற்பட்ட சந்தேகத்தினால் மலர்ச்சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட சடலம் மீண்டும் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் களுத்துறையில் இடம்பெற்றுள்ளது.

வயோதிப பெண்ணொருவர் உடல் நிலை பாதிப்பால் கடந்த 27ஆம் திகதி களுத்துறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின் உயிரிழந்தார். அவரின் சடலம் புதைப்பதற்காக மலர்ச்சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இதன் போது அந்தப் பெண் கொலை செய்யப்பட்டே மரணம் சம்பவித்துள்ளது எனப் பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. அதையடுத்து பெண்ணின் சடலம் மீள் பிரேத பரிசோதனைக்காக களுத்துறை மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டது. (வ-இ)

## 'எம்.டி நியூ டயமண்ட்' கப்பல்: இழப்பீட்டு பேச்சு தொடர்கிறது

கொழும்பு, ஒக். 3
இலங்கையின் கிழக்கு, சங்கமன் கண்டிக்கு அப்பால் தீப்பற்றிய மசகுக் கப்பல் தொடர்பான இழப்பீட்டுப் பேச்சுக்கள் தற்போது இடம்பெற்று வருகின்றன என்று சட்டமா அதிபர் டப்புல்லா டி லிவேரா அறிவித்துள்ளார்.

எம்.இ.பி.ஏ என்ற கடல் சுற்றுச் சூழல் பாதுகாப்பு ஆணையகத்துக்கு இந்த விடயம் அறிவிக்கப்பட்டுள்ளது. கப்பலின் உரிமையாளர்களிடம் கோரப்பட்ட செலவு உரிமை கோரல்கள் இன்னும் தீர்க்கப்படவில்லை. இதனையடுத்து பேச்சு முடியும் வரை இலங்கை கடற்பரப்பை விட்டு வெளியேற மசகு எண்ணெய் கப்பலுக்கு அனுமதி வழங்க முடியாது என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கப்பல் இரண்டு வாரங்களுக்கு முன்னர் கடலில் தீப்பற்றிக் கொண்டது. இந்த தீயைக்கட்டுப்படுத்தி எரிபொருள் கசிவை தடுப்பதில் இலங்கை மற்றும் இந்திய கடற்படையினர் நடவடிக்கைகளை எடுத்திருந்தனர். இந்த நிலையில் இதற்கான செலவாக 442 மில்லியன் ரூபா கேட்கப்பட்டது. இதை வழங்குவதற்கு கப்பல் நிறுவனம் ஆரம்பத்தில் உடன்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது (ம-இ)

## தாய், சேய் பராமரிப்பு திட்டத்துக்கு அனுமதி

சாவகச்சேரி, ஒக்.3
சாவகச்சேரி நகர சபையின் தாய், சேய் பராமரிப்புத் திட்டத்துக்கு ஏற்ப, கர்ப்பிணிகளுக்குப் பிரசவ காலப் பொருள்கள் மற்றும் சிறார்களுக்குப் போசாக்கு உணவு பொருள்கள் வழங்குவதற்கு மாகாண ஆளுநர் ஒப்புதல் வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகர சபை இந்த ஆண்டு உத்தேச வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்த போது இந்தத் திட்டத்துக்காக 2 லட்சம் ரூபா நிதியை ஒதுக்கியிருந்தது. இந்தத் திட்டம் ஒப்புதலுக்காக வடக்கு ஆளுநருக்கு அனுப்பப்பட்டிருந்தது. வடக்கு ஆளுநர் தற்போது ஒப்புதல் வழங்கியுள்ளார்.

25 கர்ப்பிணிகளுக்கு தலா 3ஆயிரத்து 340 ரூபா பெறுமதியான பிரசவத்துக்கான பொருள்களும், 26 சிறார்களுக்குத் தலா 3 ஆயிரத்து 791 ரூபா 25 சதம் பெறுமதியான போசாக்கு உணவுகளும் வழங்க மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அனுமதி வழங்கியுள்ளார்.

உதவிப் பொருள்கள் வழங்க வேண்டியவர்களின், பெயர்ப் பட்டியல் சாவகச்சேரி சுகாதார திணைக்களத்தால் வழங்கப்பட்டதும் விநியோகிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## கலந்துரையாடல்

அளவெட்டி, ஒக்.3
யாழ்ப்பாணம் அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தின் 110 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு பெற்றோர், ஆசிரியர் மற்றும் பழைய மாணவர்களுடனான கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. இக் கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் கு. லங்காதீபன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஜ-63)

# தமிழர்களின் இருப்புக்கு இந்தியாவே பாதுகாப்பு

## சிறீதரன் எம்.பி தெரிவிப்பு

கிளிநொச்சி ஒக். 3

எங்களது இருப்பையும், பாதுகாப்பையும் இந்தியா தான் பாதுகாத்து வைத்திருக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு நாங்கள் எங்களை உங்களிடம் ஒப்படைத்துக் காத்திருக்கின்றோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

கரைச்சியில் இடம்பெற்ற எஸ்.பி.பி.யின் நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

மறைந்த பாடகர் தமிழ் மக்களினுடைய உணர்வுகளோடு பயணித்த ஒருவர். அதற்காகப் பல பாடல்களை எங்கள் இனம் சார்ந்து, எங்கள் தேசம் சார்ந்து பாடியிருக்கின்றார். இன்றைய காலகட்டத்தில் இலங்கை அரசின் சர்வாதிகாரப் போக்கும் இப்போதுள்ள 20ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டால் அதனால் இலங்கையில் நடைபெறப்போகும் பல காரியங்களும் எங்களைத் தாண்டி ஏதோ செய்யப் போகின்றது என்ற அச்சமும் எங்களிடம் இருக்கின்றது. எனவே எம்மைப் பாதுகாக்கின்ற முழுப் பொறுப்பும் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது-என்றார். (ப-6)

# மக்களுக்கு நிகரற்றுச் சேவையாற்ற பிரஜைகள் குழுவே சிறந்த நிறுவனம்

## மன்னார் ஆயர் பாராட்டு

மன்னார், ஒக்.3

**அரசாங்கங்கள் மாறலாம், அவர்களின் கொள்கைகள் மாறலாம் வெவ்வேறு விதங்களில் மக்கள் பாதிக்கப்படலாம். ஆனால் நாம் மன்னார் பிரஜைகள் குழு என்ற போர்வையில் ஒன்று சேர்ந்து செயற்படும்போது இந்தச் சமுதாயத்துக்கு நிகரற்ற சேவையை ஆற்றமுடியும் என்று மன்னார் ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது;

மன்னார் மாவட்டப் பிரஜைகள் குழுவான இந்த நிறுவனத்தின் யாப்பை நோக்கும்போது குறிக்கோள் என்று இங்கு இரண்டு விடயங்கள் குறிப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளன. ஒன்று மனித உரிமைகள், மனித நேயம், பொருளாதாரம் நிறைந்த எதிர்காலம், சமாதானச் சமூகம் என்பவற்றை இலக்காகக் கொண்டு இந்த மாவட்டத்தில் மட்டுமல்ல அயலிலுள்ள மாவட்டங்களுக்கும் தேவையெனின் சேவை செய்வது என்றும், இரண்டாவது குறிக்கோளாக சமூக, சமய, கலாசார சீர்கேடுகள், போதை வஸ்துக்கள், சிறுவர் துஷ்பிரயோகம், காணாமல் ஆக்கப்பட்டோர், அரசியல் கைதிகள் போன்ற மனித உரிமை மீறல்களைக் கண்டு அவற்றை ஆவனை செய்வதுடன், தேவை ஏற்படின் சட்ட நடவடிக்கைகளும் முன்னெடுப்பதும் ஆகும்.

நடைமுறையில் பார்க்கும்போது இவ் நிறுவனம் பல காரியங்களைச் செய்து வந்துள்ளது. குறிக்கோள்கள் எதுவோ அவைகளைச் செய்து வருகின்றீர்கள். எத்தனையோ மனிதப் பிரச்சினைகளில் பொதுவான சவால்களுக்கு நாம் முகம் கொடுக்கின்றோம்.-என்றார் (ப-60)

# தபால் தினத்தை முன்னிட்டு நிகழ்வுகள்

மன்னார், ஒக்.3

உலக தபால் தினத்தை முன்னிட்டு மன்னாரில் விளையாட்டுப் போட்டிகள், குருதித் தானம் மற்றும் சமய நிகழ்வுகளை நடத்த மன்னார் மாவட்ட தபால் திணைக்கள விளையாட்டுக் கழகத்தினர் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

நாளை ஞாயிற்றுக்கிழமை, மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை மைதானத்தில் கிரிக்கெட் மற்றும் உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளன. 8 ஆம் திகதி தபால் திணைக்கள ஊழியர்களும் ஏனையோரும் குருதித் தானம் வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. தொடர்ந்து 9ஆம் திகதி உலக அஞ்சல் தினத்தன்று மன்னார் எருக்கலம்பிட்டி பள்ளிவாசலில் சமய நிகழ்வுகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-60)

## கிளிநொச்சியில் வியாழனன்று

# பாடகர் எஸ்.பி.பிக்கு மக்கள் நினைவேந்தல்

கொடிகாமம், ஒக் 3

தென்னிந்தியப் பாடகர், நடிகர் எஸ்.பி.பாலசுப்ரமணியத்தின் நினைவேந்தல் நிகழ்வு கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர் வேழமாலிகிதன் தலைமையில் இடம்பெற்றது.



நிகழ்வில் யாழ்ப்பாணம் இந்திய கொன்சூலர் ஜெனரல் எஸ்.பாலச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், போர்க்காலப் பாடகி பார்வதி சிவபாதம், யோ.புரட்சி ஆகியோர் எஸ்.பி.பாலசுப்ரமணியத்தின் திருவுருவப் படத்துக்கு சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்தனர். தொடர்ந்து பொதுச்சுடர்கள் ஏற்றப்பட்டு, மக்களால் மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் தலைமை உரையைத் தொடர்ந்து நினைவுரைகள், எஸ்.பி.பி.யின் பாடல்கள், துயர்பகிர்வு ஆகியன இடம்பெற்றன. இதில் எஸ்.பி.பாலசுப்ரமணியத்தின் குடும்பத்தினருக்கான துயர்பகிர்வுச் செய்தியை கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழுவைச் சேர்ந்த எஸ். ஜீவநாயகம், யாழ். இந்திய கொன்சூலர் ஜெனரல் எஸ்.பாலச்சந்திரனிடம் கையளித்தார். (ப-6,-159)

# மன். மருத்துவமனையில் குறைபாடு தொடர்கிறது

## செல்வம். எம்.பி. சுட்டிக்காட்டு

மன்னார், ஒக்.3

மன்னார் மருத்துவமனை தொடர்பில், மக்கள் மத்தியில் இன்னும் நல்ல அபிப்பிராயம் ஏற்படவில்லை. முன்னைய மாகாண சபையும் மன்னாரைப் புறக்கணித்துள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மன்னார் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

மன்னாரைப் பொறுத்தவரை மக்கள் மத்தியில் இன்னும் மருத்துவமனை தொடர்பாக நல்ல அபிப்பிராயம் இல்லை. அதற்காக நாங்கள் இங்கு மருத்துவர்களைக் குறை கூறவில்லை.

மன்னார் மருத்துவமனையில் சரியான வளங்கள் கிடையாததே இதற்குக் காரணம். பல விடயங்களில் மன்னார் புறக்கணிக்கப்பட்ட நிலைமையே காணப்படுகின்றது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் மன்னார் மாவட்டத்துக்கு சுகாதார அமைச்சரை அழைத்து சுகாதாரம் தொடர்பான குறைபாடுகளை நேரடியாகக் காண்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு நாங்களும் ஒத்துழைப்பு வழங்க ஆயத்தமாக இருக்கின்றோம்-என்றார். (ப-60)

# இரண்டாம் மொழி எழுத்துப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக்.3

இரண்டாம் மொழிப் போட்டிப் பரீட்சையின் எழுத்து மூலமான பரீட்சை வரும் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் 4 நிலையங்கள் உட்பட வடக்கில் 9 நிலையங்களில் இடம்பெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்து பௌத்த கலாசார அமைப்பூடாக நடத்தப்படும் இரண்டாம் மொழிப் போட்டிப் பரீட்சையில் வடக்கு மாகாணத்தில் தோற்றும் 925 தமிழ் மாணவர்களுக்கு நேற்று முன்தினம் வாய்மொழிப் பரீட்சை இடம்பெற்றது. எழுத்துப் பரீட்சை இடம்பெற்று இரண்டாம் மொழிப் பரீட்சையில் சித்தியடைபவர்களுக்கு எதிர்வரும் 23ஆம் திகதியன்று பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் டிப்ளோமா பட்டம் வழங்கும் சிறப்பு நிகழ்வும் யாழ். நகரில் இடம்பெறவுள்ளது. (ப-50)

# சின்னப்பல்லவராயன்கட்டில் காணிப் பிணக்குகள் ஏராளம்


கிளிநொச்சி, செப்.3

கிளிநொச்சி பூநகரி சின்னப்பல்லவராயன்கட்டுக் கிராமத்துக்கு போலிக் காணி ஆவணங்களுடன் வருபவர்களால் காணிப் பிணக்குகள் அதிகரித்துள்ளன என்று பொதுமக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பூநகரி சின்னப் பல்லவராயன்கட்டுக் கிராமத்தில், 1983ஆம் ஆண்டு தொடக்கம் பல குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. எனினும் தற்போது அங்கு புதிதாக வருபவர்கள் காணிகளுக்கான போலி ஆவணங்களுடன் வந்து, 1974ஆம் ஆண்டு தங்களுக்கு அங்கு காணிகள் வழங்கப்பட்டதெனக் கூறுகின்றனர். இதனால் காணிப் பிணக்குகள் அதிகரித்துள்ளன. இவை தொடர்பில் அதிகாரிகள் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று மக்கள் கேட்டுக் கொண்டனர்.

கிளிநொச்சி மாவட்ட மேலதிக செயலர் (காணி) தலைமையில் இடம்பெற்ற கடந்த சிறுபோகக் கூட்டத்தின்போது, குடமுருட்டிக் குளத்தின் கீழ் நிலவுகின்ற காணிப் பிரச்சினைகளை விரைவாகத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று மேலதிக செயலர் தெரிவித்திருந்தார். எனினும் இன்றுவரை அந்தப் பிரச்சினைகள் தொடர்கின்றன என்றும் மக்கள் சுட்டிக்காட்டினர்.

இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட மேலதிக செயலர் (காணி) எஸ். திருலிங்கநாதனிடம் கேட்டபோது; நீதிமன்றத்தில் காணிப் பிணக்குகளுடன் தொடர்புடையவர்கள் வழக்குகளைத் தொடர்ந்திருப்பதால் பூநகரிப் பிரதேச செயலகத்தால் காணிப் பிணக்குகளைத் தீர்த்து வைப்பதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன -என்றார். (ப-ரி2)



சிறுவர், முதியோர் தினமான நேற்று முன்தினம் வவுனியா சிவன் முதியோர் இல்லத்துக்கு ஒரு தொகுதி புத்தகங்கள் கையளிக்கப்பட்டன. சிறகுகள் அமையம் படிப்பகம் செயற்றிட்டமூடாக அவை வழங்கப்பட்டன. (ப-222)

# யாழில் பெரும்போக நெற்செய்கை மும்முரம்

யாழ்ப்பாணம், ஒக்.3

தற்போது மழை பெய்ய ஆரம்பித்ததை அடுத்து, பெரும்போக நெற்செய்கையில் செய்கையாளர்கள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர் என்று விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

யாழ்.குடாநாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் செய்கையாளர்கள் தமது வயல்களில் நெல் விதைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அந்தவகையில் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவுப்பகுதி அடங்கலாக இந்த முறை பதினொரு ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஹெக்ரேயர் நிலப்பரப்பில் செய்கையாளர்கள் பெரும்போக நெற் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். செய்கையாளர்களுக்குத் தேவையான விதை நெல்லினை விவசாயத்திணைக்களம் வழங்கி வருகின்றது.

அத்துடன் கமநல சேவை நிலையங்கள் நெற்செய்கையாளர்களுக்கு தேவையான உரத்தை பெற்று வழங்குவதற்கு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளன.

இதே சமயம் வயல்களில் நெல்விதைக்கும் விவசாயிகள் தமது வயல்களுக்கு வரம்புகளைக் கட்டி மழை நீரை சேமிப்பதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு வரம்புகளை கட்டி மழை நீரை சேமிப்பதன் ஊடாக பயிர்களின் வளர்ச்சி மற்றும் அதிக விளைச்சலையும் பெற்றுக்கொள்ள முடியும் என்று விவசாயத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ந-17)

மாடியிலிருந்து தள்ளி வீழ்த்தி

## பெண்ணைக் கொலை செய்த குற்றச்சாட்டில் 4 பேர் கைது

கொழும்பு, ஒக்.3

கொள்ளுப்பிட்டி அடுக்குமாடிக் குடியிருப்பில் 5 ஆவது மாடியிலிருந்து ஒருவரைத் தள்ளி வீழ்த்திக் கொலை செய்த குற்றச்சாட்டில் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்தக் குடியிருப்பில் வசித்த பெண் ஒருவரை கத்தியால் குத்தி, அவரை 5 ஆவது மாடியிலிருந்து தள்ளி வீழ்த்தி, அவரது தங்கச்சங்கிலியை அபகரித்தனர் என்ற சந்தேகத்தில் 3 ஆண்களும், பெண் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர், அவர்கள் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்படுவார்கள். (ந-இ)

## வாழைப்பழ விலையில் திடீர் சரிவு

யாழ்ப்பாணம், ஒக்.3

யாழ்.குடாநாட்டில் வாழைப்பழத்தின் விலை திடீரென சரிந்துள்ளது. தற்போது மழைபெய்ய ஆரம்பித்ததை அடுத்தே, வாழைப்பழத்தின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று வாழைச் செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரத்தைக் காட்டிலும் தற்போது திடீரென அவற்றின் விலை அரைவாசியாக சரிந்துள்ளது. கிலோ 180 ரூபாவாக விற்கப்பட்ட கதலி வாழைப்பழம், தற்போது 90 ரூபாவாகக் குறைந்துள்ளது. இதரை வாழைப்பழமும் கிலோ 70 ரூபாவாக வீழ்ச்சியடைந்துள்ளது. நீர்வேலி, மருதனார்மடம், திருநெல்வேலி ஆகிய சந்தைகளில் வாழைப்பழத்தின் விற்பனை திடீரென குறைந்துள்ளது.

கடந்த செப்ரெம்பர் மாதத்தில் குறிப்பாக கதலிவாழைப்பழத்துக்கு பெரும் கிராக்கியும், பற்றாக்குறையும் ஏற்பட்டுக் காணப்பட்டமையோடு அவற்றின் விலையும் அதிகரித்துக் காணப்பட்டது. (ந-17)

## விழிப்புணர்வு நடைப்பயிற்சி

கிளிநொச்சி, ஒக்.3

கிளிநொச்சி மாவட்டத்தில் மாபெரும் சமூக விழிப்புணர்வு நடைப் பயிற்சி ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி சமூக அபிவிருத்திப் பேரவையின் ஏற்பாட்டில், உடல் ஆரோக்கியத்துக்கும் சமூக விழிப்புணர்வுக்குமான நடைப் பயிற்சியாக இது இடம்பெறவுள்ளது.

இந்த நடைப் பயிற்சி காலை 6.45 மணிக்கு கிளிநொச்சி இந்துக் கல்லூரி முன்றலில் ஆரம்பித்து, கிளிநொச்சி மத்திய கல்லூரி வரை நடைபெறவுள்ளது.

எனவே இதில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கிளிநொச்சி சமூக அபிவிருத்திப் பேரவை கோரியுள்ளதோடு, நடைப் பயிற்சிக்கு வருகின்றவர்கள் அதற்கேற்ற உடை, காலணி, தொப்பி என்பவற்றை அணிந்து வருமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (ந-214)

## நெற்செய்கை ஆரம்பித்துள்ளதால் கால்நடைகளை கட்டி வளர்க்குக!

### கமக்கார அமைப்புக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.3

நீர்வேலி மற்றும் கோப்பாய் தரவை வயல் நிலங்களில் தற்போது நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், கால்நடை வளர்ப்போர் தமது கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு கமக்கார அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இது குறித்து கமக்கார அமைப்புக்கள் தெரிவித்துள்ளதாவது: தரவை வயல் நிலங்களில் அதிகமானோர் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ளனர். கால்நடை வளர்ப்போர் நெல் அறுவடை செய்யும் காலம் வரைக்கும் கால்நடைகளை கட்டி வளர்க்க வேண்டும். இதை மீறி கால்நடைகள் அவிட்டு விடப்பட்டு பயிர்களை மேய்ந்தால், சம்மந்தப்பட்ட கால்நடை உரிமையாளர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-17)

## கோப்பாயில் இம்முறை அதிக நெற்செய்கை

யாழ்ப்பாணம், ஒக்.3

கோப்பாய் வடக்கு வயல் நிலங்களில், இந்த முறை கூடுதலான நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஏற்கனவே செய்கை இன்றி தரிசு நிலங்களாக காணப்பட்ட வயல் நிலங்களை, செய்கையாளர்கள் உழுது பசளை போட்டு நெற்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த முறையை விட இந்த முறை செய்கையின் போது அதிகமான வயல்களில் நெல் விதைக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் வயலை அண்டியிருக்கும் தாமரைக்குளமும் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது.

குளத்தில் மழை நீரைக் கூடுதலாகச் சேமிக்கும் முகமாக, இந்தக் குளம் துப்புரவு செய்யப்படுகின்றது. சிறுதானிய செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு இந்தக் குளம் முன்கூட்டியே துப்புரவு செய்யப்பட்டுள்ளது. (ந-17)

## கறுப்புச் சந்தையில் மஞ்சள் 4,500 ரூபா!

கொழும்பு,ஒக்.3



400 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட மஞ்சள் ஒரு கிலோ கிராம் தற்போது கறுப்புச் சந்தையில் சுமார் 4 ஆயிரத்து 500 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது என்று கொழும்பு புறக்கோட்டை வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்காக, வெளிநாடுகளில் இருந்து மஞ்சள் இறக்குமதி தடை செய்யப்படுகிறது என்று கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அரசு அறிவித்தது.

அதனைத் தொடர்ந்து மஞ்சளுக்குக் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டது. விலையும் அதிகரித்துள்ளது.

அதேவேளை மஞ்சளுக்குப் பதிலாக கோதுமை மா மற்றும் மஞ்சள் நிறபூச்சுகளைக் கலந்து, போலி மஞ்சள் சந்தைகளில் விற்பனை செய்யப்படுகின்றது என்று நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

## யாழில் கடலுணவுகளின் விலை சடுதியாக அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.3

யாழ்ப்பாணத்தில் கடலுணவுகளின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது. இதனால் நுகர்வோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாஷையூர், குருநகர், கொட்டடி, நாவாந்துறை, கல்வியங்காடு போன்ற மீன் சந்தைகளில் குறைந்தளவு கடலுணவுகளே வந்து சேர்கின்றன. இதுவே விலை அதிகரிப்புக்குக் காரணம் என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

இதே சமயம் குடாநாட்டு கடற்பரப்பில் பிடிக்கப்படும் கடலுணவுகள் தெற்கே ஏற்றுமதி செய்யப்பட்டும் வருகின்றன.

தெற்கிலிருந்து வரும் வாகனங்கள் கடலுணவுகளை அதிகமாக எடுத்துச் செல்கின்றன. கொரோனாத் தொற்று அச்சுறுத்தல் மற்றும் ஊரடங்கு காலத்தில் குடாநாட்டில் கடலுணவுகள் ஏற்றுமதி இன்றி தேங்கிக் காணப்பட்டமையோடு, அவற்றின் விலையும் வீழ்ச்சி அடைந்து காணப்பட்டது. (ந-17)

## பரீட்சை மாதிரி செயலமர்வு



பளை,ஒக்.3

பளைக் கோட்டத்துக்கு உட்பட்ட தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான பரீட்சை மாதிரி செயலமர்வு நேற்று முன்தினம் பளை இந்து ஆரம்ப வித்தியாலயத்தில் நடைபெற்றது.

வன்னிப்பட்டறை உதவிக்கரம் அமைப்பின் அனுசரணையுடன் நடைபெற்ற இந்தச் செயலமர்வில் வளவாளராக கிளிநொச்சி செல்லையாதீவு அ.த.க.பாடசாலை அதிபர் இ.கலைச்செல்வன் கலந்து கொண்டார்.

இச் செயலமர்வில் 7 பாடசாலைகளைச் சேர்ந்த 113 மாணவர்கள் கலந்துகொண்டனர். (ஐ-159)

# சிறுவர் தின நிகழ்வுகள்



தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் சிறுவர் விடுதியில் நேற்று வெள்ளிக்கிழமை சிறுவர் தினம் கொண்டாடப்பட்டது. சிறுவர் விடுதியின் மருத்துவ நிபுணர் மருத்துவர் எஸ். சிவலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிறுவர்களை மகிழ்விக்கும் வண்ணம் அவர்களுக்கான அன்பளிப்பு பொருள் கள் வழங்கப்பட்டன. (ஐ-25)

*சிறுவர் தினத்தை முன்னிட்டு*

## ஐந்து பாடசாலைகளுக்கு நடமாடும் நூலகங்கள்

கொழும்பு, ஒக்.3

சிறுவர் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி கோத்தாபய ராஜ பக்ஷ ஐந்து பாடசாலைகளுக்கு நடமாடும் நூலகங்களை வழங்கினார். சேவையிலிருந்து ஒதுக்கப்பட்ட பழைய பஸ்கள் பழுதுபார்க்கப்பட்டு, சிறுவர்களை ஈர்க்கும் வகை யில் நூலகங்களாக அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அமைக்கப்பட்ட ஒரு முழுமையான நூலகத்தின் விலை சுமார் 10 இலட்சம் ரூபா எனத் தெரிவிக்கப்பட்டுள் ளது. மாணவர்களை ஜனாதிபதி செயலகத்துக்கு நேற்று முன் தினம் வரவழைத்த ஜனாதிபதி இந்த நூலகங்களை அவர் களிடம் கையளித்தார். (ஐ)



மீசாலை கமலாம்பிகை வித்தியாலயத்தில் சிறுவர் தின நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை கொண்டாடப் பட்டது. அதிபர் மற்றும் ஆசிரியர்கள் பாடசாலைக்கு வருகை தந்த மாணவர்களுக்கு மலர்ச்செண்டுகள் வழங்கி அவர்களை வரவேற்றனர். (ஐ-9)





சிறுவர் தினத்தை முன்னிட்டு மன்னார் வங்காலை கிராமத்தில் வசிக்கும் மாணவர்களுக்கு கற்றல் உப கர ணங்கள் வழங்கப்பட்டன. வன்னி மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாத னின் செயலாளர் வசந்தால் இந்த கற்றல் உபகர ணங்கள் வழங்கப்பட்டன. (ஐ-213)



கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை யில் "எமது தேசம் எமது கைகளில்" எனும் தொனிப் பொருளில் சிறுவர் தின நிகழ்வு நேற்று வெள்ளிக் கிழமை நடைபெற்றது. அதிபர் திருமதி புஸ்பராணி மங்களேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ் வில் கொடிகாமம் பொதுச் சுகாதார பரிசோதகர் க. அருள்குமரன் கலந்து கொண்டு மாணவர்களுக் கான உடல் ஆரோக்கியம் மற்றும் டெங்குக் கட் டுப்பாடு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்துரை களை வழங்கினார். (ஐ-159)







வரலாற்றுச் சிறப்பு மிக்க வல்லிபுர ஆழ்வார் ஆலய கடல் தீர்த்த உற்சவம் நேற்றுமுன்தினம் சிறப்புற நடைபெற்றது. கடல் தீர்த்தத் திருவிழாவில் நூற்றுக் கணக்கான அடியார்கள் கலந்துகொண்டனர். (ஐ)

# ஆசிரியர், அதிபர்களுக்கு பொலிஸார் அச்சுறுத்தல்

## *கல்வி அமைச்சுக்கு ஆசிரியர் சேவைச் சங்கம் கடிதம்*

கொடிகாமம் ஒக் 3

**ஆசிரியர்களினதும், அதிபர்களினதும் சுயவிவரங்களைச் சேகரித்து அச்சுறுத்தும் பொலிஸாரின் செயற்பாடுகள் தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தின் உப தலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார்.**

அத்தோடு, இது தொடர்பாக ஆசிரியர் சேவைகள் சங்கம் கடுமையான எதிர்ப்பையும் வருத்தத்தையும் வெளிப்படுத்துவதோடு இவ்வாறான கீழ்த்தரமான செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

தலைமைப் பொலிஸ் அதிகாரிகள் தங்கள் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளில் பலவகையான தகவலறியும் படிவங்களை அனுப்பி விவரங்களைக் கேட்டு அச்சப்பட வைக்கின்ற செயற்பாடுகள் பதிவாகியுள்ளன.

அவ்வாறான தகவல்களை வழங்க மறுக்கும் அதிபர்களுக்கு தொலைபேசியினூடாக அழுத்தம் கொடுக்கும் செயற்பாடுகளும் பதிவாகியுள்ளன. பொலிஸாருக்கு ஆசிரியர்களினதும், அதிபர்களினதும் விவரங்கள் தேவையாயின் அது தொடர்பாக தகவலறியும் அமைச்சு, மாகாண அமைச்சு, திணைக்களங்கள், மற்றும் வலயக்கல்விக் காரியாலயம் உட்பட பல்வேறு நிறுவனங்களினூடாக பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் அவ்வாறு செய்யாமல் இவ்வாறான தான்தோன்றித் தனமாகின்றமை இலங்கைப் பொலிஸார் செயற்படுவது ஆட்சியில் உள்ள அரசாங்கத்தின் தேவையின் அடிப்படையில் என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகின்றது.

எனவே முறையற்ற அழுத்தங்கள் மற்றும் அச்சுறுத்தல்களை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வது உங்களுடைய பொறுப்பு - என்றுள்ளது. (ஐ-159)

## புரட்டாதி சனி விரத வழிபாடு

இணுவில், ஒக். 3

யாழ்ப்பாணம் இணுவில் தெற்கு அருள்மிகு ஞானாம்பிகை உடனாய ஞானலிங்கேஸ்சுரர் ஆலயத்தில் புரட்டாதி சனி விரத வழிபாடுகள் சிறப்பாக நடைபெறவுள்ளன.

இதன்படி இன்று சனிக்கிழமை மற்றும் எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை ஆகிய நாள்களில் சிறப்பு பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



*யாழ்ப்பாணத்துக்கு கடத்தப்பட்ட*

## 10 லட்சம் ரூபா பெறுமதியான முதிரைக் குற்றிகள் மீட்பு

வவுனியா, ஒக். 3

10 லட்சம் பெறுமதியான முதிரைக் குற்றிகளை கடத்திய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலமோட்டை பகுதியில் வைத்து நேற்றுக் காலை சந்தேகநபர் கைது செய்யப்பட்டமையுடன் கடத்திச் செல்லப்பட்ட முதிரைக் குற்றிகளும் மீட்கப்பட்டன.

கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து குறித்த பகுதியில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப்படையினர் லொறி ஒன்றை வழி மறித்து சோதனை மேற்கொண்டனர்,

இதன்போது உமி மூடைகளால் மறைத்து கடத்தி செல்லப்பட்ட 10 லட்சம் ரூபா பெறுமதியான 23 முதிரை மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டன.

அவற்றை கடத்திச்செல்லப் பயன்படுத்திய வாகனத்தையும் விசேட அதிரடிப் படையினர் மீட் டுள்ளனர். குறித்த மரக்குற்றிகள் யாழ்ப்பாணம் நோக்கி கடத்தி செல்லப்படவிருந்தன என தெரிவித்த விசேட அதிரடிப்படையினர் கைப்பற்றபட்ட முதிரைக்குற்றிகளையும், சந்தேகநபரையும் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக ஓமந்தை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (ஐ-110)

## குருதிக் கொடை

உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு குருதிக்கொடை முகாம் யாழ்ப்பாணம் அளவெட்டி பிரதான தபாலகத்தில் இன்று சனிக்கிழமை காலை 7 மணி தொடக்கம் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-63)

## மதில் அமைக்கும் பணிகள் ஆரம்பம்

கிளிநொச்சி இயக்கச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கான சுற்று மதில் அமைக்கும் பணிகள் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டன.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தால் கிராம மக்களிடமும் அக்கிராமத்தில் இருந்து புலம் பெயர்ந்து வாழும் உறவுகளிடமும் இருந்து கிடைக்கப் பெற்ற நிதி மூலம் இந்த சுற்றுமதில் அமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ-70)

# மஞ்சள், போதைப்பொருள் கடத்தலால் மன்னாரில் கொரோனா பரவ வாய்ப்பு

## *மன்னார் பொலிஸ் பொறுப்பதிகாரி எச்சரிக்கை*

மன்னார், ஒக். 3

தென் இந்தியாவிலிருந்து மஞ்சள் போதைப் பொருள்கள் முதலியவை கடத்தப்படுகின்றமையால் அங்கு தீவிரமாகப் பரவி வரும் கொரோனா மன்னாருக்கு மட்டுமல்ல நாட்டுக்கே கேடாக அமையும். ஆகவே ஒவ்வொரு கிராம மக்களும் இது தொடர்பில் விழிப்பாக இருக்க வேண்டும் என்று மன்னார் பிரதம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ் கிருசாந்தன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற மன்னார் பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கொரோனா நோய்தொடர்பில் மன்னார் மாவட்டம் ஒரு நல்ல இடத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. ஆனால் இந்தியாவிலிருந்து தற்பொழுது மஞ்சள் மற்றும் போதை பொருள்கள் தீவிரமாக சட்டபூர்வமற்ற முறையில் வந்து சேர்கின்றன. இந்தியாவில் கொரோனா நோய் மிகவும் தீவிரமாகப் பரவி வருகின்ற இந்த நேரத்தில் அங்கிருந்து கடத்தி வரப்படுகின்ற இப் பொருள்களிலிருந்தும், பொருள்களைக் கைமாறுபவர்களிடமிருந்தும் நோய்த் தொற்று பரவக்கூடிய அபாயம் இருக்கின்றது.

இதைக் கவனத்தில் கொண்டு பொலிஸ், இராணுவம் மற்றும் கடற்படையினர் அனைவரும் ஒன்றிணைந்து கடத்தல்களை முறியடிப்பதில் மிகத் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றனர். இவற்றை முற்றாக முறியடிப்பது முப்படைகளின் கைகளில் மட்டுமல்ல பொது மக்களின் கைகளிலும் உள்ளது.

மக்கள் எம்முடன் கைகோர்க்க வேண்டும். வெளி ஊர்களில் இருந்து பலர் மன்னாருக்கு வருகின்றனர். இவர்கள் யார்என்று தெரிவதில்லை. ஆகவேபொது மக்களாகிய நீங்கள் தான் இவ்விடயத்திலும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். வெளி மாவட்டத்திலிருந்து இங்கு வருபவர்கள் மஞ்சள் வியாபாரத்துடன் போதைப் பொருள்கள் வியாபாரத்திலும் ஈடுபடுகின்றனர்.

ஆகவே தற்பொழுது மன்னாரில் கடத்தல் பொருள்கள் கைப்பற்றப்படுகின்ற போதும் ஒவ்வொரு கிராம மக்களின் ஒத்துழைப்புகிடைக்குமெனில் இவற்றை முற்றாக நிறுத்தி மன்னாரை சிறந்த மாவட்டமாக மாற்றலாம் - என்றார். (ஐ-60)



வலிகாமம் தெற்குப் பிரதேச சபைக்குட்பட்ட சுன்னாகம் டாக்டர் சுப்பிரமணியம் 2 ஆம் குறுக்கு வீதி சீரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு அண்மையில் கையளிக்கப்பட்டது.

சபையின் எட்டாம் வட்டார உறுப்பினர் தேசகீர்த்தி பால சிங்கம் சுரேஸ்குமாருக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் இந்த வீதி சீரமைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ)



# தற்கொலை தொடர்பான விழிப்புணர்வு ஒத்திகை

முல்லைத்தீவு, ஒக்.3

அதிகரித்து வரும் தற்கொலைகளைத் தடுப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், வீதி நாடகம் ஒன்றை மேற்கொள்வதற்கான செயல்திட்டத்தின் ஒத்திகை நிகழ்வு நேற்று முள்ளியவளைத் தாய்த்தமிழ் பேரவையின் காரியாலயத்தில் நடைபெற்றது.

தாய்த்தமிழ் பேரவை ஒழுங்கமைப்பில் இந்த விழிப்புணர்வு ஒத்திகை நிகழ்வு மேற்கொள்ளப்பட்டது.

இதில் நாடக நிகழ்வு தொடர்பான கருத்துரைகளை வைத்திய கலாநிதி கை.சுதர்சன், கலைஞர் புவனா இரத்தினசிங்கம், தாய்த் தமிழ்பேரவையின் தலைவர் சி.நாகேந்திரராசா ஆகியோர் வழங்கினர். ஒத்திகை நிகழ்வை தொடர்ந்து கிராம ரீதியாக இந்த நாடக நிகழ்வு சமூக செயற்பாட்பாளர்கள், நலன்விரும்பிகள், தாயக புலம்பெயர் உறவுகளின் நிதிப்பங்களிப்புடன் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது. (ற-222)

# 20க்கு எதிரான மனுக்கள் மீது 3ஆம் நாளாகவும் விசாரணை

கொழும்பு, ஒக். 2

அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தைச் சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணைகள் நேற்று மூன்றாவது நாளாகவும் இடம்பெற்றன.

அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தைச் சவாலுக்கு உட்படுத்தி 39 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த மனுக்கள் மீதான விசாரணைகள் கடந்த செவ்வாய்கிழமை முதல் இடம்பெற்று வருகின்றன. மூன்றாம் கட்டமாக நேற்றும் அவை விசாரிக்கப்பட்டன. (ம-இ)



சாவகச்சேரிநகர்பாவேந்தன்பாலர்பகல்பராமரிப்புநிலையத்தில் சிறுவர் தின நிகழ்வு நேற்று நிலை யத் தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் நடைபெற்றது. (ஜ-9)

# சைபர் தாக்குதல்;
## நாமலுக்கும் பாதிப்பாம்

சைபர் மிரட்டல் மிகவும் கடுமையான குற்றம் என்று குறிப்பிட்டுள்ள நாமல் ராஜபக்ஷ சைபர் இணைய ஊடுருவல் தாக்குதலுக்கு தானும் அகப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

சைபர் மிரட்டலைத் தடுக்க எடுக்கப்பட வேண்டிய முயற்சிகள் குறித்து நீதித்துறை அமைச்சர் அலி சப்ரி மற்றும் பிற முக்கிய அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியதைத் தொடர்ந்து சைபர் இணையஊடுருவல்தொடர்பில்நாமல்தனதுடுவிட்டர்பக்கத்தில் கருத்துப் பதிவு செய்துள்ளார்.

அதில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது;

"சைபர்மிரட்டல்மிகவும்கடுமையானகுற்றம். அதனைநிறுத்துவதற்கானநடவடிக்கைகளைநிச்சயம்மேற்கொள்ளவேண்டும். சைபர் இணைய ஊடுருவலில் அனைவரும் பாதிக்கப்படுவதற்கு வாய்ப்புள்ளது. இந்த இணைய ஊடுருவலில் நான் பாதிக்கப்பட்டுள்ளேன். எனவேதான் அதன் தாக்கத்தை என்னால் புரிந்துகொள்ள முடிகின்றது" என்றுள்ளது. (ப-இ)



கிளிநொச்சி ஸ்கந்தபுரம் இல. 01 பாடசாலையில் அமைக்கப்பட்டசரஸ்வதிசிலைநேற்றுமுன்தினம் திறக்கப்பட்டது. அமரர் விமலேஸ்வரன் பகிராஜ் நினைவாகஅவரதுகுடும்பத்தினரால்இந்தச்சிலை அமைக்கப்பட்டது. (ப-ரி2)





சிறுவர்தினத்தைமுன்னிட்டுகிளிநொச்சிமகாதேவசுவாமிகள் சிறுவர் இல்லத்தில் சிறுவர்களுக்கான விளையாட்டு நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் நடைபெற்றன. இல்லச்செயலாளர்எஸ்.பகீரதன்சிறப்புரைஆற்றிவிளையாட்டுநிகழ்வுகளை ஆரம்பித்தார்.

விளையாட்டுக்களின் நடுவராக இல்ல பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர், பணிப்பாளர், முகாமையாளர்கள்,பராமரிப்பாளர்கள்மற்றும்ஆசிரியர்கள்நடுவராகச்செயற்பட்டனர்.

மா ஊதி இனிப்பு எடுத்தல்,50 மீற்றர் ஓட்டம், சங்கீதக் கதிரை,அஞ்சல் ஓட்டம், உதைபந்தாட்டம் மற்றும் மெதுவாகசைக்கிள்செலுத்துதல்போன்றபலவிளையாட்டுகள் நடைபெற்றன. (ஜ-222)

# இந்து சமுத்திர பிராந்தியத்தின் மையமாக இலங்கை முனைப்பு

## தரமான உட்கட்டமைப்புக்காக ஜப்பானிடம் உதவி கேட்கிறது

கொழும்பு, ஒக். 2

இந்திய சமுத்திர பிராந்தி யத்தில், வர்த்தக மற்றும் கடல் மையமாக தன்னை நிலை நிறுத்துவதற் கான முயற்சிகளில் இலங்கை இறங்கியுள்ளது. இதற்காக ஜப்பானின் உதவியை இலங்கை நாடியுள்ளது.

கடல்சார் பாதுகாப்பு மற்றும் கடல்சார் பிரச்சனைகள் குறித்த நான்காவது, இலங்கை ஜப்பான் உரையாடல் இன்று காணொளியில் நடைபெற்றது. ஜப்பானிய தூதுக்குழுவில் வெளியுறவு அமைச்சகம், பாதுகாப்பு அமைச்சகம், ஜப்பான் கடலோர காவல்படை மற்றும் கொழும்பில் உள்ள ஜப்பானிய தூதரகம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் பங்குபற்றினர்.

இலங்கை தூதுக்குழுவில் வெளியுறவு அமைச்சகம், பாதுகாப்பு அமைச்சகம், துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சகம், பாதுகாப்புப் பணியாளர்கள், கடற்படை, வான்படை, கடலோர காவல்படைத் துறை, இலங்கை துறைமுக ஆணையம் மற்றும் வணிகக் கப்பல் செயலகம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தனர்.

உரையாடலின் போது, இந்துபசிபிக் பிராந்தியத்தில் பரவியுள்ள பலதரப்பு கடல்சார் முயற்சிகள் குறித்து தீவிர விவாதங்கள் நடத்தப்பட்டன. (ம-இ)





'மாற்று வலுவுள்ளோரும் ஆற்றுவோம் சாதனை" என்ற தொனிப்பொருளில் முல்லைத்தீவு புதுக்குடி யிருப்பு வள்ளிபுனம்இனியவாழ்வுஇல்லத்தில்சிறுவர்தினநிகழ்வுகள் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

முதன்மை விருந்தினராக முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமலநாதன் கலந்து கொண்டார், தனிநடனம்,பேச்சு,குழுநடனம்,குழுப்பாடல், சைகைமொழிப் பேச்சு, தனி நடனம்,நாட்டிய நடனம் போன்ற கலை நிகழ்வுகள் நடைபெற்றன. (ஜ-19)

# சுதந்திரமாக கல்வி கற்கக் கூடிய கல்விச் சீர்திருத்தம் மிகஅவசியம்

## சுட்டிக்காட்டுகின்றார் பிரதமர் மஹிந்த

கொழும்பு, ஒக். 3

பிள்ளைகள் சுதந்திரமாக, மன மகிழ்வுடன் கல்வி கற்கக் கூடிய கல்வி சீர்திருத்தமொன்று நாட்டுக்கு உடனடியாக தேவைப்படுவதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அபே கம' வளாகத்தில் நேற்று நடைபெற்ற சர்வதேச சிறுவர் தின தேசிய நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேலும் தெரிவித்ததாவது:

அராமைப்பு சீர்திருத்தத்தைவிட கல்விச் சீர்த்திருத்தம் இந்நாட்டின் எதிர்காலத்தில் தாக்கம் செலுத்துகின்றது. நாம் கல்விக்கு தேசிய வருவாயிலிருந்து எவ்வளவு தொகையை ஒதுக்கினாலும் பிள்ளைகளுக்கு கல்விச் சுதந்திரம் இல்லையேல் அதனால் பயனற்றுப் போகும்.

அத்துடன், அனைத்து விடயங்களையும் மீண்டும் கட்டியெழுப்பும் யுகமொன்று மீண்டும் உருவாகியுள்ளது. வீட்டின் பின்புறத்தில் விளையும் மஞ்சள் செடி முதல், மாணவர்கள் பாடசாலைக்கு அணியும் சீருடை வரை நாமே உற்பத்தி செய்துகொள்ளும் யுகமொன்று தோற்றம் பெற்றுள்ளது.

இதேவேளை, சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு பிள்ளைகளுக்காக இவ்வாறானதொரு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டமை தொடர்பாக நான் மகிழ்ச்சியடைகிறேன். விசேடமாக குழந்தைகளுக்காக நாற்புறமும் சுவர் எழுப்பப்பட்ட மண்டபத்தில் உபதேசம் நிகழ்த்துவதைவிட அபே கமவில் இந்த நிகழ்வு நடத்தப்படுகின்றமை குறித்தும் மகிழ்ச்சியடைகிறேன். - என்றார். (து-இ)





வவுனியாவேப்பங்குளம்இந்துஅன்பகத்தில்சிறுவர்தின நிகழ்வுகள்நேற்றுமுன்தினம்வியாழக்கிழமைசிறப்பாக நடைபெற்றன.


அன்பகத்தின்தலைவிசாமிஅம்மாதலைமையில்நடைபெற்ற நிகழ்வில் நான்கு மதங்களையும் சேர்ந்த மதகுருமார்கள், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கு. திலீபன், வவுனியாஉதவிபிரதேசசெயலாளர் சுஜீவா பிரியதர்சினி, சிறுவர்நன்னடத்தைஅதிகாரிஜெயகெனடி,சட்டத்தரணி தயாபரன்,சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உத்தியோகத்தர்உள்ளிட்டபலரும்கலந்துகொண்டனர். சிறுவர்களின் பல்வேறு கலை நிகழ்வுகளும் இதன் போது நடைபெற்றன. (ஜ-110)

# குளங்களை விரைவில் இணைத்து நீர்த் தேக்கத்தை உருவாக்குங்கள்

## விவசாயிகள் கோரிக்கை

**கிளிநொச்சி, ஒக்.3**

**வன்னேரிக் குளத்தையும், தேவன்குளத்தையும் இணைத்து நீர்த்தேக்கம் உருவாக்கும் வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு கிளிநொச்சி மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வன்னேரிக்குளம், ஜெயபுரம் கிரா மங்களின் விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.**



இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது; கடந்த 2000ஆம் ஆண் டில் இத்திட்டத்தை நடை முறைப்படுத்துவதற்கான முயற்சிகளை கிளிநொச்சி மாவட்டச் செயலகம் மேற் கொண்ட போதிலும் நாட் டில் நிலவிய போர்ச் சூழல் காரணமாக அத் திட்டம் கைவிடப்பட்டது. 2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் அந் தத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு இப்பகுதியில் காணப்பட்ட மிதிவெடிகள் தடையாக இருக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டது. எனினும் தற்போது மிதிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. இந்த நிலையில் அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் விவசாயிகளால் ஆயிரம் ஏக்கருக்கு அதிகமான நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ள முடியும். வன்னேரிக்குளம் கிராமம் எதிர்கொண்டுள்ள உவர் ஆபத்தில் இருந்தும் பாது காப்பைப் பெற்றுக் கொள்ள முடியும். தேவன்குளத்தின் கீழ் உள்ள 550 ஏக்கர் வரை யான நிலப்பரப்புக்கு நீர்ப்பா சனம் மேற்கொள்ள முடியும். இதன் காரணமாக ஜெயபுரம் கிராம மக்களின் வாழ்வா தாரத்தை விவசாயத்தின் மூலம் உயர்த்தமுடியும்.

இதேவேளை வன்னேரிக்கு ளத்தின் கீழ் 363 ஏக்கரில் விவசாயிகள் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ளனர். ஜெயபுரம் கிராமத்தில் 548 ஏக்கர் வயல் நிலம் உள்ள போதிலும் அங்கு பயிர்ச் செய்கை மேற் கொள்ள முடியாத தடைகள் காணப்படுகின்றன. வன்னேரிக்குளத்தையும் தேவன்குளத்தையும் இணைப்பதன் மூலம் 1000 ஏக்கருக்கு மேலான நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ள முடி யும்.-என்றனர். (ப-ரி2)


# 5 மாடிக் கட்டட இடிவுக்கு தரமின்மையே காரணம்

கண்டி, பூவெலிகட பிரதேசத்தில் ஐந்து மாடிக் கட்டடம் இடிந்து வீழ்ந்தமைக்கு, கட்டடம் உரிய தரத்தில் நிர்மாணிக்கப்படாமையே முக்கிய காரணம் என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தினால் மேற்கொள் ளப்பட்ட ஆய்வில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சம்பவ இடத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மாதிரிகளைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். சம்பவம் தொடர்பில் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மேற்கொண்ட விசாரணை அறிக்கை கடந்த புதன்கிழமை மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே மற்றும், கண்டி மாவட்டச் செயலாளரிடம் கையளிக்கப்பட்டது குறிப் பிடத்தக்கது. (ப-இ)

# ஷானி அபேசேகரவுக்கு விளக்கமறியல் நீடிப்பு

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவுக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி ஷானி அபேசேகரவை எதிர் வரும் 16 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கம்பஹா நீதிவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார். பம்பலப்பிட்டி கோடீஸ்வர வர்த்தகர் மொஹம்மட் சியாம் படுகொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள, முன் னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குண வர்தன உள்ளிட்ட 8 பேருக்கு எதிராக முன் னெடுக்கப்பட்ட வெலிவேரிய பகுதி ஆயுதக் கிடங்கு விவகார விசாரணைகளில், சந்தேக நபர்களைக் கைது செய்ய புதிதாகச் சாட்சி யங்களை உருவாக்கிய குற்றச்சாட்டின் கீழ் இவர் கடந்த ஜூலை மாதம் கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந் தார். (ப)



மகாத்மா காந்தியின் 151 ஆவது ஜனன தின நிகழ்வு மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டக்களப்பு காந்தி சேவா சங்கத்தின் ஏற் பாட்டில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில், மட்டக்களப்பு மகாத்மா காந்தி பூங்காவிலுள்ள மகாத்மா காந்தியின் உரு வச் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப் பட்டது. (ப-46)


**சிவாச்சாரியார் தேவை**

கொழும்பிலுள்ள பிரபலமான இந்து ஆலயத்திற்கு சிவப்பிராமண குலத்தவரான சிவாச்சாரியார் தேவை 40 வயதிற்கு மேற்பட்ட வரகவும் சகல உற்சவங்களையும் நடாத்தக்கூடியவராகவும் உள்ளவர் நன்று. நவீன வசதிகளுடன் கூடிய வீட்டு வசதி செய்து தரப்படும்.

**மேலும் சம்பள விபரங்கள் பேசித்தீர்க்கப்படும்.**

**077 294 1961**

தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

காரைநகர்
**கிழவன்காடு கலாமன்றம்**
நடத்தும்
**பரிசளிப்பும் கலைநிகழ்வும்**
**அழைப்பு**

- இடம் : துர்க்கா மணி மண்டபம், நல்லூர்
- காலம் : 04.10.2020 ஞாயிற்றுக்கிழமை
- நேரம் : பி.ப.2.00 மணி

கவியரங்கம் "கலையாலும் உலகாளலாம்"
தலைமை
- கவிஞர் சோ.பத்மநாதன்
- கவிஞர் இ.த.ஜெயசீலன்
- கவிஞர் நா.சிவசிதம்பரம்
- கவிஞர் ச.முகுந்தன்
- கவிஞர் இ.சு.முரளிதரன்

நாட்டியாஞ்சலி
பட்டிமண்டபம் தலைப்பு
"கல்வி வளர்ச்சியில் பெரிதும் செல்வாக்கு செலுத்துவது"

குடும்ப சூழலே!
- கு.பாலசண்முகன்
- ந.ஐங்கரன்
- T.ஹர்சன்

பாடசாலை சூழலே!
- செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன்
- இ.சர்வேஸ்வரா
- ஜீவா ஷஜீவன்

நடுவர்
- பேராசிரியர் S.சிவலிங்கராஜா

நன்றியுரை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்.
குறிப்பு: நிகழ்வுகள் சுகாதார நடைமுறைகளுக்கு அமைய நடைபெறும்.

**இலங்கை அரசியலமைப்பு 20 ஆவது திருத்தம்**
**ஆய்வரங்கு**
**அழைப்பு**

காலம் :- 04.10.2020 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 மணி
இடம் :- யாழ். வீரசிங்கம் மண்டபம்
தலைமை :- சி.வி.கே. சிவஞானம், அவைத்தலைவர், வடக்கு மாகாணசபை
தொடக்கவுரை :- மாவை சோ. சேனாதிராசா, தலைவர், இ.த.அ.கட்சி
சிறப்புரை :- திருமதி கோசலை மதன், சட்டத்தரணி, முதுநிலை விரிவுரையாளர், சட்டத்துறைபீடம், யாழ். பல்கலைக்கழகம்.
"20 ஆவது அரசியலமைப்புத் திருத்தம்"
சட்ட உரை :- எம். ஏ. சுமந்திரன் பா. உ, ஜனாதிபதி சட்டத்தரணி
"20 ஆவது அரசியலமைப்புத் திருத்தமும் அரசியல் விளைவுகளும்"
நன்றியுரை
அனைவரையும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்
இலங்கை தமிழ் அரசுக் கட்சி

**வெள்ளவத்தையில் அறைகள் நாள் வாடகைக்கு**
1500 - 3900 வரை A/C ஒரு Bed 500/-
HOTEL Villa ராமகிருஸ்ண செட் அருகில்
077 255 2224

**கிடாய் விற்பனைக்கு**
ஜமுனாபாரி பெருங்கிடாய் விற்பனைக்கு
தொடர்பு: 077 671 0448

**சாரதி தேவை**
கனகர வாகனம் அனைத்து சொகுசு வாகனம் செலுத்தக்கூடிய சாரதி தேவை.
077 250 2953

**வீடு விற்பனைக்குண்டு**
கொக்குவில் கிழக்கு, பிரம்படி 2 ஆம் ஒழுங்கையில் 2 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு.
076 702 3565

**HOME VISIT CLASSES**
ENGLISH/TAMIL MEDIUM
ENGLISH/ACCOUNTING/
ARTS SUBJECTS
(TEACHER WITH FOREIGN
TEACHING EXPERIENCE
077 331 6402

**காணி விற்பனைக்கு**
சுன்னாகம்Town இல், Cargills Food City, வங்கிகளுக்கு அருகில் K.K.S.வீதியிலிருந்து 75 m தூரத்தில் 1¼ பரப்புக் காணி விற்பனைக்கு. பரப்பொன்று 55 லட்சம். விலை பேசி தீர்மானிக்கலாம்.
077 794 7546

# டோனி படைக்கு மீண்டும் ஏமாற்றம்




சன் றைசர்ஸ் ஹைதரபாத்துடனான ஆட்டத்தில் இறுதி வரையில் போராடிய டோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 7 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. சென்னை அணி தொடர்ச்சியாக 3 ஆட்டங்களில் தோல்வியைச் சந்தித்துள்ளது.

நடப்பு ஐ.பி.எல். தொடரின் 14 ஆவது ஆட்டம் டுபாயில் நேற்று இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சன் றைசர்ஸ் அணி துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

முதலாவது பந்துப் பரிமாற்றத்திலேயே சன் றைசர்ஸ் அணிக்கு அதிர்ச்சியளித்தது சென்னை. ஓட்டங்களைப் பெறாத நிலையில் பெயர்ஸ்ரோ வெளியேறினார். மனிஷ் பாண்டே மற்றும் அணித் தலைவர் வோனர் சுமாரான ஆட்டத்தை இரண்டாவது இலக்குக்கு வழங்கினர். வோனர் 29 பந்துகளில் 28 ஓட்டங்களுடனும், மனிஷ் பாண்டே 21 பந்துகளில் 29 ஓட்டங்களுடனும், வில்லியம்சன் 13 பந்துகளில் 9 ஓட்டங்களுடனும் வெளியேற்றப்பட்டனர். 11 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 69 ஓட்டங்களுடன் தடுமாறிய அணியை ப்ரியம் கரேஜ் மற்றும் அபிசேக் சர்மா இருவரும் மீட்டெடுத்தனர். இறுதிக் கட்டத்தில் சென்னையின் பந்து வீச்சை அடித்தாடி ஓட்டங்களைக் குவித்தனர். 26 பந்துகளில் 51 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றார் கரேஜ். சர்மா 24 பந்துகளில் 31 ஓட்டங்களைப் பெற்றார். 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 164 ஓட்டங்களைப் பெற்றது.

165 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு களமிறங்கிய சென்னை அணிக்கு ஆரம்ப இணைப்பை வொட்சன், பிளஸிஸ் வழங்கினர். சன் றைசர்ஸின் நேர்த்தியானதும் துல்லியதுமான பந்து வீச்சை எதிர்கொள்ளமுடியாமல் சென்னை ஆரம்பத்திலிருந்தே திணறியது. பிளஸிஸ் 22 ஓட்டங்கள், வொட்சன் ஓர் ஓட்டம், ராயுடு 8 ஓட்டங்கள், கேதர் யாதவ் 3 ஓட்டங்கள் என்று வெளியேற 42 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்து தடுமாறியது. அதன் பின்னர் டோனி, ஜடேஜா இணை 5 ஆவது இலக்குக்கு சிறந்த இணைப்பாட்டத்தை வழங்கினர். இந்த இணையும் சன் றைசர்ஸின் சுழலுக்கு தடுமாறியது. 15 ஆவது பந்துப் பரிமாற்றத்துக்குப் பின்னரே அதிரடியைத் தொடங்கியது. 5 பந்து பரிமாற்றங்களில் வெற்றிக்கு 86 ஓட்டங்கள் என்ற நிலையில் வேட்டையைத் தொடங்கிய சென்னைக்கு ஜடேஜாவின் அதிரடி கைகொடுத்தது. 35 பந்துகளில் 50 ஓட்டங்களை விளாசிய நிலையில் ஜடேஜா வெளியேறினார். சாம் கரன் வந்த வேகத்தில் அதிரடி காட்டினார். டோனியும் மறுமுனையில் விளாசினார். இருப்பினும் இறுதியில் 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 157 ஓட்டங்களை மாத்திரமே பெற முடிந்தது. டோனி 36 பந்துகளில் 47 ஓட்டங்களையும், 5 பந்துகளில் 15 ஓட்டங்களையும் சாம் கரனும் பெற்றனர். ஆட்ட நாயகனாக கரேஜ் தெரிவானார். (ஒ,5)

## அமரர். தொண்டர் கந்தையா திருநாவுக்கரசு அவர்களின் 19ஆம் ஆண்டு நிறுவுனர் நினைவு தினமும் கலை நிகழ்வும்




சிவயோக சுவாமிகளின் அடியவரும் வடஇலங்கை
சர்வோதய ஸ்தாபகரும் ஜீவதானியுமான
**க.திருநாவுக்கரசு** அவர்களின் 19ஆம் ஆண்டு
நிறுவுனர் தினமும் கலைநிகழ்வும் **இன்று (03.10.2020)**
சனிக்கிழமை பி.பகல் 03.00 மணியளவில் புங்குடுதீவு
சர்வோதய சேவை வளாக புஸ்பாமணி மண்டபத்தில்
இடம்பெற இருப்பதால் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு
அன்போடு அழைத்து நிற்கின்றோம்.

வாழ்க வளமுடன் !

**வட இலங்கை சர்வோதய குடும்பம்**
**புங்குடுதீவு-3**

## மரண அறிவித்தல்



### ஆறுமுகம் கந்தையா

கல்வயல் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கந்தையா நேற்று மாலை (02.10.2020) அன்று இயற்கை எய்தினார்.

அன்னார், காலஞ்சென்ற ஆறுமுகம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராமலிங்கம் தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும் மகேஸ்வரி, புவனேஸ்வரி(நோர்வே), பரமேஸ்வரி(சுவிஸ்) ஆறுமுகம் (அலுவலக உதவியாளர், மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயம்), செல்லத்துரை (கனடா), இராமச்சந்திரன்(தபாலகம், சாவகச்சேரி) முருகதாஸ் (தபாலகம், சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஞானகுரு(ஓய்வுபெற்ற தபாலதிபர்), விவேகானந்தன் (கல்வயல், புலுட்டையன் பிள்ளையார் ஆலய தர்மகர்த்தா- நோர்வே) மகேந்திரன் (சுவிஸ்), சிவகாமசுந்தரி, கலைவாணி (கனடா), ஜெயரஞ்சிததேவி, அருள்நாயகி ஆகியோரின் அன்பு மாமனாரும் மைதிலி- ஜெயசுதன், சுகந்தி- அசோக்குமார், சுபாசினி- றெறிமகான் (நோர்வே), மயூரன்(நோர்வே), சிவாஜி-சக்தி(நோர்வே), நிர்த்திகா- காந்தன் (நோர்வே), மகிந்தன் (சுவிஸ்), மாதங்கன் (சுவிஸ்), நிமிலா(சுவிஸ்), பபிதா-துவாரகன், லக்சனா, சஜீபன்(கனடா), சகானா(கனடா), அகிலன், கபிலினி (தாதியர், யாழ் போதனா வைத்தியசாலை), மயூரன் (சித்தமருத்துவ மாணவன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), மயூரதி, பானுஜன் ஆகியோரின் பேரனும் தேஜாஸ்வினி, தெகானி(நோர்வே), சானிஜா(நோர்வே), அதீஸ் (நோர்வே), வீணா (நோர்வே), சஞ்சீவ்(நோர்வே), சந்தோஸ் (நோர்வே), தேஜா(நோர்வே), கவிசன் (நோர்வே) ஆகியோரின் பூட்டனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.10.2020) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்வயல், சாவகச்சேரி.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## நன்றி ஆராதனை அழைப்பு



**தோற்றம்**
**01.03.1949**

**மறைவு**
**30.08.2020**

கடந்த 30.08.2020 அன்று
கர்த்தருக்குள் நித்திரையடைந்த
எமது குடும்பத்தலைவர்

அமரர் **முருகேசு ஜெயசிங்கம்**

அவர்களின் நன்றி ஆராதனை நிகழ்வு இன்று (03.10.2020) சனிக்கிழமை மு.ப 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**மிதிலை,**
**மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.** **குடும்பத்தினர்**

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி





**பேரின்பநாதன்**
**பிரசாந்தன்**

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 15 - 12 - 2001 | 26 - 09 - 2018 |

ஆண்டுகள் இரண்டு
- ஆனதென்று
அழுதிங்கு புலம்புகின்றோம்
கோடி ஆண்டுகள் ஓடியிங்கு
- போனாலும்
அழியாது என்றென்றும் உம்
அழகான நினைவுகள்.

**குடும்பத்தினர்**

**தல்லையப்புலம்,**
**கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.**

## சமஷ்டி தீர்வு .....

இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவரது கேள்வி - பதில் அறிக்கையிலேயே இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

**கேள்வி:** 'இலங்கை அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் இன்றைய நிலையும் இந்தியாவின் பங்கும்' என்ற தலைப்பில் தமிழக பா.ஜ.க துணைத் தலைவர் திருமதி வானதி சீனிவாசன் மற்றும் ஓய்வுபெற்ற இந்திய வெளிநாட்டு சேவைகள் அதிகாரி நடராஜன் ஆகியோருடன் காணொலி உரையாடல் ஒன்றில் வரும் ஞாயிறன்று நீங்கள் ஈடுபடப் போவதாக அறிந்தோம். இந்த உரையாடலில் நீங்கள் கலந்துகொள்வதன் மூலம் 13 ஆவது அரசமைப்பு திருத்த சட்டத்தை நீங்கள் ஏற்றுக்கொண்டுவிட்டார்கள் என்பதாகுமா? 13 ஆவது திருத்த சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கை பிரதமர் மகிந்த ராஜபக்சவுக்கு கூறியிருப்பதன் பின்னணியிலா இந்த நிகழ்வு நடைபெறுகின்றது?

**பதில்:** இவ்வாறு பலர் எனது மின்னஞ்சலுக்கு கேள்விகள் கேட்டு அனுப்பி இருக்கிறார்கள். இதற்கு எனது பதிலை மிகவும் சுருக்கமாக நான் கூறுகின்றேன்.

மேற்படி நிகழ்வில் கலந்துகொண்டு 13 ஆவது திருத்த சட்டம் தொடர்பில் எனது கருத்துக்களை கூற முடியுமா என்று திருமதி வானதி சீனிவாசன் சார்பாக என்னிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. தற்போது 13 ஆவது திருத்த சட்டம் முக்கிய ஒரு பேசுபொருளாக இருப்பதால், இந்த நிகழ்வில் கலந்துகொண்டு 13 ஆவது திருத்தச் சட்டம் பற்றிய எனது அனுபவங்களையும் கருத்துக்களையும் பகிர்ந்துகொள்வது எனது கடமை என்றும் அதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என்றும் நான் கருதி கலந்துகொள்ள சம்மதித்தேன்.

இந்த நிகழ்வுக்கும் இந்திய பிரதமர் மோடி அவர்கள் 13 ஆவது திருத்த சட்டம் பற்றி பிரதமர் ராஜபக்சவிடம் வலியுறுத்தியதற்கும் எந்தத் தொடர்பும் இருப்பதாக எனக்கு தெரியவில்லை. ஆனால் ஒரு விடயத்தில் நான் தெளிவாக இருக்கின்றேன். இலங்கையில் தமிழ் மக்கள் சமஷ்டி அடிப்படையில் தீர்வு ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு இந்தியாவின் உதவியும் ஒத்தாசையும் எமக்கு மிகவும் அவசியம். இதற்கு இந்தியாவுடனான தமிழ் மக்களின் சுமூக உறவு அவசியம். இந்தியாவுடன் நாம் பேச்சுக்களில் ஈடுபடவேண்டும். ஆனால், இந்தியாவுடனான எமது அணுகுமுறை தனி ஒரு நபர் சார்ந்தோ அல்லது தனி ஒரு கட்சி சார்ந்தோ இருக்க முடியாது. இருக்கக்கூடாது.

எனினும் மோடி தலைமையிலான அரசும் தற்போதுள்ள இந்திய கொள்ளை வகுப்பாளர்களும் இவற்றை நன்கு புரிந்து உரிய முறையில் காய்களை நகர்த்துவார்கள் என்றே நான் நம்புகின்றேன்.

தற்போதைய இந்திய வெளியுறவு அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்ஷங்கர் இலங்கை விடயத்தில் நீண்ட அனுபவமுடையவராகவும் சர்வதேச அரசியலில் மிகச் சிறந்த ராஜதந்திரியாகவும் காணப்படுகின்றார். அவர் எமது பிரச்சனையை திறம்பட கையாள்வார் என்பது எனது எதிர்பார்ப்பு.

ஆனால் இலங்கை அரசு சார்பானவர்கள் மாகாணசபைகளை உடனே நீக்க வேண்டும் என்று கருத்து தெரிவித்து வருகின்றார்கள். வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய ஏழு மாகாணங்களில் மாகாணசபைகளை நீக்குவதில் எந்தச் சிக்கலும் ஏற்படாது. எம்மைப் பொறுத்த வரையில் முழுமையான சமஷ்டி முறையிலான பொறிமுறையொன்று வடக்கு கிழக்கில் நிறுவப்படும் வரை வடக்கு கிழக்கு மாகாணசபைகளை நீக்குவது தற்கொலைக்கு சமமாகும். இவ்வாறான கருத்துக்களை எல்லாம் இந்தியாவுக்குத் தெரியப்படுத்த வேண்டிய கடப்பாடு எனக்குள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தை அதற்காக நான் பயன்படுத்துகின்றேன், என்றுள்ளது. (ஒ,5)

## கூட்டமைப்பினருக்கு .....

ஞா.சிறிநேசன், மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவன், நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், ஜனநாயக போராளிகள் கட்சியின் நகுலேஸ் ஆகியவர்களுக்கு எதிராக, மட்டக்களப்பு பொலிஸார் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

தியாகி திலீபனின் நினைவேந்தலை நடத்த திட்டமிட்டதாக பொலிஸார் குறிப்பிட்டிருந்தனர். இதையடுத்து, 6 பேரையும் மன்றில் முன்னிலையாக நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. 6 பேரும் நேற்று மன்றில் பிரசன்னமாகியிருந்தனர். அவர்களிற்காக 19 சட்டத்தரணிகள் முன்னிலையாகினர். சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் சமர்ப்பணங்களை செய்தார்.

பொலிஸார் கற்பனையில் வழக்கு தாக்கல் செய்யலாமா? மேலிட அழுத்தம் காரணமாக ஆதாரமில்லாத வழக்கு தாக்கல் செய்யலாமா என்று பொலிசாரிடம் கேள்வியெழுப்பப்பட்டது. மக்கள் பிரதிநிதிகள், முன்னாள் மக்கள் பிரதிநிதிகள் மீது ஆதாரமற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாக சுட்டிக்காட்டப்பட்டது. இந்தக் கேள்விகளால் திண்டாடிய பொலிஸார் மன்றில் பதிலளிக்க முடியாமல் மௌனமாக நின்றனர். ஆதாரமில்லாமல் பொலிஸார் சோடித்த வழக்கை நிராகரிக்க வேண்டுமென பிரதிவாதிகள் தரப்பில் விண்ணப்பம் செய்யப்பட்டது. இதை ஏற்றுக்கொண்ட நீதிபதி வழக்கை நிராகரித்தார். (ஒ.இ)

## திலீபனை...

அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல. அவர் இவ்வாறு கருத்துத் தெரிவிக்கும்போது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் இராமநாதன் மற்றும் ச.வியாழேந்திரன் ஆகியோர் அமைதியாக அமைச்சர் கூறுவதை ஆமோதிக்கும் வகையில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்திருந்த அமைச்சர் ஹெகலிய பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்டிருந்தார். யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் ஊடகவியியலாளர் சந்திப்பிலும் பங்கேற்றிருந்தார்.

ஊடக சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமானது தடைசெய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பாகவே இருக்கின்றது. அவ்வாறு தடைசெய்யப்பட்ட ஒரு அமைப்பின் உறுப்பினரை நினைவு கூருவதற்கு அனுமதியளிக்க முடியாது. அதனடிப்படையிலையே திலீபனை நினைவு கூருவதற்கும் தடை விதிக்கப்பட்டிருக்கின்றது.

ஓசாமா பில்லேடன் பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்தவர் என்பதால் கொல்லப்பட்டிருக்கின்றார். அவருக்கு அமெரிக்காவில் சிலை வைக்க முடியாது. அது போலவே பயங்கரவாத அமைப்பை சேர்ந்தவராகவே திலீபனும் காணப்படுகின்றார். ஆகையால் அவருக்கு சிலை வைக்கவோ நினைவு கூரவோ முடியாது.

இதே வேளை இன்று திலீபனுக்கு நினைவேந்தல் என்றும் இது போல இன்று ஒருவர் நாளை ஒருவர் என நினைவேந்தல் செய்ய முற்படலாம். அதனாலே பயங்கரவாத அமைப்பை சேர்ந்தவர்களை நினைவு கூர தடை விதிக்கப்படுகிறது.

இவ்வாறு பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்தவர்களுக்கு நினைவேந்தல் நடாத்துவது அவர்களை நினைவு கூருவது என்பதெல்லாம் நிரந்தர சமாதானத்துக்கு தடை என்பதுடன் பாதிப்பை ஏற்படுத்துவதாகவே அமையும். ஆகையால் பயங்கரவாதிகளை நினைவு கூருவது தவிர்க்கப்பட வேண்டும், என்றார். (ஒ,5,26)

## சிறப்பாக...

புதிதாக தெரிவான நாடாளுமன்றத்தின் முதல் மாத செயற்பாட்டின் அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தப்படுத்தப்பட்டுள்ளனர். இந்த தரப்படுத்தலின்படி, நாடாளுமன்றத்தில் முதல் 5 இடங்களில் அனுர குமார திஸநாயக்க, சஜித் பிரேமதாச, பந்துல குணவர்தன, தினேஷ்குணவர்தன, ஹர்ஹ டி சில்வா ஆகியோர் தரப்படுத்தப்பட்டுள்ளனர். (ஒ,5)

## விபத்தில் தந்தை ....

என்ற மாணவனே உயிரிழந்துள்ளான்.

கடந்த 26ஆம் திகதி பி.ப. 2.30 மணியளவில் தேராவிலிருந்து புதுக்குடியிருப்பு நோக்கி தந்தையுடன் மோட்டார் சைக்கிளில் மகன் பயணித்துள்ளார். தேராவில் துயிலும் இல்லத்தை அண்மித்த பகுதியில், எதிர் திசையில் வந்து கொண்டிருந்த லொறியுடன் மோட்டார் சைக்கிள் மோதியது. சம்பவ இடத்தில் தந்தை உயிரிழந்திருந்தார்.

காயமடைந்த மகன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்குச் சேர்க்கப்பட்டிருந்தான். சிகிச்சை பயனின்றி மகன் நேற்று உயிரிழந்துள்ளான்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (ஒ,5,26)

## கோத்தாவுக்கு....

பாதாள உலகத் தலைவர்களில் ஒருவராகிய 'பொடி லெஸி' என்பவர் அண்மையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பாதுகாப்பு அமைச்சின் செயலர் மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன உட்படப் பலரைக் படுகொலை செய்யப்போவதாக எச்சரித்திருந்தார். இந்தநிலையில், குறித்த கைதியிடமும், அவருடன் சிறை வைக்கப்பட்டிருந்த ஏனைய கைதிகளிடம் இது பற்றி விசாரணை செய்வதற்காகவே குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் பூஷா சிறைக்குச் சென்றுள்ளனர் என்று தெரியவருகின்றது. (ஒ,5,22)

## விபத்தில்....

கடந்த 27ஆம் திகதி பரந்தனிலிருந்து வீடு நோக்கி துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்தபோது வை.எம்.சி. முன்பாக, மோட்டார் சைக்கிள் பின்னால் வந்து மோதியுள்ளது. மோட்டார் சைக்கிளில் எரிபொருள் முழுமையாக இருந்ததால் அது தீப்பிடித்து முழுமையாக எரிந்து விட்டது. இதேவேளை விபத்தில் துவிச்சக்கர வண்டியில் பயணித்தவர் கீழே விழுந்து காயமடைந்திருந்தார். அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் பேர்தனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (ஒ,5,26)

## காணாமல் ....

நேற்று அவர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

காணாமல், போனவர்கள் என்று சொல்லப்படும் பலர் விசா பெற்று வெளிநாடுகளுக்கு சென்றுள்ளார்கள். பலர் முகவரிகளை மாற்றிக் கொண்டு வசிக்கிறார்கள்.

அதே நேரம் காணாமல் ஆக்கப்பட்டோர்தொடர்பில்பலரும்பலவிதமான தகவல்களை வெளியிடுகின்றனர். ஒவ்வொரு தரப்பு அறிக்கையிலும் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஆதாரபூர்வமான அறிக்கைகள் எவையும் இல்லை. அந்த அறிக்கைகள் முதலில் கிடைக்க வேண்டும்.

மேலும் போரில் காணாமல் ஆக்கப்பட்டோர் என்று பார்க்கின்ற போது அவர்களின் செயற்பாடுகள் தொடர்பிலும் முதலில் ஆராய வேண்டியுள்ளது. அதன் பின்னரே அது குறித்து ஒரு முடிவொன்றை எடுக்க முடியும், என்றார். (ஒ,5,26)

## கடல் அட்டை ....

வைக்கப்பட்டுள்ளனர்.

அனுமதியின் அடிப்படையில் பகலில் மட்டுமே தொழிலில் ஈடுபட முடியும். எனினும் அங்கு இரவில் கடலட்டை தொழில் இடம்பெறுவதாக கடற்தொழில் நீரியல் வளத் திணைக்களத்துக்கு முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டன.

அதனடிப்படையில் அதிகாரிகளால் கடந்த திங்கட்கிழமை இரவு முன்னெடுக்கப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கையின் போது அனுமதிப்பத்திரத்தை மீறி இரவில் கடலட்டை தொழிலில் ஈடுபட்ட 6 பேர் இரண்டு படகுகளுடன் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் 6 பேருக்கும் எதிராக பருத்தித்துறை நீதிமன்றில் நேற்று வழக்குத் தொடரப்பட்டது. மீனவர்கள் 6 பேரும் சட்டத்தரணி ஊடாக மன்றில் முன்னிலையாகினர்.

வழக்கை விசாரித்த நீதிவான் காயத்திரி சைலவன் மீனவர்கள் ஆறு பேரையும் எதிர்வரும் 16ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ஒ,5,26)

# கடன் வழங்குவது தொடர்பில் சி.ஆர்.ஐ.பி. தீர்மானிப்பதில்லை

## அதன் முகாமையாளர் விளக்கம்

கொழும்பு, ஒக்.3

**வாடிக்கையாளர்களுக்கு கடன் வழங்குவது தொடர்பில் தீர்மானிக்கும் அதிகாரம் தமது நிறுவனத்துக்கு இல்லை என்று இலங்கை கடன் தகவல் பணியகம் (சி.ஆர்.ஐ.பி) தெரிவித்துள்ளது. ஒருவரின் கடன் நிலைமை தமது தரவுகளின்படி மோசமான நிலையில் இருந்தாலும் கூட அவருக்கு கடன் வழங்க வேண்டாம் என்று வங்கிகளுக்கு தமது நிறுவகம் அறிவிப்பதில்லை என்று கடன் தகவல் பணியக பொது முகாமையாளர் நந்தி அந்தனி தெரிவித்துள்ளார்.**

பொதுமக்கள் பல்வேறு நிதி சிக்கல்களில் இருப்பதால் அரச வங்கிகள் வாடிக்கையாளர் கடன் விடயத்தில் தளர்வுப் போக்கை கடைப்பிடிக்க வேண்டும் என்று பிரதமர் மஹிந்த அண்மையில் கோரிக்கை விடுத்திருந்தார். எனினும் இலங்கை கடன் தகவல் பணியகத்தின் தரவுகளே வங்கிகள் கடன்களை வழங்கும் போது முக்கிய ஆவணமாக கொள்ளப்படும் நிலையில் ஏற்கனவே கடன் சுமையில் உள்ளவர்கள் கடன்களை பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது என முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பிலேயே கடன் தகவல் பணியகம் தனது நிலைப்பாட்டை அறிவித்துள்ளது. வங்கிகள் வாடிக்கையாளர்களுக்கு கடன்களை வழங்குகின்றபோது சி.ஆர்.ஐ.பியின் தரவுகள் பார்க்கப்படுகின்றன. எனினும் அதனடிப்படையில் மட்டும் வாடிக்கையாளர்களுக்கு கடன் வழங்குவது தொடர்பில் தீர்மானிக்கப்படுவதில்லை. ஏனைய காரணிகளையும் வங்கிகள் கவனத்தில் கொள்கின்றன என்று நந்தி அந்தனி மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

*16 ஆண்டுகளின் பின்*

## கண்டுபிடிக்கப்பட்ட சிறுவனுக்கு உரிமைகோரும் மற்றொரு தாய்

அம்பாறை, ஒக்.3

அம்பாறைப் பகுதியில் சுனாமியின்போது காணாமல் போயிருந்த நிலையில் தாயாரால் கண்டுபிடிக்கப்பட்ட சிறுவனுக்கு மற்றமொரு பெண்ணும் உரிமை கோரியுள்ளார். நூறுல் இன்ஷான் என்ற பெண்ணே சிறுவனின் உண்மையான தாய் தான் எனத் தெரிவித்துள்ளார்.

சிறுவன் தனது மகன் என்பதற்கான ஆதாரங்கள் தன்னிடம் உள்ளன என அவர் கூறியுள்ளார்.

2004ஆம் ஆண்டு டிசம்பரில் அம்பாறை சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாளிகைக்காடு பகுதியில் சுனாமி தாக்கியதையடுத்து தனது ஐந்து வயது மகன் காணாமல் போயிருந்தார். அவரை தான் போராடி மீட்டுள்ளார் என அபுசாலி சித்தி ஹமாலியா என்ற பெண் அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

## பிக்குமாருக்கான காப்புறுதி திட்டம் பிரதமரால் ஆரம்பித்து வைப்பு

கொழும்பு, ஒக்.3



பௌத்த குருமாருக்கான புதுபுன் சுரக்ச சுகாதார காப்புறுதி திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் அலரி மாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன்போது பிக்குமாருக்கான காப்புறுதி உரிமைகளை அவர்களிடம் வழங்கி திட்டத்தை பிரதமர் ஆரம்பித்து வைத்தார். புத்தசாசன சமய மற்றும் கலாசார அமைச்சினால் செயற்படுத்தப்படும் இந்தக் காப்புறுதித் திட்டம் 15,000 பௌத்த பிக்குமார்களை உள்ளடக்கியுள்ளது. இந்த வேலைத்திட்டத்துக்கு, கலாநிதி போதாகம சந்திம தேரர் மற்றும் விசேட வைத்திய நிபுணர் சர்தா ஹேமபிரிய, விசேட வைத்திய நிபுணர் பிரபா சமரகோன், சிரியானந்த விஜேகோன், விசேட வைத்திய நிபுணர் விமலசிறி அபேகோன், பேராசிரியர் வசந்தி பிங்டோ, விசேட வைத்திய நிபுணர் நிர்மலா குணவர்தன உள்ளிட்ட நன்கொடையாளர்கள் பலர் பங்களிப்பு செய்துள்ளனர். புதுபுன் சுரக்ச சுகாதார காப்புறுதி திட்டத்துக்கு புத்தசாசன நிதியத்தினால் 4 கோடி ரூபா நிதியை ஆரம்பத்திலேயே வழங்குமாறு பிரதமர் ஆலோசனை வழங்கியுள்ளார். அதற்காக அரசாங்கத்தினால் மேலும் ரூபாய் 5 கோடி நிதி பங்களிப்பு செய்யப்படவுள்ளதுடன், இதுவரை நன்கொடையாளர்களிடமிருந்து 73 இலட்சம் ரூபாய் நிதி நன்கொடையாக கிடைக்கப்பெற்றுள்ளது. (வ-இ)

## டெங்கு பரவல் அதிகரிப்பு தொடர்பில் எச்சரிக்கை

கொழும்பு, ஒக்.3

டெங்கு நோயின் அதிகரிப்பு தொடர்பில் தேசிய டெங்கு நோய்த் தடுப்பு பிரிவின் பணிப்பாளர் அநுர ஜெயசேகர எச்சரிக்கை விடுத்துள்ளார். டெங்கு அபாய நிலை தற்சமயம் இல்லாத போதும் மழை காலமாகையால் எதிர்வரும் மாதங்களில் அது தீவிரமடைவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன.

எனவே பொதுமக்கள் நுளம்புகள் பெருகாமல் இருக்கும் வகையில் தமது சுற்றாடலை சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார். நாட்டில் கடந்த ஜனவரியிலிருந்து தற்போது வரை 27 ஆயிரத்து 733 டெங்கு தொற்றாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர். இதில் ஜனவரி மாதத்தில் மாத்திரம் 11 ஆயிரத்து 608 தொற்றாளர்கள் கண்டறியப்பட்டனர். அவர்களில் 8ஆயிரத்து 14பேர் மேல் மாகாணத்திலிருந்து கண்டறியப்பட்டுள்ளனர். (வ-இ)

## இலங்கை மாணவன் தமிழகத்தில் சாவு

சென்னை, ஒக்.3

இலங்கை தமிழர் முகாமைச் சேர்ந்த மாணவன் ஒருவன் ஆற்றில் மூழ்கி உயிரிழந்துள்ளார். தமிழகத்தின் ஈரோடு மாவட்டத்திலுள்ள நஞ்சைபுளியம்பட்டி பவானி ஆற்றில் கடந்த வியாழக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. தனுசராஜ் (வயது 17) என்ற அந்த மாணவன் நண்பர்களுடன் ஆற்றில் குளிக்கச் சென்றுள்ளார். நீச்சல் தெரியாத நிலையில் ஆழமான பகுதிக்குச் சென்றமையால் ஆற்றில் மூழ்கி அவர் உயிரிழந்துள்ளார். (வ-இ)



## இன்றைய நாள்

**மேடம்:** கணவன் மனைவி இடையே இருந்த சச்சரவுகள் நீங்கும். சந்தோஷம் அடையும்படியான சம்பவங்கள் நடைபெறும். வீண் விரயங்கள் ஏற்படும் என்பதால் கவனம் தேவை.

**இடபம்:** வியாபாரத்தில் விரும்பத்தக்க மாற்றம் வரும். வெளியூரிலிருந்து எதிர்பார்த்த நல்ல செய்தி வரும். அலுவலக நண்பர்களிடம் விட்டுக் கொடுத்து போவது நல்லது.

**மிதுனம்:** வேலை தேடுபவர்களுக்கு நல்ல செய்தி வரும். தாயாரின் ஆரோக்கியம் பற்றிய பயம் தீரும். பெண்கள் ஆரோக்கியத்தில் கவனமாக இருக்க வேண்டும்.

**கடகம்:** முன்பு நின்றுபோன விடயங்கள் தடைநீங்கி நடைபெறும். மகன் மூலம் மகிழ்ச்சியான தகவல்கள் வரும். அக்கம் பக்கத்தில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்ல வேண்டும்.

**சிம்மம்:** இளைஞர்களின் நீண்டகால முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். நெருங்கிய நட்புடன் இருந்த மன வருத்தங்கள் நீங்கும். மறதி, குழப்பம், படபடப்பு வந்து போகும். வீண் விவாதங்கள் வேண்டாம்.

**கன்னி:** பணியாளர்கள் உயரதிகாரிகளின் பேச்சை எதிர்க்க வேண்டாம். நெருங்கியவர்கள் உங்கள் மீது நம்பிக்கையுடன் இருப்பார்கள். எதையும் நன்கு யோசித்து முடிவு எடுப்பீர்கள்.

**துலாம்:** பயண நோக்கம் வெற்றிகரமாக நிறைவேறும். தேவையில்லாமல் மனதை போட்டு குழப்பிக் கொள்வீர்கள். குழந்தை பாக்கியம் எதிர்பார்த்தவர்களுக்கு இனிக்கும் செய்தி உண்டு.

**விருச்சிகம்:** பிள்ளைகள் நடவடிக்கையில் விரும்பத்தக்க மாற்றம் வரும். எதிர்பார்த்த பணம் வட்டியுடன் வரும். ஆரோக்கியம் மீளும். வருமானம் அதிகரிக்கும்.

**தனுசு:** உணர்வுபூர்வமாக முடிவு எடுக்காமல் சிந்தித்துச் செயல்படுவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். பணியாளர்கள் விரும்பிய வகையில் சாதகமான மாற்றங்கள் வரும்.

**மகரம்:** மாமன் வழி உறவுகளால் ஆதாயம் கிடைக்கும். புதிய வேலையில் சேரும் வாய்ப்பு உள்ளது. அக்கா, தங்கையுடன் இருந்த வருத்தங்கள் நீங்கும்.

**கும்பம்:** வெறுப்பாக பேசுவதால் குடும்பத்தினர் வருத்துவர். விமர்சனங்களை கண்டு அஞ்ச வேண்டாம். எடுத்த விடயத்தை முடிக்கும் மன உறுதி அதிகரிக்கும்.

**மீனம்:** திட்டமிடாத விடயம் ஒன்று நிறைவேறும். உறுதியான மனதுடன் பொறுமை காத்து வெல்வீர்கள். வியாபாரத்தில் சிக்கல் ஏற்பட்டு சரியாகும். பணிச்சுமை கூடும்.

## 'நாளொரு நற்பணி' உதவிகள் ஆரம்பம்



முல்லைத்தீவு, ஒக்.3

"நாளொரு நற்பணி"எனும் உதவி வழங்கல் திட்டம் ஒன்று தாய்த் தமிழ் பேரவையால் நேற்று முன்தினம் முல்லைத்தீவில் ஆரம்பிக்கப்பட்டது. லண்டனில் வசித்து வரும் கந்தப்பிள்ளை திலீபனின் சிந்தனையில் அந்தத் திட்டம் உருவானது என்று தெரிவிக்கப்பட்டது. நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனையின் சிரேஷ்ட மருத்துவ அதிகாரி கை. சுதர்சன் கலந்துகொண்டு வறுமைக்குட்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கினார். மாற்றுத் திறனாளி ஒருவருக்கான உலர் உணவுப் பொதிகளை கலைஞர் ஆ.பேணாட் வழங்கினார்.. பசுமைப்புரட்சி எனும் திட்டத்தின் ஊடாக தென்னங்கன்றுகளும் வழங்கப்பட்டன. (ப-222,-213)

## பொருளாதாரத் தோற்றத்தை சரியாக வெளியிட வேண்டும்

*அரசைக் கோரினார் ஹர்ஷ டி சில்வா*

கொழும்பு, ஒக்.3

முதலீட்டாளர் நிமல் பெரேரா கூறியது தவறு என்பதை நிரூபிக்க வேண்டுமானால், இலங்கையின் பொருளாதாரம் குறித்த சரியான தோற்றத்தை அரசாங்கம் சரியான புள்ளி விவரங்களுடன் வழங்கவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

முன்னணி முதலீட்டாளரான நிமல் பெரேரா தனது ட்விட்டர் செய்தியில், அரசாங்கம், சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்திற்கு அல்லது மொத்த இறக்குமதித் தடைக்குச் செல்ல வேண்டியிருக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

மூடிஸ் மதிப்பீடுகள் இலங்கையைத் தரமிறக்கியுள்ளன. இந்த நிலையில் இலங்கை அரசாங்கம், கடன்களை அடைப்பதற்கும், கடன் மதிப்பீடுகளை மேம்படுத்துவதற்கும் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒரு திட்டத்திற்குச் செல்ல வேண்டும் அல்லது இறக்குமதியை முற்றிலுமாகத் தடை செய்ய வேண்டும் என்று பெரேரா கூறியுள்ளார். எனவே இந்த விடயத்தை மறுக்கவேண்டுமானால் அரசாங்கம் உண்மையான பொருளாதாரப் புள்ளிவிவரங்களை வெளியிடவேண்டும் என்று ஹர்ச டி சில்வா கோரியுள்ளார். (ப-இ)

## 20க்கு எதிரான மனுக்கள் மீது 3ஆம் நாளாகவும் விசாரணை

கொழும்பு, ஒக். 2

அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தைச் சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணைகள் நேற்று மூன்றாவது நாளாகவும் இடம் பெற்றன.

அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தைச் சவாலுக்கு உட்படுத்தி 39 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த மனுக்கள் மீதான விசாரணைகள் கடந்த செவ்வாய்கிழமை முதல் இடம்பெற்று வருகின்றன. மூன்றாம் கட்டமாக நேற்றும் அவை விசாரிக்கப்பட்டன. (மஇ)

## தொலைபேசிகளில் சீனத் தொழில்நுட்பம்

*ஐ.டி.எஸ்.எஸ்.எல். நிறுவனம் கவலை*

கொழும்பு, ஒக்.3

இலங்கையின் தொலைபேசி நிறுவனங்கள் சீனத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது குறித்து தகவல் தொழில்நுட்பச் சங்கம் (ஐ.டி.எஸ்.எஸ்.எல்) கவலை தெரிவித்துள்ளது.

இலங்கையின் தொலைத்தொடர்பு மற்றும் புரோட்பேண்ட் நடவடிக்கைகளுக்கு சீனத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் என்று தெரிவித்துள்ள தகவல் தொழில்நுட்பச் சங்கம் (ஐ.டி.எஸ்.எஸ்.எல்), தகவல் தொழில்நுட்பம் என்பது மிக முக்கிய பங்கை வகிக்கிறது. வங்கி விவரங்கள் உள்ளிட்ட முக்கியமான தகவல்களைச் சேகரிக்கவும், சேமிக்கவும் இலங்கையில் தொழில்நுட்பம் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது என்றும் சுட்டிக்காட்டியுள்ளது. (ப-இ)

## விவசாய பிரச்சினைகள் பற்றிய கலந்துரையாடல்



வவுனியா,ஒக்.3

விவசாயத்துடன் தொடர்புடைய திணைக்களங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் வவுனியாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

வவுனியா கமநல சேவைகள் அபிவிருத்தித் திணைக்கள மாவட்டக் காரியாலயத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தலைமையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

கலந்துரையாடலில் கமநல சேவைகள் மற்றும் நீர்ப்பாசன,விவசாய உத்தியோகத்தர்கள் மற்றும் வவுனியா,மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர்கள் கலந்து கொண்டனர்.

மேற்படி திணைக்களங்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள், எதிர்காலத்தில் இத்திணைக்களங்கள் சார்ந்த செயற்றிட்டங்களை எவ்வாறு விரிவுபடுத்துவது. குறித்த திணைக்களங்கள் சார்ந்த அமைச்சர்களை வன்னி மாவட்டத்துக்கு வரவழைத்து அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய மிக முக்கியமான செயற்றிட்டங்கள் பற்றியும் இங்கு கலந்தாலோசிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-110)

Techno World
தொழில்நுட்பக் கல்லூரி
A/L தொழில்நுட்ப பிரிவு 2022
பொறியியல் தொழினுட்பம், உயிர்முறைமைகள் தொழினுட்பம்
புதிய பிரிவு ஆரம்பம்
10.10.2020 காலை 08.00 மணிக்கு
(சகல பாடங்களும் ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்)
AL 2021, 2022 பொறியியல், உயிர்முறைமைகள் தொழினுட்பபிரிவு மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலா
கண்டி, நுவரெலியா, ஹட்டன்
October 19,20,21
→ ஆராய்ச்சி நிலையம்,
→ பண்ணை (New Zealand Farm),
→ Tissue Culture Lab,
→ Automobile lab பார்வையிடப்படும்.
தொடர்புகளுக்கு 077 017 5346, 077 170 3549

Room வாடகைக்கு உண்டு
நல்லூர் கோவில் வீதியில் Attached Bath Room உடன் பெண்களுக்கு Room வாடகைக்கு உண்டு. (படிக்கும் வேலை செய்யும் பெண்கள் விரும்பத்தக்கது) 077 308 3007

வாடகைக்கு
இருபாலையில் சகல வசதிகளுடன் கூடிய ரியூட்டரி ஒன்று வாடகைக்கு விடப்படும்.
077 230 6653

வேலையாள்கள் தேவை
இய்ந்திர திருத்தகத்திற்கு உதவியாளர்கள் தேவை.
வேலை பழக விரும்புபவர்களும் தொடர்புகொள்ளலாம்.
074 034 2822

உடனடியாக தேவை
யாழ் நகரில் இயங்கும் விருந்தினர் விடுதிக்கு (Guest House) கணனி அறிவுள்ள வரவேற்பாளர் (Receptionist)தேவை.
ஆண்/பெண் இருபாலாரும்
வயதெல்லை (18-25)
No,346,Kasthuriyar Road,Jaffna.
077 700 3617

வேலையாள்கள் தேவை
கோழிப் பண்ணையிலும் கோழி இறைச்சிக் கடையிலும் வேலைசெய்யக் கூடிய ஆண்கள், பெண்கள் தேவை.
Viber- 004 -177 9243687
077 271 8149

திருத்த வேலைகள் செய்துதரப்படும்
கணினி, மடிக்கணினி என்பன வீடுகளுக்கு வந்து திருத்தித்தரப்படும்
குறைந்த செலவில்
கமராக்கள் பொருத்தி மற்றும் பழுது பார்த்து தரப்படும்.
தொடர்பு:
077 496 9818

கணக்காளர் தேவை
A.M.T எரிபொருள் நிரப்பு நிலையம் யாழ்ப்பாணத்துக்கு கணக்காளர் தேவைப்படுகின்றார்.
வயதெல்லை 25 தொடக்கம் 45 வயதுக்கிடைப்பட்டோர் விரும்பத்தக்கது. கணக்கீட்டு அலகு Quick Book தொடர்பான முன்னனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: பார்த்தீபன் - 077 312 7550
E-Mail: vathanu.kokul@yahoo.com

ஆசிரியர் வே. அன்பழகன் அவர்களின்
(அன்பொளி கல்வியகம்)
தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை-2021 வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன
அனுமதிகளை 04.10.2020 ஞாயிற்றுக்கிழமையிலிருந்து 09.10.2020 வெள்ளிக்கிழமை வரை பிற்பகல் 2.00 மணி தொடக்கம் பிற்பகல் 6.00 மணிக்குள் முற்கூட்டியே பதிவுசெய்து கொள்ளவும்.
குறிப்பு :-பெற்றோர் கலந்துரையாடலுடன் வகுப்புக்கள் ஆரம்பிப்பது பற்றிய மேலதிக விபரங்கள்,நேர அட்டவணை நேரில் வழங்கப்படும்.
சின்ன விழி அசைத்துச் சிரித்து வரும் சித்திரங்களை அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடனே ஊட்டிடுவோம்.
யாழ்.இந்துக்கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.
இயக்குநர்



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.10.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Registered as a Newspaper

பக்கங்கள்: 24

# சஞ்சீவி

எனக்குக் கொம்புண்டு என்றொருவர் பெருமை பேச
என்கொம்பே பெரிதென்று இன்னொருவர் மறுதலிக்க – இந்த விதம்
இழுபறிப்பட்டினத்தை சந்தி சிரிக்க வைத்தோர்
ஓரணியாய் சங்கமிக்க வைத்ததுவும் பார்த்தீப் பெரு நெருப்பே
–ஒட்டுக்குழு

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2051 புரட்டாதி 17 சனிக்கிழமை (03.10.2020) சிகரம் : 16

# கதிகலங்க வைத்த காடு; காவு போன உயிர்!!

> “தம்பி! போய் மீன் வேண்டிக்கொண்டு வாறியே? என்ற தாயின் வேண்டுகோளுக்கு பதில் எதுவும் சொல்லாமல் கோடரியையும் தண்ணீர்க் கானையும் எடுத்துக்கொண்டு, தனது வேட்டை நாயையும் அழைத்துக் கொண்டு காட்டை நோக்கிப் புறப்பட்டான்”

○ உளவாளி




**25.08.2020**

வழக்கம் போல அன்றைய காலையிலும் சோம்பல் முறித்தபடி எழுந்தான் விஜயகுமார் . தாயார் இளஞ்சூட்டுடன் கொடுத்த தேநீரை உறிஞ்சி விட்டு, மண்வெட்டியை எடுத்துக்கொண்டு தோட்டத்து காணிக்குள் நுழைந்தான். கத்தரிக்கும் ,மிளகாய்க்கும் தந்தையாரோடு சேர்ந்து தண்ணீர் மாற்றிக் கட்ட ஆரம்பித்தான்.பத்து மணிக்கெல்லாம் தோட்ட வேலைகளை முடித்துக்கொண்டு, ஒரு குளிப்பு. வேலை களைப்பு பறந்தோடியது. அப்படியே வந்து தொலைக்காட்சியில் திரைப்படம் ஒன்றைப் பார்க்க தொடங்கினான். ஆனால் மனம் தொலைக்காட்சியில் இருக்கவில்லை. ஏதேதோ சிந்தனைகள். செல்போனில் மச்சானுக்கு அழைப்பெடுத்தான்.

" மச்சான் வாவன். இண்டைக்கொருக்கா தேன் எடுக்கப் போவம்" என்று கேட்டான்

" நான் இப்ப வேற வேலையா நிக்கிறனடா.. மத்தியானம் ஆகுது.. இனிப் போய் வர லேட்டாகிடும் .. நாளைக்குப் போவம்." என்று மறுமுனையில் பதிலளித்தான் மச்சான்.

"சரி "என்று கூறிவிட்டு படம் பார்த்துக்கொண்டு இருந்தவன் மதியம் 12.30 மணி போல, திடீரென எழுந்து முற்றத்துக்கு வந்தான். முற்றத்தில் எதையோ தேடினான்.

" என்ன தேடுறாய்?" என்று தாய் கேட்டார்.

"கோடாலி எங்க?"


"அதில இருக்கு பார்" என்று தாயார் சுட்டிக்காட்டிய இடத்தில் இருந்து கோடரியை எடுத்தான்.

" தம்பி! போய் மீன் வேண்டிக்கொண்டு வாறியே?" என்ற தாயின் வேண்டுகோளுக்கு பதில் எதுவும் சொல்லாமல் கோடரியையும் தண்ணீர்க் 'கானையும்' எடுத்துக்கொண்டு, தனது வேட்டை நாயையும் அழைத்துக்கொண்டு காட்டை நோக்கிப் புறப்பட்டான்.

## கொலையாளி கரடியா? யானையா?

## காட்டுக்குள் என்ன நடந்தது?

## புதையல் எடுப்பவர்கள் கொன்றார்களா?



யார் இந்த விஜயகுமார்?

யாரிந்த விஜயகுமார் என்று நீங்கள் அறிவதற்கு, அவனைப் பற்றிச் சில குறிப்புகளைச் சொல்வது அவசியம். விளாத்திக்குளத்தில் 1982 ஆம் ஆண்டு பிறந்தவன் இந்த விஜயகுமார். தந்தை, தாய் மற்றும் ஒன்பது பிள்ளைகளைக் கொண்ட நடுத்தர வர்க்க விவசாயக் குடும்பம் அவனுடையது .ஐந்தாம் ஆண்டுவரை விளாத்திக்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி கற்றுவிட்டு அயல் கிராமமான காக்கையன் குளம் பாடசாலையில் 06 ஆம் ஆண்டுவரை கற்றுவிட்டு அத்தோடு படிப்புக்கு முழுக்குப்போட்டு விட்டான். தந்தையோடு சேர்ந்து விவசாயம், மாடு வளர்ப்பு என்று வேலை செய்யத் தொடங்கினான். படிப்படியாக அவன் மிகத் திறமையான கடுமையான உழைப்பாளியாகவும் மாறி விட்டான். வயல்,தோட்டம், மாடு என எல்லாமே இருப்பதால் வறுமை எட்டியும் பார்ப்பதில்லை. பொழுதுபோக்காக காட்டுக்குப் போய் தேன் எடுத்து விற்பனை செய்வான். தேன் எடுப்பதுதான் அவனுடைய முழுநேரத் தொழிலல்ல. இருப்பினும் காட்டையும், அதன் பாதைகளையும், அங்குள்ள விலங்குகளையும் பற்றி விஜயகுமாருக்கு எல்லாமே அத்துப்படி. இறுதி யுத்த காலப்பகுதியில் இடம்பெயர்ந்து கிளிநொச்சி 3 ஆம் கட்டைப் பகுதியில் வசித்து வந்தனர். இங்கு வசிக்கும் போது விஜயகுமாரின் இளைய சகோதரி ஒருவர் இலங்கை விமானப் படையின் குண்டு வீச்சில் சிக்குண்டு காணாமல் போனார். பதுங்கு குழி மூடிய நிலையில் தாயார் சிறு காயங்களுடனும் விஜயகுமார் அதிர்ச்சி அடைந்த நிலையிலும் மீட்கப்பட்டனர். இளைய சகோதரன் ஒருவர் தற்போது அவுஸ்திரேலியாவில் இருக்கின்றார். தோட்டம், வேலை, வீடு என்றிருந்த விஜயகுமாருக்கு திருமணம் செய்துவைக்க பெற்றோர் பல இடங்களில் பெண் தேடினர். கடைசியில், வவுனியாவில் வசிக்கும் உறவுக்கார பெண்ணுக்கும், விஜயகுமாருக்கும் பெற்றோரின் ஏற்பாட்டில் திருமணம் 25.08.2019 இல் இனிதே நடந்தது. திருமணத்தின் பின்னர் மனைவியின் வீட்டில் தான் விஜயகுமாரின் வாழ்வு ஆனந்தமாகக் கழிந்தது. ஆசை அறுபது நாள், மோகம் முப்பது நாள் என்று சும்மாவா சொன்னார்கள்? சில மாதங்களிலேயேவிஜயகுமாருக்கும் மனைவிக்கும் இடையே கருத்து மோதல்கள் வலுத்தன.ஒரு கட்டத்தில் அங்கு வாழவே முடியாது என்ற முடிவெடுத்து மீண்டும் விளாத்திக்குளத்துக்கே வந்துவிட்டான் . மனைவி வவுனியாவில், விஜயகுமார் விளாத்திக்குளத்தில் என்று பிரிந்தே இருந்தனர். இந்தப் பிரிவுக்கு பின்னர் விஜயகுமார் அடிக்கடி ஏதோ சிந்தனை வயப்பட்டவனாக யோசித்தபடி இருப்பான். போதாக்குறைக்கு சில மாதங்களுக்கு முன்னர் விஜய குமாரின் மனைவி குழந்தையொன்றை யும் பிரசவித்தாள். மனைவியையும், குழந்தையையும் பிரிந்த துயரை மறைக்க காட்டுக்கு அடிக்கடி போய் தேன் எடுக்கத் தொடங்கினான். அப்படித்தான் அன்றும் போனான். கூடவே அன்றுதான் அவனுடைய திருமண முதலாம் ஆண்டு பூர்த்தி நாள்.



விஜயகுமாரின் வேட்டை நாய்

# என்னாயிற்று அவனுக்கு?

காடு ஒன்றும் அவ்வளவு தூரமல்ல. அடர் காட்டுக்குள்தான் அவன் கிராமமே இருக்கிறது. வீட்டிலிருந்து சிறிது தூரம் சென்றாலே காடு ஆரம்பமாகிவிடும் . அவன் எத்தனையோ தடவை சென்று வந்த காடு. மனைவி, பிள்ளையின் நினைவுகளூடே நடந்தவன் காட்டுக்குள் சுமார் ஐந்து ஆறு கிலோமீற்றர் தூரம் சென்றிருப்பான். பாலை மரம் ஒன்றின் கீழ் கோடரியை நிலத்தில் கொத்தி வைத்துவிட்டு, செல்போனில் மனைவியோடு எடுத்து ஆறுதலாக உரையாடத் தொடங்கினான். சில நிமிடங்களில் மச்சானின் அழைப்பு செல்போனுக்கு வர, மனைவியுடனான அழைப்பைத் துண்டித்தான். அதன் பின்னர் அவனது போனுக்கு எடுத்த எந்தவொரு அழைப்புக்கும் பதிலில்லை. என்னாயிற்று விஜயகுமாருக்கு?

### திரும்பி வந்த நாய்

தேன் எடுப்பதற்காகக் காட்டுக்குச் சென்றவன் மாலை ஆகியும் வீட்டுக்கு வரவில்லையே என்ற கவலை வீட்டினரை அச்சப்படுத்தியது. இந்த நிலையில் மாலையில் விஜயகுமாருடன் சென்ற நாய் மட்டும், தனியே வீட்டுக்கு வந்திருந்தது. வந்த நாய் ஏனோ பயத்துடன் ஒடுங்கிப் போய் , வீட்டு மூலைக்குள் படுத்துவிட்டது. அது அவர்களின் அச்சத்தை இன்னும் அதிகரிக்கச் செய்தது.

“நாயைத் திரும்பக் கூட்டிக் கொண்டு போனால் எங்க போனதெண்டு இடத்தை காட்டித் தரும்” என்று அயலில் வசிக்கும் வேட்டைக்காரர் ஒருவர் சொல்லி நாயைக் கூட்டிச்செல்ல முற்பட்ட போதும் அது வீட்டை விட்டு வெளியில் வர மறுத்தது. அச்சத்தில் நடுங்கியபடி இருந்தது.

நாயை நம்பிப் பயனில்லை என்றுமுடிவெடுத்த குடும்பத்தினரும் அயலவர்களும் காட்டுக்குள் இறங்கித் தேடத் தொடங்கினர். இரவாகிவிட்டதால் காடு முழுதும் கும்மிருட்டு . ரோர்ச் லைற் அடித்து எவ்வளவு நேரம் தான் தேடுவது? என்றாலும் இயலுமானவரை தேடினர். ஆனால் விஜயகுமாரைக் கண்டுபிடிக்கவே முடியவில்லை. தேடியவர்கள் வெறுங்கையுடன் தான் அன்றிரவு காட்டை விட்டு வரவேண்டியிருந்தது.

சட்டவிரோதச் செயல்களை கட்டுப்படுத்த இராணுவத்தினர் காடுகளுக்குள் ரோந்து செல்வதுண்டு. ஒருவேளை அவர்கள் தான் சந்தேகமடைந்து பிடித்தார்களோ என்ற சந்தேகமும் வீட்டாருக்கு வந்தது. உடனேயே அருகில் உள்ள இராணுவ முகாமுக்கும் இதுபற்றி அறிவித்தனர். “ஒருவேளை காட்டுக்குள் பாதை மாறி சென்றிருந்தாலும் இரவிரவாக வந்துவிடுவான் பிள்ளை “என தாயும் தந்தையும் நித்திரை இல்லாமல் காத்திருந்தனர்.

### தேடல் தொடங்கியது

மறுநாள் அதிகாலை. இன்னும் அவன் வரவில்லை. ஊரவர்கள் ,அயல் கிராம வாசிகள் என 200 பேரளவில் விஜயகுமார் வீட்டில் கூடினர். அனைவரிடமும் பயம் தொற்றியிருந்தது. எல்லோரும் ஒன்று கூடி, தேடுதலுக்கான திட்டத்தை போட்டு இரண்டு குழுக்களா கப் பிரிந்து சென்று, தேடத் தொடங்கினர்.

காலையிலேயே மடு பிரதேச பொலிஸ் நிலையத்தில் “மகனைக் காணவில்லை” என பெற்றோர் முறைப்பாடு ஒன்றினையும் மேற்கொண்டனர். ஆனால் முறையிட்டும் பொலிஸார் அவர்களுடைய கிராமத்தை எட்டியும் பார்க்கவில்லை. மறுபக்கம் காட்டுக்குள் இறங்கிய 200 பேரும் அங்குலம் அங்குலமாகத் தேடிக் கொண்டிருந்தனர். மதியம் உணவு (300 இறாத்தல் பாணும், பருப்புக்கறியும்) உழவியந்திரத்தில் அவர்களுக்கு வந்திருந்தது.

மதியம் ஆகியும் “எங்கே விஜயகுமார்?” என்பதற்கு விடை கிடைக்கவில்லை. நேரம் செல்ல செல்ல அனைவருக்கும் அச்சம். “அவனுக்கு எதுவுமே நேர்ந்திருக்க கூடாது” என்று அவரவர் இஷ்ட தெய்வங்களை வேண்டிக்கொண்டனர்.

காட்டை இருள் சூழ்ந்து கொண்டது. எல்லோரும் ஏமாற்றமும் கவலையுமாக, இறுகிய முகத்துடன் காட்டை விட்டு வெளியேறினர். சிலர் ரோர்ச் லைற் வெளிச்சத்தோடு தேடினர். மறுபடியும் ஏமாற்றமே... !

எந்தவொரு தடயமும் கிடைக்கவில்லை. இரவு மழையும் பெய்ய ஆரம்பித்தது.

“காட்டுக்குள் பாதை மாறிப் போயிருப்பான் , இப்ப மழை வேற வந்திட்டுது நனையப் போறானே” என்று கவலைப்பட்டார் தாய்.

### காட்டிக் கொடுத்த தடயங்கள்

இரவு முழுவதும் வீட்டில் எவருக்கும் தூக்கம் வரவில்லை. ஏதோ பயம். என்ன நடந்திருக்கும்? எங்கே போயிருப்பான் ?என்று மாறி மாறி யோசனை. எதுவுமே அவர்களுக்கு விளங்கவில்லை. காட்டு பாதைகள் எல்லாமே அவனுக்கு அத்துப்படி. அப்படியிருக்க எவ்வாறு காணாமல் போனான்? என்ற குழப்பம் குடும்பத்தினருக்கு. “காளி அம்மா, பிள்ளை பத்திரமா வந்தாக் காணும்.. உனக்கு பெரிய பொங்கல் வைப்பன்” என்று தாய் ஊரில் உள்ள காளி கோயிலுக்கு நேர்த்தி வைத்து வேண்டிக்கொண்டார். இரண்டாம் நாளும் அதிகாலையிலேயே தேடல் ஆரம்பித்தது. அப்போது இறுதியாக விஜயகுமாருடன் உரையாடிய மச்சான் ஒரு தகவலைச் சொன்னார்.

“ எங்க நிற்கிறாய்” என்று கேட்டபோது, அவன் “பாலாவெளிப் பாதையில் நிற்கிறேன்” என்று கூறினான் என மச்சான் சொன்ன தகவல் , தேடியவர்களுக்கு எந்தப் பகுதியில் தேடலைச் செய்ய வேண்டுமென்ற தெளிவைக் கொடுத்தது.

ஒரு குழுவினர் பாலாவெளிப் பாதையை அண்டிய இடங்களில் தேடுதலைத் தொடங்கினர். முதலிலும் இரவு வேளை அந்தப்பகுதியில் தேடியிருந்தனர். இருட்டாக இருந்ததால் எதனையும் காண முடியவில்லை. 12 மணியைத் தாண்டியபோது, தேடுதலில் ஈடுபட்டிருந்த ஒருவர் திடீரெனக் கூச்சலிட்டார். எல்லோரும் அங்கே ஓடினர்.

காட்டுப்பாதையொன்றின் ஓரமாக தண்ணீர் ‘கான்’. மற்றும் கோடரி என்பன இருந்தன.

ஆனால் விஜயகுமார் இல்லை.

அதனை அண்மித்த பகுதியில் தேடுதல் தீவிரமானது. திடீரென தேடியவர்களின் நாசியில் வந்து மோதியது துர்நாற்றம். அந்தத் துர்நாற்றத்தைப் பின் தொடர்ந்து சென்றபோது-

மரத்தடியிலிருந்து 10 மீற்றர் தூரமளவில் உருத் தெரியாத ஊதிப்பெருத்த சடலமொன்று!

சடலத்தின் தலைப்பகுதி நசிந்து, பின் பகுதியில் ஏதோ விலங்கு கடித்து இழுத்தது போன்று அடையாளங்களும் இருந்தன. தகவல் கிடைத்து அங்கு வந்த சேர்ந்த விஜயகுமாரின் தந்தையும், சகோதரர்களும் சடலத்தின் சேர்ட் மற்றும் அங்கிருந்த கோடரி, தண்ணீர் ‘கான்’ என்பவற்றை வைத்து அது விஜயகுமார் தான் என்பதை உறுதிப்படுத்தினர்.

### தாக்கியது யானையா? கரடியா?

"நாங்கள் பார்த்தபோது , தலைப் பகுதி சிதைந்திருந்தது. பின் பகுதியில் ஏதோ ஒன்று கடித்து இழுத்தது போல் காயம் ஒன்றும் காணப்பட்டது. கால் ஒன்று முறிந்தது போல் காணப்பட்டது. கையில் கட்டியிருந்த நூல்.. அரைஞாண்கொடி என்பவை பிய்ந்த நிலையிலும் ,அவர் அணிந்திருந்த காற்சட்டை துண்டு துண்டாக கிழிக்கப்பட்ட நிலையிலும் ஆங்காங்கே இருந்தன. அவருடைய மொபைல் போன் ஓஃப் ஆகியபடி சடலத்திலிருந்து சற்றுத் தூரத்தில் கிடந்தது" என்கின்றனர் அவரது சடலத்தைக் கண்டுபிடித்தவர்கள். சடலம் இருந்த நிலையை வைத்து விஜயகுமாரைக் கரடி தாக்கியிருக்கலாம் என்றும், சிலர் யானை தாக்கியிருக்கலாம் என்றும் இருவேறு விதமாக அவரது சாவு பற்றி ஊகித்தனர்.

பொலிஸாரும் திடீர் மரண விசாரணை அதிகாரியும் மாலை மூன்று மணியளவில் காட்டுக்குள் வந்து சேர்ந்தனர். அவர்களுடைய வழக்கமான பணிகள் இடம்பெற்று சடலம் பரிசோதனைக்காக மன்னார் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. பின்னர் உடற்கூற்றுப் பரிசோதனைகள் "விஜயகுமார் யானை தாக்கியதாலேயே உயிரிழந்துள்ளார்" என்பதை உறுதிப்படுத்தினார். ஆனால் அதன் பின்னரும் சிலர் சமூக வலைத்தளங்களில் கரடி தாக்கியே விஜயகுமார் இறந்தார் என்பது போல தவறாக எழுதிக்கொண்டிருக்கிறார்கள் என்று ஊரவர்கள் கொதிக்கிறார்கள்.

### கடைசிக் கணங்கள்

“நடந்து சென்றவர் பாலை மரத்தடியில் இளைப்பாற நினைத்துள்ளார். மரத்தருகில் கோடரியை நிலத்தில் கொத்தி வைத்துவிட்டு அருகிலேயே தண்ணீர் ‘கானை’யும் வைத்துவிட்டு மரத்தில் சாய்ந்து இருந்திருக்கிறார். அப்படி சாய்ந்தபடி தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்ததால், விஜயகுமார் காட்டுச் சூழலில் ஏற்பட்ட மாற்றத்தை அவதானிக்கத் தவறி விட்டார். குறிப்பாக அங்கு யானை வந்ததை அவர் கவனிக்கவில்லை. தனக்கு மிக அருகில் யானை வந்த பின்னரே அதைக் கண்டுவிட்டு எழுந்து ஓட முயற்சித்திருக்கிறார். அதன் போதே ஒற்றைச் செருப்பு அவர் இருந்த இடத்திலும் மற்றைய செருப்பு சில அடிகள் தள்ளியும் விழுந்துள்ளன.

அந்த இடத்தில் அவர் கரடியைக் கண்டிருந்தால் பாதுகாப்புக்காக, தாக்குதல் நடத்துவதற்காக கோடரியைக் கட்டாயம் எடுத்திருப்பார். யானை என்பதால் தான் கோடரியை எடுப்பது தேவையற்றது என்று நினைத்து தப்பி ஓட நினைத்திருக்கிறார். ஆனால் யானை அருகில் வந்துவிட்டாதால் அது உடனேயே அவரைப் பிடித்து தாக்கியிருக்கிறது. யானைதான் துணிகளை நூல் ,நூலாக கிழித்து எறியும் அவ்வாறே அவருடைய காற்சட்டையும் கிழித்து எறியப்பட்டுள்ளது. நீர் நிலைகளைத் தேடி யானைகள் அலைந்து திரிவததால் அவை ஆவேசமாகத் தாக்கும். அவ்வாறே இவர் மீதும் தாக்குதல் நடந்துள்ளது. கால் ஒன்று முறிந்தும், தலை நசுங்கிய நிலையிலும் காணப்பட்டன. இறந்து கிடந்த நிலையில் வேறு காட்டு விலங்குகள் ஏதாவது பின் பகுதியில் கடித்து இழுத்திருக்கலாம். உயிரிழந்த தினத்தன்று மட்டுமே சடலத்தை விலங்குகள் தாக்கியிருக்க வேண்டும் . சடலம் பழுதடைந்த பின்னர் வேறு விலங்குகளால் சேதப்படுத்தப்படவில்லை.”

அங்கே இருந்த தடயப் பொருட்களை வைத்தும், விஜயகுமாரின் சடலம் இருந்த கோலத்தை வைத்தும் இறுதியில் அவருக்கு என்ன நடந்திருக்கும் என்பதை அந்தப் பகுதியைச் சேர்ந்த அனுபவ வேட்டைக்காரர்கள் சொன்ன தகவல்கள் இவை.

### சடலத்தை வைத்து மனைவி பேரம்

விஜயகுமார் சடலமாக மீட்கப்பட்ட அன்றே , அவரைப் பிரிந்து வாழ்ந்து வரும் மனைவிக்கு தகவல் தெரிவிப்பதற்காக கிராம சேவையாளர் தொடர்பு கொண்டுள்ளார்.

“ உங்களுடைய கணவன் இறந்துவிட்டார் . சடலத்தைப் பொறுப்பேற்க மன்னார் வைத்தியசாலை வாருங்கள் “ என்று தெரிவித்துள்ளார்.

“ அவர் இறந்துவிட்டார் என்று நானும் கேள்விப்பட்டனான்.. ஆனால் நான் சடலத்தைப் பொறுப்பேற்க முடியாது “ என்று கூறி தொலைபேசி உரையாடலை விஜயகுமாரின் மனைவி துண்டித்துள்ளார். அதன் பின்னர் மன்னார் வைத்தியசாலைக்கு வந்தவர் “எனக்கு 20 மாடும் காணியும் எழுதி தந்தால்தான், சடலத்தைப் பொறுப்பெடுத்து தருவேன். இல்லையேல் அனாதைப் பிணமாக அரசாங்கச் செலவில் அடக்கம் செய்ய சொல்லிவிட்டு போய்விடுவேன்” என மிரட்டியுள்ளார். பின்னர் தந்தையே, சடலத்தைப் பொறுப்பேற்று விளாத்திக்குள வீட்டுக்கு கொண்டுவந்து இறுதி கிரியைகள் செய்துள்ளார். அப்போது மரணச் சடங்கில் கலந்துகொள்ள பொலிஸ் பாதுகாப்போடு விஜயகுமாரின் மனைவி விளாத்திக்குளத்துக்கு வந்தார். ஆனால் அவர் சடலத்தைப் பார்க்கவோ, கிரியைகளில் கலந்து கொள்ளவோ இல்லை. கொஞ்சநேரம் அங்கே இருந்துவிட்டு ,சடலத்தை தகனம் செய்வதற்கு மயானத்துக்கு கொண்டுசெல்ல முற்பட்ட போதே, விஜயகுமாரின் மனைவியும் அங்கிருந்து வெளியேறியுள்ளார்.

### சடலம் வேண்டாம் ; ஆனால் நஷ்ட ஈடு வேண்டுமாம்

வனவிலங்கின் தாக்குதலினால் விஜயகுமார் இறந்ததால் அவருக்கு அரசாங்கத்தால் நஷ்ட ஈடு வழங்கப்படவுள்ளது. அந்த நஷ்டைஈட்டைத் தனக்கே தர வேண்டும் என விஜயகுமாரின் மனைவி கோரியுள்ளார். எனினும் “விஜயகுமரின் மனைவி முன்னர் வேறொரு திருமணம் முடித்துள்ளார். ஆனால் அதனை மறைத்தே விஜயகுமாரை திருமணம்

(21ஆம் பக்கம் பார்க்க)



# தமிழ்க் கட்சிகளின் கூட்டு நிலைக்குமா?

○ நிலாந்தன்

கடந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போது யாழ். பல்கலைக்கழகத்தில் தமிழ்க் கட்சிகளை ஒருங்கிணைக்கும் முயற்சியில் பல்கலைக்கழக மாணவர்கள் ஈடுபட்டார்கள். ஒரு கட்டத்தில் 5 கட்சிகள் கூட்டாக ஒரு பொது ஆவணத்தில் கையெழுத்திட்டன.

ஐந்து கட்சிகளும் கூட்டாக கையொப்பமிட்ட பின்னர், அதில் பங்குபற்றிய ரெலோ அமைப்பின் பிரதானி சிறீகாந்தா பல்கலைக்கழக மாணவர்களை நோக்கி பின்வரும் தொனிப்படக் கூறினார்...."முன்பு விடுதலைப் புலிகள் இயக்கம் துப்பாக்கிகள்; பீரங்கிகள் ; படைபலத்தை வைத்துக் கொண்டு தமிழ்க் கட்சிகளை ஒருங்கிணைத்தது. ஆனால் இன்றைக்கு நீங்களோ துப்பாக்கிகளோ, பீரங்கிகளோ, படைபலமோ எவையும் இன்றி எங்களை ஒருங்கிணைத்திருக்கிறீர்கள். நீங்கள் அவர்களை மிஞ்சி விட்டீர்கள்." என்று. அதில் ஒருண்மை உண்டு. மக்கள் பிரதிநிதிகளாக காணப்படுகின்ற, அதாவது தேர்தல் மூலம் மக்கள் அதிகாரத்தை பெற்றுக் கொண்ட அரசியல்வாதிகளை ஒற்றுமைப்படுத்துவது என்று சொன்னால் அதற்கு அவர்களை விட அதிகமான அதிகாரத்தைப் பெற்ற அல்லது மக்கள் அங்கீகாரத்தைப் பெற்ற மதிப்புக்குரிய ஒரு தரப்புத் தேவை. தனியாக நன்நோக்கோ நல்ல இலட்சியங்களோ மட்டும் அவ்வாறான ஒற்றுமையை உருவாக்கப் போதாது என்பதைத்தான் கடந்த ஐந்து ஆண்டு கால அனுபவம் நிரூபித்திருக்கின்றது. கடந்த 5 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்க் கட்சிகளை ஒருங்கிணைக்கும் பணிகளில் அதிகமாக ஈடுபட்டவன் என்ற அடிப்படையில் என்னுடைய அனுபவமும் அதுதான்.

தமிழ்க் கட்சிகளை ஒருங்கிணைப்பது என்று சொன்னால் அவ்வாறு ஒருங்கிணைக்கும் தரப்புக்கு ஏதோ ஒரு அதிகாரம் இருக்க வேண்டும். அல்லது ஏதோ ஒரு அங்கீகாரம் இருக்க வேண்டும். அவ்வாறான அங்கீகாரமும் சமூக அந்தஸ்தும் இல்லாத ஓர் அமைப்பால் அல்லது தரப்பால் ஐக்கியத்தை ஏற்படுத்த முடியாது. குறிப்பாக தேர்தல் அரசியல் எனப்படுவது கோடிக்கணக்கான ரூபாவை முதலீடு செய்யும் ஒரு வியாபாரமாக மாறி விட்டது. இதில் காசைக் கொட்டி, போட்டியிட்டு வெற்றி பெற்ற மக்கள் பிரதிநிதிகள் எந்த அதிகாரமும் இல்லாத வெறும் நன் நோக்கத்தையும் இலட்சியத்தையும் மட்டும் கொண்டிருக்கின்ற இலட்சியவாத அமைப்பு அல்லது சில தனி நபர்கள் முன்னெடுக்கும் ஐக்கிய முயற்சிகளுக்கு ஒத்துழைப்பார்களா?

இதுதான் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் நடந்தது. பதின் மூன்று அம்சக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு கையெழுத்திட்ட ஐந்து கட்சிகளையும், குறிப்பாக கூட்டமைப்பை அந்த ஐக்கியத்துக்குப் பொறுப்புக் கூற வைக்க பல்கலைக் கழக மாணவர்களால் முடியவில்லை. கூட்டமைப்பு அந்த உடன்படிக்கையை ஒருதலைப்பட்சமாக மீறிய போது அதைத் தடுக்கவோ அல்லது அதைத் தொடர்ந்து ஏனைய கட்சிகள் தன்னிச்சையாக செயற்பட்ட பொழுது அதை நிறுத்தவோ பல்கலைக்கழக மாணவர்களால் முடியவில்லை. அதற்குரிய அதிகாரமும் முதிர்ச்சியும் அனுசரணையாளர்களுக்குத் தேவையான தொழில்சார் திறனும் மாணவர்களிடம் இருக்கவில்லை.

இப்படிப்பட்டதோர் அரசியல் பாரம்பரியத்தின் பின்னணியில்தான் திலீபனின் நினைவு நாளை முன்னிட்டு மாவை சேனாதிராசாவின் ஒருங்கிணைப்பில் மறுபடியும் கட்சிகள் ஒன்றுபட்டிருக்கின்றன. ஒன்றுபட்ட கட்சிகளின் எண்ணிக்கையை வைத்துப் பார்த்தால் இது ஒப்பீட்டளவில் ஒரு பெரிய கூட்டாக தோன்றும். முன்னைய கூட்டுக்களில் இணைய மறுத்து முரண்பட்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணி இம்முறை இணைந்திருக்கிறது. எனவே இந்த ஒருங்கிணைப்பு முயற்சி ஒரு முக்கியமான முதல் அடி வைப்பாக சிலரால் சிலாகித்துக் கூறப்படுகிறது.

ஆனால் அது உண்மையல்ல. இது ஒரு கொள்கைக் கூட்டு அல்ல. தேர்தல் கூட்டும் அல்ல. இது ஒரு விவகார மையக் கூட்டு. அதாவது நினைவு கூர்தலுக்கான உரிமையை மீட்டெடுப்பதற்கான ஓர் அரசியல் விவகாரத்தை முன்வைத்து கட்சிகள் ஒருங்கிணைந்தன என்பதே சரி. அவ்வாறு ஒருங்கிணைய வேண்டிய நிர்ப்பந்தத்தை மூன்று அம்சங்கள் ஏற்படுத்தின. முதலாவது திலீபன் ; இரண்டாவது தேர்தல் தோல்வி ; மூன்றாவது ராஜபக்சக்கள்.



முதலாவதாக திலீபனின் பெயரால் கட்சிகள் ஒன்றிணைந்தன. திலீபனை நினைவு கூர்வதற்கு அரசாங்கம் சட்டத் தடை விதித்தது.கட்சிகள் முதலில் அதை ஒரு சட்ட விவகாரமாகவே அணுகின. எனினும் ஒரு கட்டத்தில் அதனைத் தவிர்க்க முடியாதபடி ஓர் அரசியல் விவகாரமாக அணுக வேண்டிய நிப்பந்தம் ஏற்பட்டது. அதன் விளைவாக சாவகச்சேரியில் ஒரு உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்தார்கள். முதலில் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் தான் அடையாள உண்ணாவிரதம் என்று கூறப்பட்டது. அதன்மூலம் ஊடகங்களையும் அரசாங்கத்தையும் திசை திருப்பி விட்டு சாவகச்சேரியில் அடையாள உண்ணாவிரதம் முன்னெ டுக்கப்பட்டது. ஏனைய பகுதிகளில் உண்ணாவிரதத்துக்கு நீதிமன்றம் தடை விதித்திருந்த பின்னணியில் சாவகச்சேரியில் அவ்வாறு ஒரு தடை விதிக்கப்பட்டிருக்க வில்லை. ஒருங்கிணைந்த கட்சிகள் அங்கே தமது எதிர்ப்பைக் காட்டின.

சாவகச்சேரியிலும் கூட அரசாங்கம் நினைத்திருந்தால் அங்கு கூடியிருந்தவர்களைத் தூக்கிக் கொண்டு போய் சிறையில் வைத்திருக்கலாம். ஆனால் அரசாங்கம் அதைச் செய்யத் துணியவில்லை. அப்படிச் செய்வதன் மூலம் அங்கு போராடிய கட்சித் தலைவர்களை தியாகிகளாக்க அரசாங்கம் விரும்ப வில்லை. அவ்வாறு அவர்களைக் கைது பண்ணி இருந்திருந்தால் , அது உலகின் கவனத்தை ஈர்க்கும் ஒரு செய்தியாக மாறியிருந்திருக்கும். அதை அரசாங்கம் விரும்பவில்லை. எனவே சாவகச்சேரியில் நடந்த உண்ணாவிரதத்தை அரச தரப்பு தடுக்கவில்லை. அது ஒரு மக்கள் மயப்பட்ட உண்ணாவிரதம் அல்ல. ஆனாலும் கட்சிகள் அதை ஐக்கியமாக முன்னெடுத்தன. இந்த உண்ணாவிரதத்தை விடவும் முக்கியத்துவம் வாய்ந்தது திங்கட்கிழமை நடந்த கடையடைப்பு. அது ஒரு மக்கள் மயப்பட்ட போராட்டம். தமிழ் மக்கள் ஒற்றுமையாகத் திரண்டு, முஸ்லிம் மக்களோடு இணைந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள். எனவே திலீபனின் பெயரால் கட்சிகளை ஒருங்கிணைப்பது வசதியாக இருந்தது. அது மாவைக்கும் வெற்றி ; ஏனைய கட்சிகளுக்கும் வெற்றி

இரண்டாவது காரணம், தேர்தல் தோல்வி. நடந்து முடிந்த தேர்தலில் தமிழரசுக் கட்சி அதன் ஏக போகத்தை இழந்து விட்டது. கட்சித் தலைவரும், செயலாளரும் தோற்றுப் போய் விட்டார்கள்.கட்சிக்குள் மாவை தனது தலைமையை உறுதிப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல கூட்டமைப்பில் இருந்து வெளியேறியவர்கள் வெல்ல முடியாது என்றிருந்த மாயை உடைக்கப்பட்டு விட்டது. மட்டக்களப்பில் வியாழேந்திரனும், யாழ்ப்பாணத்தில் விக்னேஸ்வரனும் இரண்டு கஜன்களும் வெற்றி பெற்று விட்டார்கள். எனவே கூட்டமைப்புக்குத் தன்னைப் பலப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம். மாவை சேனாதிராசாவுக்கு கட்சிக்கு உள்ளேயும் வெளியேயும் தன்னைப் பலப்படுத்த வேண்டிய ஒரு தேவை.

தமிழரசுக் கட்சிக்கு மட்டுமல்ல ஏனைய கட்சிகளுக்கும் தேர்தல் முடிவுகள் ஒரு பாடத்தைக் கற்றுக் கொடுத்துள்ளன. கட்சிகள் சிதறினால் தென்னிலங்கைக் கட்சிகளின் தமிழ் முகவர்கள் வாக்குகளை அள்ளிக் கொண்டு போவார்கள் என்பது நடந்து முடிந்த தேர்தலில் நிரூபிக்கப்பட்டது. எனவே அந்த அடிப்படையில் சிந்தித்தால், அதில் எல்லாத் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கும் ஒரு தோல்வி இருக்கிறது. எனவே தோல்வியிலிருந்து மீண்டெழுவதற்கு எல்லாக் கட்சிகளுக்கும் இப்படி ஓர் ஐக்கியம் தேவைப்பட்டது.

மூன்றாவது காரணம், ராஜபக்சக்கள். யுத்த வெற்றி வாதம் தனிச் சிங்கள வாக்குகளை முன்வைத்து மூன்றிலிரண்டு பெரும்பான்மைக்குக் கிட்டவாக வந்து நிற்கிறது. சிங்கள பௌத்த பெருந் தேசிய வாதத்தின் ஆகப் பிந்திய வடிவமே யுத்த வெற்றிவாதம். எனவே அதை எதிர்கொள்வதற்கு தமிழ்த் தரப்பிலும் ஒரு திரட்சி அவசியம். கட்சிகள் சிதறிக் கிடந்தால் யுத்த வெற்றி வாதத்தின் தமிழ் நண்பர்கள் தமிழ் வாக்காளர்களை மேலும் பங்கு போட்டு விடுவார்கள். நடக்கவிருக்கும் மாகாண சபைத் தேர்தலில் இது மேலும் சவால்களை ஏற்படுத்தும். எனவே இதுவும் கட்சிகளை ஒருங்கிணைத்தது. அடக்குமுறை அதிகரிக்கும் போது அதற்கு எதிராக ஒரு திரட்சியும் ஏற்படும். அதுதான் நடந்து முடிந்த கடையடைப்பு.

எனவே மேற்சொன்ன மூன்று காரணங்களையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால், தமிழ் கட்சிகளை திலீபன் ஒருங்கிணைத்திருக்கிறார் ;தோல்வி ஒருங்கிணைத்திருக்கிறது ; ரா்ஜபக்சக்கள் ஒருங்கிணைத்திருக்கிறார்கள். அதாவது இக்கட்டுரையில் ஏற்கனவே கூறப்பட்டபடி கட்சிகள் ஒருங்கிணையத் தேவையான அழுத்தங்களை மேற்படி மூன்று காரணிகளும் உருவாக்கின.

இதில் திலீபனைத் தவிர்த்து ஏனைய இரண்டு அம்சங்களும் இனி வரக்கூடிய ஐந்து ஆண்டுகளுக்கு தொடர்ந்தும் இருக்கப் போகின்றன. எனவே தமிழ்க் கட்சிகள் ஐக்கியப்படுவதற்கான தேவையும் தொடர்ந்தும் இருக்கும். ஆனால் இங்கு உள்ள பிரச்சினை என்னவென்றால் அந்த ஐக்கியம் ஒரு தேர்தல் கூட்டாகவோ அல்லது விவகார மையக் கூட்டாகவோ இருக்கும் பட்சத்தில் நீடித்து இருக்காது. மாறாக அது ஒரு கொள்கைக் கூட்டாக இருக்க வேண்டும்.

தேர்தல் தேவைகளுக்குமப்பால் தமிழ் மக்களின் தேசியத் திரட்சிக்கான ஒரு ஐக்கியமாக அது இருக்க வேண்டும். அந்தக் கொள்கைக் கூட்டுக்கு பரந்த மனம் கொண்ட எல்லாத் தரப்புகளையும் அரவணைத்து செல்கின்ற பெருந் தலைவர்கள் தலைமை தாங்க வேண்டும். ஆனால் அரங்கில் இப்பொழுது காணப்படும் பெரும்பாலான தலைவர்கள் கட்சித் தலைவர்களே. கட்சிகளைக் கடந்த பெருந் தலைவர்கள் யாருண்டு? அப்படி யாரும் இல்லையென்றால் தந்திரோபாயக் கூட்டைத் தவிர வேறு தெரிவு இல்லை!

# வாள்வெட்டுக்காரரும் முப்படைகளும்

○ பரமேஸ்வரன்

வடமாகாணத்தில் உள்ள வன்முறைக்கும்பல்கள் யாவும் கட்டுப்படுத்தப்படும். வடமாகாணத்தில் வன்முறைக்கு இனி இடமில்லை; இந்த வன்முறைக் கும்பல்களை கட்டுப்படுத்துவதற்கு அனைவரினதும் ஒத்துழைப்புத் தேவை" இப்படிச் சொல்லியிருப்பவர் வேறு யாருமல்லர், வடமாகாணத்துக்கான புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபராகப் பதிவியேற்றிருக்குக்கும் சஞ்சீவ தர்மரட்ணதான். அவர் பதவியேற்ற கையுடன் காங்கேசன்துறையிலுள்ள தனது அலுவலகத்தில் வைத்து ஊடகவியலாளர் மகாநாடு ஒன்றை நடத்தியிருந்தார். இதன்பொதே அவர் மேற்படி கருத்தைத் தெரிவித்திருந்தார். இந்தக் கூற்று அனைத்து ஊடகங்களிலும் வெளி வந்தது.அவருடைய எண்ணம் உண்மையிலேயே வரவேற்கப்படவேண்டிய ஒரு விடயம்.



வடக்கில் வாள்வெட்டு ,போதைவஸ்துப் பாவனை என்பவை உள்நாட்டு யுத்தம் முடிந்த கையுடன் வெகுவாக அதிகரித்துள்ளன . தினமும் வாள்வெட்டுச் சம்பவங்கள் பற்றிய செய்திகள் ஊடகங்களில் வெளிவந்த வண்ணமே உள்ளன. வாள்வெட்டு, போதைவஸ்துப் பாவனை இவையிரண்டும் முற்றாக ஒழிக்கப்படவேண்டும். அதில் மாற்றுக்கருத்து இல்லை. அந்த வகையில் புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ள விடயம் வடபகுதி மக்களிடம் வரவேற்பைப்பெறும் என்பதில் சந்தேகமில்லை. ஆனாலும் புதிய பிரதிப்பொலிஸ்மா அதிபர் இறுதியாக தெரிவித்த விடயம் தான் நகைப்புக்கிடமானதொன்றாக மாறியிருக்கிறது. "இந்த வன்முறைக் கும்பல்களைக் கட்டுப்படுத்துவதற்கு தேவையேற்படின் முப்படைகளின் ஒத்துழைப்பும் பெறப்படும்" என புதிய பிரதிப்பொலிஸ்மா அதிபர் சூளுரைத்தார்.எனவும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன .புதிய பிரதிப்பொலிஸ்மா அதிபரும் இந்தச் செய்தியை இதுவரை மறுக்கவுமில்லை.

அப்படியானால் யாழ்ப்பாணத்தில் உள்ள வன்முறைக்கும்பல்களான ஆவா குழு ,தனு -ரொக் குழு போன்ற குழுக்களை ( இந்த பெயர்கள் கூட பொலிஸாரால் தான் ஊடகங்களுக்கு தெரிவிக்கப்பட்டன) கட்டுப்படுத்துவதற்கு முப்படைகளின் ஒத்துழைப்பையும் பெறப் போகிறாரா புதிய பிரதிப்பொலிஸ்மா அதிபர்?

யாழ்ப்பாணத்தில் என்ன ஆயுதப்போராட்டமா நடக்கிறது முப்படைகளையும் பாவித்து ஒடுக்குவதற்கு? அல்லது கிளர்ச்சி நடைபெறுகிறதா? யாழ்ப்பாணத்தில் எங்காவது ஏதாவது ஒரு படைமுகாமோ அல்லது பொலிஸ் நிலையமோ தாக்கப்பட்டிருக்கிறதா? அல்லது தாக்குதல் முயற்சியாவது மேற்கொள்ளப்பட்டுள்ளதா? யாழ்ப்பாணப் பேச்சுவழக்கில் சொல்லப்போனால் இவர்கள் 'தெருச்சண்டியர்கள்'. 1983ஆம் ஆண்டுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் ஊருக்கு ஊர், சந்திக்குச்சந்தி சண்டியன்மார் இருந்தனர். அவர்களுடன் ஒப்பிடக்கூடிய அளவில் கூட இந்த ஆவா குழுவும் ஏவா குழுவும் இல்லை . ஏனென்றால் அந்தக்கால சண்டியன்மார் ஊரறிந்த சண்டியன்மார். அவர்களுடைய பெயர்கள் கூட யாழ்ப்பாணம் முழுவதும் பிரசித்தம். அத்துடன் அவர்கள் ஒளிந்து வந்து தாக்கி விட்டு தப்பி ஓடுபவர்களுமில்லை.

இந்த ஒல்லிக்குச்சி உடம்புக்காரரை அடக்குவதற்கு முப்படைகளா? ஆவா குழு என அடையாளப்படுத்தப்படும் இளைஞர்களின் புகைப்படங்களைப் பார்த்தால் அனைவரும் புரூஸ்லீயின் தோற்றத்துடனேயே காணப்படுகின்றனர் புரூஸ்லீ காராட்டி வீரன். இவர்கள் வாளுடன் பிறந்த 'மரத்தமிழ்' வீரர்கள் (கவனிக்கவும், மறத்தமிழ் வீரர்களல்லர்).

போதாக்குறைக்கு தானே தான் ஆவாக் குழுவின் தலைவர் என்றும் ,தனது தந்தை ஒரு ஊடகவியலாளர் என்றும் ஒருவர் தென்னிலங்கை ஊடகங்களுக்கு பேட்டி கொடுத்திருந்தார். யாழ் ஊடக அமையத்தில் ஊடக மகாநாட்டையும் நடத்தினார். வடமாகாணத்துக்கான புதிய பிரதி பொலிஸ் மா அதிபரும் ஊடகவியலாளர் மகாநாடு நடத்துகிறார் ,ஆவாக் குழுத் தலைவரும் ஊடகவியலாளர் மகாநாடு நடத்துகிறார். அப்படியிருக்கிறது யாழ்ப்பாணத்து நிலைமை.

நாட்டில் என்னென்ன புலனாய்வுக் கட்டமைப்புகள் எல்லாம் இயங்குகின்றனவோ, அவற்றில் ஒன்றுகூடத் தவறாமல் யாழ்ப்பாணத்தில் இறக்கிவிடப்பட்டுள்ளன. சி.ஐ.டி. ( CID), எஸ்.ஐ.எஸ் (SIS) , என்.ஐ.பி (NIB), கடற்படை புலனாய்வுப் பிரிவு,விமானப்படை புலனாய்வுப்பிரிவு என அனைத்துப் புலனாய்வுப் பிரிவினரும் கண்ணுக்குள் எண்ணெய் விட்டுக் கொண்டு இயங்கிக்கொண்டிருக்கும் ஓரிடத்தில் ( இவ்வருட முற்பகுதியில் பண்ணைக் கடற்கரையில் மருத்துவபீட மாணவியை கொலை செய்த சிப்பாயை துரத்திபிடித்தவர்கள் கூட விமானப் படைப் புலனாய்வாளர்கள் தான்) வாள் வீச்சுக்காரரைக் கட்டுப்படுத்துவதற்கு முப்படைகளின் உதவி எதற்காக? இன்னும் சொல்லப்போனால் இவர்களிடம் ஒரு 'ரிவோல்வர்' கூட இருப்பதாகத் தெரியவில்லை. ஆவா குழுவினர் மறைத்து (புதைத்து) வைத்திருந்ததாகச் சொல்லி பொலிஸாரால் வாள்கள் மட்டுமே மீட்கப்பட்டிருந்தன.

இந்த வாள்வீச்சுக்காரரை பல இடங்களில் பொதுமக்களே மடக்கிப்பிடித்துள்ளனர்.இவ்வாறு பொதுமக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டவர்கள் மீது பொலிஸார் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டும்பொதுமக்களால்முன்வைக்கப்படுகிறது. எனவே முப்படைகளையும் களத்தில் இறக்குவதைவிட, முதலில் பொலிஸாருக்குள் இருக்கின்ற கறுப்பாடுகளைக் கண்டுபிடித்தாலே, இந்த வாள் வெட்டுக் குழுக்களை ஏறக்குறைய அடக்கிவிடலாம். ஏனென்றால் தமக்கு இசைவான சில பொலிஸ் அதிகாரிகள் கொடுக்கும் ஆதரவாலேயே இந்த வாள் வெட்டுக்காரர்கள் இப்படி, சுதந்திரமாக இயங்குகின்றனர் என்றும் சொல்லப்படுகின்றது. எனவே முதலில் உள்வீட்டைச் சுத்தம் செய்வதே வடமாகாணத்துக்கான புதிய பிரதிப் பொலிஸ் மா அதிபரின் பணியாக இருந்தால், அது ஆரோக்கியமானதாக அமையும்.

# அவருக்கும், இவருக்கும்...



## அவசரமா ஒரு கடுதாசி

நான் நல்ல சுகம். ஹர்த்தால்எல்லாம் ஒருமாதிரி முடிஞ்சு போச்சுது. ஆனால்அது கொஞ்சப் பேருக்குச் செமியாக் குணத்தைக் கொண்டு வந்திட்டுது.அதாலை தான் நான் உங்களை எப்பிடிச் சுகம் எண்டு கேக்கேல்லை. அப்பிடி நான் கேட்காததை நீங்கள் பிழையா விளங்கிக் கொள்ளாதையுங்கோ.

எங்கடை தமிழ் ஆக்கள் கொஞ்சப் பேருக்கும் ஹர்த்தாலாலை வயித்துக் குத்தாம். கொஞ்சப் பேருக்குச் செமியாக் குணமாம். அதாலை முதலிலை சொல்லிச்சினம் திலீபனை நினைவுபடுத்திறதைச் சனம்விரும்பேல்லை எண்டு.அதுக்குப் பிறகு, முன்னம் இருந்த கல்வி அமைச்சர் பதியுதீன் சொன்ன மாதிரி "ஒண்டாச் சேர்ந்து எல்லாரும் ஒண்டுக்கு இருக்கவேணும்" எண்ட மாதிரி ஒராள் அறிக்கை விட்டிருக்கிறார். தேர்தலுக்கு முன்னம் அவர் சொன்னவர்"எங்களுக்கு வன்முறையிலை நம்பிக்கை இல்லை"எண்டு ஒத்துக்கொள்ளுறம். அப்ப வன்முறை இல்லாத ஒண்டுக்கு அவையள் ஆதரவு குடுக்கலாமெல்லே? திலீபன் இயக்கத்தின்ரை ஆளா இருக்கலாம்.ஆனால், அவன் உயிரை விடேக்கை வன்முறையாளனா உயிரை விடேல்லை. அவன் சாகேக்கை அவன்ரை கையிலை துவக்கும் இல்லை.அவன் காந்தியின்ரை வழியைத்தான் அதிகம் நம்பினவன். அப்ப அப்பிடி இவையள் சொல்லுற மாதிரி மென்வலுவிலை நம்பிக்கை வைச்சு ,அதாலை தன்ரை சமூகத்துக்கு ஒரு நீதி, நியாயம் கிடைக்குமெண்டு நம்பினவனை மக்கள் விருப்பேல்லை எண்டு ஒரு பச்சைப் பொய்யை, மனச்சாட்சி இல்லாமல் சொல்லுற மனுசரும் எங்களுக்கை இருக்கினமெண்டதை நினைக்க வெக்கமா இருக்கு.

அதோடை இந்தக் கடதாசியிலை இன்னுமொரு விசயத்தையும் சேத்துஎழுதிறன். முடிஞ்சால் அதையும் அறிஞ்சு சொல்லுங்கோ பாப்பம்! அண்டைக்கொரு செய்தியைப் பேப்பரிலை பாத்தன். 'கட்ந்த காலங்களில சொன்ன மாதிரியான பதில் தான் இனியும் போராட்டம் நடத்தினா கிடைக்கும்" எண்டு ஒருத்தர் சொல்லியிருக்கிறார். அதைப் பார்த்த நேரம் துவக்கம் சரியான கவலை.எட நடக்கிற விசயங்களைச் சரியாப் பாத்து, கேட்டு, எடைபோட்டு அதுக்குத் தன்ரை கருத்தை நியாயத்தோடை அவர் சொல்லலாம். இல்லாட்டிக் கேட்கலாம். பொறுப்பா இருக்கிறவைக்கு அதுதான் அழகு. அது மனுசத்தன்மையும் கூட எண்டு நான் நினைக்கிறன். அதிகாரம் தன்ரை கையுக்கை இருக்கிறதெண்டதுக்காக வாயிலை வந்ததெல்லாத்தையும் வெளியிலே சொல்லேலாது. சொல்லவும் கூடாது.

கண்டபடி சண்டித்தனம் விடப்படாது எண்டதுக்கு அப்பு அடிக்கடி ஒருகதை சொல்லுறவர். எங்கடை ஊரிலை இருந்த பரமுவின்ரை மகன் லிங்கம், இஞ்சை இருந்து போய் கண்டியிலை ஒரு சலூன் வைச்சிருந்தவராம். லிங்கம் தன்ரை பெடிக்கு வேலை பழக்கிறதுக்காக பள்ளிக்கூட விடுதலைக்குக் கண்டிக்குக் கூட்டிக்கொண்டு போய் வச்சிருந்தவராம். அப்ப எந்தநாளும் பின்னேரம் செக்கலுக்கு ,ஒரு ஆள் குடிவெறியிலை வந்து கையை நீட்டுவாராம். லிங்கமும் அவற்றை கையிலை ஐம்பது ரூபா காசை வைக்க அந்த ஆள் அதை வேண்டிக்கொண்டு, அங்கை கிடக்கிற கதிரைக்கும் காலாலை ஒரு உதை குடுத்திட்டுப்போவாராம். அந்த உதையில கதிரை பாறி விழும். அதையும் இவைதான் நிமித்தியும் வைக்கவேணுமாம்.இதை அந்தச் சின்னப்பெடி அவதானமாப் பாத்துக்கொண்டிருந்திட்டு "அவருக்கு ஏன் ஐயா எந்தநாளும் ஐம்பது ரூபா குடுக்கிறியள்?" எண்டு கேட்டிருக்கிறான். அதுக்கு லிங்கம் சொன்னவராம் "அது கப்பமெடா." எண்டு. அப்ப பெடிகேட்டுதாம்"கப்பம் எண்டால் என்ன?" எண்டு."அவையின்ரை ஊரிலை நாங்கள் வந்து கடை வைச்சிருக்கிறதாலை அவைக்கு நாங்கள் குடுக்கவேணுமாம்."எண்டு லிங்கம் சொல்லியிருக்கிறான். "அப்ப உவர் கவுண்மெண்டின்ரை ஆளோ?" எண்டு பெடி கேக்க "இல்லை உவர் இந்த ஊர்ச் சண்டியன். குடுக்காட்டி அடிப்பான். சிலநேரம் கொலையும் செய்வான்.அப்பிடி முன்னம் ஒருதரை அடிச்சாப் போலை அந்த ஆள் செத்ததாம்" எண்டு லிங்கம் சொல்லிப்போட்டு விட்டிட்டானாம்.

ஒருநாள் பின்னேரம் "கடையைப் பாத்துக் கொள்." எண்டு பெடியிட்டைச் சொல்லிப்போட்டு லிங்கம் வெளியிலை போன நேரம் பாத்து கப்பம் கேக்கிற ஆள் வந்து கையை நீட்டிஇருக்கிறான். "ஐயா வெளியிலை போயிட்டார்." எண்டு பெடி சொல்லி இருக்கிறான். "சல்லி தெண்ட" (காசு தா) எண்டு பிறகும் கேட்டாப் போலை பெடி திரும்பவும்"ஐயா வெளியில.."எண்டு பதில் சொல்லி இருக்கிறான். அவன் எடுத்த வீச்சுக்குப் பெடிக்கு இரண்டு அடி, அடிச்சுப் போட்டான். அடியை வேண்டினதுதான் தாமதம் பெடி தன்ரை கையிலை வைச்சுத் தீட்டிப் பழகிக் கொண்டிருந்த சவரக்கத்தியாலை அவன்ரை வயித்திலை ஒரு கீறு. ஆள் அந்த இடத்திலையே சரியாம்.

அப்ப அப்பு சொன்ன கதையிலை இருந்து என்னதெரியுது? அதிகாரம் இருக்குது எண்டதுக்காகக் கண்டபடி சண்டித்தனம் விடக்கூடாது. "முன்னம் பதில் சொன்ன மாதிரித்தான் பதில் சொல்ல வேண்டிவரும்."எண்டு அவர் சொன்னதைக் கேக்க அவ்வளவு நல்லாப்படேல்லை..

மோடியோடை கதைச்சாப் பிறகு பிரதமரைப் பேப்பர்காரர் கேட்டவையாம் "மோடியோட என்ன கதைச்சனியள்?" எண்டு.அதுக்குப் பிரதமர் சொன்னவராம் "மறந்துபோனன்" எண்டு.அப்பிடி நானும்" முன்னம் பதில் சொன்ன மாதிரித்தான் பதில் சொல்லவேண்டி வரும்." எண்டு அவர் சொன்னவரேல்லோ. அவர் முந்தி எங்களுக்கு என்ன பதில் சொன்னவர்? அது எப்பிடியான பதில்? எண்டதை நானும் மறந்துபோனன் பாருங்கோ. அப்படிப் பதிலா எங்களுக்கு முந்தி என்ன சொன்னவர்? ஆருக்கும் நினைவிருந்தா ஒருக்காச் சொல்லுவியளோ?

**தாங்கள் மேல் அதிக பட்சமுள்ள
அப்பாவி அன்னமுத்து.**

# சொற்சிலம்பம் போட்டி

15

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | 3 | 4 | |
| | | | | 5 | | | |
| 6 | | | 7 | | 8 | | |
| | | 9 | | 10 | | | |
| | | | 11 | | | 12 | |
| 13 | | 14 | | | 15 | | |
| | | | | 16 | | 17 | 18 |
| 19 | | | | | | | |

அனுப்புபவர் பெயர்:.............................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

.............................................................

கையொப்பம்:.......................................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

### இடமிருந்து வலம்

1. அன்பளிப்பு 3. அதிகாலைப் பொழுது 5. மரங்களில் ஒன்று 6. தலைமுறையினர் 8. துணியால் தயாரிக்கப்படும் மறைப்பு. 9. காடு (இறுதி எழுத்தை இழந்து குழம்பி வந்துள்ளது) 11. பரம்பரை 13. தூய்மை / தெய்வீகத் தன்மை 15. மன்மதன் காதலி ரதி போல மஜனுவின் காதலி 17 ஆதிமனிதனின் வாழ்விடம் 19 ஏக் காலத்தில் பூக்கும் மரமொன்றின் பூக்களால் தொடுக்கப்பட்ட மாலை.

### மேலிருந்து கீழ்

1. எரிச்சலூட்டுதல் 2. ஒரே தரம் கொண்ட சிலவற்றின் ஒன்றிணைவு 3. ஆஸ்பத்திரி 4. இருக்கை 7. திண்மம் சூடாகும்போது ஏற்படும் நிலை 10. இணக்கச் செயல் 12 கொக்கு 14. சுவடு 16 தாயின் சகோதரர் 18 சிறைத் தண்டனை அனுபவிப்பவர்.

### சொற்சிலம்பம் போட்டி 13 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1.சமூகம், 4.தாமதி, 7.முட்டு, 8.காய்தல், 9.கடுக்கன் , 11.மலை, 12.காலி, 13.வித, 14.நாய், 15.விருப்பு, 17.அவி, 18.தழும்பு, 19.மோதகம், 22.கன்னி, 23.நாம்பன்

**மேலிருந்து கீழ்**

1.சமுகம், 2.மூட்டு, 3.கடுக்காய், 4.தாய், 5.மதமதப்பு, 6.தில்லை, 8.கான், 10.கலி, 13.விரும்பும், 14.நாவிதன், 15.விழு, 17.அமோக, 18.தம், 20.கனி, 21.பேன்

**சொற்சிலம்பம் போட்டி இல.15**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

**உதயன் சஞ்சீவி**

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்னும் முகவரிக்கு

09.10.2020 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

### போட்டி இலக்கம் 13 இல் வெற்றி பெற்றோர் விபரம்

**1 ஆம் பரிசு**

**எம்.வீணா பெரேரா,**
பள்ளிமுனை மேற்கு,
மன்னார்,

**2 ஆம் பரிசு**

**செ.தவலிங்கம்,**
தச சரணியாபவனம்,
சிறுப்பிட்டி.

**3 ஆம் பரிசு**

**கொ.மரியதாசன்**
இல.35,கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

**4 ஆம் பரிசு**

**யோ.யோகராசா,**
வல்லை வீதி, கொட்டிலடி,
சங்கானை.

**5 ஆம் பரிசு**

**ஈஸ்வரன் டனுசன்**
சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்

## வாசகர் மடல்

### தலைப்பெழுதவே தனிப்படையா?

கிழமைக்கு கிழமை சஞ்சீவியின் வளர்ச்சிக்கு அளவேயில்லை போலாகிற்று... தலைப்புகள் தரம். என் சொந்த அனுபவமும் தான். தலைப்பை வாசித்ததும் அப்படி என்ன போட்டிருக்கிறார்கள் என்ற கற்பனை என்ற கற்பூரத்தை 'பக்' என்று பற்றிக் கொள்வதாகத் தலைப்பின் தரம் அமைகிறது. தலைப்பெழுதவே, தனிப்படை வைத்திருக்கிறீர்களோ என்னவோ. அரசியல் ஆடுகளத்தின் ஆழம் அறிய வைப்பதிலும், இருண்ட சமூக நிகழ்வுகளுக்கு இருபது 'வோல்ட்' பல்ப் போட்டு பளிச்செனப் பார்க்க வைக்கவும் சஞ்சீவிக்கு நிகர் சஞ்சீவியே. வெடுக்குநாறி மலை பற்றிய தகவல்கள் படித்ததில் பிடித்ததாக என் மனதில் பதிந்தன. ஆனால் அக் கணம் ஓர் ஏக்கமும் எட்டிப் பார்த்தது. அந்தப் பதிவிலிருந்த புகைப்படங்கள் வர்ணப் படங்களாக இருந்திருக்கக்கூடாதா?

**நிரோ**, பளை



# பங்கர்



குறுங் கதை

ஆரவாரமற்ற அமைதி கங்குளை கதை பேசி வர்ணித்தது.

"டொக்...... டொக்......"

பதில் கிடைக்காததால் கதவுகள் பேரடி வாங்கி உடைக்கப்பட்டன. எதிர்பார்த்த எண்ண ஓடலின் படி கோதவியின் உயிரற்ற உடலை ஒரு முழக்கயிறு தாங்கித்தொங்கிக்கொண்டிருந்தது.

ஆர்ப்பரித்த அன்னையின் குரல் நடுநிசியை நண்பகலாக்கியது.

"என்னைப் போல் வாழா வெட்டியாய் வாழ்க்கையை தொடங்கியவளே என் வயிற்றை நிரப்ப சென்ற வழியில் நரம்பில்லா நாக்குத்தடியால் வாய்ப்பறையை அடித்து வீண் வார்த்தை விதைத்த கடையர்களுக்கு கண் குளிரும் காட்சியல்லோ இது"

ஓலத்தை கோதவியின் காலின் வழி அனுப்புகிறாள் காது எட்டவில்லை என்றே. கண்ணீர் அர்ச்சனை செய்தாள் அந்த விறைத்த கால்களுக்கு ....

"தொடவேண்டாம் தள்ளி நில்லுங்கம்மா..." பொலிஸாரின் உறுதிக் கட்டளை

விசாரணையில் அடிபட்ட, மனிதம் இழந்த மனிதர்களின் நாக்கு அவள் உயிரோடு தூக்கிலிட்ட அதே சாபங்கள் இன்றும் பொய் புனைந்து கட்டப்பட்டுக்கொண்டு இருந்தன. இது அன்னையவள் காதுகளுக்கு எட்டாமலில்லை.

வெந்தழலில் எழும் வெப்பக்காற்றில் ஆடும் கொடியிலை போல் உடல் ஆடிக்கொண்டு இருந்தது. விறைத்துப்போன நாக்கு பேச எத்தனிக்கிறது. குரல் நடுங்கி உயிர் ஊசலாட்டத்தை உரைக்கிறது.

மீண்டும் வலிமை பெற கண்ணீர் கரைகிறது. தட்டுத்தடுமாறி துயரை ஓசையாக்கிறாள். எந்த ஒப்பாரியும் இன்றி அமைதியாய் வாங்கிய பேரவலங்களை கேட்காமலே மூடப்பட்ட பங்கர் கிடங்குகளுக்கு ஒப்பானதே உன் சரிதை..... இத்தனை ஊர் வாய் சத்தத்தில் சத்தியம் இன்று உலை வாயானதே.

ஓலமிட எண்ணுகிறாள்; ஆனால் முடியாமல் ஓரமாய் புலம்பிக்கொள்கிறாள் அன்னை நீடித்துக்கொண்டிருந்த கோதவிக்கும் கயிற்றுக்குமான உறவினை அதிகாரிகள் அவிழ்க்கிறார்கள். ஆனால் நியாயம் மட்டும் மூட்டை கட்டி மூலை யில் கிடக்கிறது. தொப்புள்க்கொடி இன்று தான் வெட்டப்படுகிறது.

கோதவியின் வெளுறிய முகம் காண அன்னையின் ஆவேசம் மீண்டும் ஜனிக்க அமைதியாகக் கிடந்தவள் ஏதோ பலம் பெற ஓலமிடுகிறாள்.

ஆர்ப்பரித்த ஊர் ஸ்தம்பித்துப்போகிறது.

"பொடியை தூக்குங்க...." கட்டளைக்குரல் கேட்கிறது.

ஆர்ப்பாட்டமின்றி உடல் துடித்து உயிர் விறைக்க சரிகிறாள் அன்னை. விழி திறந்தே கிடக்கிறது . ஆனால் உலகமும் உண்மையும் இருண்டு கிடந்தன

லப் டப்.... 'லப் டப்'...

***சரண்யா***, கிளிநொச்சி.



# வேலையற்ற பட்டதாரிகள்

## காயா? பழமா?

○ சிக்மலிங்கம் றெஜினோல்ட்

"பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறுவோர் முதலில் சேர்ந்து கொள்வது வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தில்தான்" என்று நண்பரொருவர் கூறுவதுண்டு. இதை அவர் நகைச்சுவையாகச் சொல்கிறாரா? அல்லது வேதனையோடு சொல்கிறாரா? அல்லது கோபத்தோடு சொல்கிறாரா? என்று நான் அடிக்கடி சிந்திப்பதுண்டு.

உண்மையில் இந்த மூன்றுமே அவரது அந்தக் கருத்தில் கலந்துள்ளன என்றே சொல்ல வேண்டும். ஏனென்றால், பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றவர்கள் சுயமாக வேலைகளைத் தேடிக் கொள்வது அல்லது உருவாக்கிக் கொள்வதற்குப் பதிலாக, "அரசாங்கமே வேலையைத் தரவேண்டும்,அதுவும் அரச உத்தியோகமாக இருக்க வேண்டும். அதுவும் சொந்த மாவட்டத்துக்குள் அல்லது தாமிருக்கும் மாகாணத்துக்குள்ளேயே தரப்பட வேண்டும்" என்று எதிர்பார்த்திருப்பதை (வலியுறுத்துவதை அல்லது அடம்பிடிப்பதை) என்னவென்று சொல்வது? இது குறித்துச் சற்று ஆழமாக யோசித்தால் உங்களுக்கே சிரிப்பு வரும். ஏனென்றால் படித்தவர்களே இப்படிச் சிந்திக்கிறார்கள். அதிலும் 'எங்கும் செல்வோம். எதிலும் வெல்வோம்' என்று துணிச்சலோடு எதற்கும் தயாராக முன்னிற்க வேண்டிய இளைய தலைமுறையினர் இப்படி ஊருக்குள் குதிரையோட்டுவதற்காகக் குறுகிச் சிந்திப்பதையிட்டுச் சிரிப்புத்தானே வரும்! பரந்து விரிந்து சிந்திப்பதற்குப் பதிலாகக் குழந்தைப் பிள்ளைத்தனமாக இவர்கள் யோசிக்கிறார்களே! இவர்களுடைய உலக ஞானம் இவ்வளவுதானா? என்று கேள்வியும் கூடவே எழும்.

இன்னொரு கோணத்தில் பார்த்தால், "பல்கலைக்கழகத்தில் படித்த பிறகும் இந்தப் பிள்ளைகளுக்கு ஒரு வேலை கிடைக்கவில்லையே. வயது ஏறிக்கொண்டிருக்கிறதே. திருமணத்தைக் கூடச் செய்வதற்குப் படித்தும் தொழிலற்றிருக்கிறார்களே" என்று வேதனை ஏற்படும். பெரும்பாலான பட்டதாரிகளுடைய பெற்றோரின் பெருங்கவலை இது. அரசாங்கம் எப்போது படியளக்கப்போகிறது என்ற எதிர்பார்ப்போடும் கவலையோடும் இவர்கள் (குடும்பமாகவே) காத்திருக்கிறார்கள்.

இதை வேறொரு விதமாகப் பார்த்தால், இலவசக் கல்வியை பல்கலைக்கழகம் வரையில் படித்துத் தேறிய பிறகும், வேலைக்கும் அரசாங்கத்தையே தஞ்சமென்று நம்பிக் காத்துக் கொண்டிருப்பது எவ்வளவு பெரிய தவறு? என்று புரியும். இது அரசாங்கத்துக்கும் நாட்டுக்கும் மேலதிகச் சுமையல்லவா? பல்கலைக்கழகக் கல்வி என்பது, அங்கு படித்துப் பட்டதாரிகளாகும் ஒவ்வொரு இளையோரையும் துறைசார் அறிவு, ஆற்றல், ஆளுமை, வினைத்திறன், தன்னம்பிக்கை, சமூகப் பங்களிப்பு, அதற்கான பொறுப்புணர்வு என்பற்றுக்கான வளமூட்டலையல்லவா செய்து விடுகிறது? அப்படியென்றால், இவற்றைப் பெற்றவர்கள் எப்படி இவற்றின் அடிப்படையில் செயற்படாமல், அரசாங்கத்திடம் ஒரு உத்தியோகத்தைத் தாருங்கள் என்று கேட்க முடியும்? இதிலே என்ன நியாயமிருக்கிறது? சமூகத்துக்கும் நாட்டுக்கும் தாங்கள் பெற்றுக்கொண்ட இலவசக் கல்வியின் பயனை, வளத்தை செலுத்தாமல் இப்படி அடம் பிடிப்பது சரியானதா? என்ற கோபம் ஏற்படும்.

உண்மையில் இதிலே நாம் மேலே குறிப்பிட்டுள்ள முதலாவதையும், இரண்டாவதையுமே இணைத்துப் பார்க்க வேண்டும். ஏனென்றால், "வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்" என்பதே சிரிப்புக்குரிய ஒன்றாகும். பட்டதாரி ஒருவர் வேலையற்றிருக்கிறார் என்றால், அவர் பட்டதாரி இல்லை என்றே அர்த்தமாகும். பட்டதாரி என்றால், அவர் சுயாதீனமாக இயங்கக் கூடிய ஆற்றலுள்ளவர்; அறிவுள்ளவர்; திறனுள்ளவர்; துணிச்சலுள்ளவர்; ஆளுமையுடையவர். தன்னம்பிக்கை மிக்கவர் என்றே பொருளாகும்.

இதற்கு மாறாக ஒருவர் இருந்தால் அவரை எப்படி நாம் பட்டதாரி என்று கொள்ள முடியும்? இவ்வளவும் இல்லாத ஒருவரை அல்லது இவை இல்லாதோரை எப்படி நாட்டின் நிர்வாக இயந்திரத்தில் - அரச உத்தியோகத்தில் இணைத்துக் கொள்ள முடியும்? துறைசார் பொறுப்புகளை இவர்களுக்கு எப்படி வழங்குவது? அதுமட்டுமல்ல, இவ்வளவு படித்த பிறகும் கையைப் பிடித்து "இந்தா உனக்கு இதுதான் வேலை" என்றுதான் கொடுக்க வேண்டும் என்றால், இதையிட்டுச் சிரிப்பதா அழுவதா? இந்த மாதிரியான தடுமாற்றங்கள், தன்னம்பிக்கையீனங்களாலேயே தாம் படித்த துறைக்கு மாறான துறைகளில் இவர்களில் பலரும் வேலை (அரச உத்தியோகத்தை) பார்க்க வேண்டியுள்ளது. சங்கீதத்துறையில் படித்தவர் சுகாதாரத்திணைக்களத்தில் வேலைசெய்கிறார். ஓவியத்துறைப்பட்டதாரி விவசாயத் திணைக் களத்தில் உத்தியோகத்தராக இருக்கிறார். விவசாயத்துறை யைப் படித்தவர், நிர்வாகத் துறையில் முகாமைத்துவ உதவியாளராக வேலை செய்கிறார். முகாமைத்துவம் படித்தவர் எந்தத்துறைக்கு, எந்தத் தொழிலுக்குப் போவதென்று தெரியாமல் ஏதோ கிடைக்கும்தொழிலுக்குப் போவோம் என்று நீர்ப்பாசனத்திணைக்களத்தில் இணைகிறார்.

அரசும் பொருத்தமானவர்களுக்கென்று தகுதியைப் பார்த்து வேலைகளை வழங்குவதில்லை. தனக்கு இவர்களால் ஏற்படும் அரசியல் நெருக்கடியைத் தணித்துக்கொள்வதற்காக ஏதோ சமாளித்துக் கொள்வோம் என்ற அடிப்படையில் ஆட்களைக் கண்டபாட்டுக்கு நியமித்து விடுகிறது. இவர்களைப் பகிர்ந்து நியமனங்களை வழங்குவதென்பது அதிகாரிகளுக்குப் பெரிய சவாலாக உள்ளது. தொடர்ச்சியாகப் பட்டதாரிகளுக்கான நியமனங்களை வழங்கி வழங்கி ...இப்பொழுது அலுவலகங்களில் இடமும் இல்லை. கதிரையும் இல்லை என்ற நிலை வேறு. எவருக்கு எந்த வேலையைப் பகிர்ந்து கொடுப்பது என்று தங்களுக்குத் தெரியவில்லை என அதிகாரிகள் அழுது வடிகிறார்கள். பல எலிகள் கூடினால் வளையெடுப்பு நடக்காது என்ற மாதிரி ஆட்கள் கூடினால் வேலை நடப்பதில்லை என்ற பிரச்சினை வேறு தோன்றியுள்ளது. இதனால் "முன்பு வேலையற்ற பட்டதாரிகளாக இருந்தவர்கள், உத்தியோகம் கிடைத்த பிறகு வேலையில்லா உத்தியோகத்தர்களாக இருக்கிறார்கள்" என்கிறார் ஒரு முதுநிலை அதிகாரி.

இது இப்படியென்றால், மறுபக்கத்தில் இந்தப் பட்டதாரிகள் வேலைக்காக அரசியல்வாதிகளுக்குப் பின்னே அலைவதிருக்கிறதே...அதைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. அதுவும் தேர்தல் காலங்களில் இவர்களை நீங்கள் பார்க்க வேண்டும். அதுவரையிலும் (பல்கலைக்கழக மாணவர்களாகவும் மாணவர்

"படித்துப் பட்டம் பெற்ற பிறகு கையாலாகாதவர்களைப்போல இப்படி அரசியல்வாதிகளுக்குப் பின்னாலும் கட்சிகளுக்குப் பின்னாலும் கெஞ்சுவது போன்று அலைவது எவ்வளவு ஆற்றல்குறைவானது. அவர்கள் சொல்வதற்கெல்லாம் ஆடுவது மிக மோசமானது. இப்படி அரசியல் தலைமைகளை சுயாதீனமாகவும் திராணியோடும் எதிர்க்க முடியும்? எப்படித் தலைமைகளைத் தட்டிக் கேட்க இயலும்?"




அமைப்புப் பிரதிநிதிகளாகவும் இருக்கும் வரையிலும்) வீராவேசமாக தமிழின அரசியல் உணர்வோடிருந்தவர்களை எல்லாம், பிறகு அரசுக்குச் சார்பான அரசியற் தரப்பு களின் வாசலில் போய் நிற்கி றார்கள். கேட்டால், "அது அப்ப இது இப்ப" என்று சொல்வார்கள். மேலும் "வாழ்க்கை என்று வந்து விட்டால் கொள்கை கோட்பாடுகளையெல்லாம் பார்க்க முடியாது" என்ற தத்துவ விளக்கம் வேறு வருகிறது.

(மறுபக்கம் பார்க்க)

# வேலையற்ற...

படித்துப் பட்டம் பெற்ற பிறகு கையாலாகாதவர்களைப் போல இப்படி அரசியல்வாதிகளுக்குப் பின்னாலும் கட்சிகளுக்குப் பின்னாலும் கெஞ்சுவது போன்று அலைவது எவ்வளவு ஆற்றல்குறைவானது. அவர்கள் சொல்வதற்கெல்லாம் ஆடுவது மிக மோசமானது. இப்படி அரசியல்வாதிகள், கட்சிகளின் வழியாக நியமனத்தைப் பெற்றால் பிறகு எப்படி முறையற்ற அரசியல் தலையீடுகளை சுயாதீனமாகவும் திராணியோடும் எதிர்க்க முடியும்? எப்படித் தலையீடுகளைத் தட்டிக் கேட்க இயலும்?

இதற்கெல்லாம் என்ன காரணம்?

1. அரசாங்கத்தினுடைய பொருளாதாரக் கொள்கையின் தவறு. அரசுக்குச் சரியான பொருளாதாரக் கொள்கை இருக்குமாக இருந்தால், பிற தொழில்துறைகள் நாட்டில் வளர்ச்சியடைந்திருக்கும். தொழில் வாய்ப்பும் தொழில் உருவாக்கங்களும் பன்முகமாகப் பெருகியிருக்கும். இவற்றில் இளைய தலைமுறையினரும் பட்டதாரிகளும் பங்கேற்பதற்கான சூழல் ஏற்பட்டிருக்கும்.
2. பல்கலைக்கழகங்கள் சுயமாகச் செயற்படக் கூடிய ஆளுமையை இந்தப்பட்டதாரிகளிடையே உருவாக்கவில்லை. அத்தகைய சிந்தனைப்போக்கை இவர்கள் மத்தியில் வளர்க்கவுமில்லை. தமிழர் தரப்பில் இது இன்னும் மோசமான நிலையில் உள்ளது. உண்மையில் இது பல்கலைக்கழகங்களின் தோல்வியும் வீழ்ச்சியு மாகும். தங்களால் உருவாக்கப்படும் அறிவாளிகள் எந்தத் துறைக்கும் பங்களிப்பைச் செய்யக் கூடிய ஆற்றலற்றவர்களாவும் திராணியற்றவர்களாகவும் சிந்தனையற்றோராகவும் இருக்கிறார்கள் என்றால், அதற்கான பொறுப்பைப் பல்கலைக்கழகங்களே ஏற்க வேண்டும். அரசாங்கத்தரப்பில் இது தொடர்பான பொருத்தமான கொள்கை மற்றும் திட்டக் குறைபாடுகளிருந்தால் அவை தொடர்பில் பல்கலைக்கழங்களும் அவற்றின் புத்திஜீவிகளுமே பேசி, போராடித் தீர்வு காணவேண்டும்.
3. அரச உத்தியோகம் என்றால் அதிக சிரமத்தை எதிர்கொள்ள வேண்டியதில்லை. சாட்டுப்போக்குகளைச் சொல்லிக் காலத்தை ஓட்டிக் கொள்ளலாம். அத்துடன் நிலையான - நிரந்தரமான உத்தரவாதப்படுத்தப்பட்ட தொழிலும் வருவாயும் உண்டு. ஓய்வு காலத்தில் தமக்கும் குடும்பத்துக்குமாக ஓய்வூதியமும் கிடைக்கும். கூடவே இன்னொரு தொழிலை 'சைற்பிஸினஸாகவும்' செய்து கொள்ளலாம்.
4. அரச உத்தியோகம் என்ற அடையாளம் ஒரு வகையான அந்தஸ்தைத் தருகிறது என்ற மனப்பாங்கு. அதில் உண்மையும் உண்டு. அதிகாரத்தையும் அதன் வழியான சலுகைகளையும் கையில் வைத்துக் கொள்வதற்கான வழி அரச உத்தியோகத்தில் உள்ளது. இது சௌகரியத்தையும் வழங்குகிறது.
5. புதிய தொழில் முயற்சிகள், தொழில்துறை, பொருளாதாரக் கட்டமைப்பு, மனப்பாங்கில் மாற்றம், சமூக அக்கறை, நாட்டுப்பற்று போன்றவற்றை உருவாக்குவதற்கு சமூகங்களின் அரசியற் தலைமைகள் இழைத்த, இழைத்துக்கொண்டிருக்கும் தவறுகள் பல. இதில் புலம்பெயர் சமூகத்தினருக்கும் பங்குண்டு. அவர்கள் புதிய முதலீடுகளைச் செய்திருக்க வேண்டும். தொழில் வாய்ப்புகளை உருவாக்கியிருந்திருக்க வேண்டியது அவசியம். பொருளாதாரச் சிந்தனையை பரிமாற்றம் செய்திருக்க வேண்டும். சுயசார்புப் பொருளாதாரம் குறித்த உரையாடல்களையாவது ஆரம்பித்திருக்கலாம்.
6. புத்திஜீவிகள், சமூகச் செயற்பாட்டாளர்கள், செயற்பாட்டியக்கங்கள், ஊடகங்கள் இந்த நிலைமை குறித்து மாற்றுப் பொறிமுறைகளை உருவாக்கியிருக்க வேண்டும். விவாதங்கள், கருத்தாடல்கள், கருத்தரங்குகள், பிற மனப்பாங்கு விருத்திக்கான செயற்பாடுகளை முன்னெடுத்திருக்க வேண்டும்.

இப்போது கூட இதையெல்லாம் செய்ய முடியாதென்றில்லை. நிச்சயமாகச் செய்ய முடியும். செய்ய முடியும் என்பதற்கு அப்பால், இவற்றைச் செய்தே தீர வேண்டும். ஆற்றல் மிக்க, அறிவுத்திறனுள்ள இளைய தலைமுறையை நாம் சீரழிய விடக்கூடாது. இறுதியாக ஒரு விசயத்தை இங்கே உதாரணப்படுத்துவது பொருத்தமானது.

ஆயுதப் போராட்டத்தின்போது, அந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட போராளிகளின் திறன் பற்றி ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள்.

நிர்வாகத்திறன், ஒவ்வொரு துறையிலும் துறைசார் நிபுணத்துவம், சமூக வளர்ச்சிக்கான பங்களிப்புகள், துறைசார் கட்டமைப்புகள், அவற்றின் விரிவாக்கம், வளர்ச்சி, மக்கள் நலன் என போராளிகளின் திறனும் ஆற்றலும் அக்கறையும் மேம்பட்டிருந்ததை உணர்வீர்கள். இவ்வளவுக்கும், அந்தப் போராளிகள் ஒன்றும் பெரிய படிப்புப் படித்த பட்டதாரிகளல்ல. பெருந்தொகை நிதியைச் செலவழித்துப் பயிலரங்குகளின் வழியாக தேறியவர்களல்ல. போராட்டத்துக்குள்ளால் வளர்ச்சியடைந்தவர்கள். அவர்களுடைய வெற்றிக்குக் காரணம், மக்கள் மீதான நேசமும் சமூக அக்கறையுமே. இப்போது புதிதாக நியமனம் பெறும் பட்டதாரிகளை அரசாங்கம் ஏறக்குறைய அந்த வகையிலான முன்பயிற்சியில் - தலைமைத்துவப் பயிற்சிகளில் ஈடுபடுத்துவதற்கு முயற்சித்துள்ளது. இது எந்த அளவுக்குப் பயன்தரும் என்பதை இதன்வழி உருவாகுவோர்தான் நிரூபிக்க வேண்டும்.

# மூட நம்பிக்கை தாழ்த்தும் பகுத்தறிவு உயர்த்தும்



ம.பா.மகாலிங்கசிவம்

தமிழ் இலக்கணக்காரர் உலகிலுள்ள உயிருள்ள உயிரற்றவை ஆகிய அனைத்தையுமே இரு திணைகளாக வகைப்படுத்தியுள்ளனர். மக்கள், தேவர், நரகர் ஆகியோர் உயர்திணை என்றும், மற்றைய உயிருள்ளவை, உயிரற்றவை அனைத்துமே அஃறிணை என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

உயர்திணை என்றால் உயர்வாகிய சாதி. இந்த உயர்ந்த சாதிக்குள் மனிதர் தம்மை உட்படுத்திக் கொண்டு ஏனைய உயிரினங்களை அஃறிணைக்குள் தரம் இறக்கினர். எனினும் இந்தத்திணைப் பகுப்புச் சரியானதா என்ற சந்தேகம் காலந்தோறும் வெளிப்படுத்தப்பட்டு வந்துள்ளது. பகுத்தறிவு உள்ளமை என்ற சிறந்த தேர்ச்சியின் காரணமாகவே மனிதர்கள் உயர்திணைக்குள் அடங்கினர் என்று கூறப்படுகிறது. எனினும், அஃறிணைகள் சில விடயங்களில் உயர்திணைகளை விடவும் மேலானவை போலக் காணப்படுகின்றன. உதாரணமாக அஃறிணையைச் சேர்ந்த மாட்டின் சாணியை எடுத்து வீடு மெழுகலாம். ஆனால் மனிதர்கள் விடயத்தில் அவ்வாறு நடந்து கொள்ள முடியாதுதானே.?

இத்தகைய உயர்திணை, அஃறிணை பகுப்பாய்வு தொடர்பில் மீளாய்வு செய்தவர்களுள் ஈழத்துக் கவிஞர் அண்ணலும் ஒருவர். கிண்ணியாவில் பிறந்த அண்ணலின் இயற்பெயர் எம். எஸ்.எம். சாலிஹ். "காதல் கவிதைக்கோர் அண்ணல்" என்ற சிறப்புப்பெயருக்கும் உருத்துடைய

இனிதா கனிய ளிக்கும்
இன் நிழல் மரங்கள், ஆங்கு
கனிபிழிந் தன்னை ஓசைக்
கடலலை நல்கும் புட்கள்
பனிதங்கு புல்லினோடு
மாமிசம் உண்ணும் மாக்கள்.
நனி எழி லோடு மின்னும்
நாகங்கள் யாவி னுள்ளும்
மனிதா நீ யார்?இம்மண்ணில்
மதிப்புள்ள ஜந்து நீயா?

ஓதிய மறைகள் உன்னை
உயர்ந்தவன் என மொழிந்தே
தோதாகி உலகும் உன்றன்
சுகத்திற்கு வளையு மென்னும்
பாதார விந்தம் சென்னி

பணித்திடும் சிருஷ்டி!நல்ல
ஆதாரம் அமரர் உன்றன்
அடியினைக் கௌரவித்தார்!
மனிதா நீ யார்? இம்மண்ணின்
மதிப்புள்ள ஜந்து நீயா?

ஆந்தையின் அலறலுக்கும்
அர்த்தம் நீ காணுகின்றாய்
சேர்ந்த ஓர்காகம் கத்த
சிந்தையை இழப்பாய் பூனை

பாய்ந்திடிற் பயந்து போவாய்
பல்லியின் நச்சொலிக்கே
மாய்ந்திடு வாய் உனக்கே
இவையெலாம் உயர்ந்த தாயின்
மனிதா நீ யார்?இம் மண்ணின்
மதிப்புள்ள ஜந்து நீயா?

சிங்கத்தின் கர்ச்சனைக்கும்
சிறுத்தையின் உறும லுக்கும்
தும்பியின் பிளிறலுக்கும்
தங்குநீர் முதலை கட்கும்
தாங்குமோ உயிர் என் றீங்கு
வந்தித்து வாழுகின்றாய்
மறையினால் உயர்வு கண்டாய்!
மனிதா நீ யார்? இமமண்ணின்
மதிப்புள்ள ஜந்து நீயா?

காற்றிற்கும் பனிக்கும் நீலக்
கடலுக்கும் இடி மழைக்கும்
தோற்றிடும் விசும்பினுக்கும்
தொல்புகழ்ப் பூமித் தாய்க்கும்
ஆற்றாமல் அழிகின்றாய் உன்
அறிவுக்குள் அடங்காய் நீயோர்
நாற்றுக்குள் முளையதனால்
நானிலம் பெரும் பேசும்
மனிதா நீ யார்?இம்மண்ணின்
மதிப்புள்ள ஜந்து நீயா?

அவரது 'நீ யார்?'என்ற தலைப்பிலான கவிதை இங்கே தரப்படுகின்றது.

முதலாவது பாடலில் கவிஞர் உலகிலுள்ள விடயங்கள் பற்றிய ஒரு பட்டியலைத் தந்து இவை எல்லாவற்றையும் விட மனிதன் மதிப்புள்ள ஜந்துவா எனக் கேள்வியெழுப்புகிறார். மரங்கள் பறவைகள் விலங்குகள் நாகபாம்புகள் என இப்பட்டியல் அமைந்திருக்கின்றது. இவற்றை விட மதிப்புள்ள ஜந்து நீயா? என்ற வினா வாசகரின் ஆர்வத்தைத் தூண்டிக் கவிதையுள் பிரவேசிக்க வழி ஏற்படுத்துகிறது.


"ஓதிய மறைகள் உன்னை
உயர்ந்தவன் என பொழிந்தே
தோதாகி உலரும் உன்றன்
சுகத்திற்கு வளையும் என்னும்
பாதார விந்தம் சென்னி
பணித்திடும் சிருஷ்டி! நல்ல
ஆதாரம் அமரர் உந்தன்
அடியினைத் கௌரவித்தார்!
மனிதா நீயார்? இம்மண்ணின்
மதிப்புள்ள ஜந்து நீயா

என்னும் இரண்டாவது பாடல், மனிதன் ஏனைய ஜீவராசிகளை விட முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்களை அடுக்குகிறது. மனிதன் முதன்மை பெற முதலாவது காரணம் வேதங்கள் மனிதனை உயர்ந்தவன் என்று சிறப்பித்து, உலகம் மனிதனின் சுகத்திற்கேற்ப வளைத்து கொடுக்கும் எனக் கூறியதுதான். இரண்டாவது காரணம் தேவர்களே மனிதர்களைக் கௌரவிப்பது தான் என்றும் கவிஞர் கூறுகின்றார். மனிதர்களின் குறைபாடுகளை அச்சங்களைக் கூறுவதற்குமுன் மனிதர்களின் பெருமைகளைக் கவிஞர் பேசுகிறார்.

மனிதர்களைப் புகழின் உச்சியில் ஏற்றிய மறுகணமே அவர்களைப் புரட்டி எடுக்கும் செயற்பாட்டைக் கவிஞர் ஆரம்பிக்கின்றார்.

ஆந்தையின் அலறலுக்கும்
அர்த்தம் நீ காணுகின்றாய்
சேர்ந்த ஓர் காகம் கத்த
சிந்தையை இழப்பாய் பூனை
பாய்ந்திடில் பயந்து போவாய்
பல்லியின் நச்சொலிக்கே
மாய்ந்திடு வாய் உனக்கே
இவையெல்லாம் உயர்ந்த தாயின்
மனிதா நீ யார்? இம் மண்ணின்
மதிப்புள்ள ஜந்து நீயா?

ஆழமான அர்த்தமுள்ள வினாக்களைக் கவிஞர் வாசகரை நோக்கி அடுக்குகின்றார். ஆந்தை அலறினால் யாருக்கோ மரணம் வரப்போகின்றது என்று அஞ்சுகின்றனர். காகம் கத்தினால் கத்தலைப் பொறுத்து விருந்தினர் வரப்போகிறார் அல்லது இழவு விழப்போகிறது என்று கணிக்கின்றனர். பூனை குறுக்கே ஓடினால் ஆபத்து என்று நினைக்கின்றனர். ஆனால் 'காப்பெற்' வீதிகள் வந்த பின் பூனை குறுக்கே ஓடினால் பூனைக்குத்தான் ஆபத்து. பல்லி சொல்கின்ற பலன்களையும் ஆராய்கின்றனர். தமது பஞ்சாங்கங்களில் பல்லி சொற் பலன் என்று ஒரு பகுதியை வைத்திருக்கின்றனர். இத்தகைய சிறிய உயிரினங்களுக்கே அஞ்சுகின்ற மனிதரை இம்மண்ணின் மதிப்புள்ள ஜந்து என்று கூற முடியுமா என்பது கவிஞனின் நியாயமான வினா ஆகும். சிங்கம், புலி, யானை, பாம்பு, முதலை என்று உயிரினங்கள் பலவற்றுக்கு அஞ்சும் மனிதனின் அச்சம் அத்துடன் நின்று விடுகிறதா? காற்று, பனி, கடல், இடி, மழை, ஆகாயம், பூமி என்று இயற்கைக்கும் அஞ்சும் நிலையில் வாழ்கின்றான். இத்தகைய மனிதனையா பூமியின் மதிப்புள்ள உயிரினமாகக் கொள்வது என்பது சிந்தனைக்கே உரிய விடயமாகும். மனிதர்கள் மூட நம்பிக்கையை நீக்கிப் பகுத்தறிவோடு வாழ வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்த வந்த கவிஞன் மூட நம்பிக்கையை வெளிப்படுத்தும் சம்பவங்களைக் கவிச்சுவையுடன் பட்டியலிடுதல் மனிதா நீ யார்? என்று மீண்டும் மீண்டும் வினா எழுப்புதல் என்பவற்றினூடாகக் கவிதையை உச்ச நிலைக்கே கொண்டு செல்கிறார்.



விழிகளிருந்தால் விழித்திடு!
வறுமையறியா மானிடனே..
வறுமையறியா விடினும்-உன்
வயிறும் நிதமும் பசியறியும்
பசியையுணரும் காலம் வந்தால்
உன் விரல்களுக்கிடையிலும்
ஆறாம் விரலாய் உதித்திடுமே
புதிய இளைய நெல்நாற்று

பாபுஜி.

சேற்றுக் கழனியில்
செதுக்க வேண்டிய நாற்றொன்று
வாடிய முகத்துடன்
காட்டுகின்றது நற்கதிர்களை..
உந்தன் கண்ணுக்குள்
காந்தமாய் பொறிக்கதிர்கள்
அவை வெடித்துப் பரவட்டும்...

த.ஜங்கரதீபன்
பூநகரி

# 15 இற்கான கவிதைகள்

நாட்டை ஆளப்போகும் கால்களோ
இன்று நாற்று நடுகை களத்தில்...

நாகரிக மோகத்தில் அவள் வயது பிள்ளைகள்
அவளோ! நாற்று பிடியுடன் இங்கே!

நாள் கூலி வேலைக்கு சென்று
நாள்களை நகர்த்தும் அளவில் கஸ்ரமா?

புகைப்படம் பிடிப்பது தெரிந்தும்
புன்னகைக்க மறுக்கிறது அவள் உதடுகள்

த.கல்விராம்,
கைதடி தெற்கு.

சேற்று வயல் மீது நாளையின்
நாற்று ஒன்று நாற்று நடுகிறது.
காற்று கனமழை கடும் வெயில்
தூற்றும் புழுதி எனப்பல கடந்து
நேற்றைய நாளின் துயர்தனை வென்று
நாற்று நாளை தலை நிமிரும்.
அது தன் பின்வரும் பல நாற்றுக்களின்
நம்பிக்கையாய் எழுந்து நிற்கும்.

பிரகவி.

விண்வெளியில் சோதனைகள்
செய்திடுவர் உலக விஞ்ஞானிகள்
வயல் வெளியில் அவள் உடலில்
முத்து முத்தாக வியர்வைத்துளி
வாட்டிவிடு பசியதுவே
அவளை இயங்க வைக்கிறதாம்

மோகனதாஸ் ஜெனனி, உருத்திரபுரம்.

இறைவனின் படைப்பதில்
அற்புத இயற்கை மழலை
உன் மௌனமொழி புரிந்தே
வார்த்தைகள் கோர்க்கிறேன்
கவிகளில் பசுமை வடித்த கதிர்களில்
கரங்களில் குளிர்மை தந்த புதிரே
உலக பட்டினியை தீர்க்கவா
பள்ளி விட்டு நிலமகளிடம் வந்தாய்

த.சிந்திகை,
புதுமுறிப்பு

வடிவங்கள் கீறி
வர்ணங்கள் தீட்டும்
வயதினிலே...
வயிற்றுப் பசிபோக்க
வழியினைத் தேடி
வயலினிலே...

செ.ஆரபி, நாவற்காடு

உருவம் கலைந்த உடலோடு
உயிரது காத்திடும் நினைவோடு
பருவமறியாப் பையனவன்
பள்ளி கூடச் செல்லாமல்
பட்டினி தீர்க்க எண்ணுகிறான்
பாவப்பட்ட நிலையிதுவே
பார்த்து உதவ யாருளரோ?

புவபாலன்

ஏட்டுக்கல்வியைத் தொலைத்து
ஏமாற்றங்களை மறைத்து
சேற்றில் கால் புதைத்து
வாட்டும் வெயிலில் நொந்தழுது
பிஞ்சு மனம் ஏக்கத்துடன்
வேண்டுவது கவளம் சோறு
அவளோ இம் மண்ணின் சொத்து

சிவரம்யா,
யாழ்ப்பாணம்

# மௌன மொழி 16



சேற்றிலே இருகால் புதைத்துமே
நாற்றுநடும் கோலமிங்கு
சாற்றும் நம் உழவர் வாழ்வை
ஏற்றுவோம் அவர் மதிப்பை
விவசாயம் கற்க யாருமில்லை
விருப்புடன் செய்பவர் எவருமில்லை
வளர்ந்திடும் நாகரிக மோகமது
போக்குமா வயிற்றுப் பசிதனை?

வி.வசந்தா, மட்டுவில்

**பரிசு பெறும் கவிதை**

நடப்படுவது நாற்றல்ல
நாளைய நம்பிக்கை
இன்று ஏழையாய்
நான் தோற்கலாம்
பார்க்கலாம் நாளை
அரிசி மட்டுமல்ல
ஒரு அரசி கூட விளையலாம்
இந்த வயலில்!

காந்தள்
கிளிநொச்சி

மலரும் மலர்கள்
விளையும் வயலில்
நனைந்து கூன் வளைத்து
நாற்று ஊன்றும்
நாளைய கீற்றுக்கள்
இனி வளர்ந்து
கதிர்விடும்நாளை
நாற்றுக்கள்

சி.பாவனா, அராலி

துள்ளித்திரிய மறந்த என் கால்கள்
சேற்றில் தவம் கிடக்கின்றன - என்
ஆசைகளின் அரங்கேற்றத்திற்கு அல்ல
வயிறிடும் அவலமொழி - என்
காதுகளுக்கு கேக்குதம்மா
ஊதியமாம் ஒருநேர
உலைக்கஞ்சி போதுமம்மா!

ச.சரணியா
திருகோணமலை

உங்கள் கவிதைகள் எங்கள்
கதவைத் தட்ட
வேண்டிய கடைசி நாள்:
**07.10.2020**

கவிதைக்கு பரிசு 1000/=

அனுப்ப வேண்டிய முகவரி:
**உதயன் சஞ்சீவி**
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் முகவரி: uthayansanjeevi@gmail.com

0773165555

இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்தனை யில் உதிக்கும் கவிதைகளை 8 வரிகளுக்கு மேற்படாமல் உடனே எழுதி அனுப்புங்கள். மிகச் சிறப்பான ஒரு கவிதைக்கு ரூபா. 1000/பரிசாகக் காத்திருக்கிறது. பாராட்டுப் பெறும் ஏனையவை மௌனமொழி பகுதியில் பிரசுரமாகும்.

இதுவரை பரிசுக்குரிய கவிதைகளை எழுதியோருக்கு பரிசில்கள் விரைவில்... உங்கள் பரிசை உறுதிப்படுத்த எமது தொலைபேசி எண்ணோடு தொடர்பு கொள்ளவும்.

சுட்டெரிக்கும் வெயிலுக்குள்
காய்ந்துபோன மேனியுடன்
கால்வயிறு கஞ்சிக்காய்
கால்கடுக்க நாற்றுநட்டு
காலம் எல்லாம் பசிபோக்க
களத்தினில் நீ இறங்கி விட்டாய்

து. நிவேதா
யாழ் போதனா
வைத்தியசாலை

சகதியே கதியென
சலித்து நீ ஏங்காதே
சோற்றுக்கு நீ கையேந்தாது
உழைத்துமே உயர்கிறாய்
தழைக்கும் பயிர்கள்
சாய்ந்த உன்
வாழ்வையொருநாள்
நிமிர்விக்கும் நிச்சயம்!

பெ. திலைக்ஸ்
கட்டைக்காடு

சிறுவர் உரிமையும்
சீர் திருத்தங்களும்
வெறும் ஏட்டில்
வயிற்றுப் பிழைப்புக்காய்
நாங்கள் இங்கே
வயல் காட்டில்...

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்

# கண்ணூறு கதிராசி

கிராமத்து மனிதர்கள் என்ற இந்தத் தொடர் தனித்துவமான கிராமத்து மனிதர்களை மீள நினைவுபடுத்துவதன் மூலமாக அருகிப்போன கிராமத்து வாழ்வின் செழுமைகளையும் சிறப்புக்களையும் வெளிக்கொண்டு வருகின்றது.

○ இராகன்

எல்லாவற்றையுமே வெளிப்படையாக காட்சிப்படுத்தி வாழ்ந்து பழக்கப்பட்டுப்போன விளம்பர வாழ்வில் கண்ணூறு, நாவூறு என்றெல்லாம் பேசுவது நகைப்புக்கிடமானதென்றாலும் வீடுகள், தொழிலிடங்களில் இன்றும் நீற்றுப்பூசணிக்காயைக் கட்டித் தொங்கவிடுவதும், வெருட்டிகள் கட்டுவதும், வெள்ளிக்கிழமைகளில் வாயிலில் கண்ணூறு கழித்தலும் விலகாத சம்பிரதாயங்களாக நிலைத்துவிட்டன. இந்தச் சம்பிரதாயங்களைக் காணும் போதிலெல்லாம் 'கதிரியின்' நினைவுகள் நெஞ்சுள் மிதக்கும். கதிரிப்பிள்ளை என்றும் கதிராசி என்றும் முழுதாகக் குறிப்பிட்டால் எவருக்கும் அவளைத் தெரியாது. 'கண்ணூறுக் கதிரி' என்ற பெயர்தான் பிரபலமானது. கண்ணூறு கழிப்பவளுக்கு கண்ணூறுக் கதிரி என்ற பெயர் பொருத்தமா என்று ஆராய்ச்சி செய்ய முனைந்தால், பொருத்தமில்லை என்பதுதான் முடிவு. 'விசகடி விசுவலிங்கம்' என்பதில் விசுவலிங்கம் விசமாய்க் கடிப்பவர் என்பது பொருளில்லைத்தானே! அப்படியே 'கொக்கு விசுவம்' என்பதில் விசுவம் கொக்குப்போல என்ற பொருளில் அல்லாமல் கொக்குப்பட்டம் கட்டக்கூடிய விசுவம் என்பதுதானே பொருள்! அவ்வாறுதான் கண்ணூறு கழிக்கும் கதிராசி 'கண்ணூறுக் கதிரி'ஆனாள்.

கதிராசி காலால் பிறந்தவள். சிறுவயது முதல் அவளது கால்கள் ஊரில் எத்தனையோ ஜாம்பவான்களைக் கவிட்டுப்போட்டு மிதித்திருக்கின்றன. பணக்காரர், ஏழை என்ற பேதங்களோ, பெரிய மனுஷன், சாதாரணன் என்ற வேறுபாடுகளோ பார்க்காமல் சகட்டுமேனிக்கு கதிரியின் பாதம் பலரை மிதித்திருக்கிறது. இராமனால் மிதிபட்டுக் கல்லாகிப் போன அகலிகை காத்துக் கிடந்தது அங்கு. கதிரியைக் காத்து இராமர்கள் கிடந்தது இங்கு! நாரிப்பிடிப்பால் அவதிப்பட்டு அசைய முடியாது கிடந்த பலரை தன் சிறுபிள்ளைப் பராயத்தில் வீடுதேடிச் சென்று கால்களால் நீவிவிட்டு வேதனையிலிருந்து காத்திருந்தாள் கதிரிப்பிள்ளை. காலால் பிறந்தவர்களின் பாதத்து நீவலுக்கு உடலில் ஏற்படும் பிடிப்புகள், சுளுக்குகள் நாணமாம்! காலம் செல்லச்செல்ல வீடுதேடிச் செல்வதை நிறுத்திக் கொண்டாள். தேவைப்பட்டவர்கள் அவளைத் தேடி வீட்டுக்கே வந்து போயினர். அவளது சேவையின் தேவையை உணர்ந்தவர்கள் வரும்போது கையில் ஏதாவது 'பட்சணம்'கொண்டு வருவர். அதுவும் அவள் 'பெரியவளானதும்' நின்று போயிற்று!

கிராமத்து மனிதர்கள்... 16

கதிரிக்கு ஒரு பெண்பிள்ளையும் ஒரு ஆண்பிள்ளையும்தான். இரண்டு பிள்ளைகளுக்குத் தாயான பின்னர் அவள் காலால் பிறந்ததன் தேவையை ஊரவர்கள் உணர்ந்திருந்தனர். மூத்தவர்களும், இளையவர்களும் அவளது பாதம்பட ஏங்கினர்! பிள்ளைகள் வளர்ந்துவரும் காலத்தில் கதிரி தன் கால்களின் முக்கியத்துவத்தைக் கைகளுக்கு மாற்றிக்கொண்டாள். அப்போது அவள் ஒரு 'புறபஷனல்' கண்ணூறு கழிப்பவள்!

ஊரிலுள்ளவர்கள் பிள்ளைகளுக்குக் காய்ச்சல், தலையிடி, உடல் வலி என்று வரும்போதெல்லாம் கதிரியிடம் தான் முதலில் வருவார்கள். கதிரி நாவூறு, கண்ணூறுகளால் வரும் பிரச்சினைகளைத் தீர்த்துவிடுவாள். காத்துக் கறுப்பு, பேய், பிசாசுகள் பற்றி எவராவது பேச எத்தனித்தால் கதிராசிக்குக் கோபம் வந்துவிடும். "அவற்றுக்கு வேறை யாரையும் பாருங்கள்" என்று கடிந்து திருப்பி அனுப்பிவிடுவாள். அவளின் கரிசனை எல்லாம் நாவூறு, கண்ணூறு பற்றியதே. நாவூறு, கண்ணூறு என்று சொல்லிக்கொண்டு வரும் பெரியவர்களில் அவளுக்கு உறவு வழி நெருக்கமான மூத்தவர்கள் சிலர் அவளை சிறுபிள்ளையாகவே கருதிக்கொண்டு தங்களுக்கு வந்துள்ள சுளுக்கு, நாரிப்பிடிப்புப் பற்றிய வேதனைகளையும் சொல்லி ஒருவாறு காலால் பிறந்ததை ஞாபகப்படுத்திவிடுவர். உறவை முன்வைத்து நிவாரணம் பெற்றுச் சென்றுவிடுவர்.


கதிரியின் உண்மையான பெயர் கதிரிப்பிள்ளைதான். சின்னவயதில் அவளின் கால்களால் தங்கள் பிணி தீர்த்தவர்கள் அவளின் பெருமை கருதி "கதிரியின்ரை கால் ராசிதான்" என்று சொல்லிச் சொல்லி வந்தார்கள். அதுவே 'கதிராசி' என்றாயிற்று! மிதி ராசியால் கதிராசியானாள்!

கதிராசி கண்ணூறு பார்ப்பது ஒருவித பவனி! கண்ணூறு துடைப்பது, நாவூறு துடைப்பது என்றுதான் அந்தச் செயன்முறையைச் சொல்வர்! துடைப்பது என்பது 'தூய்மையாக்குவது', 'இல்லாதொழிப்பது', 'துப்புரவாக்குவது' என்ற பொருளில்தான் அப்படிச் சொல்லப்பட்டுவந்தது என்பது ஊராரின் நம்பிக்கை. அப்படிப் பார்க்கப்போனால் கதிராசியால் பல தடவைகள் துப்புரவாக்கப்பட்டவர்கள் பலர் ஊரில் நடமாடித்திரிகின்றனர்.

ஊரிலுள்ளவர்கள் பிள்ளைகளுக்குக் காய்ச்சல், தலையிடி, உடல்வலி என்று வரும்போதெல்லாம், கதிரியிடம் தான் முதலில் வருவார்கள். கதிரி நாவூறு, கண்ணூறுகளால் வரும் பிரச்சினைகளைத் தீர்த்துவிடுவாள். காத்துக் கறுப்பு, பேய், பிசாசுகள் பற்றி எவராவது பேச எத்தனித்தால் கதிராசிக்குக் கோபம் வந்துவிடும்.

எப்போதுமே நாவூறு துடைத்தல் பொழுதுபட்ட பின்னர்தான் செய்யப்படும். மாலை நேரம் கடக்கும் வேளையில் வீட்டின் பின்புறத்தே எவரதும் பார்வைக்கு உட்படாத ஒரு பகுதியில் இருத்திவிட்டு நாவூறு துடைப்பதற்குத் தேவையான பொருள்களை ஆயத்தப்படுத்திக் கொள்வாள். மூன்று செத்தல்(காய்ந்த) மிளகாய், தேர்ந்து எடுத்த கட்டியான உப்புக்கல் மூன்று, கொத்தாக இடுங்கப்பட்ட வேப்பமிலைகள் என்பவைதான் பிரதான பொருள்கள். அவற்றோடு நெருப்பு மூட்டுவதற்குத் தேவையான காய்ந்த ஓலை, பனம் பன்னாடை, சில கொக்கரைகள் சேர்த்து வீட்டு எல்லைக்கு வெளியே முன்கூட்டியே வைத்துவிடுவாள்.

கண்ணூறுக்குள்ளானவர் எழுந்து நிற்க கேசாதிபாதமாக மிளகாய், உப்புக்கல், வேப்பிலை மூன்றினாலும் மும்மூன்று தடவைகள் உடல் முழுவதும் தடவிக் கழிப்பாள். தலை, கைகள், கால்கள், முதுகுப்பகுதி, நெஞ்சுப்பகுதி என்று தனித்தனியாக ஒவ்வொரு பொருள்களாலும் நாவூறு துடைக்கப்படும். அவ்வாறு தடவுகின்றபோது கதிராசியின் முகபாவனையில் அவள் தன் மனதில் பிறருக்காக வேண்டி இறைஞ்சுவது வெளிப்படையாகத் தெரியும். வாய் திறந்து பேசவோ, பற்கள் வெளியே தெரியவோ விடமாட்டாள். அது கட்டாயமான நடைமுறை. கண்ணூறுக்குள்ளானவரும் வாய் திறந்து பேசக்கூடாது. அவ்வாறு நாவூறு துடைக்கும்போது கதிரி தன் மனதுக்குள்ளே ஏதோ மந்திரம் ஒன்றை உச்சரிப்பதாக பலரும் சொல்வர். அந்த மந்திரம் 'பரம இரகசியமாக' வந்தது என்றும், கதிரியின் பூட்டி காலத்திலிருந்து தொடர்ந்து கையளிக்கப்பட்டதாகவும் சொல்வர். அந்த மந்திரத்தை அவள் வெளிப்படையாகச் சொல்ல இதுவரை யாரும் கேட்டதுமில்லை. இறுதியில் நாவூறு துடைத்த மிளகாய், உப்புக்கல், வேப்பமிலை என்பவற்றை ஒன்றாகச் சேர்த்து கண்ணூறுக்குள்ளானவரின் வாய்க்கு நேரே நீட்டியபடி பிடித்து, மும்முறை எச்சில் துப்புமாறு சைகை காட்டுவாள். ஏற்கனவே நெருப்பு மூட்டத் தயாராக்கிவைத்த பன்னாடையில் அவற்றை வைத்து நெருப்பு மூட்டுவாள். மூட்டப்பட்ட நெருப்பு 'முளாசி' எரியும்போது, மிளகாய் புரைக்கேறாதுவிட்டால் உப்புக்கல் வெடித்துப் பறக்காதுவிட்டால் வேப்பிலை கருகி மணம் தராதுவிட்டால் கண்ணூறு கடுமை என்பதுதான் முடிவாகும். யாவும் எரிந்து முடிந்த பின்னர் எரிந்த சாம்பலை எடுத்து கண்ணூறுக்குள்ளானவரின் நெற்றியில் பூசிவிட்டு சடங்கை நிறைவுசெய்வாள். நாவூறு துடைக்கும் சம்பிரதாயங்கள் அத்தனையும் முடித்து ஒரு குளியல் போட்டுத்தான் தன்னுடைய ஏனைய கருமங்களைச் செய்வாள் கதிரி. தன் சேவைக்காக எந்தப் பிரதிபலனையும் எதிர்பார்க்கமாட்டாள்.



கடுமையான கண்ணூறு, மிதமான கண்ணூறு, குறைவான கண்ணூறு என்பதெல்லாம் எப்படித் தீர்மானமாகும் என்பது கதிரியைப் பொறுத்தது. சிலருக்கு ஒரு நாள் நாவூறு துடைப்போடு முடிந்துவிடும்.

வேறு சிலருக்கு துடைப்பு மூன்று நாட்கள் தொடரும். அந்த முடிவெல்லாம் அவள் கையில்தான். மூன்று நாட்களில் ஒரு நாளைத் தவறவிட்டாலும் தவறவிட்டவருக்கு பின்னர் நாவூறு துடைக்க ஒத்துக்கொள்ளமாட்டாள். அது அவளது தொழில் தருமம்!

ஊரில் எத்தனையோ பேரின் கண்ணூறுகள், நாவூறுகளை வழித்து துடைத்தெறிந்த கதிரியின் குடும்பத்தின்மீது யாரது கண்பட்டதோ? பெரியதொரு சுற்றிவளைப்பின் பின்னர் தொலைத்துவிட்ட தனது ஒரே மகன் திரும்பி வருவான் என்று எதிர்பார்த்தபடி இருக்கத்தொடங்கி இன்றோடு முப்பத்தைந்து வருடங்கள் முழுதாக மடிந்துவிட்டன. கதிரியின் கண்ணூறைத் துடைக்கும் 'இரகசிய மந்திரம்' யாருக்குத் தெரியும்?



# குளத்தைச் சாகடிக்கும் சுற்றுலா மையம்


○ பா.குமுதன்

குளங்கள் மக்களின் வாழ்வியலுக்கும், இருப்புக்கும் இன்றியமையாதவை. இலங்கையின் ஆதிக்குடிகள் தமது வாழ்கைக்கான போராட்டத்தில் நீரின் முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்திருந்தார்கள். நீர் நிலைகளையும், ஓடைகளையும் ஆதாரமாக கொண்டே அவர்கள் தங்கள்குடியேற்றங்களைநிறுவினர். நீர்முகாமைத்துவமும், மேலாண்மையும் அந்தமக்களின் நிலையான வாழ்வுக்கு பங்களித்திருந்தது. குடித்தொகை அதிகரித்த போது.

நீர்த்தேவையும் அதிகரித்து. இதனால் குழுமங்களாக பிரிந்து சென்ற மனிதன் மற்றொரு நீர்நிலையை அண்டி குடியேற்றங்களை ஏற்படுத்தினான். இதுவே மனிதனின் பரிணாம வளர்ச்சி எனலாம். எனி னும் காலமாற்றத்தால் ஏற்பட்ட நவநாகரிக வாழ்க்கை முறை நீர்நிலைகளின் இருப்பையும், அதன் தேவையையும் மனிதமனங்களில் இருந்து புறந்தள்ளி யிருக்கின்றது. அதற்கு மிகச் சமீபத்திய உதாரணம் தான், வவுனியாவில் அமைந்துள்ள நீர்ப்பாசன குளமான, வவுனியாக்குளம்.

### வவுனியாவும் குளங்களும்

வடக்குமாகாணத்தில் குளங்கள் அதிகமுள்ள பகுதி வவுனியாதான். விவசாயத்தை அடித்தளமாககொண்டுள்ள இங்கு நெற்செய்கையும் விலங்கு வளர்ப் புமே



பெரும்பான்மை மக்களின் வாழ்வாதாரத்தை பூர்த்தி செய்கின்றன. வவுனியாவில் குளங்களை அடிப்படையாகவைத்தே குடியேற்றங்கள் உருவானதால், குளங்களின் பெயரும், ஊரின் பெயரும் அனேகமாக ஒன்றாகவே அமைந்திருப்பதைக் காணலாம்.

மாவட்ட கமநல திணைக்களத்தின் தகவலின் அடிப்படையில் 904 குளங்கள் மற்றும் அணைக்கட்டுகள் வவுனியாவில் பதிவில் உள்ளன. வவுனியாவில் அளவில் பெரியநீர்ப்பாசனக் குளமாக பாவற்குளம் காணப்படுகின்றது. அந்தக் குளத்தின் நீரைக் கொண்டு, வருடாந்தம் ஒரு இலட்சம் மெற்றிக்தொன்னுக்கும் அதிகமான நெல் விவசாயிகளால் உற்பத்திசெய்யப் படுகின்றது. இதேவேளை270 குளங்கள் பயன்படாத நிலையிலும், 200 குளங்கள் பாழடைந்தநிலையில் புன்ரமைக்கப்படவேண்டிய கட்டத்திலும் இருக்கின்றன. அவற்றில் வனவளத்திணைக்களத்தின் கீழ் 135 குளங்கள் எல்லையிடப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. பல குளங்கள் பயன்டுத்தப்படாமல் காடுகள் வளர்ந்து தூர்ந்துபோனமைக்கு, போர்ச்சூழலும், அதன் விளைவாக ஐரோப்பிய நாடுகளுக்கு மக்களின் புலம்பெயர்வும் முக்கிய காரணம். அதைவிட இப்போதைய இளம் தலைமுறை விவசாயச் செய்கையின் மீது நாட்டம் கொள்ளாமையும் பல குளங்களின் அழிவுக்கு அடித்தளமிட்டுள்ளன. இப்படியெல்லாம் வவுனியாவை வளப்படுத்திய குளங்கள் அழிந்து கொண்டிருக்கும்நிலையில், இன்னொரு முக்கிய குளமான வவுனியாக்குளத்தை அதில் புதிதாக நிறுவப்பட்டுள்ள சுற்றுலா மையம் சிதைத்து விடுமோ என்ற அச்சம் எழுந்துள்ளது.

### வவுனியாக்குளமாக மாறிய விளாங்குளம்

வவுனியாவில் தொன்மையான குளங்களில் வவுனியாக்குளமும். ஒன்று. 500 ஏக்கருக்கும் அதிகமான விவசாயநிலங்களுக்கு நீரைப் பாய்ச்சக்கூடிய கொள்ளளவைக் கொண்டுள்ள வவுனியாக் குளமானது ஆரம்ப காலத்தில்; "விளாங்குளம்" என்றே அழைக்கப்பட்டது.

அந்தக்காலப்பகுதியில், குளங்களைப்பாதுகாத்து, திருத்தி, வேளாண்மையை பெருகச்செய்வதற்காக "வவுனியன்" என்ற பதவி வழங்கப்படுவது வழக்கம். ( ஆதாரம் : வன்னிமாவட்டங்களின் கையேடு) அப்படி ஒரு வவுனியன் இந்தக்குளத்தை திருத்தியதால் இது "வவுனியன் விளாங்குளம்" என்று அழைக்கப் பட்டது. இந்தக் குளத்தை அடிப்படையாகக் கொண்டு, 51 கிராமங்களும் உருவாகியிருந்தன.

பின்னர், "வவுனியன் விளாங்குளம்" என்ற பெயர் "வவுனியா" என்று சுருங்கியது. காலப்போக்கில் ஊரின் பெயர் வவுனியா என்றும் குளத்தின்பெயர் "வவுனியாக்குளம்" என்றும் மாறின. "வவுனியன் விளாங்குளம்" என்றிருந்த உள்மாவட்டம் வவுனியா எனச் சுருக்கப்பட்டு பெயர்மாற்றப்பட்டது" என்று, 1890 ஆம் ஆண்டு ஆங்கிலேயருடைய நிர்வாகக் காலத்தில் வவுனியாவில் உதவிஅரசாங்க அதிபராகக் கடமை வகித்த ஜே.பி.லூயிஸ் என்பவரால் எழுதப்பட்ட "வன்னிமாவட்டங்களின் கையேடு" (Manual Of The Vanni Districts) என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### ஆயுதப்போரோடு ஆக்கிரமிப்பு

குளத்தின் பின்பகுதியில் (நீரேந்து பகுதியான மடுகந்தை, மாமடு) இருந்து வேகமாக அடித்துவரப்படும் வெள்ளநீர் வவுனியாக்குளத்துடன் கலந்து அதன் வேகத்தைக் குறைத்துக் கொண்டு, சுருங்கை வழியாக பெரியார்குளம், தாண்டிக்குளம் (இந்த இரு குளங்களே தற்போது இருக்கின்றன) உட்பட 5 குளங்களுக்கு நீரைப் பாய்ச்சும் முறைமையில் அமைக்கப் பட்டிருந்ததாக வரலாற்றாசிரியர்கள் நிறுவு கின்றனர். நகரின் மத்தியில் குளம் அமைந்திருப்பதாலோ அல்லது குளத்தை மையப்படுத்தி நகரமும் குடியும் வளர்ச்சியடைந்தமையினாலோ இன்று தனது நிலபுலங்களை இழந்துகொண்டிருக்கும் நிலைக்கு "வவுனியாக்குளம்" தள்ளப்பட்டுள்ளது. நெற்செய்கைக்கும் அப்பால் பல குடும்பங்களின் வாழ்வாதாரமான நன்னீர் மீன்பிடித்தொழில் இந்தக் குளத்தைச் சார்ந்திருப்பதுடன், அதனைச் சுற்றி யுள்ள 20 க்கும் மேற்பட்டகிராமங்களின் நிலத்தடி நீருக்கும் ஆதரமாக இந்தக்குளமே அமைந்திருக்கின்றது.

ஆயுதப்போராட்டமும், ஆயுதக்குழுக்களினது பிரசன்னமும் அதிகரித்திருந்த காலப்பகுதியில் குளத்தின் நீரேந்துபகுதிகள் தனிநபர்களால் ஏக்கர் கணக்கில் ஆக்கிரமிக்கப்பட்டு குடியிருப்புக்களும், வியாபார நிலையங்களும் அமைக்கப்பட்டன. போருக்குப் பின்னரான காலப்பகுதியிலும் குளத்தின் மீதான ஆக்கிரமிப்புக்கள் தொடர்ந்தே வருகின்றன. அப்படியான ஆக்கிரமிப்புகளில் ஒன்றே இந்தச் சுற்றுலா மையமும்.

### சர்ச்சையைக் கிளப்பும் சுற்றுலா மையம்

நகரை அண்டியதாகக் காணப்படும் குளத்தின் ஒரு பகுதியில் - கொறவப்பொத்தானைக்குச்செல்லும் பிரதான வீதிக்கு அருகில்- சுற்றுலாமையம் ஒன்று புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. இந்தச் சுற்றுலா மையம் பற்றிப் பேசும்போது அதன் அருகில் அமைந்துள்ள கழிவுநீர்த்தொட்டிகள் பற்றியும் குறிப் பிட்டேயாக வேண்டும்.

நகரின் அண்மையில் குளம் அமைந்திருப்பதனால் நகரத்தின் கழிவுகளும், கழிவுநீரும் குளத்து நீருடன் நேரடியாகவே கலக்கும் நிலை ஏற்பட்டது . அதனைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் பல வருடங்களுக்கு முன்னர் நீர்ப்பாசனத் திணக்களத்தால் கொறவப்பொத்தான வீதியை அண்டிய, குளத்துப்பகுதியில் சிமெந்திலான பெரும் கழிவுநீர்த் தொட்டிகள் அமைக்கப்பட்டிருந்தன.

இந்தக் கழிவு நீர்த் தொட்டிகளில் சுத்திகரிப்பு செயற்பாடுகள் இடம்பெறாதிருந்த நிலையில் 2016 ஆம் ஆண்டு "யுனொப்ஸ்" நிறுவனத்தின் நிதி உதவியுடன் மேலும் இரு தொட்டிகள் அமைக்கப்பட்டு, கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு தூயநீராக மாற்றப்பட்ட பின்னர் குளத்தினுள் விடுவிக்கப்பட்டு வருகின்றது. குறித்த தொட்டிகள் அமைக்கப்பட்ட பகுதிக்கும் பிரதான வீதிக்கு அருகாமையிலும் உள்ள ஒருசிறு பகுதியிலேயே தற்போது சர்ச்சைக்குரிய சுற்றுலா மையம் நிறுவப்பட்டு வருகின்றது. அந்தப்பகுதியில் மண்நிரவப்பட்டு மேட்டுநிலமாகமாற்றி சுற்றுலா மையம் அமைக்கும் செயற்பாடுகள் நகரசபையால் இப்போதும் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### குளத்தைச் சாகடிக்கும் நாசகாரம்

இந்தச் சுற்றுலாமையத்தில் படகுச்சவாரி, நீருக்கு நடுவில் உணவகம், என பொழுதைக் கழிக்ககூடிய அம்சங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதை அவதானிக்கலாம். படகுச் சவாரி, ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர்த் தொட்டிகளுக்குள் இடம்பெறுவதால் அதனால் எந்தப் பாதிப்பும் குளத்துக்கு ஏற்படாது . எனினும் சுற்றுலா மையம் அமைப்பதற்கான ஏனைய செயற்பாடுகள் குளத்தை சாகடிக்கும் வகையில் இடம்பெறுகின்றன.

குளத்து நீர் தேங்கி நிற்கும் ஒரு பகுதியில். மண்ணைக் கொண்டு நிரவி , அதனை மேட்டுநிலமாக்கி, சுற்றுலா மைய அமைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப் படுவதே பல்வேறு தரப்புகளிடமும் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.

(16ஆம் பக்கம் பார்க்க)






# சும்மா கிடந்த சங்கும் ஊதிக் கெடுத்த ஆண்டிகளும்

ராஜ்குமார்

சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்து தர்மசங்கடத்தில் மாட்டியிருக்கிறது இலங்கை அரசு. திலீபனின் நினைவு தினத்தை நினைவேந்த அனுமதித்திருந்தால் , விடயம் அத்தோடு முடிந்திருக்கும். தியாகி திலீபனின் சிலை வைக்கப் பட்ட இடத்துக்கு சில அரசியல் கட்சிக்காரர்களும், பெருந்திரளான மக்களும் சென்றிருப்பார்கள். ஒரு சுடரேற்றல்,மௌன அஞ்சலி, மலரஞ்சலி அவ்வளவுடன் நினைவேந்தல் முடிந்திருக்கும். இப்படி நடக்க இருந்த திலீபனின் அஞ்சலி நிகழ்வை தடுக்கப் போய் ,மிகப் பெரும் உணவொறுப்புப் போராட்டமாகவும் வடக்கு கிழக்கே முடங்கிப் போகக் கூடிய கதவடைப்பாகவும் மாற்றி, நினைவேந்தல் நிகழ்வு ஒன்றை மக்கள் பேரேழுச்சியாக மாற்றி சொந்தக் காசிலே சூனியம் வைத்திருக்கிறது இலங்கை அரசு.

**இதுதான் பதிலடி**

"தமிழ் மக்களின் உரிமைக்காக குரல்கொடுத்து உயிர் துறந்தோரை நினைவு கூர இடமளித்தால் அது எதிர் காலத்தில் மீண்டும் விடுதலைப் புலிகளை மீளெழச் செய்துவிடும்" என்று வறட்டுத்தனமாக யாரோ கொடுத்த கசாயத்தை விழுங்கிக்கொண்டு, நினைவேந்தல்களுக்கு காலகாலமாக தடைபோட்டு சாம, பேத, தான,தண்டங்களை பயன்படுத்தி தடுத்து வருகின்றது ராஜபக் ஷக்களின் அரசு. இதனால் மக்கள் எழுச்சியைக் கட்டுப்படுத்தி விடலாம். நிகழ்வுகளை நிறுத்திவிடலாம், போராட்ட உணர்வை அழித்துவிடலாம் என்று எண்ணிச் செயற்பட்ட அவர்களுக்கு இம்முறை தமிழர் தரப்பால் தக்க பதிலடி கொடுக்கப்பட்டிருக்கிறது.

இனி இணைக்கவே முடியாதென்று பல கட்சிகளாகப் பிரிந்திருந்த தமிழர் தரப்பை மீண்டும் ஒற்றுமையாக்கி 10 கட்சிகளை ஒருங்கு சேர வைத்த பெருமை இந்த அரசையே சாரும்.

ஏற்கனவே தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவின் அழைப்பையேற்று பத்துகட்சிகள் அணிதிரண்டதிலாகட்டும், தொண்டைமானாறில் உணவொறுப்புப் போராட்டம் என்று அறிக்கை விட்டு, அதற்கு நீதிமன்றத்தில் தடை வாங்கி வைத்துவிட்டு எகத்தாளத்துடன் இருந்த பொலிஸாருக்குப் போக்கு காட்டிவிட்டு சாவகச்சேரியிலே உணவொறுப்பை அதிரடியாக அறிவித்து அதனை ஏராளமான மக்களை திரட்டி நடத்தி காட்டியதிலகாட்டும், அதன் பின்னர் ஹர்த்தாலை வெற்றிகரமாக வடக்கு கிழக்கு பகுதிகளில் நிறைவேற்றியதிலாகட்டும் தமிழ் கட்சிகள் வேற 'லெவலுக்குச்' சென்றிருக்கின்றன.

அதனால் திலீபனின் நினைவேந்தலைக் கட்டுப்படுத்த முடியாமல் போன அரசு, வடக்கு கிழக்கில் உள்ள தமது எடுபிடிகளைக் கொண்டு இந்த நிகழ்வுகளுக்கு எதிராக நாலைந்துபேரை வைத்து, ஆர்ப்பாட்டம் என்ற பெயரில் குறளிவித்தை காட்டியதைத்தவிர வேறெதையும் பிடுங்கமுடியவில்லை.

**பேரெழுச்சியை விரும்பாதோர்**

இப்படியெல்லாம் தமிழ்த் தரப்பில் எதிர்பாராத வகையில் பேரெழுச்சி ஒன்று தன்னியல்பாக நிகழ்ந்து கொண்டிருக்கையில், சில தமிழ் அரசியல்வாதிகளின் செயற்பாடுகள் , இந்த ஒற்றுமையையும், எழுச்சியையும் அவர்கள் துளியும் விரும்பவில்லை என்பதைக் கோடி காட்டுகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனோ, அவர் அணியைச் சேர்ந்தவர்களோ உணவொறுப்புப் பக்கம் தலையே காட்டவில்லை. ஹர்த்தாலுக்கும் பெரிதாக ஈடுபாடு காட்டவில்லை. கிழக்கிலே ஒரு நிகழ்வில் அவரை இருந்தி வைத்து ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்கு தவிர்க்க முடியாத சந்தர்ப்பத்தில் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்து ஒரு வேண்டுகோள் வைத்தார். அவ்வளவுதான்.

ஆனால் திலீபனின் நிகழ்வுக்கு தடை உத்தரவைப் பெற, பொலிஸார் நீதிமன்றத்தை நாடிய போது அதற்கு எதிராக வாதாட தன்னை எவரும் அழைக்கவில்லை என்றும் அவர் சொல்லியிருக்கிறார். அதுதான் வேடிக்கையாக இருக்கிறது.

**நன்மை செய்யாவிட்டாலும்...**

திலீபனின் நிகழ்வுக்கான தடையைத் தடுக்க நீதிமன்றத்தில் முன்னிலையாகிய சட்டத்தரணிகள் எவரும் திலீபனின் சொந்த அண்ணனோ , தம்பிகளோ அல்ல. அனைவரும் தமிழ்த் தேசியப் பற்றாளர்கள்.திலீபனின் தியாகத்தின்மீது மதிப்பும் மரியாதையும் வைத்தவர்கள். அவர்கள் எவரும் தமிழ்த் தேசியம் பேசி மக்கள் வாக்குகளை பெற்று நாடாளுமன்றம் சென்றவர்கள் அல்ல.ஆனால் தமிழ்த் தேசியக் கட்சி ஒன்றின் சார்பில் போட்டியிட்டு, மக்கள் வாக்குளை பெற்று நாடாளுமன்றக் கதிரையை சூடாக்கும் சுமந்திரன்,யார் வந்து வெற்றிலை பாக்கு வைத்து தன்னைக் கூப்பிட வேண்டும் என்று எதிர்பார்க்கிறாரோ தெரியவில்லை.

அதிலேயும் "நான் வந்திருந்தால் வென்றிருப்பேன். கடந்த வருடத்திலும் நான்தான் வென்று கொடுத்தேன். அதனைக் காட்டியே இம்முறையும் தடையைத் தடுத்திருக்கலாம்" என்று வீர வசனம் வேறு. பேசியிருக்கிறார். ஆனால் அது நடக்காதென்று தெரிந்தே அண்ணன் ஆஜராகவில்லை என்கிறார்கள் விடயமறிந்தோர்..

சரி, நன்மை செய்யாவிட்டாலும் பரவாயில்லை, தீமையாவது செய்யாதிருந்தாலே போதும் நிலைக்குத்தான் இப்போது தமிழ் மக்கள் வந்துவிட்டார்கள். ஆனால் அதற்கும் விடுகிறாரில்லை அவர். "திலீபனின் நினைவுதினத்தை அனுஷ்டிக்க மக்கள் பெரிய அளவில் ஈடுபாடு காட்டவில்லை "என்று களயதார்த்தத்துக்கு மாறாக உளறிக்கொட்டியிருந்தார்.இப்படி தமிழ் மக்கள் மனங்களை நோகடிப்பதன் மூலம், பேரினவாதத்தைக் குஷிப்படுத்தும் வேலைகளை சுமந்திரன் செய்யாதிருந்தாலே அவருக்குத் தமிழ் மக்கள் பெருநன்றியோடு இருப்பார்கள்.

**அகிம்சை ரீதியில் போராடி இன்னுயிரை ஈந்த இந்தத் தியாகியின் நிகழ்வுக்கே இவ்வளவு கெடுபிடி என்றால், ஆயுதம் ஏந்திப் போராடி வீரச்சாவடைந்த மாவீரர்களின் நினைவாக அனுஷ்டிக்கப்படவுள்ள மாவீரர் தினத்துக்கு என்னென்ன கெடுபிடிகள் வரப்போகின்றனவோ என்ற அச்சமும் தமிழ் மக்களிடம் எழாமலில்லை.**

**ஒரு கல்லில் இரண்டு மாங்காய்கள்**

இதனை விட திலீபனின் நிகழ்வில் அரசியல் இலாபம் தேட பார்க்க முயற்சித்த மற்றொருவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. இதற்கு முன்னைய காலங்களில் திலீபன் நினைவேந்தல்கள் நடந்தபோதெல்லாம், கமுக்கமாக இருந்த அவர், இம்முறை மட்டும் பொரிந்து தள்ளியிருக்கிறார்.

"திலீபன் கொலைகாரர். முன்னாள் போராளிகள் ,அரசியல் தலைவர்கள், எனது தம்பி என்று பலரைக் கொன்றவர்" என்றெல்லாம் ஏகத்துக்கு எறிகிக் குதித்திருக்கிறார் டக்ளஸ். திலீபனின் நினைவு நிகழ்வு என்பது இந்தியாவுக்கு அவ்வளவாகப் பிடிக்காத ஒன்று. எனவே, அதனை எதிர்ப்பதன் மூலம் இந்தியாவை நெருங்கிவிடலாம்,தனது பழைய வழக்குகளை மூடிவிடலாம் என்று டக்ளஸ் கணக்குப் போட்டே, இம்முறை இப்படித் துள்ளுகிறார் எனச் சொல்லப்படுகிறது.

இன்னொரு புறத்தில் யாழ்ப்பாணத்தில் அங்கஜனா? டக்ளஸா? என்ற போட்டி கயிறுழுப்பாகத் தொடர்கிறது. தற்போதைய நிலையில் அங்கஜனின் கையே ஓங்கியிருக்கிறது. எனவே இவ்வாறான புலி எதிர்ப்புக் கோசங்கள் மூலம் ராஜபக் ஷக்களை நெருங்கிவிடவும், அங்கஜனை ஓரம் கட்டவும் டக்ளஸ் நினைப்பதாகவும் சொல்லப்படுகிறது.

ஆனால் இப்படி ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்த நினைக்கும் டக்ளஸின் இந்த எகிறலை பார்த்து மஹிந்தவே உள்ளுக்குள் சிரித்திருப்பார்.

**நிலைக்கவேண்டும் ஒற்றுமை**

அகிம்சை ரீதியில் போராடி இன்னுயிரை ஈந்த இந்த தியாகியின் நிகழ்வுக்கே இவ்வளவு கெடுபிடி என்றால் ஆயுதம் ஏந்திப் போராடி வீரச்சாவடைந்த மாவீரர்களின் நினைவாக அனுஷ்டிக்கப்படவுள்ள மாவீரர் தினத்துக்கு என்னென்ன கெடுபிடிகள் வரப்போகின்றனவோ என்ற அச்சமும் தமிழ் மக்களிடம் எழாமலில்லை.

இதே ஒற்றுமையோடு தமிழ்க் கட்சிகள் மக்களோடு மக்களாக இணைந்து நின்றால் அதையும் நினைவேந்த முடியும்.

இப்போதைய ஒற்றுமையும், எழுச்சியும் தொடர்ந்து நீடித்தால், அதனால் சந்தோசமடைவது தமிழ் மக்கள் மட்டுமல்ல திலீபனும், அவரைப் போன்று மக்களுக்காக மரணித்த மறவர்களும்தான்.



முன்னாள் பிரதமர் பண்டாரநாயக்க, இனப்பிரச்சினை விவகாரத்தை தீர்க்கும் வகையில் தந்தை செல்வாவுடன் ஒப்பந்தம் செய்துகொண்ட பின்னர், அந்த ஒப்பந்தத்தை எதிர்த்தவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார். ஆயினும் அவரது கொலை பற்றிய பல மர்மங்கள் இன்னும் துலங்காமலே உள்ளன. அவரைக் கொன்றவர் என நிரூபிக்கப்பட்டு, நீதிமன்றால் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட தேரர், அதிலிருந்து தப்பிச் சென்றார் என்றொரு செய்தி இப்போது எழுந்துள்ளது. இது குறித்து 27.09.2020 லங்கா தீப, ஞாயிறு இதழில் வெளிவந்த கட்டுரையின் தமிழாக்கம் இது.

# பண்டாரநாயக்கவை கொன்ற தேரர்

## தூக்கில் இருந்து தப்பித்தாரா

சிங்கள மொழி மூலம் :உதேனி சமன் குமார,
தமிழில் – வீ.எஸ். ரீ

இலங்கையின் வரலாற்றையே புரட்டிப் போட்ட ஒரு படுகொலையைப் பகிரங்கமாகப் புரிந்த கொலையாளி, தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட உயிரிழந்து விட்டதாக நம்பிக் கொண்டிருக்கும் போது -

“இல்லையில்லை, அந்தக் கொலையாளி தூக்கில் இறக்கவில்லை. அதிலிருந்து தப்பிச் சென்று ,அதன் பிறகும் பல காலம் உயிரோடுதான் இருந்தான்” என்று சொன்னால் நம்பமுடியுமா?

நம்பும்படிதான் இப்போது சில கதைகள் எழத்தொடங்கியுள்ளன. அந்தக் கொலையாளியால் கொல்லப்பட்டவர் வேறு யாருமல்லர், இலங்கையின் முன்னாள் பிரதமரும், சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகருமான எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க தான். அவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியவர் எனக்கூறப்படும் பிக்குவான தல்துவே சோமராம தேரரே தூக்குக்கயிற்றுக்கு தண்ணீர் காட்டிவிட்டு, வேறொரு நாட்டில் தலைமறைவாக நீண்டகாலம் வாழ்ந்தார் என இப்போது புதுக்கதைகள் கிளம்பியுள்ளன. இந்தப் படுகொலை நிகழ்ந்து சுமார் 60 ஆண்டுகளின் பின்னர் புறப்பட்ட, சில ஆதாரங்கள் பண்டார நாயக்க கொலையுண்டதன் பின்னணியில் இன்னும் பல மர்ம முடிச்சுக்கள் அவிழ்க்கப்படாமல் இருப்பதையே புலப்படுத்துகின்றன.

### நீண்ட கொலைப்பட்டியல்

உலக வரலாற்றின் பிற்பட்ட காலகட்டத்தில், படுகொலையுண்ட ஆட்சியாளர்களின்அல்லது பிரபலங்களின் பட்டியல் மிக நீண்டது. 1865 ஆம் ஆண்டில் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் துப்பாக்கிதாரி ஒருவனால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டார். அதேபோன்று இந்தியாவுக்குச் சுதந்திரம் பெற்றுக் கொடுத்த மகாத்மாகாந்தி,1948ஆம் ஆண்டிலும், மற்றொரு அமெரிக்க ஜனாதிபதியான ஜோன்.எப்.கென்னடி 1963ஆம் ஆண்டிலும், எகிப்திய ஜனாதிபதியாகப் பதவி வகித்துக்கொண்டிருந்த வேளையில் 1981இல் அன்வர் சதாத்தும் சதிகாரர்களால் திட்டமிட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்கள் அந்தந்த வேளைகளில் உலகப் பொதுவெளியில் பேசுபொருளாக அமைந்தன. அந்த வரிசையில் இலங்கையின் பிரதமராகப் பதவி வகித்து வந்த நிலையில் 1959ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26ஆம் திகதியன்று பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயகவும், கொலையாளி ஒருவனின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழக்க நேர்ந்தது.இந்தப் படுகொலை இலங்கையில் மட்டுமென்றல்லாது உலகளாவிய ரீதியிலும் மக்கள் மத்தியில் பெரும் அதிர்வலைகளை உருவாக்கியிருந்தது.

பண்டாரநாயக்க படுகொலை செய்யப்பட்ட பின்னர், பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளையடுத்து சந்தேக நபர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்பட்டது. நீதிமன்றால் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டோருக்கு தண்டனையும் வழங்கித் தீர்ப்பளிக் கப்பட்டது. ஆயினும்,பண்டாரநாயக்கவின் படுகொலை தொடர்பாக பல்வேறு கதையாடல்கள் மக்கள் மத்தியில் பரவலாக அந்தக் காலத்திலேயே உலவி வந்தன.அவற்றில் பெரும்பாலானவை வெறும் ஊகத்தின் அடிப்படையில் கிளப்பி விடப்பட்ட புரளிகளாகக் கருதப்பட்டு, புற மொதுக்கப்பட்டன.

### கொலையாளி யார்?

பண்டாரநாயக்கவின் படுகொலை பற்றிய ஊகங்களில் மிக முக்கியமானது, பண்டாரநாயக்க மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டவர் தல்துவே சோமராம தேரர் அல்லர்; மாறாக அப்போதைய காலகட்டத்தில் பேர் பெற்ற சண்டியனான ‘ஒசி கொரயா’ என்பவன் தான் என்ற கதைதான். அத்தகையதொரு அபிப்பிராயம் பொது மக்கள் மத்தியில் ஏற்பட பல்வேறு சாதகமான காரணங்கள் குறித்த வழக்கு விசாரணைகளின்போதும் உருவாகியிருந்தன.

ஆயினும் , பொலிஸாரது விசாரணைகளின் படி பிரதமர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட சம்பவத்தின் முக்கிய குற்றவாளி தல்துவே சோமராம தேரரே எனக் குற்றம் சாட்டப்பட்டது. நீண்ட வழக்கு விசாரணைகளின் முடிவில் சோமராம தேரருக்கு தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட் டது. இன்றைய காலத்தைப் போலன்றி , அன்றைய கால கட்டத்தில் தூக்குத் தண்டனைக்கு தீர்ப்பளிக்கப்பட்ட ஒரு குற்றவாளி நீதிமன்றத்தால் குறிப்பிடப்படும் திகதியில் , குறிப்பிடப்பட்ட நேரத்தில் சாகும் வரை தூக்கில் இடப்படும் நடைமுறை தவறாது நிறைவேற்றப்பட்டு வந்தது. படுகொலை செய்யப்பட்ட பிரதமர் பண்டாரநாயக்க மிகப் பிரபலமான ஒருவராக இருந்ததன் காரணமாக குற்றவாளி, என்று நிரூபிக்கப்பட்ட நபரால் ,இலோசாகத் தனது குற்றத்துக்கான தண்டனையிலிருந்து விடுபடுவதற்கு வாய்ப்பேதும் கிட்டியிருக்க வில்லை.

### நடந்தது என்ன?

படுகொலையுண்ட பிரதமர் பண்டாரநாயக்க உலக நாடுகளின் தலைவர்கள் மத்தியில் உயர் கௌரவமும் புகழும் ஈட்டிய ஒருவராகத் திகழ்ந்தார். 1959 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26ஆம் திகதியன்று தாம் படுகொலை செய்யப்படுவதற்குச் சில நாள்களின் பின்னர் ஐ.நா.சபையின் பொதுக் கூட்டத்தில் பிரதமர் பண்டாரநாயக்க பங்குபற்றவிருந்தார். ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தின் ஆரம்ப அமர்வில் கலந்து கொள்வதற்காக உலகநாடுகள் பலவற்றின் பிரதிநிதிகள் அந்தவேளையில் ஐ.நா.சபை அமைந்துள்ள அமெரிக்காவின் வொஷிங்டன் நகரத்தை சென்றடைந்திருந்தனர்.பிரதமர் பண்டாரநாயக்க கொலையுண்ட செய்தியால் அவர்கள் அனைவரும் கவலையடைந்தனரென அவ்வேளையில் அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. கொழும்பு, ரோஸ்மீட் பிளேஸிலிருந்த பண்டாரநாயக்கவின் ‘டின்ரஜல்’ வாசஸ்தலத்தில் வைத்தே,செப்ரெம்பர் 25ஆம் திகதியன்று காலை 9.30மணிக்கும் 9.45மணிக்கும் இடையிலான வேளையில் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### காவியுடைக்காரரே சுட்டார்

காவியுடை தரித்திருந்த மனிதரொருவரே தம்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக தமது உயிர் பிரிவதற்கு முன்னர் பண்டாரநாயக்க தெரிவித்திருந்தார். குறித்த சம்பவம் இடம் பெற்ற வேளை அவரது வாசஸ்தலத்தில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த எஸ்.ஆர்.சமரக்கோன் என்ற பொலிஸ் உத்தியோகத்தர் இல்லத்தின் வெளிவாசல் கதவருகில் கடமையில்இருந்துள்ளார். வெடிச் சத்தம் கேட்டதும் வீட்டுக்குள் ஓடிச்சென்ற அவர்,சிலரது பிடிக்குள் அகப்பட்டிருந்த பிக்கு ஒருவர் மீது தமது ‘பிஸ்ரலால்’ சுட்டுள்ளார். அப்படி பொலிஸ்காரரின் சூட்டில் அகப்பட்டுக் காயமுற்றவர் தல்துவ சோமராம தேரரே.



பிரதமர் பண்டாரநாயக்க, அவருடைய காரில் உடனடியாகவே கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கு சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார். இருப்பினும் அடுத்த நாள் செப்ரெம்பர் 26 ஆம் திகதி காலையில் திடீரென உயிரிழந்தார். பொலிஸ் உத்தியோகத்தரது துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த சோமராமதேரர் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு உயிர்பிழைத்துக்கொண்டார்.

**60 ஆண்டுகளுக்கு பிறகு பரபரப்பு**

**தேரரின் மரண அத்தாட்சிப் பத்திரம் எங்கே?**

**இன்னும் அவிழாத மர்மங்கள்**



> தூக்கிலிடப்பட்டதாகக் கூறப்பட்ட சோமராம தேரர் இத்தாலியின் கத்தோலிக்க செமனறியில் இருந்தது எவ்வாறு?



### வழக்கு ஆரம்பம்

பண்டாரநாயக்கவின் படுகொலை குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வந்த பொலிஸார் ஒக்ரோபர் மாதம் 14 ஆம் திகதியன்று களனி விகாரையின் விகாராதிபதி மாபிட்டிகம புத்தரக்கித தேரர்,எச்.பி.ஜயவர்த்தனா, மற்றும் தல்துவ சோமராமதேரர் ஆகிய மூவரையும் கைது செய்தனர். அம்மூவர் உட்பட ஏழு பேர் மீது பண்டாரநாயக்கவின் படுகொலைக்கான குற்றம் சுமத் தப்பட்டு, அவ்வாண்டு டிசெம்பர் மாதம் 14ஆம் திகதியன்று நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்தனர். 1960 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 27ஆம் திகதியன்று குறித்த வழக்கின் விசாரணைகள் முடிவுற்றதையடுத்து சோமராம தேரர் உள்ளிட்ட மேலும் ஐந்து பேர் மீது மட்டும் குற்றம் சாட்டி உயர்நீதிமன்றத்தில் வழக்கு பாரப்படுத்தப்பட்டது. 1961 ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதியன்று அந்த வழக்கின் விசாரணைகள் நிறைவடைந்தன. 1961 மே மாதம் 10ஆம் திகதியன்று பண்டாரநாயக்க கொலை வழக்குக்கான தீர்ப்பு வழங்கப்பட்டது.

### தீர்ப்பு இதுதான்

பிரதமர் பண்டாரநாயக்கவைப் படுகொலை செய்யத் திட்டம் தீட்டியமை , படுகொலையை மேற்கொண்டமை செய்தமை ஆகிய குற்றங்களுக்கான சோமராம தேரருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. இந்தச் செய்தி அப்போதைய பத்திரிகைகளில் "சோமராம தூக்கு மேடைக்கு;ஏனைய இருவர் மறியல் சாலைக்கு"என்ற தலைப்பில் பிரசுரமாகியிருந்தன. தூக்குத் தண்டனைக்கான நாள் வரும்வரை சோமராம தேரர் வெலிக்கடை சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்தார். இடைப்பட்ட அந்தக் கால இடைவெளியில் சோமராமதேரர், தாம் தங்கியிருந்த விகாரையில் இருக்கும் பிக்கு மாருக்கு பல கடிதங்களை அனுப்பியிருந்தார். முன்னைய தமது கர்மவினை காரணமாகவே தாம் இவ்விதம் தூக்குத்தண்டனை பெற நேர்ந்ததாகவும், தமக்கான தண்டனையை ஏற்றுக்கொள் வதைத் தவிர வேறென்ன செய்ய இயலுமெனவும் அவர் தமது அந்தக் கடிதங்களில் குறிப்பிட்டிருந்தார்.

### சதியா? கொலையா?

இதேவேளை , அவ்வேளையில் பாதுகாப்புத் தரப்பில் உயர் பதவிகளை வகித்து வந்த, பெயர் குறிப்பிடப்படாத நபர்களால் மேற்கொள்ளப்பட்ட சதி காரணமாகவே பண்டாரநாயக்க கொல்லப்பட்டார் என்றும் , இந்தக் கொலையில் பிக்குமாரும் தொடர்புபடுத்தப்பட்டு ஒரு கல்லெறியில் இரு பறவைகள் வீழ்த்தப்பட்டதாகவும் ஒரு கதை எழுந்தது. சிட்னி சொய்சா மற்றும் ஏ.சி.டி. சேரம் ஆகிய பாதுகாப்பு தரப்பு அதிகாரிகள் 1962 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அரசுக்கு எதிரான சதிப்புரட்சியில் பங்கு கொண்டிருந்தனர். எனவே அவர்கள் தான் பண்டாரநாயக்கவையும் கொல்லச் சதி செய்திருக்க வேண்டுமெனச் சிலர் நம்பினர். பண்டாரநாயக்க படுகொலை வழக்கில் நீதிமன்றத் தீர்ப்பின் பின்னர், பொது மக்கள் மத்தியில் நிலவிய இத்தகைய ஊகங்கள் அனைத்தும் கட்டுக்கதைகள் என்ற விதத்தில் நாளா வட்டத்தில் நிராகரிக்கப்பட்டன. ஆயினும் இந்தப் படுகொலை இடம்பெற்று 60 ஆண்டுகள் கழிந்து விட்ட நிலையிலும் பண்டார நாயக மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டவர் யார்? என்ற கேள்வி எழுமானால், " ஒசி கொரயாவாலேயே அவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது" என அடித்துக்கூறும் ஒரு சிலரும் இருக்கவே செய்கின்றனர். அதுமட்டுமன்றி இதே கேள்வி பழைய இடது சாரிக் கொள்கையாளர்களிடம் எழுப்பப்படுமானால் அவர்கள் "அது ஒசி கொரயாவால் மேற்கொள்ளப்பட்டதொன்றல்ல. அவரது பெயரைப் பயன்படுத்தி அமெரிக்க சி.ஐ.ஏ.உளவுத் தரப்பால் மேற்கொள்ளப்பட்டதே" என வாதிடவும் பின் நிற்கப் போவதில்லை.

### தப்பினாரா தேரர்?

என்னதான் நீதிமன்றம் தல்துவ சோமராம தேரரே கொலையாளி எனத் தீர்ப்பளித்த போதிலும், தர்மோபதேசம் மற்றும் பிரித் ஓதுதலை மேற்கொண்ட ஒரு தேரர் கொலை செய்தார் என்பதை அவிசாவளை சோமராம விகாரையை வழிபடும் பௌத்தர்கள் ஏற்றுக்கொள்ளவேயில்லை. அவர் மீது அபாண்டமாக கொலைப்பழி விழுந்தமை, சோமராம தேரரது பூர்வ கர்மப் பழி என்றே அந்தத் தரப்பினர்கள் நம்புகின்றனர். அது மட்டுமன்றி இந்த விடயத்தில் மற்றொரு கதையும் அந்தப் பிரதேச வாசிகள் மத்தியில் நிலவி வந்துள்ளது. சோமராம தேரர் அநியாயமாக இந்த வழக்கில் மாட்டப்பட்டு விட்டார் என நம்பிய தரப்பினர், சோமராம தேரரை இரகசியமாக நாட்டை விட்டு வெளியேற்றி விட்டனர் என்பதே அந்தக் கதையாகும். படுகொலைச் சம்பவம் இடம்பெற்ற 60 ஆண்டுகள் கழிந்துவிட்ட இன்றைய நிலையில், இத்தகைய புதுமையான கதையொன்றைக் கேள்விப்பட நேர்ந்துள்ளமை ஆச்சரியம் தருமொன்றே.ருவான்வெல்ல பிரதேசத்தில் வசிக்கும் சோமராம தேரரது உறவினரொருவர் தெரிவித்த இந்தக் கருத்தே பலரது புருவங்களையும் உயர்த்த வைத்துள்ளது.

### பைபிளை மொழிபெயர்த்தார்?

இரகசியமான விதத்தில் ஐரோப்பாவுக்கு வெளியேற்றப்பட்ட சோமராம தேரர் இத்தாலி நாட்டுக்குச் செமனறியில் தங்கியிருந்து கிறிஸ்தவ வேத நூலான பைபிளை சிங்கள மொழியில், மொழி பெயர்த்திருந்தார் எனவும் அந்த நபர் தெரிவித்திருந்தார். ஆனால் அத்தகைய தகவல் தமக்கு எவ்வாறு கிடைத்த தென்பதை மட்டும் அந்த நபர் சொல்லவேயில்லை. ஆயினும் அவரது கூற்றுக்கு ஆதாரமாக ஒரு விடயம் இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சோமராம தேரர் தூக்கிலிடப்பட்டது 1962 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 6ஆம் திகதி. அப்படியானால் அவரது இறப்புக்கான மரண அத்தாட்சிப் பத்திரம் அன்றைய திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

### மரண சான்றிதழ் எங்கே?

அந்த மரண அத்தாட்சிப் பத்திரத்தைத் தேடிப்பிடிக்கும் பொறுப்பை தற்போதைய தல்துவ சோமராம விகாராதிபதி எல்லாவல நந்த தேரர் ஏற்றுக் கொண்டார். சிறைச்சாலைகள் திணைக்கள தலைமை அலுவலகத்துக்குச் சென்ற அவர் சிறைச்சாலைகள் ஆணையாளரிடம் இது பற்றி விசாரித்திருந்தார்.

"பழைய காலத்து மரணங்கள் தொடர்பான விவரங்கள் அடங்கிய புத்தகம் தற்போது சிறைச்சாலை கள் திணைக்களத்தின் வசம் இல்லை. அவை பிரதம செயலாளர் அலுவலகத்துக்கு கையளிக்கப்பட்டு விட்டன. வேண்டுமானால் பிரதம செயலாளர் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்" என்றூ சிறைச்சாலை ஆணையாளர் தெரிவித்திருந்தார்.

அதன் அடிப்படையில் நந்ததேரர்,சோமராம தேரரது மரண அத்தாட்சிப் பத்திரமொன்றை வழங்குமாறு நாரஹேன் பிட்டியிலுள்ள பிரதம செயலாளர் அலுவலகத்துக்கு கடித மூலம் விண்ணப்பித்தி ருந்தார். சில வாரங்களின் பின்னர் "சோமராம தேரரது முதற்பெயருடன் கூடிய பிறப்புச் சான்றிதழ் மட்டுமே எமது அலுவலகத்தில் உள்ளது. ஆனால் சோமராம தேரர் எனப் பெயர் குறிப்பிட்டு எந்தவொரு மரண அத்தாட்சிப் பத்திரமும் எமது அலுவலகத்தில் இல்லை" எனவும் பிரதம செயலாளரது அலுவலகத்தால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதன் பின்னர் மாவட்டப் பிரதம செயலாளர் அலுவலகத்தால் மாளிகாவத்தையிலுள்ள மாவட்டப் பதிவாளர் அலுவலகத்துக்கு இந்தப் பிரச்சினை முன்வைக்கப்பட்டது. 1962ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஆறாம் திகதி தொடக்கமுள்ள மூன்று மாத காலத்துக்குரிய மரணப் பதிவு ஆவணங்கள் யாவும் பரிசீலிக்கப்பட்டும் சோமராம தேரர் என்ற பெயரில் மரணப் பதிவேதும் கண்டுபிடிக்கப்படவில்லையென எல்லாவெல நந்ததேரருக்கு பதிலளிக்கப்பட்டுள்ளது.

### எல்லாமே நாடகமா?

அப்படியானால் , உண்மையில் சோமராம தேரர் தூக்கிலிடப்பட்டுக் கொல்லப்பட்டார் என்பது பொய்யா?என்ற சந்தேகம் பலமாக எழுகின்றது.

இதுவிடயத்தில் மற்றுமொரு விடயத்தையும் குறிப்பிட்டாகவேண்டும். அரச சுவடிகள் பாதுகாப்புத் திணைக்களத்துக்குச் சென்று 1962 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 7ஆம் திகதியன்று பிரசுரமான பிரதான புதினப் பத்திரிகைகளின் பிரதிகளைக் கோரிப் பெற்றுப் பார்வையிட்ட போது 1962 ஜூலை மாதம் ஏழாம் திகதியன்று வெளியான 'தவச'சிங்கள தினசரிப் பத்திரிகையின் முதற்பக்கத்தில்' தவறின் பலாபலன் ' என்ற தலைப்புடன் பிரசுரமான செய்தியொன்று இதுபற்றிய தேடுதலுக்குப் பேருதவியாக அமைந்திருந்தது.

"பண்டார நாயக்க படுகொலை வழக்கு விசாரணையில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 47 வயதான தல்துவ சோமராம நேற்று(ஆறாம் திகதி)காலை 8.05மணிக்கு வெலிக்கடை சிறைச்சாலை யில் தூக்கிலிடப்பட்டு மரணமடைந்தார். தூக்கிலிடப்படுவதற்கு முன்னர் சிறைக் கூண்டுக்குள் அமைதியின்றி அங்குமிங்கும் உலவிய அவர் "இது எனது பூர்வகர்ம வினை " எனக் கூறினார்.

மரணப் பதிவாளர் எஸ்.திருச்செல்வம் , சோமராம என்ற பெயரில் குறித்த மரணத்தை உடனடியாகவே பதிவு செய்தார். சோமராமவின் உடல் கனத்தை பொது மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. நேற்றிரவு 10 மணிவரை அஸ்தியை எடுத்துச் செல்ல எவரும் வருகை தரவில்லை."

-மேற்குறிப்பிட்டவாறு அந்தப் பத்திரிகையில் செய்தி வெளியாகியிருந்தது. அதேவேளை சோமராம என்ற பெயரில் எவரும் 1962 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 6 ஆம் திகதியன்று மரணமடையவில்லையென தற்போதைய பதிவாளர் நாயகம் ஆவணங்களின் ஆதாரங்களுடன் கூறுகிறார்.

அப்படியானால் தல்துவ சோமராம தேரருக்கு என்ன நடந்தது ? ஐரோப்பாவில் கிறிஸ்தவ செமனறியில் இருந்து பிற்காலத்தில் அவர் மரணமடைந்தாரா? அவ்வாறில்லையேல் தூக்குக் கயிறுக்குள் கழுத்தைக் கொடுத்தாரா? இவற்றுக்கான பதில் என்றோ ஒருநாள் வெளிவந்தேயாகும்.

சோமராம தேரர் தூக்கிலிட்டு கொல்லப்பட்டிருந்தால், அவரது மரணம் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். வழக்கின் தீர்ப்பின் படி தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படாதி ருந்தால், குற்றவாளி உயிருடனிருந்து காலப்போக்கில் இயற்கை மரணம் எய்தியிருக்க வேண்டும்.சோமராம தேரர் விடயத்தில் இவற்றில் எது நடைபெற்றது?என்ற இரகசியத்தை எவ்வாறு கண்டு பிடிக்க இயலும்?

### விசமூட்டிக் கொல்லப்பட்ட பிக்கு

பண்டாரநாயக்க படுகொலை வழக்கில் குற்றவாளிகளில் ஒருவராக இனங்காணப்பட்டு சிறைத் தண்டனைக்கு உட்பட்ட மாபிட்டிகம புத்தரக்கித தேரர்,சிறைத் தண்டனை அனுபவித்து வந்த நிலையில் சில ஆண்டுகளின் பின்னர் சிறைச்சாலையில் நோய்வாய்யப்பட்டு சடுதியாக மரணத்தைத் தழுவிக் கொண்டார் என அறிய முடிந்தது. 1965 ஆம் ஆண்டில் ஐ.தே.கட்சி ஆட்சியைக் கைப்பற்றி டட்லி சேனநாயகா நாட்டின் பிரதமர் பதவியை ஏற்றார். அப்போது தம்மைச் சிறையிலிருந்து விடுவிக்குமாறு புத்தரக்கித தேரர் பிரதமர் டட்லி சேனநாயாகவுக்கு வேண்டுகோளொன்றை விடுத்தாரென அறிய முடிந்தது. புத்தரக்கித தேரரது திடீர் மரணம் குறித்த அறிவிப்பும் அந்த வேளையில் பொது மக்கள் மத்தியில் பேசுபொருளாகி அது விடயம் தொடர்பான வாதப் பிரதிவாதங்களும் இடம்பெற்றிருந்தன. அதற்குக் காரணம்,பண்டாரநாயக்காவின் படுகொலை தொடர்பான உண்மை வெளியாவதைத் தடுக்கும் வகையில் புத்தரக்கித தேரர் விஷமூட்டிக் கொல்லப்பட்டார் என்றதொரு செய்தி மக்கள் மத்தியில் பரவியமையேயாகும்.

இந்த வழக்கில் ஆயுள்காலச் சிறைத் தண்டனை



தீர்ப்புக்கு உள்ளாகிய எச்.பி.ஜெயவர்த்தன என்ற குற்றவாளி சிறைச்சாலையில் நன்னடத்தையுடன் செயற்பட்டதால் அவரது சிறைத் தண்டனைக் காலம் இருபது ஆண்டுகளாக குறைக்கப்பட்டு தண்டனைக் கால முடிவில் சிறையிலிருந்து விடுதலையாகி சமூகத்துடன் இணைந்து கொண்டரெனவும் சொல்லப்படுகின்றது.

### விடை தெரியாத வினாக்கள்

தூக்கிலிடப்பட்டதாகக் கூறப்பட்ட் சோமராம தேரர் இத்தாலியின் கத்தோலிக்க செமனறியில் இருந்தது எவ்வாறு? அங்கிருந்தவாறு பைபிளை சிங்களத்தில் மொழி பெயர்த்தாரென் சோமராம தேரரின் உறவினரொருவர் தெரிவித்த தகவல் எந்த அளவுக்கு உண்மையானது? என்ற கேள்விகளுக்கும் இதுவரை பதில் கிடைக்கவில்லை. ஆனால் நெருப்பில்லாம் புகையாதே. ஒருவேளை பண்டாரநாயக்க கொலைவழக்கில் பாதுகாப்பு தரப்பு அதிகாரிகள் தொடர்புபட்டிருந்தால், அவர்கள் மூலம் தேரர் தூக்கிலிடப்பட்டார் என நாடகமாடி, அவர் இத்தாலிக்கு இரகசியமாக அனுப்பி வைக்கப்பட்டிருக்கலாம். அதன் பின்னர் அவர் கிறிஸ்தவ சமயத்துக்கு மாறி, அங்கு பைபிளை மொழி பெயர்த்திருக்கலாம் என்று சொல்லப்படுகின்றது. எனினும் இவை எல்லாம் ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்படும் வரை ஊகங்களாக மட்டுமே கருதப்படும். தல்துவ சோமராம தேரர் குறித்த இரகசியத்தை வெளிக்கொணர எதிர்காலத்துக்கு இடமளிப்பதைத் தவிர மாற்று வழியேதும் தென்படவில்லை என்பதே யதார்த்தமாகும்.

# சிதையும் செம்மணி!




○ சர்மிலா விநோதினி

> புவியியல் ரீதியாக மட்டுமல்ல, நம்முடைய உரிமைப்போர் வரலாற்றிலும் முக்கிய இடம் பிடித்த செம்மணியின் சூழலைச் சிதைப்பதன் மூலம் எதிர்காலத்தில் அங்கு அஞ்சலிப்புகள், நினைவேந்தல்களைச் செய்யத் தகுதியற்ற நிலமாக மாற்றும் சதியும் இடம்பெறுகின்றதோ என்றும் சந்தேகம் எழுவதைத் தடுக்கமுடியவில்லை.

செந்நெல்மணிகள் விளைந்த வனப்புமிக்க பிரதேசமாக விளங்கியதால், நாவற்குழிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் அமைந்துள்ள பகுதி செம்மணி என்றாயிற்று.

யாழ். நகரில் இருந்து கண்டிவீதி வழியாக சுமார் நான்கு கிலோமீற்றர் தூரத்திலும், சாவகச்சேரி நகரத்தில் இருந்து சுமார் பதினொரு கிலோமீற்றர் தூரத்திலும் அமைந்துள்ள செம்மணி, யாழ் .நகரையும் நாவற்குழியையும் பிரிக்கும் பிரதான நிலப்ப ரப்பாகும். பல்வகை நிலப்பயன்பாட்டுக் கோலங்களைக் கொண்டுள்ள இப்பகுதி புவியியல் ரீதியில் முன்னிலைப் படுத்தப்படக்கூடிய வள வாய்ப்புக்களைக் கொண்ட பிரதேசமாகவும் விளங்குகின்றது. யாழின் முத்திரைச் சந்தியிலிருந்து செம்மணியூடாக நாவற்குழி வரை பயணப்படுகின்றபோது இங்குள்ள பௌதீக வளப்பரம்பலை கண்டுகொள்ளலாம்.

பெயருக்கு ஏற்றாற்போல் வானம் பார்த்த வயல் நிலங்கள் வீதியின் இரண்டு மருங்கும் இடையிடையே பனைமர வேலிகளைக் கொண்டு பரந்திருக்கின்றன. யாழ்ப்பாண இராசதானிக் காலத்தின் வரலாற்றோடு தொடர்புபடுகின்ற இவ் வயல் நிலங்கள் வடக்கில் மாரியின் பெருமழை ஆரம்பிக்கின்ற காலத்திலிருந்து, தைமாதத்தில் சந்திக்கின்ற அறுவடைக்காலம் வரை கொடுக்கின்ற அழகும், பொருளாதார நிறைவும் அற்புதமானவை.

இவ் வயல் நிலங்களுக்கு அடுத்ததாக செம்மணிக்கு



அடையாளம் என்று அழைக்கப்படுகின்ற சிறிய குட்டை வகைக் குளப்பகுதியும், கண்டற்தாவரப் பரம்பலைக் கொண்ட சதுப்பு நிலப்பகுதிகளும், சிறிய அளவிலான புற்தரைகளும் காணப்படுகின்றன.

நாவற்குழிக் கடல் நீரேரியின் செல்வாக்கினைக் கொண்டுள்ள இச் சதுப்பு நிலங்களின் உயிர்ப்பல்வகைக் கோலங்களான கண்டல்கள், உமிரி வகைத் தாவரங்கள், நீர்க்காகங்கள் மற்றும் சிறு பட்சி இனங்கள் ஆகியவை இச் சுற்றுச் சூழலில் காணப்படுகின்ற பெறுமதிக்குரிய வளங்களாகும்.

இவற்றுக்கு அப்பால் செம்மணிச் சந்தியில் கம்பீரமாக நிமிர்ந்து நின்று வரவேற்கின்ற யாழ் வளைவும், ஆலயச் சூழலும், அண்மையில் அமைக்கப்பட்டிருக்கின்ற சிவலிங்கமும், சற்றுத் தொலைவிலும், வயலிடையிலும் அமைந்துள்ள அந்திமக் கிரியை அடக்க இடங்களும் இப்பகுதியின் கலாசார முக்கியத்து வத்தைப் பிரதிபலிக்கின்றன. புவியின் பௌதீக, மற்றும் கலாசார அடையாளங்களுக்கு அப்பால் இந்த நிலமும், நீரும் கொண்டிருக்கிற யுத்த காலக் கதைகள் ஏராளம். 1995 இன் பின் இந்த நிலத்தில் உருவாக்கப்பட்ட இராணுவக் காவலரண்களும் அவற்றின் பின் அரங்கேறிய துயரக்கதைகளும் உலகறிந்தவை.

இப்படியாக, நினைவின் அடுக்குகளில் உறைந்துபோயுள்ள இந்த நிலத்தின் வளங்களும், அவை சுமந்துள்ள கதைகளும் காலாதி காலத்துக்கும் பாதுகாக்கப்பட வேண்டியவை. ஆனால் அண்மைக்காலமாக இப்பகுதியில் முறையற்ற வகையில் கொட்டப்பட்டு வருகின்ற திண்மக் கழிவுகளின் காரணமாக பௌதீக வளங்களினதும், கலாசார அடையாளங்களினதும் இருப்பு கேள்விக்குறியாகியுள்ளது.

இப்பகுதியில் உள்ள வயல் நிலங்களுக்கு அருகிலும், சதுப்பு நிலச் சூழலை அண்டிய சிறிய மேட்டுப் பகுதியிலும் ஆரம்பத்தில் பொறுப்பற்ற மக்கள் சிலர் கழிவுகளை வீசி வந்தனர், முறையற்ற இச் செயலால் அப்பகுதியில் கழிவுகள் சேர்ந்து, அப்பகுதி தன்நிலை இழக்கத்தொடங்கியது. எனினும் முறையற்ற வகையிலான அந்தக் கழிவகற்றல் உரிய அதிகாரிகளின் தலையீட்டினால் தடுக்கப்பட்டு ,கட்டுப்பாடுகள் போடப்பட்டன. இதனால் செம்மணிச் சூழலின் நிலைத்திருப்பு உறுதி செய்யப்பட்டது. எனினும் எல்லாம் கொஞ்சநாளைக்கே. உக்கக்கூடிய காகிதங்களில் இருந்து உக்கி அழியாத பொலித்தீன் கழிவுகள், பிளாஸ்ரிக் பாவனைப் பொருட்கள், கண்ணாடிப் போத்தல்கள், மற்றும் மதுபானக் கொள்கலன்கள் போன்ற பிரிக்கப்படாத அனைத்து வகையான கழிவுகளும் மீண்டும் செம்மணியில் தஞ்சமடையத் தொடங்கின.

பொறுப்பற்ற வகையில் இந்தப் பகுதியில் கொட்டப்படும் கழிவுகளால் வயல் நிலங்கள் தங்கள் செழிப்பை இழக்கின்றன. அத்தோடு உடையக்கூடிய கண்ணாடிப் போத்தல்கள் மற்றும் ஏனைய கூரிய கழிவுகள் வயல் நிலங்களோடு சென்று சேர்வதால், அவை விவசாயிகளுக்கு காயங்களை ஏற்படுத்தக் கூடும்.

இந்தக் கழிவுகள் தாமுண்டு , தம் வேலையுண்டு என்றிராமல், காகம் மற்றும் இன்னபிற பறவை இனங்களையும் தங்களை நோக்கி கவர்ந்திழுக்கின்றன. பின்னர் அவை தம் அலகுகளில் கழிவுகளைக் காவிக் கொண்டு வீதிக்கு மேலால் பறந்து திரிவதும், துர்நாற்றம் வீசும் கழிவுகள் அங்கும் இங்குமாக சிதறடிக்கப் பட்டு துர்நாற்றமும், சுவாசப் பிரச்சினைகளும் இதனால் உண்டாகின்றன.


வெளித்தெரிகின்ற இவ்வாறான பாதிப்புகளுக்கு அப்பால், அதி முக்கியத்துவம் வாய்ந்த உவர்நிலச் சூழலிலும் நீண்ட காலப் பாதிப்புக்களையும் இங்கு கொட்டப்படும் கழிவுகள் உண்டு பண்ணக்கூடியவை. சதுப்பு நிலச்சூழலோடு கலக்கக்கூடிய பொலித்தீன் திண்மக் கழிவுகள் உக்குவதற்கு மிக நீண்டகாலமெடுக்கும், பெரும்பாலான பொலித்தீன்கள் உக்குவதுமில்லை. இதனால் அவை மண்ணோடு கலந்து, புதைந்து விடுகின்றன. பின்னர் மண்ணை மாசுபடச் செய்து, மாரிகாலத்தில் நிலத்தின் உள்ளிறங்கும் நீரின் அளவைக் குறைத்து நில வளமிளத்தலைத் தூண்டுகின்றன.

உயிரியல் பல்வகைமைச் செறிவைப் பொறுத்தது சதுப்பு நிலங்கள் கொண்டிருக்கின்ற வளப்பரம்பலானது கடல் கொண்டிருக்கின்ற வளங்களை விட அதிகமானது. இந்நிலையில் இங்கு கொட்டப்பட்டுள்ள கழிவுகள் இப்பகுதியின் அழகிய கண்டற் தாவரச் சூழலையும் அதனோடு இணைந்த உயிர்ச்சூழலையும் கால ஓட்டத்தில் சிதைத்து அழிக்கும் அபாயமும் எழுந்துள்ளது.

தொடர்ச்சியாக இந்தப்பகுதியில் கழிவுகள் கொட்டப்படுமாக இருந்தால் அவை மெதேன், கரியமிலவாயு போன்ற ஆபத்தான வாயுக்களையும் உருவாக்கக்கூடும். திறந்தவெளியில் கொட்டப்படுகின்ற குப்பைகள் உக்கி அழிவடைவதற்கு சுமார் இருபது வருடங்கள் தேவைப்படும், இந்நிலையில் இங்கு தேங்கப்போகும் கழிவுகளில் இருந்து வெளியேற்றப்படுகின்ற கசியும் திராவகங்கள் சுமார் இருபது வருடகாலத்துக்கு மேலாக தரைக்கீழ் நீரோடு கலப்பதற்கான வாய்ப்புக்களும் அதிகமாக உள்ளன. இவை நீண்ட காலப் போக்கில் நிகழக்கூடிய செயற்பாடுகள். எனினும் மெல்ல மெல்ல தரைக்கீழ் நீர்வளத்தினையும், அருகிலுள்ள சிறு நீர்ப்பரப்பினையும் பாதிக்கக்கூடியவை. செம்மணியில் அமைந்துள்ள இந்து மயானத்துக்குள் முறையற்ற வகையில் அண்மையில் கொட்டப்பட்ட மருத்துவக் கழிவுகளும் நீண்ட காலப்போக்கில் இத்தகைய கெடுதல்களையே ஏற்படுத்தக்கூடியவை.

வளர்ந்துவருகின்ற இலங்கை போன்ற நாடுகளில் ஆரம்ப மூலதனம், தொழில்நுட்ப விரிவாக்கம், மற்றும் பிந்தைய பராமரிப்புச் செலவீனங்களைக் கருத்தில் கொண்டு திறந்தமுறை கழிவகற்றல் பொறிமுறையே ஒப்பீட்டளவில் அதிகூடிய வழக்கத்தில் இருந்துவருகின்றது. எனவே இவ்வாறான திறந்த முறை கழிவகற்றலுக்கான இடங்களைத் தெரிவு செய்கின்ற போது காணிப்பயன்பாட்டுத் தரவுகளின் அடிப்படையில் முறையான கள ஆய்வுகள் மற்றும் உரிய விற்பன்னர்களின் வழிகாட்டுதலின் கீழ் மக்கள் நடமாட்டம் குறைந்த, காற்று ஒதுக்குப்புறமான, சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பற்ற, தரைக்கீழ் நீர்ப்படுக்கைகள் ஆழத்திலுள்ள பகுதிகள் அடையாளப் படுத்தப் பட்டு , அங்கு உரிய முறையில் கழிவுகள்அகற்றல் முகாமை செய்வதே நம் சூழலைப் பாதுகாக்கும் பொறிமுறை.

இவை தொடர்பாக உரிய வினைத்திறன் அறிவுள்ள சுற்றுச்சூழல் அதிகாரிகள், உள்ளூராட்சி சபைகளின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளையும் மீறி செம்மணிப் பகுதியில் இவ்வாறான சூழலைச் சிதைக்கும் நாசகார செயற்பாடுகள் தொடர்கின்றன. புவியியல் ரீதியாக மட்டுமல்ல, நம்முடைய உரிமைப்போர் வரலாற்றிலும் முக்கிய இடம் பிடித்த செம்மணியின் சூழலைச் சிதைப்பதன் மூலம் எதிர்காலத்தில் அங்கு அஞ்சலிப்புகள், நினை வேந்தல்களைச் செய்யத் தகுதியற்ற நிலமாக மாற்றும் சதியும் இடம்பெறுகின்றதோ என்றும் சந்தேகம் எழுவதைத் தடுக்க முடியவில்லை. ■



# யாழ்ப்பாணப் பதிப்புத்துறை

07

## 1990-1995

○ தில்லைநாதன் கோபிநாத்

1990 தொடக்கத்தின் போது நூற்றாண்டு கண்ட மூன்று பழம்பெரும் பத்திரிகைகள் யாழ்ப்பாணத்தில் வெளியாகிக் கொண்டிருந்தன. உதயதாரகை, பாதுகாவலன், இந்துசாதனம் ஆகியவையே அம்மூன்று பத்திரிகைகளாகும். இம்மூன்றும் தத்தம் சமயம் சார்ந்து வெளியாகிய பத்திரிகைகளாக இருந்தன.

உதயதாரகை யாழ்ப்பாணத்தில் என்று மட்டுமல்லாமல், இலங்கையிலேயே வெளியாகத் தொடங்கிய முதலாவது தமிழ்ப் பத்திரிகையாகும். அமெரிக்கன் மிசனரிமாரால் தொடங்கப்பட்ட இந்தப்பத்திரிகை தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் உள்ளடக்கத்தைக் கொண்டிருந்தது. 1841ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7ஆம் திகதி அதன் முதலாவது இதழ் வெளியாகியிருந்தது. அவ்வகையில் 1990ஆம் ஆண்டானது உதயதாரகையின் 150ஆவது ஆண்டாகும். அமெரிக்கன் மிசனில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு ஏற்ப காலத்துக்குக் காலம் வெவ்வேறு தரப்பினரின் பொறுப்பில் வெளியாகிவந்த உதயதாரகை எப்போதும் ஒரு கிறிஸ்தவ செய்திப் பத்திரிகையாகவே இருந்துவந்தது. 1990களில் தென்னிந்தியத் திருச்சபையால் யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவில் அமைந்திருந்த அமெரிக்க் சிலோன் மிசன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வாரந்தோறும் வெளியாகியது.

நான்கு முதல் ஆறு பக்கங்களைக் கொண்டிருந்த உதயதாரகையில் அதன் நூற்றைம்பது ஆண்டுகாலப் பாரம்பரியப்படி தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளும் இடம்பெற்றிருந்தன. செய்திப் பத்திரிகையின் இயல்புகளையும், சஞ்சிகையொன்றின் இயல்புகளையும் அது கொண்டிருந்தது. செய்திகள் பெரும்பாலும் தென்னிந்தியத் திருச்சபை தொடர்பானதாக அமைந்தன. அக்காலத்தைய கள நிலவரங்கள் சார்ந்த செய்திகளும் சிறிய எண்ணிக்கையில் இடம்பெற்றன. உதயதாரகையின் ஆசிரிய தலையங்கள் கிறிஸ்தவ சமயம் பற்றிய விடயங்களை மட்டுமின்றி அக்கால அரசியல் நிலைமைகள் தொடர்பான பார்வைகளையும் முன்வைத்தன. செய்திகள், ஆசிரிய தலையங்கம் தவிர சமயம்சார் கட்டுரைகள், பொதுக் கட்டுரைகளும் இடம்பெற்றன. சிறுவர் பகுதி போன்றவையும் அவ்வப்போது வெளியாகின.

உதயதாரகை யாழ்ப்பாணப் பத்திரிகை வரலாற்றில் முதலாவது பத்திரிகை என்பது மட்டுமன்றி மிக நீண்டகாலம் வெளியான பத்திரிகை என்ற பெருமையையும் கொண்டது. 2012 ஆம் ஆண்டளவில் அதாவது 170 ஆண்டுகளைக் கடந்தும் வெளியாகி வந்த உதயதாரகை இப்போது வெளிவருவதில்லை.

உதயதாரகை வெளியாவதில்லை என்பதால் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தொடங்கப்பட்ட இன்னொரு கிறிஸ்தவப் பத்திரிகையான பாதுகாவலனே இப்போதும் வெளியாகிக் கொண்டிருக்கும் ஆகப்பழைய பத்திரிகை ஆகும். கத்தோலிக்கத் திருச்சபையால் 1876 பெப்ரவரி 19ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட கத்தோலிக்க பாதுகாவலன், சத்தியவேத பாதுகாவலன், கத்தோலிக்க பாதுகாவலன் போன்ற பெயர்களிலும் தமிழ் ,ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் சிலகாலமும் தமிழ், ஆங்கிலப் பதிப்புக்கள் தனித்தனியாகச் சிலகாலமும் எனப் பலவிதமான மாற்றங்களைக் கண்டு வந்த பத்திரிகை ஆகும்.

1990 களில் பாதுகாவலன் எனும் பெயரில் புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் அச்சாகி வெளியாகிக் கொண்டிருந்த இந்தப்பத்திரிகை வார இதழாக இருந்து 1991 முதல் இரு வாரங்களுக்கு ஒரு இதழாக வெளியாகி வந்தது. அக்கால யாழ்ப்பாணத்தின் காகிதத் தட்டுப்பாடு அதற்கான காரணமாக இருக்கலாம்.

பாதுகாவலன் பத்திரிகையும் கத்தோலிக்கத் திருச்சபை சார்ந்த பல்வேறு செய்திகளை வெளியிட்டு வந்தது. பொதுவான ஏனைய செய்திகள் மிக அரிதாகவே வெளியாகின. காவலன் கண்மணிகள் என்ற சிறுவர் பகுதியும் இளைஞர் உலகம் பகுதியும் வெளியாகின. எம் கருத்து மற்றும் ஆசிரியத் தலையங்கம், மதச் செய்திகளைத் தாங்கியதாகவே அமைந்தன. பாதுகாவலனில் மதம் சார்ந்த இலக்கிய ஆக்கங்களாகக் கவிதைகள், சிறுகதைகளுடன் கட்டுரைகளும் வெளியாகின.







நூறாண்டு கண்ட மூன்றாவது பத்திரிகையாக அமைந்தது சைவ பரிபாலன சபையினரின் இந்து சாதனம் ஆகும். 1889இல் தொடங்கப்பட்ட இந்து சாதனம் ஆங்கிலத்திலும் தமிழிலுமாக இரு மொழிகளிலும் தனித்தனியாக வெளியாகத் தொடங்கியிருந்தது.

1990களில் இந்து சாதனம் மிகக் கூடிய பகுதிகளைத் தமிழில் கொண்டு தமிழ்ப் பத்திரிகையாக வெளிவந்தது. சிறியபகுதிகள் ஆங்கிலத்தில் இடம்பெற்றன. சைவ சமயம் சார்ந்த கட்டுரைகள், செய்திகள், தகவல்களைக் கொண்டதாக இந்துசாதனம் அமைந்தது. சைவ பரிபாலன சபையினர் நடத்திய தேர்வுகள் போன்ற செய்திகளும் இந்து சாதனத்தில் இடம்பெற்றன.

இந்து சாதனம் இதழ்கள் சரிவர ஆவணப்படுத்தப் படாமையினால் அவற்றின் உள்ளடக்கம் தொடர்பில் விரிவாக அலச முடியாதுள்ளது.

> **துணிச்சலாகவும் வெளிப்படையாகவும் செய்திகளை வெளியிட்ட முரசொலி குறுகிய காலத்தில் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்தது. 1987இல் இந்திய இராணுவத்தின் தாக்குதலுக்கு இலக்காகியது.**

இந்து சாதனம் 130 ஆண்டுகளைக் கடந்து இப்போதும் வெளியாகின்றமை குறிப்பிடத்தக்கது. பத்திரிகை வடிவத்தில் இல்லாமல் சஞ்சிகை வடிவத்திலேயே இந்து சாதனம் இப்போது வெளியாகிறது. அவ்வகையில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தொடங்கப்பட்ட இரண்டு பத்திரிகைகள் இப்போதும் தொடர்ந்து வெளிவருவது குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

நாளாந்த செய்திப் பத்திரிகைகள் என்ற வகையில் ஈழநாடு, உதயன், முரசொலி ஆகியவற்றுடன் ஈழநாதமும் இணைந்து கொண்டது. இவற்றில் உதயன் தொடர்பாகக் கடந்த வாரம் விரிவாகப் பார்த்திருந்தோம். உதயனுக்கு அடுத்ததாக யாழ்ப்பாணத்தில் தொடங்கப்பட்ட நாளிதழ் முரசொலி ஆகும். அவ்வகையில் யாழ்ப்பாணத்தின் ஐந்தாவது நாளிதழாக அது அமைகிறது. எஸ். திருச்செல் வத்தை ஆசிரியராகக் கொண்டு 1986 நவம்பர் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முரசொலியின் முதலிதழ் வெளியானது. திருச்செல்வம் ஏற்கனவே ஈழநாடு, ஈழமுரசு ஆகிய பத்திரிகைகளில் பணியாற்றியிருந்தார்.

உண்மை, நேர்மை, துணிச்சல் ஆகியவைகளைத் தனது ஆயுதமாகக் கொண்டதாகத் தமிழ்ப் பத்திரிகை உலகின் ஒரு விடிவெள்ளியாகப் பிரகடனப்ப டுத்தி வெளியாகத் தொடங்கிய முரசொலி "தொடரப்போகும் போராட்டத்தில் சகலரையும் பங்காளிகளாக்கும் பெரும் பணியினைத் தனது தலைமேற் கொண்டு தமிழ் பிரதேசம் முழுதும் நாதம் எழுப்பும்" நோக்கத்தைக் கொண்டதாக அறிவித்துக் கொண்டு தொடங் கப்பட்டது.

துணிச்சலாகவும் வெளிப்படையாகவும் செய்திகளை வெளியிட்ட முரசொலி குறுகிய காலத்தில் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்தது. 1987இல் இந்திய இராணுவத்தின் தாக்குதலுக்கு இலக்காகியது. 1989 மே மாதத்தில் முரசொலி ஆசிரியர் திருச்செல்வத்தின் மகன் இந்திய இராணுவத்துடன் சேர்ந்தியங்கிய தமிழ் துணை இராணுவக் குழுவொன்றால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சித்திரவதையால் இளைஞர் ஒருவரது வயிற்றுக்குள் செலுத்தப்பட்டிருந்த கொக்கக்கோலாப் போத்தல் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை மூலம் அகற்றப்பட்ட செய்தியை முரசொலி வெளியிட்டமையைத் தொடர்ந்து முரசொலி ஆசிரியரைத் தேடிச் சென்றோர், அவர் கிடைக்காததால் அவரது மகனைக் கடத்திச் சென்று கொலை செய்திருந்தனர். இதனைத் தொடர்ந்து திருச்செல்வம் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறிப் பின்னர் கனடாவில் தஞ்சமடைந்தார்.

அதன் பின்னர் சில மாதங்கள் வெளியாகிப் பின்னர் தடைப்பட்ட முரசொலி இந்திய இராணுவம் வெளியேறியதைத் தொடர்ந்து 1990 பெப்ரவரி 5ஆம் திகதி முதல் மீண்டும் வெளியாகத் தொடங்கியது. ஆயினும் மேலும் சில ஆண்டுகளே முரசொலி வெளியானது. நான்கு முதல் ஆறு பக்கங்களில் வெளியான முரசொலியில் பெரும்பாலும் செய்திகளும் அவ்வப்போது கட்டுரைகளும் வெளியாகின. கடதாசித் தட்டுப்பாடு காரணமாகக் கோடிட்ட அப்பியாசக் கொப்பித் தாள்களிலும் மட்டைகளிலும் கூட முரசொலி அச்சாகியுள்ளது.




1995ஆம் ஆண்டின் இடப்பெயர்வுக்குப் பல காலத்துக்கு முன்னரேயே முரசொலி வெளியாகாது நின்றுவிட்டது. 1992 இல் முரசொலி வெளியானதை உறுதிப்படுத்த முடிகிறது. ஆனால் குறிப்பாக எப்போது அது நிறுத்தப்பட்டது என்பது தெரியவில்லை.

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)



# குளத்தைச்....

இந்தச் சுற்றுலா மை யத்தை அமைப்பதற்கு குளத்தின் கீழான கமக்காரர் அமைப்பிடமோ,சுற்றுச்சூழல் அதிகாரசபையிடமோ, முறையான அனுமதி பெற்றுக்கொள்ளப்படவில்லை.
அத்துடன் குளத்தின் ஒரு பகுதிக்கு மண்ணை நிரவும் செயற்பாட்டுக்கும் உரியமுறையில் அனுமதிகள் பெற்றுக்கொள்ளப்படவில்லை என்று கமக்காரர் அமைப்பினர் குற்றம் சாட்டுகின்றனர். எனினும் நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் நகரசபை என்பவற்றுக்கு இடையிலான புரிந்துணர்வின் அடிப்படையில் ஒரு திட்டம் உருவாக்கப்பட்டு அதனை அமைப்பதற்கான பொறுப்புக்கள் நீர்ப்பாசனத் திணைக்களத்தால் நகரசபையிடம் வழங்கப்பட்டுள்ளன.

**முற்றுப்பெற முன்னரே...!**

அதனடிப்படையில் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சினால் 6 மில்லியன் ரூபா நிதி அந்தத்திட்டத்துக்கு ஒதுக்கப்பட்டு ,தனிநபர் ஒருவருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு அதன்பணிகள் முன்னெடுக்கப்பட்டுவந்தன.எனினும் எதிர்ப்புகளின் காரணமாக அதன் பணிகள் முற்றுப்பெறாதநிலையில், அவசரஅவசரமாக அந்தச் சுற்றுலாமையம் திறந்து வைக்கப்பட்டு படகுச்சவாரி உட்பட சிலசெயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு தற்போது இயங்கத் தொடங்கியுள்ளது.எனினும் உரியவகையில் இதற்கான அனுமதிகள் பெற்றுக்கொள்ளப்படவில்லை என்பதை குறிப்பிட்டு குளத்தின் கமக்காரர் அமைப்பினால் வவுனியா நீதிமன்றில் வழக்குதாக்கல் செய்யப்பட்டது.
ஆயினும் இந்த வழக்கை விசாரிப்பதற்கான நியாயாதிக்கம் அந்த நீதிமன்றத்துக்கு இல்லை என்றுசுட்டிக்காட்டப்பட்டு நீதிவானால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் இந்த விடத்துக்கு நீதி கோரி மேல் நீதிமன்றத்தை நாடவுள்ளோம் என்று கமக்கார அமைப்பை சேர்ந்தவர்கள் உறுதியாக நிற்கின்றனர்.

**சுற்றுலா மையம் தேவையா?**

வவுனியா மாவட்டத்தைப் பொறுத்தவரை சுற்றுலாமையம் ஒன்றின் தேவை அனைவராலும் உணரப்படுவதை மறுப்பதற்கில்லை. இதனால் வவுனியாக்குளத்தில் அமைக்கப்பட்டுள்ள, சுற்றுலாமையத்தை தமக்குக் கிடைத்த வரப்பிரசாதமாக கருதி பலர் வரவேற்றிருந்தாலும் , வேளாண்மைக்கு ஆதாரமான குளத்தை மண் கொண்டு நிரவி, உல்லாசப்பகுதியாக மாற்றியமைப்பது எதிர்காலத்தில் ஒரு பிழையான முன்னுதாரணமாக மாறிவிடும் என்றும் அவர்கள் அஞ்சுகின்றனர்.
குளத்தில் பயன்பாடில்லாத ஒரு பகுதியிலேயே சுற்றுலாமையம் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக மத்திய நீர்ப்பாசத் திணைக்களத்தின் உயர்அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். ,நகரத்துக் கழிவுகள் கொட்டப்படுகின்ற - போதைப்பொருள் பாவனையாளர்களின் உறைவிடமாக இருந்த - ஒரு பகுதியிலேயே சுற்றுலாமையம் அமைக்கப்பட்டுள்ளது என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டுச் சொல்லத் தவறவில்லை.
" ஏற்கனவே தனிநபர்களால் சிறுசிறு துண்டுகளாக அபகரிக்கப்பட்டுள்ள குளத்தின் பகுதி 50 ஏக்கருக்கும் அதிகமானது. ஒவ்வொரு காலப்பகுதியிலும் ஆக்கிரமிப்புக்குள்ளாகி குளம் சுருங்கி வரும் நிலையில் அங்கு இந்தச் சுற்றுலாமையத்தை அமைக்க வேண்டிய அவசியம் என்ன என்பதை அதிகாரிகளே தெளிவுபடுத்தவேண்டும். இந்தத் திட்டத்தினை முன்னின்றுசெயற்படுத்திய வவுனியா நகரசபை நிர்வாகம்,இவ்விடயத்தில் தொழில்நுட்ப ரீதியான அறிவையும், ஆலோசனைகளையும் பெற்று இந்தத் திட்டத்துக்கான இடத்தை மாற்றியமைத்திருக்க முடியும்.எனினும் அது நடக்கவில்லை.
இதேவேளை கடந்த வருட ஆரம்பத்திலேயே இதற்கான ஆரம்பக்கட்டப் பணிகள் முன்னெ டுக்கப்பட்ட போது , அமைதி காத்த நலன்விரும்பிகள், சுற்றுலாமையம் திறந்து வைக்கப்பட்ட பின்னர் எதிர்ப்பை வெளியிடுவதும்,வழக்குதாக்கல் செய்தமையும், எந்தவகையில் நியாயம் என்ற கேள்விகளும் எழாமலில்லை. எனினும் இந்தவிடயத்தில் நீதி நிலைநாட்டப்படவேண்டும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

**யார் பொறுப்பு?**

இன்றைய உலகில் , நீரின் தேவை அதிகரித்துள்ளது. நிலைமை இப்படியிருக்க, குளங்களுக்குள் கட்டடங்களை அமைத்து எதனை நாம்சாதிக்கப்போகின்றோம்? இருக்கும் வளங்களையும் பாதுகாக்காமல் இல்லாமல் செய்துவிட்டு எதனை நாம் அனுபவிக்கப்போகின்றோம்? வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் குளங்களும்,ஏரிகளும் அதிகார வர்க்கத்தின் துணையோடு, தனியாரால் ஆக்கிரமிக்கப்பட்டு அங்கு கட்டடங்கள் எழுப்பப்படுகின்றன.இது போன்ற செயற்பாடுகளால் .நீர்த் தேக்கங்கள்,குளங்கள் என்பவற்றில் நீர் போதி அளவு இல்லாமையினால் நிலத்தடிநீரும் வற்றிவிடுகின்றது. இறுதியில் உற்பத்தியில் வீழ்ச்சி, உணவுத்தட்டுப்பாடு, வறட்சி என்பன வரிசையாக வரத்தொடங்கும்.
எனவே பொழுதுபோக்குக்காகவும்,,களியாட்டங்களுக்காகவும், உல்லாசங்களுக்காகவும் எமது நீர்வளத்தை தாரை வார்த்துவிட்டு, எமக்கு நாமே முடிவுரை எழுதுவது போன்ற முட்டாள்தனம் வேறொன்றுமில்லை. வளங்களை நேசிப்பது மட்டுமல்ல, அவற்றைப் பாதுகாப்பதும் அவசியம். இது கடமை மட்டுமல்ல,எமது பொறுப்பும்கூட.



1. சஞ்சீவியில் பிரசுரமாகும் படைப்புகளில், மாணவர் கழகத்தில் அங்கத்துவம் வகிக்கும் மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2. மாணவர்கள் தமது படைப்புக்களை அனுப்பும்போது தமது அங்கத்துவ இலக்கத்தை தவறாது குறிப்பிட்டு அனுப்பவும்.
3. மாணவர் கழக அங்கத்தவர்களுக்கு எதிர்பாராத பரிசுகளும் சிறப்புச் சலுகைகளும் வழங்கப்படவுள்ளன. (இது தொடர்பான விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்)

## மாணவர் கழகம்

சஞ்சீவி

**மாணவர் கழகம்**

1. முழுப்பெயர்: ....................................................
2. முகவரி: ....................................................
....................................................
3. பிறந்த திகதி: ....................................................
4. கல்வி கற்கும் பாடசாலை: ....................................................
5. கற்கும் தரம்: ....................................................
6. தொலைபேசி இலக்கம்: ....................................................

.............................. ..............................
மாணவர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

அனுப்ப வேண்டிய முகவரி:
**உதயன் சஞ்சீவி**
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

0773165555



## வித்தியாசம் காண்போம்





# பச்சைக் குதிரை

சிறுவர்கள் பச்சைக் குதிரை, பம்பரம், கிட்டிப்புள், பந்து, கோலிக் குண்டு, புளிய முத்து, கபடி, கள்ளன் பொலிஸ் போன்ற விளையாட்டுகளில் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றனர். அந்த வகையில் பச்சைக் குதிரை விளையாட்டு எவ்வாறு ஆடப்படுகிறது என்று பார்ப்போம்.

**பச்சைக் குதிரை**

விளையாட்டின் தொடக்கத்தில் பட்டு வருபவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்வர். பட்டு வருபவர் காலை நீட்டித் தரையில் குறுக்காக அமர்ந்து கொள்ளவேண்டும். விளையாட்டில் பங்குகொள்ளும் ஏனைய சிறுவர்கள் நீட்டிய காலில் படாமல் குதித்துத் தாண்ட வேண்டும். பின்னர் கால் மேல் கால், கால் மேல் கை, கை மேல் கை என்று அமர்ந்திருப்பவர் உயரத்தைக் கூட்டிக்கொண்டே வருவார். அந்த உயரங்களையும் தாண்டிவிட்டால், அமர்ந்தவர் எழுந்து குனிந்து நிற்பார். அதையும் அவர் முதுகில் கை ஊன்றித் தாண்ட வேண்டும். அதிலும் உயரம் கூடிக் கொண்டே போகும். எவரால் குறிப்பிட்ட உயரத்தைத்தாண்டமுடியவில்லையோ அவர் தோற்றவராகக் கருதப்படுவார். தோற்றவர் தரையில் அமர்ந்து காலை நீட்ட வேண்டும். மறுபடியும் ஆட்டம் தொடரும், சிறுவர்களது உடற்திறனைக் காண்பதற்குரிய விளையாட்டாக இது அமையும். நவீன விளையாட்டுகளில் ஒன்றான உயரத் தாண்டுதல் என்ற விளையாட்டு இதனை ஒத்ததாகும்.



# வித்துவான் பதில்கள்





01

**டியர் வித்தா,திருமணத்துக்கு முன்பு செய்த உதவியை மறக்காதவர் திரும ணம் செய்த பின் மறப்பது ஏன்?**

அபிநயா, மாங்குளம்.

தமிழ் இலக்கண நூல்கள் திருமணத்துக்கு முன் செய்வதைக் களவு என் றும், பின் செய்வதைக் கற்பு என்றும் கூறுகின்றன. எந்தவித பொறுப்பும், உரிமையும் இல்லாத நிலையில் ஆபத்துக் காலத்தில் கிடைக்கிற 'கை உதவிகள்' அவை. கள்ள மாங்காய் இனிக்கும் தானே. இனித்தது மறக் காது. திருமணத்துக்குப் பின்னர் உரிமையும் பொறுப்பும் வந்த பின்னர் எல்லாம் 'வீட்டுச் சாப்பாடு'தானே. எப்ப சாப்பிட்டால் என்ன? சாப் பிடா விட்டால் தான் என்ன? அதன் பின்னர் என்னதான் நினைவில் இருக்கும்.அதனால் தன இப்படி மறதி போலும்

02

**அன்பின் வித்தா, மனைவி பிள்ளைகள் பட்டினி கிடந்தா லும் குடிப்பதற்கு முதலிடம் கொடுப்பவர்கள் பற்றி கூறுங்களேன்?**

எஸ். வாகீசன், மன்னார்.

இவர்கள் மதுவுக்குப் பின் னர்தான் மாது என்று நினைக்கிறார்கள். மாதுவே பின்னடையும் போது மாதுவிலிருந்து வந்த பிள்ளைகளும் முக் கியத்துவம் இழக்கின்ற னர். சர்வம், சக்திமயம் என்பது போல சர்வமும் தண்ணிமயம் தான் என்று தம்மை மறந்து அழிந்தே போகின்றனர்.

## சர்வம் சக்திமயம் என்றதுபோல சர்வமும் தண்ணிமயம்!!

03

**வித்துவானே! பாடசாலைகள் கல்வித் தெய்வம் வாழும் ஆலயங்கள் என்பார் கள். ஆனால் தமிழர் பகுதிகளிலே பல சிறிய பாடசலைகள் மூடப்படும் அபாயத் தில் உள்ளனவே என்ன காரணம்?**

க.தவநேசன், கைதடி.

தமிழ்க் குடும்பங்கள் ஒன்றிரண்டு பிள்ளைகளுடன் தங்கள் 'கர்ப்பக்கிரகங் களுக்கு' மூடு விழாச் செய்வதால் கல்வி தரும் ஆலயங்களும் மூடு விழாக் காண உள்ளன.





**நீங்களும் கேட்கலாம் கேள்விகள்**

உங்கள் கேள்விகளை எழுதி அனுப்புங்கள்

வித்துவான் பதில்கள்

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

---



# புதிர்மலை மர்மங்கள்

புதிர் 15

மாயன்

இளஞ்சந்திரனுக்கு 'திக்' கென்றிருந் தது. அவன் சற்றும் எதிர்பார்க்க வில்லை இப்படி நடக்குமென்று. ஆனாலும் புத்திசாலித்தனமாக அவன் செய்த காரியம், அவனை உடனடி யாகக் காப்பாற்றியது. சவேந்திராசுரனின் கை தன்னில் பட்டதுமே, ஆபத்தை உணர்ந்து கொண்ட இளஞ்சந்திரன் கண்களை இறுக மூடிக் கொண்டான். ஏனெனில் சவேந்திராசுரனின் உரு வத்தை கண்ணால் பார்த்தால், அடுத்த நொடியே கண்பார்வை பறிபோய்விடுமென்று உணவுக்க டைப் பெண்ணான தமிழினி சொன்னது அவ னுக்கு நன்றாக நினைவில் இருந்தது. இப்படிக் கண்ணை மூடியதால், சவேந்திராசுரன் தன்னை என்ன செய்கிறான் என்பதை அவனால் அறிய முடியவில்லை. ஆனாலும் நடப்பது நடக்கட் டும் என்று நினைத்தவனாக , இடையில் சொரு கப் பட்டிருந்த வாளை கையில் எடுத்துக் கொண் டான்..

சவேந்திராசுரனுக்கோ இளஞ்சந்திரனின் செயற் பாடுகள் ஆச்சரியத்தை உண்டுபண்ணின. வழக் கமாக அவன் கையில் மாட்டியவர்கள் உயிர்ப்ப யத்தில், கைகூப்பித் தொழுதபடி கெஞ்சுவார்கள். அப்போது சவேந்திராசுரனை அவர்கள் பார்த்து விடுவதால், கண்பார்வையை இழந்துவிடுவர். அதன்பின் சாவதானமாக அசுரன் அவர்களை மென்று சாப்பிடுவான். அப்படியிருக்கையில், தன்னுடைய சக்தி என்னவென்பதை உணர்ந்து கொண்டு, முன்னெச்சரிக்கையாக கண்களை மூடிக் கொண்டதோடு, போருக்குத் தயாரானது போல வாளையும் கையில் பிடித்தபடி இருக்கும் இளஞ்சந்திரனைப் பார்க்க அசுரனுக்கு வியப் பேற்பட்டது சகஜமே.

"அடேய் மானிடப்பதரே, சர்வ வல்லமை கொண்ட என்னை எதிர்க்கத் துணிந்துவிட்டாயா? உனக்கு என்ன துணிச்சல்?" என்று இடிமுழங்கும் குரலில் கர்ஜித்தான் சவேந்திராசுரன்.

இளஞ்சந்திரனின் மூளை துரிதகதியில் வேலை செய்தது.

இவ்வளவு நேரம் என்னைக் கொல்லாமல் வைத் திருப்பதில் இருந்து, எதையோ என்னிடம் அறிய முற்படுகின்றான் போலும் என்று எண்ணியவ னாக,

" சவேந்திரசுரா, எனக்கு பயமென்பதே கிடை யாது. ஆனால் பாவம் உன்னை நினைத்தால் தான் பாவமாக இருக்கிறது. இப்படி வசமாக வந்து சிக்கிக் கொண்டாயே. உன் பலவீனம் எங்களுக் குத் தெரியும். அதைவைத்து உனக்கு ஆட்டம் காட்டத்தான் இங்கே வந்தோம்" என்று வாய்க்கு வந்ததையெல்லாம் சொல்லத் தொடங்கினான். அசுரனுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஆனால் 'எங்களுக்கு', 'வந்தோம்' என இளஞ்சந்திரன் பன் மையாகச் சொன்னதன் மூலம், அவன் மட்டுமல் லாது இன்னும் சிலரும் அவனோடு கூட வந்துள் ளார்கள் என்று அவன் யூகித்தான்.




"இப்படித் துணிச்சலாகக் கதைப்பவன் நிச்சயமாக தானாக வந்து சிக்கியிருக்க மாட்டான். அத் தோடு என் பலவீனம் வேறு தெரியுமென்று சொல்கிறான். ஒருவேளை இவன் வைத்த பொறி யில் நாம் சிக்கிவிட்டோமோ?" என்று எண்ணிய வனாக, " பொய் சொல்லாதே மானிடா, என் பலவீனம் தெரிந்திருந்தால் அதை என்னவென்று சொல் பார்ப்போம்"

என்று அசுரன் கேட்டான்.

" அதை அவ்வளவு இலகுவில் சொல்லமுடியாது. முதலில் நான் ஒரு புதிர் சொல்கிறேன்,அதற்கு சரியான விடையளித்தால் உன் பலவீனம் என்ன வென்பதை நான் சொல்கிறேன். சம்மதமா?". என்று இளஞ்சந்திரன் கேட்டான், அசுரனும் சம் மதித்தான். இளஞ்சந்திரன் சொன்ன புதிர் என்ன?

(புதிர்கள் தொடரும்)



பாகம்
16

ந.பரமேஸ்வரன்

# யாழ். மாநகர சபையின் வரலாறு

(1906 - 1949)

ஜூன் 1939 யாழ்ப்பாணத்திற்கு மாநகரசபை தேவையில்லையென வரி செலுத்துவோர் சங்கம் நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் கண்டனக்கூட்டமொன்றை ஏற்பாடு செய்திருந்தது.
தற்போது புகையிலை உற்பத்தி, ஏற்றுமதி என்பவை வெகுவாக வீழ்ச்சியடைந்துள்ளன தற்போது அறவிடப்படும் வரியையே செலுத்துவது சிரமமாக உள்ளது.
இந்த நிலையில் மாநகரசபை உருவாக்கப்பட்டு வரிகள் அதிகரிக்கப்பட்டால் எம்மால் ஒன்றும் செய்ய முடியாது என உள்ளூராட்சி அமைச்சருக்கு கடிதம் அனுப்புவதென தீர்மானிக்கப்பட் டது.
யாழ்ப்பாணத்திற்கு மாநகரசபை தேவையில்லையென வரி செலுத்துவோர் சங்கம் கூட்டங்களை நடத்தியதுடன் 1941 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திற்கு மாநகர அந்தஸ்து வழங்குவது என்ற தீர்மானத்தையும் ஒத்திவைக்குமாறு உள்ளூராட்சி அமைச்சருக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பியது.
ஒகஸ்ட் 1939 - யாழ்ப்பாண மாவட்ட உள்ளூராட்சிசபையில் யாழ்ப்பாணத்தை மாநகர அந்தஸ்திற்கு தரமுயர்த்தும் விடயத்தை ஒத்தி வைக்குமாறு உள்ளூராட்சி அமைச்சரை கோருவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
இதே இதே வேளை வரி செலுத்துவோர் சங்கம் கொழும்பு சென்று உள்ளூராட்சி அமைச்சரை சந்தித்து யாழ்ப்பாணத்தை மாநகர அந்தஸ்திற்கு தரமுயர்த்தும் விடயத்தை 1944 ஆம் ஆண்டுவரை ஒத்திவைக்குமாறு கேட்டுக்கொண்டது.உள்ளூராட்சி அமைச்சருடனான சந்திப்பின் போது சட்டசபை உறுப்பினர் மகாதேவாவும் உடனிருந்தார்.
இந்த மகஜரில் வரி செலுத்துவோர் 3578 பேர் ஒப்பமிட்டுள்ளனர் முன்னைய மகஜரில் 4640 பேர் ஒப்பமிட்டுள்ளனர் என்றார் மகாதேவா .
இதற்குப்பதிலளித்த அமைச்சர், தான் யாழ்ப்பாணம் வரும் போது இது பற்றி பேசலாம் என்றார். அமைச்சரின் யாழ்ப்பாண விஜயம் இடம்பெறும் வரையும் இது பற்றி எந்தவித தீர்மானமும் எடுக்க வேண்டாமென வரி செலுத்துவோர் சங்கம் அமைச்சரைக்கேட்டுக்கொண்டது.

**21.10.1939**

உள்ளூராட்சி அமைச்சர் பண்டாரநாயக்கா தலைமையில் நான்கு பேர் கொண்ட குழுவினர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து யாழ். மாவட்ட நகரசபை வட்டாரங்களனைத்திற்கும் விஜயம் செய்து மக்களை சந்தித்து மக்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.
அப்போது மக்கள் யாழ்ப்பாணத்திற்கு மாநகர அந்தஸ்து தேவையில்லையென அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர்.
பின்னர் வரி செலுத்துவோர் சங்கம் நகர மண்டபத்தில் வைத்து அமைச்சரைச் சந்தித்தது. அப்போது அமைச்சர்
"நீங்கள் எதற்காக யாழ்ப்பாணத்திற்கு மாநகர அந்தஸ்து தேவையில்லை என கூறுகிறீர்கள்? கண்டி, காலி நகரங்களைப்பாருங்கள் அவற்றுக்குஎப்போதோ மாநகர அந்தஸ்து கிடைத்து விட்டது; இருநகரங்களும் இப்போது முன்னேற்றம டைந்துள்ளன.
யாழ்ப்பாணம் ஒரு சரித்திரப் பிரசித்தி பெற்ற நகரம்; நாட்டிலுள்ள முன்னணி சமூகங்களில் ஒன்றின் தலைநகரம். மிகவும் அவதானமாக தீர்மானம் எடுக்க வேண்டிய தருணமிது. உங்களுக்கு இன்னொரு சந்தர்ப்பம் தருகிறேன் தீர்க்கமாக யோசித்து முடிவெடுங்கள்.
இப்போது யுத்தம் (உலகயுத்தகம்) நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எனவே நீங்கள் ஆறுதலாக யோசித்து ஒரு தீர்க்கமான முடிவை எடுங்கள் "என அமைச்சர் பதிலளித்தார். *(தொடரும்)*



பொக்கிசன்

மத்தியானம் சாப்பிட்டிட்டு போய், சிறாப்பர் மட குந்திலை படுத்தன். இந்த மத்தியான வெயிலுக்கு இந்தக் குந்திலை படுத்தா எங்களை அறியாமலே நித்திரை வரும். கீரிமலைச்சந்தியிலை கிடக்குது இந்த மடம். சுத்த வர மலைவேம்பு மரங்கள் நிக்குதுகள். கீரிமலைச்சந்தி ஒரு நாற்சந்தி. நாலு பக்கத்தாலை வாற ஆக்களும் வந்து தங்கக்கூடிய மாதிரித்தான் மடம் கட்டிக்கிடக்கு. காரைநகர் பக்கம் இருந்தும், பருத்தித்துறைப் பக்கமிருந்தும், இஞ்சாலை அளவெட்டி, பன்னாலை பக்கமிருந்தும் கே.கே.எஸ். றோட்டாலையும் ஆக்கள் சுகமா வரக்கூடிய மாதிரித்தான் நல்ல ஸ்பொட்டிலை கட்டிக்கிடக்கு. கீரிமலையிலை எல்லாமா பதினொரு மடங்கள் இருக்குது.
கீரிமலைக்கு அந்திரட்டி செய்ய வாற ஆக்கள் தாங்கள் அந்திரட்டி செய்து போட்டு இருந்து சமைச்சு சாப்பிட்டிட்டு போறதுக்கெண்டு ஒவ்வொரு சாதிக்காரரும் தங்களுக்கென்று மடங்களை கட்டியிருக்கினம். அதை விட பொதுவான மடங்களும் கிடக்குது. வைத்திலிங்கம் மடம் பக்கத்தில கிடக்கு ,கிருஷ்ண பிள்ளை மடம் சிவன் கோயில் மேற்கு வீதியிலை கிடக்கு மிச்ச மடங்களெல்லாம் ஊர் ஆக்களின்ரை ஆக்கிரமிப்பிலை வந்திட்டுது.
ரண்டு கிடுகு வண்டிலுகள் வாசலிலை நிக்குதுகள். வண்டி லிலை லாம்பும் தொங்குது. மாடுகளுக்கு வைக்கல் போட்டுக்கிடக்கு. மாடுகள் வைக்கலை திண்டு கொண்டு படுத்திருக்குதுகள். உந்த வண்டில் ரெண்டும் ராத்திரி பருத்தித்துறை பக்கமிருந்து வந்ததுகள், காரைநகர் பக்கமா போகுதுகள். இனி மதியத்துக்குப் பிறகு தான் வண்டில்காரர் வெளிக்கிடுவங்கள். அங்காலை ஆரோ வந்து மோர் குடிச்சிட்டுப் போகினம்.நான் முந்தி நகுலேஸ்வராவிலை படிக்






கேக்கை இங்கை வந்து மோர் குடிச்சிட்டுத்தான் வீட்டை போறனான். ஜெகநாதன் தான் மோர் கரைச்சு வைக்கிறது .சித்திர மேழியிலை போய் தயிர் வாங்கி வந்து ஒவ்வொரு நாளும் மோர் கரைச்சு வைக்க வேணும். அதோடை ஆடு மாடுகளின்ரை தண்ணித் தொட்டிக்கும் தண்ணி இறைக்க வேணும். அதுக்கு அவருக்குச் சம்பளம். மனேச்சர் தன்ரை அறைக்குள்ளை நித்திரை.உந்த மனேச்சர் ஆரேன் வெள்ளைக்காரர் வந்து தங்கினா காசு வேண்டுறவர். அதாலை நான் ஆரேன் வெள்ளைக்காரர் வந்தா சொல்லிப் போடுவன் ,இஞ்சை பிரீயா தங்கலாமெண்டு. சைவமும், மனிசியும் இருந்து கதைச்சுக்கொண்டிருக்கினம்; சைவம் தான் மடத்துக்குள்ளை கிடக்கிற பிள்ளையாருக்கு பூசை பண்ணுறது. அதோடை மடம் பராமரிக்கிறதும் சைவம் தான். ஆரோ ஒரு மனிசன் வந்து மடத்தில தங்கியிருக்குது. அந்தாளுக்கு காலிலை ஏதோ தோல் வருத்தம். கீரிமலைக் கடலிலை குளிச்சா வருத்தம் மாறுமெண்டு ஆக்கள் ,சொன்னவையாம். அதாலை வந்து மடத்திலை தங்கியிருக்கிறார். ஒவ்வொரு நாளும் காலமை வெள்ளனப் போய் குளிச்சிட்டு வருவார். இந்த மடத்தைக்கட்டின கதிரவேலு சிறாப்பர் ,மடத்தைப் பராமரிக்கிறதுக்கெண்டு எக்கச்சக்கமான காசு எப். டியிலை போட்டிருக்கிறாராம். அதிலை வாற வட்டிக்காசை எடுத்துதான் மடத்தைப் பராமரிக்க வேணும். மனேச்சரின்ரை வேலை அது தான், ஆனால் முதல்ல கை வைக்கேலாது. கதிரவேலு சிறாப்பர், மத்தியானம் சாப்பிட்டிட்டு ஊர் ஆட்களை கூப்பிட்டு வைச்சு காட்ஸ் விளையாடுறவ ராம்; ஒரு நாள் விளையாடிக்கொண்டிருக்கேக்கை சொன்னாராம்," அங்கை பாருங்கோ. பூந்தேர் வந்து நிக்குது. என்னை வரச்சொல்லி கூப்பிடுகினம் .நான் போகப்போறன்" எண்டு. மற்றவை வானத்தை அண்ணாந்து பார்த்திருக்கினம். அவைக்கு ஒண்டும் தெரியேல்லை. ஆனால் சிறாப்பர் அப்பிடியே நிலத்திலை சரிஞ்சிட்டாராம் எண்டு அம்மா அடிக்கடி சொல்லுவா.

கீரிமலைச்சந்தியிலை கிடக்குது இந்த மடம். சுத்த வர மலைவேம்பு மரங்கள் நிக்குதுகள். கீரிமலைச்சந்தி ஒரு நாற்சந்தி. நாலு பக்கத்தாலை வாற ஆக்களும் வந்து தங்கக்கூடிய மாதிரித்தான் மடம் கட்டிக்கிடக்கு. இந்த மத்தியான வெயிலுக்கு இந்தக் குந்திலை படுத்தா எங்களை அறியாமலே நித்திரை வரும்.

நீங்களும் எழுதலாம்

• சிறுகதை
• கவிதை
• கட்டுரை
• பத்தி எழுத்து
• ஓவியம்

உங்கள் படைப்புக்களும் சஞ்சீவியில் பிரசுரமாக வேண்டுமா?

எதுவானாலும் அனுப்பி வையுங்கள். தரமானவற்றை பிரசுரிக்க
சஞ்சீவி
காத்திருக்கிறது.

அனுப்ப வேண்டிய முகவரி:
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு
0773165555

# தேடிக்கொண்டிருக்கிறேன்

○ அவந்தி

'அது' தொலைந்து விட்டது!!

சிதறிக்கிடந்த பொருட்களின் மத்தியில் நான் அதை இன்னமும் தேடிக்கொண்டிருக்கின்றேன். எப்போது தேடத்தொடங்கினேன் எனச் சரியாக ஞாபகம் இல்லை ,ஆனால் பலமணிநேரமாகத் தேடிக் கொண்டிருக்கின்றேன் . சுவாமி அறை முதற் கொண்டு சமையலறை வரை எல்லா இட மும் தேடிக் களைத்து விட்டேன். இருப்பினும் அதைக்காணவில்லை அது எங்கே போயிருக்கும் ? ?

ஒரு வேளை ஆதிரன் எடுத்திருப்பானோ?

சீ.இருக்காது , ஆறே வயது நிரம்பிய அவனது கைகளுக்கு எட்டாத இடத்தில் தானே அதை எப்போதும் வைப்பேன். அவனும் இல்லை என்றால் வேறு யார் அதை எடுத்திருப்பார்கள்..!

"ஒருவேளை.......ராஜ்?"

ராஜ் தான்,என்னுடன் விளையாடும் பொருட்டு அதை எடுத்து ஒளித்து வைத்தானோ? இருக்கலாம் .. அவன் இதேமாதிரியான குறும்புச்செயல்களை திருமணம் செய்த தொடக்கத்திலிருந்தே செய்து வருகின்றான். ஒருவேளை அவனே அதை எடுத்திருக்கலாம். அவனிடமே கேட்டுவிட வேண்டியதுதான்.

"ராஜ், நீ அதைக்கண்டாயா ? அல்லது எங்கேனும் ஒளித்து வைத்திருக்கின்றாயா? ராஜ்..பதில் கூறு"

இவன் எப்போதும் இப்படித்தான் ! நான் கூப்பிட்டகுரலுக்கு பதிலளிக்காமல் இருந்து விடுவான். ஆனால்,காதலித்த காலங்களிலெல்லாம் இப்படி இல்லையே! பெரியதும் சிறியதுமாக வளர்ந்திருந்த தென்னைகளுக்கு இடையில் முதன்முதலாக அவன் என்னையும், நான் அவனையும் பார்த்தபோது , அவன் கண்களாலேயே எனக்கு சொன்னானே ! "நீ எங்கிருந்து அழைத்தாலும் ,அடுத்தநொடி நான் உன் அருகில் இருப்பேன்" என்று .

இப்போது நினைத்தாலும் வெட்கம் கன்னக்குழி வரை வருகின்றது. ஆனால் இப்போதெல்லாம் நான் அழைத்தால் அவன் பெரிதாகக் கண்டு கொள்வதேயில்லை. இருக்கட்டும்.இருக்கட்டும் இதற்கெல்லாம் சேர்த்து ஒரு நாள் 'வைச்சுச் செய்துவிட' வேண்டியதுதான். மீண்டும் அதைத் தேடத்தொடங்கினேன் .. ம்கூம்!

இன்னும் அதைக் கண்டுபிடித்தபாடில்லை.

மறந்தே போனேன். வீட்டின் பின்புறத்தில் தான் ராஜ்ஜின் அலுவலக அறை. ஒருவேளை அங்கு அது இருக்கலாம்.இந்த அறைக்கதவு வேறு, முழுப்பலத்தையும் கொண்டு தள்ளினால் தான் திறபடும். இதோ திறந்தாகி விட்டது. இந்த அறைக்கும் எனக்குமான உறவு எவ்வளவு அழகியது. அவனும் நானும் இணைந்து கட்டிய இவ்வீட்டில் அவனது பாதி நேரம் இங்கேயே கழிந்துவிடும். எங்களின் பேரன்பின் மொழி இந்த அறை முழுவதும் நிறைந்திருக்கும். இப்போதும் அவை என்னை இன்னொரு உலகுக்கு அழைத்துச் செல்வதைப் போல இருக்கின்றது. அதைத் தேடி எடுத்துவிட்டு, இன்றும் அவனோடு இந்த அறையின் சுகத்தை அனுபவிக்க வேண்டும்.

இங்கு கூட அதைக்காணவில்லையே! வேறு எங்கு அது போயிருக்கும்?


ஆதிரனின் புத்தகப்பையிலும் ஒரு தடைவை அதைத் தேடிப்பார்க்க வேண்டும்.

ஆ..என்ன இது ? இவனது புத்தகப்பை இவ்வளவு கனமாயிருக்கிறதே..ஆறு வயதுக்குழந்தைக்கு இத்தனை சுமையா ? அவனது பிஞ்சு உடல் தாங்குமா?

ஆதிரனின் பிறப்பின் போது நான் அடைந்த மகிழ்ச்சியை வர்ணிக்க வார்த்தைகளே இல்லையே..அவனைக் கையிலேந்திய அந்தத் தருணம்..அணில் குஞ்செனெ இருந்த அவனது உடலின் ஸ்பரிசம் என்னைப் புதுப்பிறப்பெடுக்க வைத்திருந்தது.இன்னமும் அவனை ஏந்திய கைகளில் குழந்தையின் ஈர உடலின் ஸ்பரிசம் போகமாட்டேனென அடம்பிடிக்கிறது.

என்ன இது ! இங்கு கூட அதைக்காணவில்லையே , அது எவ்வளவு முக்கியமானது என்று ஏன் எவருக்கும் புரியவில்லை? எல்லோருக்கும் அலட்சியம். மீண்டும்தேடத்தொடங்கினேன் அதை !!

"கவிநயா, பிள்ளை



கவிநயா !! வா பிள்ளை ! ரெண்டு நாளாச் சாப்பாடு தண்ணியில்லாமக் கிடக்கிறாய்.. கீழை உன்ர அப்பாவும் அம்மாவும் உன்னைப் பார்த்து அவையும் சாப்பிடேலை. எழும்பு ! வா! நடக்கக்கூடாதது நடந்து போச்சு! இனி அதை யோசிச்சுப் பிரியோசனமில்லை. , பஸ்ஸில அடிபட்டுப் பறிபோன உன்ர புருசனும் பிள்ளையும் திரும்பி வரப்போறதில்லை.எல்லாத்தையும் மறக்கப்பழகு.இந்தா உனக்கெண்டு சாப்பாடு போட்டுக்கொண்டு வந்திருக்கிறன், கொஞ்சமாச் சாப்பிடு"

நான் 'அதை' மும்முரமாகத்தேடிக்கொண்டிருக்க என்னை நோக்கி குரல் எழுப்பியவாறு என் அருகில் வந்தஅந்த உருவம் , திடீரென என் கையைப் பிடிக்கிறது.

"விடு என்னை. நான் 'அதை 'த் தேடிக் கொண்டிருக்கிறன். என்னை வந்து ஏன் குழப்பிறாய்? நீ அதைக் கண்டனியோ? சொல்லன், அதை... நீ.....கண்டனியோ?"

கேட்டுக்கொண்டே ஆவேசமாக அவளை நோக்கி முன்னேறினன். அவள் அலறியடித்துக் கொண்டு ஓடத் தொடங்கினாள்.

" அத்தை, அத்தை! அவளுக்கு பைத்தியம் ஆக்கீட்டுப் போல" என்று கூக்குரல் இட்டபடி ஓடத்தொடங்கினாள். விரித்துவிட்ட என் கூந்தலிலுள்ள இடைவெளிகளால் அவள் ஓடுவதைப் பார்க்க முடிந்தது. சிரிப்பு வந்தது. வந்த உடனேயே அது மறைந்தும் போனது. வெள்ளைச்சுவரில்தொங்கிக் கொண்டிருந்த இரு சோடிக்கண்களை பார்த்தபடி மீண்டும் 'அதை'த் தேடத்தொடங்கினேன். ஆனால் அந்த 'அது' எதுவென்றும் தெரியாமல் தேடிக்கொண்டிருக்கிறேன்.

விடு என்னை. நான் அதைத் தேடிக்கொண்டிருக்கிறன். என்னை வந்து ஏன் குழப்பிறாய்? நீ அதைக் கண்டனியோ? சொல்லன், அதை...நீ..... கண்டனியோ?
கேட்டுக்கொண்டே ஆவேசமாக அவளை நோக்கி முன்னேறினன். அவள் அலறியடித்துக் கொண்டு ஓடத் தொடங்கினாள்.

# அறிந்தும் அறியாமலும்

○ சுழியன்



## தாவலுக்குப் பஞ்சமில்லை

கைவிரிப்பு, கழுத்தறுப்பு, கட்சிதாவுதல் என பச்சோந்தி அரசியலுக்கே உரிய சில சம்பவங்கள் இலங்கை அரசியலில் விரைவில் அரங்கேறவுள்ளன. இதனால் கொழும்பு அரசியல் களம் பரபரப்பின் உச்சம் தொடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜனநாயகத்துக்கு சங்கு ஊதி சாவுமணி அடித்துவிட்டு, சர்வாதிகாரத்துக்கு சட்டபூர்வமாக அங்கீகாரம் வழங்கும் நோக்கில் முன்வைக்கப்பட்டுள்ள 20 ஆவது திருத்தச்சட்டமூலத்துக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் 39 மனுக்கள்தாக்கல்செய்யப்பட்டு அவை பரீசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

இந்நிலையில் 20 தொடர்பான உயர்நீதிமன்றத்தின் சட்டவியாக்கியானம் ஜனாதிபதிக்கும், சபாநாயகருக்கும் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் பிரதம நீதியரசரால் அனுப்பிவைக்கப்படும்.

இந்தத் தீர்ப்பு சபாநாயகரால் சபைக்கு அறிவிக்கப்பட்ட பின்னரே கட்சி தாவல்கள் இடம்பெறவுள்ளன என்று அறியமுடிகின்றது. இதற்கான ஏற்பாடுகள் தற்போது திரைமறைவில் இடம்பெற்றுவருகின்றன. அத்துடன்,' 20' இற்கு எதிர்த்து வாக்களிக்காமல் நடுநிலை வகித்து அரசுக்கான ஆதரவை வெளிப்படுத்துவதற்கும் சில எதிரணி எம்.பிக்கள் தயாராகிவிட்டனராம்.

இதனால் ஐக்கிய மக்கள் சக்தி குழம்பிபோயுள்ளது. மறுபுறத்தில் அதிருப்தி நிலையில் இருப்பவர்களை சமரசப்படுத்துவதற்கான நடவடிக்கையும் சஜித் அணியால் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. எவ்வளவுதான் முயன்றாலும் ஓரிருவரின் தாவலை தடுக்கமுடியாது என அரசியல் களத்தில் பேசப்படுகின்றது.



## அரசியலை மேவிய தேங்காய்

இலங்கை அரசியல்களத்தை கடந்தவாரம் ஆக்கிரமித்த பிரதான விடயங்களில் 20 ஆவது திருத்தச்சட்டமூலமும், தேங்காயும் முன்னிலை வகிக்கின்றன. இவ்விரு விடயங்களை மையப்படுத்தியே அரசாங்கம்மீது எதிர்க்கட்சிகள் சரமாரியாக விமர்சனக்கணைகளைத் தொடுத்துவருகின்றன.

குறிப்பாக தெங்கு முக்கோண வலயத்தில்கூட தேங்காயின் விலை 100 ரூபாவைக் கடந்ததால் நெருக்கடி உச்சம் தொட்டது. இதனால் கட்டுப்பாட்டு விலையை அமுல்படுத்தவேண்டிய நிலை அரசாங்கத்துக்கு ஏற்பட்டது. அவசர அவசரமாகச் சுற்றுநிருபமும் வெளியிடப்பட்டது.

நெருக்கடியை சமாளிப்பதற்கு முன்னெடுத்த நடவடிக்கையே பெரும் தலையிடியாக மாறியது. சுற்றளவுக்கேற்ப தேங்காயின் விலை நிர்ணயிக்கப்பட்டதால், தேங்காய் வாங்குவதற்கு 'ரேப்'பையும் எடுத்துசெல்ல வேண்டுமா என விமர்சனங்கள் எழுந்தன. வழமையாக அரசுக்கு சார்பாக வலைத்தளங்களில் சொம்புதூக்கி - கம்பு சுத்துபவர்கள்கூட இதனை கடுமையாக கலாய்த்து கருத்து வெளியிட்டிருந்தனர்.

குறிப்பாக இலங்கையில் 'சென்றிமீற்றர்' தான் அளவீட்டு மட்டமாக இருக்கும் நிலையில் 'அங்குலம்' குறித்த அறிவிப்பு எப்படி வெளியானது எனவும் சரமாரியாக கேள்விக்கணைகள் தொடுக்கப்பட்டன.

அதுமட்டுமல்ல அமைச்சரவையிலும் தேங்காய் விலை பற்றி கலந்துரையாடப்பட்டுள்ளது. அரசியலை விடவும் தேங்காயால் தான் இப்போது அரசுக்குப் பெரும் தலையிடி.





## மலையகத்து சின்னம்மா



தந்தை மன்னரானால், அவரின் மகன் இளவரசராகவும், மகள் இளவரசியாகவும் வலம்வருவது மன்னர்காலம். காலப்போக்கில் அந்த நடைமுறை மாறியது. பல நாடுகள் 'வாரிசு' அரசியலுக்கு சமாதி கட்டின. ஆனால், இலங்கைபோன்ற நாடுகளில் மன்னர் ஆட்சி இல்லாவிட்டாலும், குடும்ப ஆட்சி, வாரிசு அரசியல் என்பது தொடர்ந்தும் நீடித்துவருகின்றது. மஹிந்தவின் ஆட்சிகாலத்தில் அவரது குடும்ப உறுப்பினர்களே சர்வ பலமும் படைத்தவர்களாக விளங்கினர். மகன்மார் ராஜகுமாரர்களாகவே வலம்வந்தனர். இப்போதும் அப்படியே. மலையகத்தை சேர்ந்த மறைந்த அமைச்சர் ஒருவரின் மகளும் விரைவில் கன்னி அரசியல் பயணத்தை ஆரம்பிக்கவுள்ளாராம். அவரை மாகாணசபைத் தேர்தலில் களமிறக்குவது தொடர்பில் பேச்சுகள் இடம்பெற்றுவந்தாலும் கட்சியில் உயர்பதவியொன்றை வகிக்கவிருப்பதால் குட்டித் தேர்தல்களில் போட்டியிடமாட்டார் எனத் தெரியவருகின்றது. தற்போதுகூட அம்மணியின் கட்டளைப்படியே கட்சிப் பணிகள் இடம்பெறுகின்றனவாம். விரைவில் வெளிநாட்டில் இருந்து இலங்கை வரவுள்ள அவர் ,இங்கேயே குடியேறி கட்சியை வழிநடத்தவுள்ளதாகத் தகவல்.

## சந்திரிக்காவின் மாஸ்டர்பிளான்!

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஸ்தாபகத் தலைவரான பண்டாரநாயக்கவே அந்தக்கட்சியின் வளர்ச்சிக்கு வழிசமைத்துக்கொடுத்தவர். கட்சி ஆரம்பித்து 4 ஆண்டுகளுக்குள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியவர்.

அதுமட்டுமல்ல தேசியவாதத்துக்கு முன்னுரிமை வழங்கி மக்கள் நலன்சார் அரசியலை முன்னெடுத்தவர். இதனால்தான் இன்றளவிலும் சுதந்திரக்கட்சி ஆதரவாளர்கள் பண்டாரநாயக்கவின் கொள்கைகள் பற்றி பெருமையாக பேசிவருகின்றனர்.

2005 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ச, சுதந்திரக்கட்சித் தலைவராக தெரிவான பின்னர் அந்தக்கட்சியை பலவழிகளிலும் பலமடையச் செய்தார். நாடாளுமன்றத்தில் விசேட பெரும்பான்மையையும் அந்தக்கட்சி கொண்டிருந்தது. பலதேர்தல்களில் வெற்றிவாகையும் சூடியது.

இருந்தும் சுதந்திரக் கட்சியின் ஒவ்வொரு வெற்றியின் போதும், ராஜபக்ச குடும்பத்தை விடவும் பண்டாரநாயக்கவின் கொள்கைகள் பற்றியும், அவரது குடும்பம் குறித்துமே பெரிதாகப் பேசப்பட்டன. எனவே, பண்டாரநாயக்கவின் நாமத்தை ஒழித்து, ராஜபக்சக்களின் நாமத்தை மேலோங்கச்செய்வதற்கு மறைமுகமாக மஹிந்த பல நடவடிக்கைகளை முன்னெடுத்தாலும் அவை கைகூடவில்லை. எனினும், பஸில் ராஜபக்சவின் ஒருங்கமைப்பின்கீழ் உள்ளூராட்சிசபைத் தேர்தலை எதிர்கொண்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு மஹிந்த தலைமை வழங்கினார். அத்தேர்தலில் தாமரை மொட்டு அணி வரலாற்று வெற்றியை பதிவுசெய்தது. சு.கவின் பண்டாரநாயக்க கொள்கை போல், தாமரை மொட்டு மஹிந்த சிந்தனையை பின்பற்றியது. அதுமட்டுமல்ல ஜனாதிபதி தேர்தல், பொதுத்தேர்தல் ஆகியவற்றிலும் வெற்றிநடை போட்டது. இதன்மூலம் ராஜபக்சக்களின் பெயர் சொல்வதற்கு துறைமுகம், விமானநிலையம் என பல இருந்தாலும், பிரதானதொரு அரசியல் கட்சி ஒன்று இல்லை என்ற ஏக்கமும் முடிவுக்கு வந்தது. தற்போது ராஜபக்சக்களின் பெயர் சொல்வதற்கு பிரதான கட்சியொன்றே உள்ளது.

சரி இதுவொருபுறம் இருக்கட்டும். பண்டாரநாயக்கவின் 61 ஆவது நினைவுதின நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பங்கேற்ற சந்திரிக்கா அம்மையார் மைத்திரியை கடுமையாக விமர்சித்தார். கட்சியை சின்னாபின்னமாக்கிவிட்டனர் என்ற விமர்சனத்தையும் முன்வைத்தார்.

இந்நிலையில் மைத்திரியை கட்சி தலைவர் பதவியில் இருந்து தூக்குவதற்கான திட்டத்தை சந்திரிக்கா வகுத்துவருகிறார் எனவும், அந்தத்திட்டம் கைக்கூடும் பட்சத்தில் சுதந்திரக்கட்சியில் புரட்சிகரமான சில மாற்றங்களை ஏற்படுத்தி கட்சியை முன்நோக்கி கொண்டுசெல்வதற்கான திட்டம் சந்திரிக்காவிடம் இருப்பதாகவும் அவருக்கு நெருக்கமானவர்கள் தெரிவிக்கின்றனர். விரைவில் சுதந்திரக் கட்சிக்குள் இடிமுழக்கங்களை எதிர்பார்க்கலாம்.

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)




# கதிகலங்க வைத்து...

செய்துள்ளார். ஆகவே அவர் விஜயகுமாரின் சட்டரீதியான மனைவி கிடையாது. சடலத்தை பொறுப்பேற்பதற்கு சொத்தை பேரம் பேசிவிட்டு, நஷ்டைஈடு கேட்க எப்படி மனம் வருகின்றது? "என்று கேட்கின்றனர் விஜயகுமாரின் உறவுகள்.

" இதேவேளை சிலர் சமூக வலைத்தளங்களில் 'லைக்ஸ்' பெறுவதற்காகவும், பிரபல் யத்துக்காகவும் விஜயகுமார் வறுமையில் தான் தேன் எடுக்கவும் ,வேட்டைக்காகவும் காட்டுக்குச் சென்ற போதே கரடியால் தாக்கப்பட்டு உயிரிழந்திருப்பதாக பதிவிட்டிருந்தனர். அது தவறு. நாங்கள் பணக்காரர்கள் இல்லாவிட்டாலும் வயல் மற்றும் தோட்டம் செய்வதால் சாப்பாட்டுக்கு ஒரு கஷ்டமும் இல்லை. எங்கள் மகன் உயிரிழந்த நிலையில் உள்ள படங்களை பதிவிட்டு எங்கள் மனதை புண்ணாக்காதீர்" என்று கெஞ்சுகின்றனர் விஜகுமாரின் பெற்றோர்.

### "எங்களுக்குள் எந்தப் பிரச்சினையும் இல்லை"

*-விஜயகுமாரின் மனைவி*

" விஜயகுமாரின் வீட்டார் முறைப்படி பேசியே 25.08.2019 அன்று எங்கள் திருமணம் நடந்தது. எங்களுக்குள் எந்த முரண்பாடும் இல்லை. 'மாடு மற்றும் வயல் காணி இருக்கிறது. எங்களோடு கிராமத்தில் இருந்து நிறைய கஷ்டப் பட்டுவிட்டான். இனியாவது நகரில் இருக்கட்டும். வயல் வேலைகளுக்கு வந்து செல்லலாம் அல்லது குத்தகைக்கு விடலாம்' என்று பல வாக்குறுதிகளை அவரின் பெற்றோர் எமக்குத் தந்தார்கள். ஆனால் எதையும் செய்யவில்லை.

மாடு வளர்ப்பு ,வயல் வேலை, மற்றைய நேரங்களிலும் வேறு ஆட்களின் வயல்களில் வேலை என அவர் கடின உழைப்பாளி. அவரை வீட்டை விட்டு எம்மோடு விடுவதில் அவரின் குடும்பத்தினருக்கு விருப்பம் இல்லை. அங்கேயே இருக்க வேண்டும் என்பது அவர்களின் விருப்பம். நான் அவர்களின் வீட்டுக்குச் சென்று சில நாட்கள் தங்கினேன். அந்த வீட்டில் நிறையப் பேர். அங்கு அடிப்படை வசதிகள் இல்லை. அதனால் நான் எங்கள் வீட்டுக்கு வந்துவிட்டேன்.

ஒரு நாள் அவர்களது பிரதேச கிராம சேவையாளர்,( இப்போது அவர் வேறுபகுதிக்கு இடமாற்றம்) , எமது கிராம சேவையாளர் எங்கள் வீட்டார் மற்றும் அவரது பெற்றோர் என எல்லோரும் வந்து கதைத்தனர்.

அப்போது " அவர் என்னுடன் தான் இருக்க வேண்டும். பதிவுகளை மாற்றிக்கொண்டு இங்கே வர வேண்டும். வேண்டுமானால், இடைக்கிடை அவரது வீட்டுக்குச் சென்று வரலாம் "என்று நான் கூறினேன். அதனை அவருடைய பெற்றோர் ஏற்றுக்கொள்ளவில்லை . ஆனால் அவர் அதற்கு சம்மதம் தெரிவித்துக் கடிதம் ஒன்றில் கையொப்பம் இட்டார். என்னுடன் தொலைபேசியில் பெற்றோருக்கு தெரியாமல் தான் கதைப்பதாகக் கூறுவார். அதனால் மடு பொலிஸில் முறையிட்டேன் . அவர் இறந்த அன்று ( 25.08.2020 ) எங்களுடைய திருமண நாள். அன்றும் என்னுடன் தான் கதைத்துக் கொண்டிருந்தார். 'கையில் காசு இல்லை காசு கிடைத்ததும் வருகிறேன்' என்றார். வழமையாக நீண்ட நேரம் கதைப்போம். அன்றும் அப்படித் தான் கதைத்துக்கொண்டிருந்த போதுதான் காட்டுக்குள் நிற்பதாகச் சொன்னார்.'மச்சான் எடுக்கிறார் திருப்பி எடுக்கிறேன் 'என்றார்... ஆனால் திருப்பி எடுக்கவில்லை.. நான் திரும்ப எடுத்த போது அழைப்பு சென்றது . ஆனால் பதில் அளிக்கவில்லை... மாலையும் எடுத்துப் பார்த்தேன், பதில் இல்லை.அவருடைய மச்சான் மற்றும் நண்பருக்கு நான் தொலைபேசியில் அழைப்பெடுத்தபோது காட்டுக்குள் இருந்து திரும்பவில்லை என சொன்னார்கள். அவருடைய பெற்றோரும், சகோதரர்களும் தங்களுக்கு தொலைபேசி அழைப்பெடுக்கக் கூடாது என்று முன்னரே கூறியிருந்ததால், அவர்களுக்கு நான் எடுக்கவில்லை. இரவு ஒன்பது மணிக்கும் எடுத்தேன் பதிலில்லை.. சிறிது நேரத்தின் பின் எடுத்த போது அவரதுன் போன் 'ஓஃப்' ஆகியிருந்தது.

இறந்த பின்னர் நான் எனக்காகச் சொத்து கேட்கவில்லை, 'அவருக்கு கொடுக்க வேண்டியதை அவருடைய பிள்ளைக்குக் கொடுக்க வேண்டும், கேள்' என எனது உறவினர்கள் சொன்னதாலேயே அவ்வாறு கேட்டேன். அவர் பிறந்த ஊரில் இறுதிக் கிரியை செய்வதே அவரின் விருப்பமாக இருக்கும், அத்தோடு என் பிள்ளைக்கு கிருமித் தொற்று எற்பட்டு சிகிச்சை பெற்று வந்ததால் அவருடைய வீட்டிலேயே இறுதிக்கிரியை செய்ய சடலத்தை தந்தையிடம் ஒப்படைத்தேன். என் பிள்ளைக்கு அப்பப்பா சித்தப்பா என உறவுகள் தேவை என்பதால் அவர்களோடு முரண்படுவதை நான் விரும்பவில்லை.

ஆனால் அவருடைய மரணத்தில் எனக்குச் சந்தேகம் உள்ளது. அந்தப் பகுதியில் புதையல் தேடுபவர்கள் திரிவதாகச் சொல்லியிருக்கிறார். அவர்கள் ஏதாவது பலி கொடுத்துவிட்டு விலங்கு அடித்தது போல் போட்டார்களோ தெரியவில்லை. அவரது உடல் ஆடை இல்லாமல் இருந்தது . விலங்குகள் ஆடையை நீக்கிவிட்டா கொல்லும்?அவருக்கு பழக்கப்பட்ட காடு. யானை அடித்தது என்று சொல்வதை என்னால் நம்ப முடியாமல் இருக்கிறது. எனக்கு இன்னொரு திருமணம் நடந்ததாகச் சொல்வது அப்பட்டமான பொய். முன்னர் எனக்கு திருமணம் செய்துவைக்க பெற்றோர் முயன்றனர். அப்போது ஒருமுறை சம்பந்தக் கலப்புவரை வந்து அந்த ஏற்பாடுகள் இடைநடுவில் நின்றுவிட்டன. அதைத்தன் அவர்கள் இன்னொரு திருமணம் நடந்தது என்று திரித்துச் சொல்கிறார்கள்" - என்கிறார் விஜயகுமாரின் மனைவி.

### கண்டுகொள்ளாத பொலிஸ்; கடவுள் போன்ற கிராமசேவகர்

விஜயகுமார் காணாமல் போன செய்தி கிராம சேவையாளருக்கு தெரிவிக்கப்பட்டதை அடுத்து கிராம சேவையாளர் பிரதேச செயலருக்கு அறிவித்துள்ளார். பிரதேச செயலர் விளாத்திக்குளம் பொலிஸ் பிரிவான மடு பொலிஸாருக்கு தெரிவித்துள்ளார். பொலிஸார் காணாமல் போன அன்றைய தினமோ அதற்கு மறு நாளோ அங்கு வரவில்லை . மூன்றாவது நாள் காலையில் தான் விஜயகுமாரது வீட்டுக்கு வந்து பொலிஸார் விளக்கம் எடுத்துள்ளனர். அன்று மதியம் விஜயகுமார் சடலமாக கண்டுபிடிக்கப்பட்டதும் ,சம்பவ இடத்துக்கு பொலிஸார் சென்றுள்ளனர்.

எனினும் மக்களுடன் சேர்ந்து விஜயகுமார் சடலமாக மீட்கப்படுவதற்கு முதல் நாள் தாமும் தேடுதலை மேற்கொண்டதாக பிரதேச செயலரிடம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஆனால் சடலம் இனங்காணப்பட்டு தகவல் தெரியப்படுத்திய பின்னரே பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்தனர் என்று குற்றம் சாட்டுகின்றனர் கிராமமக்கள்.

" எமது கிராம சேவையாளராக பெண் உத்தியோகத்தரே உள்ளார். அவர் வேறு பகுதியில் வசித்தாலும் போக்குவரத்து ஆபத்து நிறைந்ததாக இருந்தும் காணாமல் போனவரை தேடிய போது, இங்கேயே எங்களுடன் நின்று தனது முழுமையான ஒத்துழைப்பை வழங்கி ,கடவுள் மாதிரிச் செயற்பட்டார் " என்று கிராம சேவகருக்கு புகழாரம் சூட்டுகின்றனர் விளாத்திக்குளமக்கள்.

### வாழ வழி கிடைக்குமா?

"இந்தச் சம்பவம் நடைபெற்று சில நாட்களின் பின்னர் அயல் கிராமம் ஒன்றிலும் இளம் தாய் ஒருவரை தாக்கி தலையை நசிந்து கொலை செய்துள்ளது காட்டு யானை ஒன்று. யானைத் தொல்லையால் விவசாயப்பயிர்கள், பயன்தரு மரங்கள் என எங்கள் உயிரும் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் பாதுகாப்பு வேலிகளை அமைத்து தாருங்கள் எனக் கேட்டும் இன்னும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பயிர்கள் மற்றும் பயன்தரு மரங்கள் அழிவடைந்த போது முறையிட்டோம். நடவடிக்கை இல்லை.. இப்போது உயிர்களை இழந்து நிற்கிறோம். இப்போதும் கண்டுகொள்ளாமல் இருந்தால், நாங்கள் எப்படி வாழ்க்கையை கொண்டு நடத்துவது? இங்கிருந்து வெளியூர்களுக்கு வேலைக்கு சென்று வருபவர்கள் உயிரைக் கையில் பிடித்தபடி தான் போய் வருகிறார்கள். வேலைக்கு செல்பவர் திரும்பி வரும் வரை வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு இருக்கிறோம்" என்கின்றனர் விளாத்திக்குள மக்கள்.

அச்சமின்றி இவர்கள் வாழ்வதற்கு வழியேற்படுத்திக் கொடுப்பார்களா சம்பந்தப்பட்ட அதிகாரிகள்?

---

○ மின்னல்

# திரடி அரங்கு

## காத்திருப்புகள் பலவிதம்

கடந்த வியாழக்கிழமை ஆரம்பமான கிளிநொச்சி விவசாய கண்காட்சியில், முதல் நாள் நிகழ்வை ஆரம்பித்து வைத்தவர் அமைச்சர் டக்ளஸ். அவரது அமைச்சான மீன்பிடித்துறைக்கும் , விவசாயத்துக்கும் சம்பந்தமில்லாவிட்டாலும், கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவர் என்ற கோதாவில் அவர் அழைக்கப்பட்டிருப்பார் போலும். எங்கே மாலை கிடைக்கும், அங்கே ஓடிப்போய் முகத்தைக் காட்டலாம் என்று காத்துக் கொண்டிருக்கும் அமைச்சர், இந்த அழைப்புக் கிடைத்ததும் விடுவாரா என்ன? நிகழ்வு 9 மணிக்கு ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டிருந்தபோதும், அவர் காலை. 8.45 க்கே கண்காட்சி நடைபெறும்இடத்துக்கு வந்துவிட்டார். ஆனால் எம்மவர்களைப் பற்றித்தான் தெரியுமே? 9 மணி நிகழ்வு என்றால் 10 மணிக்குத்தானே ஆரம்பிப்பார்கள். அந்த நினைப்பில் இருந்தவர்களுக்கு டக்ளஸ் , 8.45 க்கே வந்தமை திடீர் பதற்றத்தைக் கொடுத்துள்ளது. பதறியடித்தபடி மிச்ச சொச்ச வேலைகளை முடித்து கண்காட்சியை நாடா வெட்டி அமைச்சர் ஆரம்பித்தபோது நேரம் 9.30 ஐ தாண்டிவிட்டதாம். அதுவரை அமைச்சர் காத்திருக்க வேண்டியிருந்ததாம்.

சரி, முதல்நாள் விட்ட தவறை இரண்டாம் நாள் விடக்கூடாது என்று, நேற்று வெள்ளிக்கிழமை அதிகாரிகள் எல்லாப் பணிகளையும் 8.30 க்கே முடித்துவிட்டு ஆளுநரின் வருகைக்காக காத்திருந்தனர். இரண்டாம் நாள் நிகழ்வை ஆரம்பித்து வைப்பது அவர்தான். ஆனால் நீண்டநேரமாக அதிகாரிகள் காத்திருந்த பின்னரே நேரம் 9.30 ஐ தாண்டிய பின்னரே ஆளுநர் வந்து சேர்ந்துள்ளார். இதில் ஆளுநரையும் தவறு சொல்லமுடியாது. ஏனெனில் முதல் நாளே அமைச்சரைக் காக்க வைத்தது போல தன்னையும் அப்படிச் செய்து அவமானப்படுத்திவிடுவார்களோ என்ற முன்னெச்சரிக்கையால் அவர் அப்படி கொஞ்சம் தாமதித்து, எல்லாம் சரி என்று உறுதிப்படுத்திவிட்டுப் புறப்பட்டிருக்கவும் கூடும்.

இனியாவது, நிகழ்வுகளைச் சொன்ன நேரத்துக்கு நடத்தினால் இப்படியான சங்கடங்கள் நேராதல்லவா?

## இதுவும் கிளிநொச்சி சம்பவம் தான்

கரைச்சிப் பிரதேச சபையின், பண்பாட்டுப் பிரிவின் ஏற்பாட்டில் , அந்தப் பிரதேச சபையில் கடந்த வியாழக்கிழமை மாலை ., அண்மையில் காலமான தென்னிந்தியப் பாடகர் எஸ்.பி.பாலசுப்ரமணியத்துக்கு ஒரு அஞ்சலி நிகழ்வு நடத்தப்பட்டிருக்கிறது. பிரதேச சபை ஊழியர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்ட இந்த நிகழ்வின் விருந்தினர்களாக சிறிதரன் எம்.பியும், இந்தியத் துணைத் தூதரும் அழைக்கப்பட்டிருந்தனர்.

ஒரு பாடகருக்கு இப்படி அஞ்சலிக்கூட்டம் வைப்பது நல்ல விடயம் தான். ஆனால் தென்னிந்தியப் பாடகர் ஒருவருக்கு , இப்போதையை கொரோனாக் காலகட்டத்தில், அதுவும் திலீபனை நினைவேந்தவே தடை போட்ட சூடு ஆற முன்னர், அஞ்சலிக்க வேண்டிய அவசியமொன்றுமில்லையே.

பண்பாட்டுப் பிரிவே இந்த நிகழ்வை ஒழுங்கு செய்ததாகச் சொல்லப்படுகின்றது. இப்படி பிரபலமான தென்னிந்தியக் கலைஞர்களுக்கு அஞ்சலி செய்ய மட்டும் தான் அந்தப் பண்பாட்டுப் பிரிவு அமைக்கப்பட்டதா? என்று உள்ளூர்க் கலைஞர்கள் கேட்கிறார்கள். ஏனெனில் அண்மையில் கிளிநொச்சியை சேர்ந்த பல கலைஞர்கள் மரணித்த போதெல்லாம், ஒரு கண்ணீர் அஞ்சலி நோட்டீஸ் கூட அச்சிட்டு வெளியிடாத இந்தப் பண்பாட்டுப் பிரிவு, தென்னிந்தியாவில் உயிரிழந்த பாலசுப்பிரமணியத்துக்கு மட்டும் அஞ்சலிப்பதன் அரசியல் பின்னணி என்ன? உள்ளூர்க் கலைஞர்களை ஊக்குவிக்கவும், அவர்களுக்கு துணை செய்யவும்தானே இத்தகைய பண்பாட்டுப் பிரிவுகள் பாடுபடவேண்டும்.பாலசுப்பிரமணியம் போன்ற பிரபலங்களுக்குஅஞ்சலிக்க ஆயிரம் அமைப்புகள் உள்ளன. ஆனால் உள்ளூர்க் கலைஞர்களை இதுபோன்ற உள்ளூர் அமைப்புகளே கண்டுகொள்ளாமல், தென்னிந்திய திரை நட்சத்திரங்களை மட்டும் தான் தலைக்குமேல்வைத்து கொண்டாடுவார்கள் என்றால் அதை என்னவென்பது?

# உயர்தரத்துக்கு பின்னான உயர்கல்வி

14

## கவனத்துடன் அணுக வேண்டியது காலக் கடமை





○ இ.சர்வேஸ்வரா
விரிவுரையாளர்,கல்வியியல்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இந்தக் கட்டுரைத் தொடர் ஆரம்பமான நாளிலிருந்து கடந்த 13 வாரங்களாக உயர்கல்வி ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்காக க.பொ.த உயர்தரத்தில் கொடுக்கப்படவேண்டிய கவனம் குறித்து விரிவாகவும், ஆழமாகவும் பல்வேறு புள்ளிவிபரங்களின் அடிப்படையிலும் ஆராயப்பட்டது. இந்த வாரம் தொடக்கம், தற்போது வரை கிடைக்கத்தக்க உயர்கல்வி வாய்ப்புக்கள் குறித்த விரிவான பார்வையையும் அத்தகைய வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள மாணவர்கள் பூர்த்திசெய்திருக்க வேண்டிய தகைமைகள் மற்றும் மேலதிக தேவைப்பாடுகள் குறித்து ஆழமாகவும், அகலமாகவும் ஆராய இக் கட்டுரைத் தொடர் முற்படுகின்றது. இத்தகைய பின்னணியில் முதலில் உயர்கல்வி வாய்ப்பின் முதன்மைத் தெரிவாகவுள்ள அரசாங்கப் பல்கலைக்கழகம் ஒன்றில் இலவசக் கல்வி மூலம் உயர்கல்வியைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் சில அடிப்படை விளக்கங்களைப் பெற்றுக்கொள்வது பொருத்தமானதாகவிருக்கும்.

**உயர்தரத்துக்குப் பின்னான பல்கலைக்கழகக் கல்வி**

இலங்கையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் செயற்படுகின்ற பதினைந்து பல்கலைக்கழகங்கள் இதுவரையுள்ளன. அவை பின்வருமாறு

1. பேராதனைப் பல்கலைக்கழகம்
2. கொழும்புப் பல்கலைக்கழகம்
3. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
4. மொறட்டுவைப் பல்கலைக்கழகம்
5. ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்
6. உருகுணைப் பல்கலைக்கழகம்
7. களனிப் பல்கலைக்கழகம்
8. கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
9. தென்கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
10. வயம்ப பல்கலைக்கழகம்
11. ஊவா - வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்
12. சப்பிரகமுவப் பல்கலைக்கழகம்
13. கட்புல அரங்கேற்றப் பல்கலைக்கழகம்
14. ரஜரட்ட பல்கலைக்கழகம்
15. திறந்த பல்கலைக்கழகம்

இவற்றுள் திறந்த பல்கலைக்கழகம் தவிர்ந்த ஏனைய பதினான்கு பல்கலைக்கழகங்களுக்கும், க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் போட்டித் தன்மையின் அடிப்படையிலேயே குறிப்பாக Z புள்ளிகளின் அடிப்படையிலேயே மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றார்கள்.


இலங்கை கல்வி வாய்ப்புக்களைப் பொறுத்தவரை இலவசக் கல்வி மூலமான அரசாங்க பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை குறித்து பல்வேறு விமர்சனங்கள் உண்டு. உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவர்களில் அதிலும், பல்கலைக்கழக அனுமதிக்கான அடிப்படைத் தகைமையைப் பூர்த்தி செய்யும் மாணவர்களில் மிகக் குறைந்த சதவீதத்தினருக்கே பல்கலைக்கழக அனுமதி வழங்கப்படுவதாகவும் இது கல்வியில் சமத்துவம் எனும் எண்ணக்கருவை கேள்விக்குட்படுத்துவதுடன் இந்த மட்டுப்படுத்தப்பட்ட வாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்காக மாணவர்கள் மத்தியில் அதிக போட்டித்தன்மை ஏற்படுவதாகவும், பல்வேறு மட்டங்களிலும் கருத்துக்கள் உண்டு. அத்துடன் மட்டுப்படுத்தப்பட்ட பல்கலைக்கழக வாய்ப்புக் கிடைக்காத மாணவர்கள் மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளாவதுடன், அதில் சிலர் தற்கொலை முடிவுகளை எடுப்பதும் வருடாவருடம் இலங்கையில் நடைபெறும் துன்பியல் சம்பவங்களாகும்.

கீழ்வரும் அட்டவணை மூலம் பல்கலைக்கழக அனுமதியொன்றை பெற்றுக்கொள்வது எவ்வளவு சவாலானது அல்லது எவ்வளவு பெறுமதியும், பெருமையும் மிக்கது என்பதை உணர்ந்து கொள்ளக்கூடியதாகவிருக்கும்.

| விபரம் | பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் | அடுத்த கட்டத்துக்கு தகைமை பெற்றோர் | பல்கலைக்கழக அனுமதி பெற்றோர் |
|---|---|---|---|
| 2016 க.பொ.த சா/த | 286,251 | 200,208 | ------- |
| 2019 க.பொ.த உ/த | 235,550 | 154,205 | 34,161 |

அதாவது 2019ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் அணியை மாதிரியாக வைத்து ஆராயும்போது, அவர்களுள் பெரும்பான்மையானவர்கள் 2016ஆம் ஆண்டு க.பொ.த சாதரணதரப் பரீட்சையை எதிர்கொண்டிருப்பார்கள். அவ்வாறு எதிர்கொண்டவர்களில் இருந்து உயர்தரம் கற்பதற்கான தகைமை பெற்று, பின்னர் பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்களின் எண்ணிக்கை 286,251 இலிருந்து 34,161 எனச் சுருங்கியுள்ளது. இது ஒட்டுமொத்தமாக சாதாரணதரப் பரீட்சையை எதிர்கொண்ட மாணவர்களின் 11.9 சதவீதமாகவும் உயர்தரப் பரீட்சையை எதிர்கொண்ட மாணவர்களின் 14.5 சதவீதமாகவும் பல்கலைக்கழக அனுமதிக்காக அடிப்படைத் தகைமையைப் பூர்த்தி செய்த மாணவர்களின் 22.1 சதவீதமாகவும் உள்ளது. அதாவது உயர்தரப் பரீட்சையின் மூலம் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையைப் பூர்த்தி செய்த மாணவர்களில் ஏறக்குறைய ஐந்திலொரு பங்கினருக்கே பல்கலைக்கழக அனுமதி வழங்கப்படுகின்றது. அதில் ஒருவராக எமது மாணவனோ மாணவியோ அல்லது மகனோ மகளோ அல்லது தம்பியோ தங்கையோ இருப்பது என்பது எவ்வளவு பெருமையானது. அந்தப் பெருமையைப் பெறும் வகையில் அவர்களை வழி நடத்துவது அவசியமானது.

பல்கலைக்கழகங்கள் தான் உலகளாவிய ரீதியில் உயர்கல்வியின் உன்னத மையங்களாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. அங்கு வழங்கப்படும் கல்வியின் பொருத்தப்பாடு மற்றும் தரம் குறித்து பல்வேறு விமர்சனங்கள் இருப்பினும், பல்கலைக்கழகங்களைத் தவிர்த்து இன்னுமொரு கட்டமைப்பு உயர்கல்விக் கட்டமைப்பில் உலகளவில் இன்றுவரை தாபிக்கப்படவில்லை. நீண்ட பாரம்பரியம்மிக்க செழுமையான மரபுத் தொடர்ச்சி, பல்கலைக்கழகக் கல்விக்கு உண்டு. இலங்கையின் பல்கலைக்கழகக் கல்வியும், உன்னதமான மரபுத் தொடர்ச்சியைக் கொண்டது. இத்தகைய உயர் மரபுத் தொடர்ச்சியின் ஒரு அங்கத்தவராக நாமோ அல்லது நம்மைச் சார்ந்தவரோ இருப்பது மிகப் பெறுமதியான விடயம். இதனாலேயே பல்கலைக்கழகங்களின் பட்டமளிப்பு விழாக்கள் மிகவும் கனதியான மரபார்ந்த முறைகளைப் பின்பற்றி கோலாகலமாக நடைபெறுவதுண்டு. வெறுமனே ஒரு பட்டச்சான்றிதழைப் பெறுவதல்ல பல்கலைக்கழக கல்வியின் நோக்கம்.




அதையும் தாண்டிய பல உன்னதங்களை உள்ளடக்கியது பல்கலைக்கழக கல்வி என்பதை பட்டமளிப்பு விழா ஒன்றின் ஒழுங்கமைப்பு எமக்கு உணர்த்துகின்றது.

இத்தகைய நிலையில் எமது வடபுல மாணவர்களில் அதிகமானவர்கள் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கான உத்திகளை வகுத்துச் செயற்படுத்துவது உயர்கற்றோர் குழாத்தின் கடமையாகும். இதனடிப்படையில் பல்கலைக்கழக கற்றல் வாய்ப்பொன்றைப் பெற்றுக்கொள்வதற்கான வழிப்படுத்தல்கள் சிலவற்றை இந்தக் கட்டுரைத் தொடர் அடுத்துவரும் சில வாரங்களுக்கு வழங்கும். குறிப்பாக பின்வரும் விடயப் பரப்புக்கள் குறித்து ஆராயப்படும்.

1. பல்கலைக்கழக அனுமதி ஒன்றுக்கான அடிப்படைத் தகைமை
2. பல்கலைக்கழக அனுமதி ஒன்றுக்கான மேலதிக தகைமை
3. பல்கலைக்கழக அனுமதி ஒன்றுக்கான மேலதிக தேவைப்பாடுகள்

> **பல்கலைக்கழகங்கள் தான் உலகளாவிய ரீதியில் உயர்கல்வியின் உன்னத மையங்களாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. அங்கு வழங்கப்படும் கல்வியின் பொருத்தப்பாடு மற்றும் தரம் குறித்த பல்வேறு விமர்சனங்கள் இருப்பினும் பல்கலைக்கழகங்களைத் தவிர்த்து இன்னுமொரு கட்டமைப்பு உயர்கல்விக் கட்டமைப்பில் உலகளவில் இன்றுவரை தாபிக்கப்படவில்லை. நீண்ட பாரம்பரியம்மிக்க செழுமையான மரபுத் தொடர்ச்சி பல்கலைக்கழக கல்விக்கு உண்டு.**

4. தகைமையிருந்தும் பல்கலைக்கழக அனுமதியை இழப்பதற்கான வாய்ப்புக்கள். இந்தக் கட்டுரையில் ஆராயப்படும் விடயங்கள் குறித்து அதிகம் சமூகப்பரவலாக்கம் செய்வது இதனை வாசிக்கும் ஒவ்வொரு பொதுமகனினதும் கடமையாகும். உயர்கல்வி வாய்ப்பு என்பது தனி ஒருவனின் பிரச்சினையல்ல. அது ஒரு இனத்தின் பிரச்சினை. இதனை வரலாறு பல தடவைகள் எமக்கு உணர்த்தியிருக்கின்றது. உயர்கல்வி மறுக்கப்பட்ட இளையவர்களின் கொதிப்பும் எமது இனவிடுதலைப் போராட்ட வரலாற்றுக்கான காரணங்களில் ஒன்று என்பதையறிவோம். எனவே உயர்கல்வியொன்றின் பெறுமதியை உணர்ந்து இளையவர்களை வழிப்படுத்துவோம்.

(தொடரும்)

# பொன்னியின் செல்வன்: திரைக்கு பின்னால்..!



○ ஆரதி

கல்கியின் "பொன்னியின்செல்வன்", மணிரத்தினத்தின் பொன்னியின் செல்வனாக மாறப்போகிறதா? ஒரு நாவல் திரைவடிவமாக சினிமாவாகினால் அநேகமாக பிறகு அதுவே மக்களின் மனதில் நிலைநிற்பதுண்டு. கதை விரிக்கும் அனுபவம் வேறு. காட்சி விரிக்கும் அனுபவம் வேறாக இருந்தாலும் திரையில் விரியும் காட்சி உண்டாக்கும் அனுபவமே பெரும்பாலோனோரின் மனதில் அழியாது பதிந்து விடுகிறது. அப்படித்தான் பொன்னியின் செல்வனும் மாறுமா? என்ற கேள்வி எழுகிறது. அதுவும் மணிரத்தினம் என்ற முதிர்ச்சியும் ஆற்றலும் உள்ள இயக்குநரின் இயக்கத்தில் பிரமாண்டமான விதத்தில் உருவாகவுள்ள பொன்னியின் செல்வன் கல்கியின் பொன்னியின் செல்வனுக்கு முன்னே நிற்கக் கூடிய வாய்ப்புகளே உண்டு.

1950ஆம் ஆண்டு முதல் 1954ஆம் ஆண்டு வரை கல்கி வார இதழில் கல்கி கிருஸ்ணமூர்த்தி தொடராக எழுதினார். ஐந்து பாகங்கள்,300 அத்தியாயங்கள் என்று நான்கு ஆண்டுகள் தொடர்ச்சியாக வெளிவந்த இந்த வரலாற்று நாவல் பின்னரும் பல தடவைகள் கல்கியில் தொடராக வந்திருக்கின்றன. இப்பொழுதும் அதிகமாக விற்கப்படும், வாசிக்கப்படும் வரலாற்றுப்புதினங்களில் பொன்னியின் செல்வன் முன்னிலையிலேயே உள்ளது. 1950 க்குப் பிறகான தமிழ்ச்சமூகத்தில் பலகோடிப்பேர் பொன்னியின் செல்வனை வாசித்திருக்கிறார்கள். இன்னமும் வாசித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தளவுக்கு இந்தப் புதினத்தின் ஈர்ப்புத் தலைமுறைகளைத் தாண்டித் தொடர்ந்து கொண்டிருக்கிறது. கடந்த ஆண்டுகூட சென்னை புத்தகக் காட்சியில் விற்பனையாகிய புத்தகங்களில் பொன்னியின் செல்வன் முன்வரிசையிலேயே இருந்துள்ளது.






பொன்னியின் செல்வன் நாடகம்

சோழப்பேரரசின் விரிவாக்கத்துக்கான தொடக்கத்தை, அதன் வரலாற்றுப்பெருமைகளை மையமாகக் கொண்ட கதையே பொன்னியின் செல்வன். இந்த நாவலில் வருகின்ற பல பாத்திரங்களின் பெயர்களைப் பின்னாளில் பலர் தங்களுடைய பிள்ளைகளுக்கு வைத்துக் கொண்டனர். வந்தியத்தேவனிலிருந்து அருண்மொழிவர்மன், நந்தினி, வானதி வரையில் ஏராளம் பெயர்கள். இன்னமும் இது தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இதனால்தான் பொன்னியின் செல்வனை எம்.ஜி.ஆர் தொடக்கம் கமல்ஹாசன் வரையில் சினிமாவாக எடுப்பதற்கு விரும்பினார்கள். 1958 இல் எம்.ஜி.ஆர் 10 ஆயிரம் ரூபா கொடுத்து இந்தக் கதையின் உரிமையை வாங்கினார். மகேந்திரன் திரைக் கதையை எழுதினார். வந்தியத்தேவன் கதாபாத்திரத்தில் எம்.ஜி.ஆர் நடிப்பதாகவும் இருந்தது. ஜெமினி கணேசன், வைஜெயந்தி மாலா, பத்மினி, சாவித்திரி, சரோஜா தேவி, நம்பியார், எம்.என். ராஜம், டி.எஸ். பாலையா உள்ளிட்ட பல நட்சத்திரங்களை நடிக்கவைக்க முடிவுசெய்திருந்தார் எம்.ஜி.ஆர். 'எம்.ஜி.ஆர் பிக்சர்ஸ்' அளிக்கும் 'பொன்னியின் செல்வன்' போஸ்டர்கூட வெளியிடப்பட்டது. ஆனால், படம் உருவாகவே இல்லை.

1990 களில் கமல்ஹசன் எடுத்த முயற்சிகளும் மருதநாயகத்தைப்போல நிறைவேறவில்லை. திரைவடிவமாகத்தான் வெளிவரவில்லையே தவிர, நாடகமாகப் பல மேடைகளில் அரங்கேறியிருக்கிறது பொன்னியின் செல்வன். 2,400 பக்கங்கள் கொண்ட நாவலை நாடகமாக்குவதும் அவ்வளவு எளிதல்ல. அதைச் சாத்தியமாக்கிக் காட்டியது மேஜிக் லேன்டர்ன் நாடகக் குழு. 1999ஆம் ஆண்டு, பொன்னியின் செல்வன் கதை நான்கு மணிநேர நாடகமாக்கப்பட்டு, சென்னையில் உள்ள வை.எம்.சி.ஏ மைதானத்தில் நிகழ்த்தப்பட்டது. இந்த நாடகத்தில் நடிகர் நாசர், நடிகர் பசுபதி உள்ளிட்டோர் நடித்திருந்தனர். இதை விட வேறு பல நாடகக் குழுக்களும் இதை நாடமாக்கி தமிழ் நாடெங்கும் மேடையிட்டுள்ளன.

இப்பொழுது மணிரத்தினம் சினிமாவாக்குவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார். இதற்கான முயற்சிகூட பத்தாண்டுகளாக நடந்தது. இப்போதுதான் சாத்தியமாகியுள்ளது. இதற்குத் திரைக்கதை மணிரத்தின் குழுவினரால் எழுதப்பட்டுள்ளது. ஜெயமோகன் வசனம் எழுதியிருக்கிறார். இசை, ஏ.ஆர். ரஹ்மான். ஏராளமான நடிகர்கள் பங்கேற்கிறார்கள். யார் ,யார் எந்தப் பாத்திரத்தில் நடிக்கிறார்கள் என்பது வாசகர்கள், ரசிகர்களிடையே ஏற்பட்டிருக்கும் எதிர்பார்ப்பு. நாவலைப்படித்தவர்கள் இந்த எதிர்பார்ப்படிருப்பது இயல்பு.

ஆனால், படத்தில் விக்ரம், திரிஷா, கார்த்தி, ஜெயம்ரவி, ஐஸ்வர்யா ராய், பிரபு, விக்ரம் பிரபு, சரத்குமார், ஜெயராம், ரஹ்மான், அஷ்வின் உட்பட பலர் நடிக்கவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதை விட இலங்கையிலும் நடிகர்களைத் தேடிக் கொண்டிருப்பதாகச் செய்தி. கதைக்களம் இலங்கையிலும் நிகழ்வதால் அதற்குப் பொருத்தமான இடங்களையும் நடிகர்களையும் பிற பொருத்தமான கலைஞர்களையும் கண்டுபிடிக்கும் முயற்சியில் மணிரத்தினம் ஈடுபட்டிருக்கிறார். பொன்னியின் செல்வனை திரையில் காணவேண்டும் என்ற பெருவிருப்பம் பல ஆண்டுகளாக மக்களின் மனதில் உள்ளது. அவர்களுடைய எதிர்பார்ப்பை நிறைவேற்றுவது மிகச் சவாலான சங்கதி. ஏனென்றால், இந்த மாதிரி வரலாற்றுப் புனைவுகளை எழுத்தில் வெளிப்படுத்துவதற்கும் திரையில் உருவாக்குவதற்குமிடையில் ஏராளம் சிக்கல்கள், சவால்கள் ஏற்படும். எழுத்தில் கற்பனை மட்டும்போதும். திரைப்படமாக உருவாக்கி முடிக்கும் செயற்பாடுகள் அத்தனைக்கும் பலருடைய கூட்டு ழைப்பும் பெரும் பணமும் வேண்டும். ஏனென்றால் இது காட்சி ஊடகம். ஆனால், இப்போது ஒரு வாய்ப்புண்டு.

தொழில்நுட்பத்தின் மூலம் அனிமேஷன் காட்சிகளை உருவாக்கலாம் ஓரளவுக்கு. இருந்தாலும் அதற்கும் பெரும் செலவு ஏற்படும்தான். இந்த மாதிரியான பெரும் பொருட்செலவில் வரலாற்றுப்படங்கள், விஞ்ஞானப் புனைவுப் படங்கள் என ஆங்கில, பிரெஞ்சு, சீன, ரஷ்ய, அமெரிக்கப்படங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின் பார்வையாளர் பரப்பும் விநியோகப்பரப்பும் பெரிதென்பதால் செலவை எப்படியோ திரட்டிக் கொள்ள முடியும்.. தமிழின் சந்தைப்பரப்பு அந்தளவுக்கில்லை என்பது இந்த மாதிரியான பெரிய முயற்சிகளுக்கு ஒரு தடையே.

இருந்தாலும் பொன்னியின் செல்வனை சில ஆண்டுகளில் நாம் திரையில் காணப்போகிறோம் என்பது மகிழ்ச்சியே.

இதேவேளை பொன்னியின் செல்வன் இதுவரையில் சினிமாவாக வெளிவரவில்லையென்றாலும், அனிமேஷன் ஃபிலிமாக வெளிவந்திருக்கிறது. 2015ஆம் ஆண்டில், பொன்னியின் செல்வன் கதையை 12 டி.வி.டிக்களில் அனிமேஷன் படமாக வெளியிட்டது ரீவெண்டா மூவி டூன்ஸ் நிறுவனம். 12 டி.வி.டிகள், 32 மணி நேரம் கொண்டு வெளியானது. பிறகு, 2017ம் ஆண்டிலிருந்து பொன்னியின் செல்வன் கதையை அத்தியாயங்கள் வாரியாக கொமிக்ஸ் கதை வடிவில் புத்தகமாக நிலா கொமிக்ஸ் நிறுவனம் வெளியிட்டு வருகிறது என்பது இன்னொரு உதிரித்தகவல். இப்படித் தமிழர்களின் பிந்திய அறுபது ஆண்டுகால வரலாற்றில் பொன்னியின் செல்வன் பல வடிவங்களில் ஊடாடிக் கொண்டேயிருக்கிறது.



ஆர்.பிரகாஷ்

# கராபத்: இன்னொரு புதிய நாடு



மத்திய கிழக்கில் மற்றுமொரு போர் முனை திறக்கப்பட்டுள்ளது. அதுதான் அர்மீனியா மற்றும் அஸர்பையான் இடையிலான நேரடி மோதல். கராபத் மாகாணம் தனிநாடாக உருவாகுவது தொடர்பிலேயே இந்தப் புதிய மோதல் உருப்பெற்றுள்ளது.

அஸர்பையான் மற்றம் அர்மீனியா நாடுகளின் எல்லையைப் பிரிக்கின்றது கராபத் மாகாணம். இந்த மாகாணத்தில் வாழ்பவர்கள் கிறிஸ்தவர்கள். அர்மீனியாவும் சரி பாதி கிறிஸ்தவர்களைக் கொண்ட நாடு. அங்கு பெரும்பான்மையான மக்கள் கிறிஸ்தவர்கள் என்று சொன்னாலும் அதில் தவறொன்றும் இல்லை. ஆனால் அஸர்பையான் அவ்வாறு அல்ல. அங்கு முஸ்லிம்கள்தான் பெரும்பான்மையினர். மத்திய கிழக்குக்கே உரித்தான அம்சம் அது. இஸ்லா மியத் திரட்சியைக் கொண்ட மத்திய கிழக்கில் கிறிஸ்தவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டு தனிநாடு உருவாகுவதை அஸர்பை யான் விரும்பவில்லை. தன்னாட்சி அதிகாரம் கராபத் மாகாணத்துக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்ட போதிலும் அந்த மாகாணம் தனிநாடாக எழுந்தால் இஸ்லாம் மதத்தின் இருப்புக்கு அங்கு பங்கம் வந்துவிடும் என்பதும் தனக்குப் பெரும் கௌரவச் சிக்கல் ஏற்பட்டுவிடும் என்பதும் அஸர்பையானின் எண்ணம். ஆனால் அர்மீனியா கராபத்தை தனிநாடாக உருவாகுவதை ஆதரிக்கின்றது. கிறிஸ்தவ நாடு ஒன்று தனக்குத் துணையாக எழுவதை அது வரவேற்கிறது.




### துருக்கி - ரஷ்யா தலையீடு

இந்த விவகாரம் வெறுமனே அர்மீனியா மற்றும் அஸர்பையானுடன்தொடர்புடையவிவகாரம் அல்ல. மாறாக துருக்கி மற்றும் ரஷ்யா ஆகிய இரண்டும் இதில் நேரடித் தலையீடு செய்கின்றன. மத்திய கிழக்கின் வல்லரசு என்ற கிரீடத்தை அணிவதற்காக கடும் போட்டி போட்டுக் கொண்டிருக்கும் துருக்கிக்கு, கராபத் தனிநாடாவதில் எள்ளளவும் விருப்பம் இல்லை. ஏனெனில், மத்திய கிழக்கில் துருக்கிக் கிப் போட்டியாக உள்ள நாடு இஸ்ரேல் மட்டுமே. இஸ்ரேல் ஒரு யூத நாடு. கராபத் தனிநாடாக எழுந்தால், அது இஸ்ரேலை ஆதரிக்க வாய்ப்புக்கள் அதிகம். இஸ்ரேலின் இராணுவ நிலைகள் கராபத்தில் அமைக்கப்பட்டாலும் ஆச்சரியப்பட ஒன்றுமேயில்லை. அதனால் இத்தகைய பெரும் சவாலைச் சந்திக்காமல் அதை முளையிலேயே பொசுக்கிவிடுவதே துருக்கியின் திட்டம். ஆனால் இந்த விவகாரத்தில் துருக்கியை எதிர்க்கின்றது ரஷ்யா. ஏனெனில் மத்திய கிழக்கில் அமெரிக்காவுக்கு எவ்வாறு இஸ்ரேல் செல்லப்பிள்ளையோ அதேபோன்று ரஷ்யாவுக்கு அர்மீனியா செல்லப்பிள்ளை. அர்மீனியாவைப் பலப்படுத்த கராபத்தை தனிநாடாக எழச் செய்ய வேண்டும் என்பது ரஷ்யாவின் வியூகம். ஒரு கிறிஸ்தவ நாடு மத்திய கிழக்கில் உருவாகின்றது என்பதை எந்த ஐரோப்பிய நாடுதான் எதிர்க்கும்?. பிரான்ஸ், ஜேர்மனி, கனடா என்று பெரும் பொருளாதார வல்லரசுகள் எல்லாம் துருக்கிக்கு எதிராக அர்மீனியாவுக்கு நேசக்கரம் நீட்டியுள்ளன.

### அமெரிக்கா கள்ள மௌனம்

கராபத் விடயத்தில் உலகமே பரபரப்பாகிக்கொண்டிருக்க கள்ள மௌனம் காக்கின்றது அமெரிக்கா. அர்மீனியாவுக்கு ஆதரவாக விரும்பியோ விரும்பாமலோ ரஷ்யா எடுத்துள்ள இந்த முடிவு, அமெரிக்காவுக்கும் மத்திய கிழக்கில் அதன் செல்லப்பிள்ளையான இஸ்ரேலுக்கும் மிகவும் சாதகம்தான். இதனால் இவை இரண்டும் கள்ளமௌனம் சாதித்து வருகின்றன. அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்கும் ஒரு கல்லில் இரண்டு மாங்காய் போன்று ஆகியுள்ளது கராபத் மோதல். இந்த மோதல் உருவாகினால் இஸ்ரேல் மீதான துருக்கியின் கவனக் குவிவு சிதறும். அல்லது கராபத் தனிநாடாகினால் மத்திய கிழக்கில் இஸ்ரேலுக்கு நட்பு நாடொன்று கிடைக்கும். காலப்போக்கில் கராபத்தை வளைத்துப்போடவும் அமெரிக்கா எத்தனிக்கவும் கூடும்.

### ஈழமும் கராபத்தும்

வெறும் ஒரு லட்சத்து 50 ஆயிரம் மக்கள் தொகையைக்கொண்ட கராபத் தனிநாடாக உருவாகுவதற்கு ஐக்கிய நாடுகள் சபை நேசக்கரம் நீட்டுகின்றது. அமெரிக்கா கள்ள மௌனம் காக்கின்றது. பிரான்ஸ், பிரிட்டன், கனடா போன்ற வல்லரசுகள் மறைமுக ஆதரவு கொடுக்கின்றன. ரஷ்யா நேரடி ஆதரவு கொடுக்கின்றது. ஆனால் சுமார் 15 லட்சம் சனத்தொகையுடைய தமிழர்களின் தேசத்தை, ஈழத்தை தனிநாடாக அங்கீகரிக்க இவ்வளவு பேராதரவு சர்வதேசத்திடம் இருந்து கிட்டவில்லை. ஆனால் கராபத்துக்கு அந்த அதிர்ஷ்டம் கிட்டப் போகின்றது. ஒரு நிலப்பரப்பு தனிநாடாக அங்கீகரிக்கப்பட வேண்டுமானால் அதற்கு அந்த நிலப்பரப்பில் வாழும் மக்களின் விருப்பு வெறுப்புக்களைவிட, சர்வதேச அரசியல் சதியாட்டங்கள் அவசியம்தான் என்பதையே கராபத் விடயம் கட்டியம் கூறி நிற்கின்றது.

# சி.எஸ்.கேயின் தலைவராக வில்லியம்சன்!!

உள்ளகக் கருத்து முரண்பாடுகள் காரணமாக சென்னை சுப்பர் கிங்ஸுக்கும் அந்த அணியின் உப தலைவரான ரெய்னாவுக்கும் இடையிலான உறவு மேலும் விரிசலடைந்துள்ளது. ரெய்னா மீண்டும் அணிக்குள் வரமுடியாது என்ற நிலை. இந்த நிலையில் டோனிக்கு அடுத்ததாக சென்னை சுப்பர் கிங்ஸின் தலைவராக கேன் வில்லியம்சனை நியமிக்க தற்போதிருந்தே காய்கள் நகர்த்தப்பட்டு வருகின்றதாம். அடுத்த ஐ.பி.எல் தொடரின்போது ரெய்னாவை தக்கவைக்காமல் விடுவிக்கப் போகின்றதாம் சென்னை சுப்பர் கிங்ஸ்.

இதனால் ரெய்னாவுக்குக் கொடுக்கும் சுமார் 10 கோடி ரூபா ஊதியத்தை வில்லியம்சனை ஏலத்தில் எடுப்பதற்குப் பயன்படுத்தவுள்ளதாம் சி.எஸ்.கே. ஹைதராபாத் அணி வில்லியம் சனை ஏலத்துக்கு விடாவிட்டால் ரெய்னாவை ஹைதராபாத்துக்குக் கொடுத்து வில்லியம்சனை வாங்கவும் பேச்சுக்கள் நடத்தப்பட்டு வரு கின்றதாம். கப்டன் கூலின் இடத்துக்கு இன்னொரு கப்டன்கூல் வருவது பொருத்தமானதே!.




# நண்பனுக்காக...

ஐ.பி.எல் தொடரின் மூலம் இந்திய அணியின் அடுத்த தலைமுறை வீரர்கள் கட்டமைக்கப்பட்டு வருகின்றனர். கில், பிருத்வி ஷா, பன்ட், ஸ்ரேயாஸ் என்றிருக்கும் இந்த வரிசையில் நடராஜனும் ஒருவர். டில்லி கப்பிட்டல் அணிக்கு எதிராக கடந்த செவ்வாயன்று நடைபெற்ற ஆட்டத்தில் 7 ஜோக்கர் பந்துகளை வீசி அனைவரையும் கவனிக்க வைத்தார் நடராஜன். நடராஜனின் பந்துவீச்சு எந்த அளவுக்குக் கவனிக்கப்பட்டதோ அதைவிட அவர் தனது நண்பனுக்குக் கொடுக்கும் முக்கியத்துவமும் கவனிக்கப்பட்டுள்ளது.



தமிழ்நாட்டில் பெயரே பெரிதாக அறியப்படாத கிராமமொன்றில் இருந்துவந்து ஐ.பி.எல் தொடரில் கலந்துகொண்டு சாதித்துள்ளார் நடராஜன். நடராஜன் ஐ.பி.எல் தொடரில் பிரகாசிக்க அவரின் நண்பன்தான் பல வழிகளிலும் உதவியாக இருந்துள்ளார். நடராஜனது அந்த நண்பனது பெயர் ஜெயப்பிரகாஷ். தனது நண்பனுக்கு நன்றி செலுத்தும்விதமாக அவர் தனது ஜெர்சியில் தனது பெயருக்கு முன்னர் ஜெ.பி என்று தனது நண்பனின் பெயரைப் பொறித்து விளையாடி வருகின்றாராம். நல்ல நண்பன் ஒருவன் போதும்தானே வாழ்வை வெல்வதற்கு.

# பார்சாவிலேயே எனது இதயம்!

பார்சிலோனாவை விட்டு வெளியேறினாலும், பார்சிலோனா கழகத்தில்தான் எனது இதயம் தொடர்ந்து இருக்கும். நான் எப்போதும் பார்சிலோனாவின் வீரன்தான் என்று தெரிவித்துள்ளார் சுவாரஸ். சுவாரஸை அண்மையில் வெளியேற்றியது பார்சிலோனா. இதையடுத்து அவர் தற்போது ஸ்பெய்னின் அத்லெட்ரிகோ மட்ரிட் கழகத்துக்காக ஒப்பந்தமாகியுள்ளார். தனது பிரியாவிடை உரையிலேயே சுவாரஸ் இவ்வாறு நெகிழ்ந்துள்ளார். 2014 ஆம் ஆண்டின் பின்னர் வேறு கழகங்கள் தன்னை ஒப்பந்தம் செய்ய முன்வராதபோது, பார்சிலோனா மட்டும்தான் தனக்கு வாழ்வு தந்தது. இதனால்தான் தான் எப்போதும் பார்சாவின் வீரன் என்றிருக்கின்றார் சுவாரஸ்.

பார்சிலோனாவை தூக்கி இமயத்தில்வைத்துக் கருத்துத் தெரிவித்ததைப்போன்று சட்டென கடாசியும் விட்டுள்ளார். "ஒரு வீரரை ஒரு கழகம் எவ்வாறு வெளியேற்றுகின்றதோ அதேபோன்று ஒரு வீரர் வெளியேற விரும்பினால் அவர் தாராளமாக வெளியேறிச் செல்ல அனுமதிக்க வேண்டும்" என்றும் சுவாரஸ் கேட்டுள்ளார்.

பார்சிலோனா நிர்வாகத்துடனான பிரச்சினையை அடுத்து மெஸ்ஸி அந்தக் கழகத்தை விட்டு வெளியேற முயன்றபோதிலும், மெஸ்ஸிக்கான பரிமாற்றத் தொகையை அதிகமாக நிர்ணயித்துள்ளது பார்சிலோனா. இதனையே சுவாரஸ் குத்திக்காட்டியுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. நிறையைக் கூறினால் குறையையும் கூறவேண்டும்தானே?